போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III—FORT ST. GEORGE GAZETTE

ந. 10.] APRIL 10, 1928. [PRICE, *Rs.* 2-2-0.

மதராஸ்; செவ்வாய்க்கிழமை மாலை, 1928 ம் ஞு ஏப்ரல் மீ 10 உ.

இந்தியா கவர்ன்மெண்ட் மசோதா ஆக்டுகள்.

BILLS OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் இந்திய சட்டநிருபண சபையிலும் கொண்டு வரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைகளுக்கு அனுப்பப் பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிருபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

விளம்பரம்.

ஸிம்லா, 1927-ம் ஞு ஆகஸ்ட் மீ 17 உ.

நெ. 149-I-27-A.—இந்திய சட்டநிருபண விதிகளைச் சேர்ந்த [illegible] விதியின்படி, கவர்னர் ஜெனரலவர்கள் - அடியிற்கண்ட [illegible] ஆக்டுகளை அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட ஹேதுக்களும் [illegible]ம் அடங்கிய சூசிகைகளுடன் இந்தியா கெஜெட்டில் பிர[illegible]களிகூர்ந்து உத்தரவு செய்திருக்கிறார்கள்; அப்பிர[illegible]த மசோதா ஆக்டுகளும் அவை பிறப்பதற்குண்டான [illegible]ம் நோக்கங்களும் அடங்கிய சூசிகைகளும் யாவர்க்கும் [illegible]டி பிரசுரிக்கப்படுகின்றன:—

N28.
.10.
71

LEGISLATIVE ASSEMBLY BILL No. 33 OF 1927.

இந்திய சட்டநிருபண சபையாரின் 1927-ம் ஞுத்து 33-வது மசோதா ஆக்ட்.

A BILL FURTHER TO AMEND THE TRANSFER OF PROPERTY ACT, 1882, FOR CERTAIN PURPOSES.

1882-ம் ஞுத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டைச் சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட்.

1882-ம்௵த்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டை இதில் பின்னால் கண்டிருக்கும் காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான 192 -ம்௵த்து (திருத்துவதற்கான) ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று செலாவணியாகத் தொடங்கும்.

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட்.

1882-ம்௵த்து 4-வது ஆக்ட் 1-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1882-ம்௵த்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 1-வது பிரிவில், " 2-வது, 3-வது பாராக்கள் ", " 2-வது, 3-வது பாராக்களும் " என்னும் இலக்கங்களுக்கும் வார்த்தைகளுக்கும் பர்த்தியாக " 2-வது பாரா ", " 2-வது பாராவும் " என்னும் இலக்கங்களையும் வார்த்தைகளையும் முறையே அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம்௵த்து 4-வது ஆக்ட் 2-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 2-வது பிரிவில், " ஹிந்துக்கள் - மகம்மதியர் அல்லது புத்தரைக் குறித்த " என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக மகம்மதியரைக் குறித்த " என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம்௵த்து 4-வது ஆக்ட் 3-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 3-வது பிரிவில், " கோடிஸ் " என்பதன் அர்த்தம் அடங்கியுள்ள கடைசி பாராவுக்குப் பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

" யாதொரு நபருக்கு யாதொரு சங்கதி வாஸ்தவத்தில் தெரிந்திருந்தாலும், அவர் விசாரணையாவது பரிசோதனையாவது செய்யவேண்டியவராயிருந்து வேண்டுமென்று அப்படி செய்யாததனலாகிலும் மிகவும் அஜாக்கிரதையாயிருந்ததனலாகிலுமன்றி மற்றப்படி அவருக்கு அது தெரிந்திருக்கக்கூடுமாயிருந்தாலும், அவர் அந்த சங்கதியைக்குறித்து 'கோடிஸ்' அடைந்தவரென்று சொல்லப்படுவார்.

விவரணம் 1.—அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட எந்த விவகாரமாகிலும் ரெஜிஸ்டரான ஒரு ஆதரவு மூலமாய் நடத்தப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட சொத்தையாவது அப்படிப்பட்ட சொத்தில் யாதொரு பாகத்தையாவது அதில் யாதொரு பங்கு அல்லது உரிமையையாவது அடையும் யாதொரு நபர் - அந்த ஆதரவைக்குறித்து ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தேதியிலிருந்து கோடிஸ் அடைந்தவரென்று கருதப்படுவார்.

விவரணம் 2.—யாதொரு அசையாப்பொருளையாவது அப்படிப்பட்ட யாதொரு சொத்தில் யாதொரு பங்கு அல்லது உரிமை

யையாவது அடையும் யாதொரு நபர் - அந்த சொத்தை அந்தந்த காலத்தில் வாஸ்தவத்திலே தம் சுவாதீனத்தில் வைத்திருக்கும் எந்த நபருக்காகிலும் பாத்தியதை ஏதேனும் இருந்தால் அதைக்குறித்து நோடிஸ் அடைந்தவரென்று கருதப்படுவார்.

விவரணம் 3.—யாதொரு நபரின் சார்பில் நடத்தப்படும் வியாபார தோரணையில் பிரவர்த்திக்கும் அவருடைய ஏஜென்ட் இந்த நிபந்தனையின் தாற்பரியப்படி யாதொரு சங்கதியைக்குறித்து நோடிஸ் அடைந்திருந்தால், ஷை நபர் அந்த சங்கதியைக்குறித்து நோடிஸ் அடைந்திருப்பதாகக் கருதப்படுவார்."

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

5. ஷை ஆக்ட் 4-வது பிரிவில், "2-வது, 3-வது பாராக்களையும்" என்னும் இலக்கங்களுக்கும் வார்த்தைகளுக்கும் பர்த்தியாக "2-வது பாராவையும்" என்னும் இலக்கத்தையும் வார்த்தைகளையும், "1877-ம் ௵த்திய" என்னும் இலக்கத்துக்கும் வார்த்தைக்கும் பர்த்தியாக, "1908-ம் ௵த்திய" என்னும் இலக்கத்தையும் வார்த்தையையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 6-வது பிரிவில் திருத்தம்.

6. ஷை ஆக்ட் 6-வது பிரிவில் (d) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(dd) பிற்காலத்தில் ஜீவனாம்சம் பெறுவதற்கான சுதந்தரம் எந்த விதமாக ஏற்படுவதாயிருந்தாலுஞ்சரி அல்லது கிடைத்திருந்தாலுஞ்சரி அல்லது தீர்மானிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி அந்த சுதந்தரத்தை ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாது."

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 11-வது பிரிவில் திருத்தம்.

7. ஷை ஆக்ட் 11-வது பிரிவில், "அசையாப்பொருளில் ஒவ்வொரு" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது" என்னும் வார்த்தைகளில் முடியும் இரண்டாவது பாராவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"யாதொரு அசையாப்பொருளின் ஒரு பாகத்தைப் பிரயோசனகரமாய் அனுபவிக்கும்படிச் செய்யும் காரியத்துக்காக அந்த சொத்தின் வேறொரு பாகத்தின் விஷயமாய் மேலேகண்டபடி யாதொரு உத்தரவு செய்யப்பட்டிருந்தால், அந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு ட்ரான்ஸ்பர் செய்பவருக்குள்ள எந்த சுதந்தரத்துக்காவது அந்த உத்தரவை மீறிநடந்தது விஷயமாய் அவருக்கு ஏற்படக்கூடிய எந்த பரிகாரத்துக்காவது இந்தப் பிரிவில் கண்டதெதனுலும் பாதகம் உண்டாவதாகக் கருதப்படமாட்டாது."

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 15-வது பிரிவில் திருத்தம்.

8. ஷை ஆக்ட் 15-வது பிரிவில், "அந்த வகுப்பினர் சகலருக்கும் அந்த சுதந்தரம் தவறிப்போகிறது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன :

" அந்த சுதந்தரம் அந்த நபர்களுக்கு மாத்திரம் தவறிப்போகிறதேயொழிய அந்த வகுப்பினர் சகலருக்கும் தவறிப்போவதில்லை."

1882-ம்ஷுத்து 4-வது ஆக்ட் 16, 17, 18-வது பிரிவுகளுக்குப் பார்த்தியாக புதிய பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

9. ஷெ ஆக்ட் 16, 17, 18-வது பிரிவுகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவை யாவன :—

முன்னிட்ட சுதந்தரம் தவறிப்போவதன் மேல் ட்ரான்ஸ்பர் செல்லவணியாகவேண்டுமென்பது.

"16. யாதொரு நபரின் அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களின் பிரயோசனத்துக்காக உண்டுபண்ணப்பட்ட சுதந்தரமானது 13-வது, 14-வது பிரிவுகளில் கண்டிருக்கும் விதிகளில் எதன் காரணமாகவாயினும் அப்படிப்பட்ட நபரின் விஷயத்திலாகிலும் அப்படிப்பட்ட வகுப்பு முழுவதன் விஷயத்திலாகிலும் தவறிப்போனால், அதே விவகாரத்தில் உண்டுபண்ணப்பட்டு, ஷெ முன்னிட்ட சுதந்தரம் தவறிப்போன பிறகாவது தவறிப்போவதன்மேலாவது செல்லும்படி உத்தேசிக்கப்பட்டிருக்கும் யாதொரு சுதந்தரமும் தவறிப்போகிறது.

சேர்த்துவைப்பதற்காக உத்தரவு.

17. (1) சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்து, அந்த சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை,—

(a) ட்ரான்ஸ்பர் செய்பவரின் ஜீவித காலத்துக்காவது,

(b) ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினெட்டு வருஷ காலத்துக்காவது

மேற்பட்ட கால அளவில் முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் சேர்த்துவைக்கவேண்டுமென்று ஷெ ட்ரான்ஸ்பரைக் குறித்த ஷரத்துகளின்படி உத்தரவு செய்யப்பட்டிருந்தால், அந்த உத்தரவானது - இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, எந்தக் கால அளவுவரையில் சேர்த்துவைக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவானது மேலேகண்ட கால அளவுகளில் நீண்டதாயுள்ள கால அளவைக்காட்டிலும் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவுமட்டில் செல்லாததாகும்; மேலும், கடைசியாய்ச் சொல்லப்பட்ட கால அளவின் முடிவில், ஷெ சொத்தும் அதிலிருந்து கிடைக்கும் வரும்படியும் - எந்தக் கால அளவுவரையில் சேர்த்துவைக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவு கழிந்துபோய்விட்டிருந்தால் எப்படியோ அப்படியே ஒருவகை செய்யப்படும்.

(2) (i) ட்ரான்ஸ்பர் செய்பவரின் அல்லது ட்ரான்ஸ்பரின்படி எவ்வித சுதந்தரமாகிலும் அடையும் வேறே யாதொரு நபரின் கடன்களைச் செலுத்தும் காரியத்துக்காகவாவது,

(ii) ட்ரான்ஸ்பர் செய்பவரின் அல்லது ட்ரான்ஸ்பரின்படி எவ்வித சுதந்தரமாகிலும் அடையும் வேறே யாதொரு நப

ரின் மக்களுக்காகிலும் அவர்களைக்காட்டிலும் தூரமான சந்ததியாருக்காகிலும் பங்குகள் ஏற்பாடு செய்யும் காரியத்துக்காகவாவது,

(iii) ட்ரான்ஸ்பர் செய்யப்படும் சொத்தைப் பாது காக்கும் அல்லது பராமரிக்கும் காரியத்துக்காகவாவது

சேர்த்துவைக்கவேண்டுமென்று செய்யப்படும் எந்த உத்தரவுக்கும் இந்தப் பிரிவினால் பாதகம் உண்டாகமாட்டாது ; மேலும், அப்பிரகாரமே ஷை உத்தரவு செய்யப்படலாம்.

பொதுஜன நன்மைக் க திரந்தரமாய் ட் ன்ஸ்பர் செய்வது.

18. மதம் - ஞானம் - வர்த்தகம் - தேகாரோக்கியம் - க்ஷேமம் அல்லது மனிதர்களுக்குப் பிரயோசனகரமாயுள்ள வேறே யாதொரு காரியத்தை அபிவிருத்திபண்ணும்பொருட்டு பொதுஜன நன்மைக்காக சொத்தை ட்ரான்ஸ்பர் செய்யும் ஷயத்திலே, 14, 16, 17-வது பிரிவுகளில் கண்ட நிர்ப்பந்தங்கள் யோகப்படமாட்டா."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 39-வது பிரிவில் திருத்தம்.

10. ஷை ஆக்ட் 39-வது பிரிவில்,—

(a) "அப்படிப்பட்ட சுதந்தரத்தை அடித்துப்போடவேண்டுமென்கிற எண்ணத்துடன்" என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, "அப்படிப்பட்ட எண்ணமிருப்பதைக் குறித்து" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "அதைக் குறித்து" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும்,

(b) திருஷ்டாந்தத்தில் "நல்ல எண்ணத்துடன்" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 40-வது பிரிவில் திருத்தம்.

11. ஷை ஆக்ட் 40-வது பிரிவில், "பின் சொல்லிய பொருளை அனுபவிக்கிறதைத் தடுக்கவாவது குறித்த விதமாய் அதை அனுபவிக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கவாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "பின் சொல்லிய பொருளை குறித்த விதமாய் அனுபவிக்கிறதைத் தடுக்க" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 43-வது பிரிவில் திருத்தம்.

12. ஷை ஆக்ட் 43-வது பிரிவில்,—

(a) "எவனாவது தப்பாக" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "எவனாவது மோசடியாகவாகிலும் தப்பாகவாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) "அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் வியாபிக்கவேண்டும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட பாராவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவருக்கு ட்ரான்ஸ்பரின்படி ஏற்படும் சுதந்தரத்தை அமுலுக்குக் கொண்டுவர அவர் வியாஜ்ஜியம்

தொடரும்பட்சத்தில், அந்த வியாஜ்ஜியத்திலே அப்பீல் செய்து கொள்ளக்கூடாத டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகு ஷை சொத்தில் ட்ரான்ஸ்பர் செய்தவருக்குக் கிடைக்கக்கூடிய யாதொரு சுதந்தரத்தை அடையவேண்டுமென்று தாவா செய்ய ட்ரான்ஸ்பர் பெற்றுக் கொண்டவருக்குப் பாத்தியதை கிடையாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 52-வது பிரிவில் திருத்தம்.

13. (1) ஷை ஆக்ட் 52-வது பிரிவில்,—

(a) "நடந்தேறி வந்துகொண்டிருக்கும் காலத்தில்" என்னும் வார்த்தைகளுக்குப் பாத்தியாக "பைசலாகாதிருக்கும் காலத்தில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) "விவாதத்திலிருக்கிற வியாஜ்ஜியம்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "விவாதத்திலிருக்கிற யாதொரு வியாஜ்ஜியம்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(c) "அசையாப்பொருளிலுள்ள" என்னும் வார்த்தைகளுக்குமுன் "கூட்டாய் மோசக்கருத்துடன் கொண்டுவரப்படாததும்" என்னும் வார்த்தைகளையும், "விவாதத்திலிருக்கிற" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "விவாதத்திலிருக்கிறதுமான" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(2) அதே பிரிவுடன் அடியிற்கண்ட விவரணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"**விவரணம்.**—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, யாதொரு வியாஜ்ஜியம் அல்லது விவகாரம் பைசலாகாதிருக்கும் காலமானது தகுந்த விசாரணை அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டில் ப்ளெய்ன்ட் கொடுத்துக்கொள்ளப்படுகிற அல்லது விவகாரம் தொடங்கப்படுகிற தேதியிலிருந்து ஆரம்பித்து, அப்பீல் செய்துகொள்ளக்கூடாத டிக்ரி மூலமாகவாவது உத்தரவு மூலமாகவாவது அந்த வியாஜ்ஜியம் அல்லது விவகாரம் முடிவாய்ப் பைசல்செய்யப்பட்டு, அந்த டிக்ரி அல்லது உத்தரவிற்கண்ட பரிகாரத்தை முடிவாய்ப் பெறுகிற வரையிலாகிலும், அந்த டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக அக்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் எந்த சட்டத்தின்படியாயினும் நிர்ணயிக்கப்பட்ட யாதொரு கால அளவு கடந்துபோய்விட்டது காரணமாக பரிகாரம் பெற முடியாமற்போய் விடுகிறவரையிலாகிலும் நீடிப்பதாகக் கருதப்படும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 53-வது பிரிவுக்குப் பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

14. ஷை ஆக்ட் 53-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

மோசடியான ட்ரான்ஸ்பர்.

"53. (1) ட்ரான்ஸ்பர் செய்பவருக்குக் கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யவாவது அவர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தாமதப்படுத்தவாவது எண்ணம்

கொண்டு அசையாப்பொருள் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு ட்ரான்ஸ்பரும் - அந்தப்படி பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யப்பட்ட அல்லது பணம் பெறுவதில் தாமதப்படுத்தப்பட்ட கடன் கொடுத்த யாதொரு நபர் இஷ்டப்படும்பட்சத்தில் செல்லாததாகும்.

ஐவேஜுக்காக நல்ல எண்ணத்துடன் ட்ரான்ஸ்பர் பெற்றுக் கொண்ட ஒருவருடைய சுதந்தரங்களுக்கு இந்த உட்பிரிவில் சொல்லியிருப்பதெதனாலும் பலஹீனம் உண்டாகமாட்டாது.

கடனிறுக்கச் சக்தியற்றிருப்பது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்துக்கு இந்த உட்பிரிவில் சொல்லியிருப்பதெதனாலும் பாதகம் உண்டாக மாட்டாது.

ட்ரான்ஸ்பர் செய்கிறவருக்குக் கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யவாவது அவர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தாமதப்படுத்தவாவது எண்ணங்கொண்டு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறதென்னும் மூகாந்தரத்தை முன்னிட்டு அதைத் தடுப்பதற்காக கடன் கொடுத்த ஒருவர் (டிக்ரி பெற்றவர் தம்முடைய டிக்ரியை நிறைவேற்றுவதற்காக விண்ணப்பம் செய்துகொண்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி டிக்ரி பெற்றவர் என்பதும் இந்த சொற்றொடரில் அடங்குகிறது) தொடரும் வியாஜ்ஜியமானது - கடன் கொடுத்தவர்கள் எல்லோருடைய சார்பிலாகிலும் அவர்களுடைய நன்மையை உத்தேசித்தாகிலும் தொடரப்படவேண்டும்.

(2) பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவரை மோசம் செய்யும் எண்ணத்துடன் அசையாப்பொருள் இலவசமாய் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு ட்ரான்ஸ்பரும்-ஷை ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் இஷ்டப்படும்பட்சத்தில் செல்லாததாகும்.

இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, இலவசமாய்ச் செய்யப்பட்ட ட்ரான்ஸ்பர் எதுவும்-ஐவேஜுக்காகப் பிற்பட்டு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதென்னும் காரணத்தினாலேயே, மோசம் செய்யும் எண்ணங்கொண்டு செய்யப்பட்டதாகக் கருதப்படமாட்டாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 53A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது.

15. ஷை ஆக்ட் 53-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

சிறிதுமட்டில் நிறைவேற்றுவது.

"53A. யாதொரு நபர் ஐவேஜுக்காக எந்த அசையாப் பொருளையாகிலும் ட்ரான்ஸ்பர் செய்ய தம்மாலாவது தமக்காகவாவது கையெழுத்து செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான ஆதாரவைக்கொண்டு கான்ட்ராக்ட் செய்துகொண்டிருந்து, ட்ரான்ஸ்பராக ஏற்படுவதற்கு அவசியமாயுள்ள ஷரத்துகளை அதிலிருந்து நியாயமான அளவுக்கு நிச்சயமாய்க் கண்டறியக்கூடியதாயிருக்கும்பட்சத்திலும்,

ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் கான்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்காக ஷை சொத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது சுவாதீனப்படுத்திக்கொண்டாகிலும், ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் ஏற்கனவே சுவாதீனமடைந்திருந்து கான்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்காக (அதை) சுவாதீனத்திலேயே வைத்துக்கொண்டு கான்ட்ராக்டைப் பின்னும் நிறைவேற்றுவதற்காக யாதொரு காரியத்தைச் செய்தாகிலுமிருக்கும் பட்சத்திலும்,

ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் ஷை கான்ட்ராக்டில் தாம் நிறைவேற்றவேண்டிய பாகத்தை நிறைவேற்றியோ அல்லது நிறைவேற்ற இஷ்டமுள்ளவராகவோ இருக்கும்பட்சத்திலும்,

அந்த கான்ட்ராக்ட் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியதாயிருந்தும் ரெஜிஸ்டர் செய்யப்படாதிருந்தபோதிலும், அல்லது ட்ரான்ஸ்பர் சம்பந்தமான ஆதரவு ஒன்றிருந்தால், அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டப்படி அதற்காக நிர்ணயிக்கப்பட்ட விதமாய் ட்ரான்ஸ்பர் பூர்த்தி செய்யப்படாதிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ட்ரான்ஸ்பர் செய்தவராவது அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபராவது - ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் சுவாதீனம் அடைந்திருக்கிற அல்லது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டேயிருக்கிற சொத்தின் விஷயத்தில், கான்ட்ராக்டின் மூலமாய் ஏற்படும் சுதந்தரத்தைத் தவிர வேறே எந்த சுதந்தரத்தையும் ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவருக்கும் அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடும் நபர்களுக்கும் விரோதமாய் அமுலுக்குக் கொண்டுவருவதனின்றும் தடுக்கப்படுவார் :

ஆனால், ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் கான்டராக்டைக்குறித்தாவது அது சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டிருப்பதைக்குறித்தாவது நோடிஸ் பெறாதிருந்தால், அவருடைய சுதந்தரங்களுக்கு இந்தப் பிரிவில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது. ”—

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 54-வது பிரிவில் திருத்தம்.

16. ஷை ஆக்ட் 54-வது பிரிவில்,—

(a) “ கைக்கு வரத்தக்க ” என்னும் சொற்றொடர் வருகிற இடங்களிலெல்லாம் அதை விட்டுவிடவேண்டும் ;

(b) “ நூறு ரூபாய் முதல் அதற்கு மேற்பட்ட பெறுமானமுள்ள ” என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, “ கொடுத்தவன் அல்லது அவனுடைய பாத்தியஸ்தனுக்குத் திரும்பிவருகிற பொருள் (அதாவது ரிவர்ஷன்) விஷயத்திலாவது, அப்போது கைக்கு வராத வேறே பொருள் விஷயத்திலாவது ” என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக “ அதிலுள்ள யாதொரு சுதந்தரத்தின் விஷயத்திலாவது ” என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும்,

(c) “ நூறு ரூபாய்க்குக் குறைந்த பெறுமானமுள்ள கைக்கு வரத்தக்க அசையாப்பொருள் விஷயத்திலே, ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவு மூலமாயாவது பொருளை ஒப்பிப்பதனாலாவது அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் செய்யலாம் ” என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 55-வது பிரிவில் திருத்தம்.

17. ஷை ஆக்ட் 55-வது பிரிவில்,—

(a) (1) குறிப்பிட்ட பகுதியின் (a) அடையாளமிட்ட உட்பகுதியில், "அந்தப் பொருளில்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "அந்தப் பொருளிலாவது விற்பவனுக்கு அதிலுள்ள பாத்தியதையிலாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) (4) குறிப்பிட்ட பகுதியின் (b) அடையாளமிட்ட உட்பகுதியில், "கொள்பவனிடத்திலிருக்கிற" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "கொள்பவனிடத்திலாவது விற்பனையைக்குறித்து நோடிஸ் பெற்று அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபரிடத்திலாவதிருக்கிற" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும், "அந்தத் தொகைக்காகவும்", "அதற்குண்டான வட்டிக்காகவும்" என்னும் வார்த்தைகளுக்கிடையில் "சுவாதீனம் ஒப்பிக்கப்பட்டிருக்கும் தேதியிலிருந்து" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அல்லாமலும்,

(c) (6) குறிப்பிட்ட பகுதியின் (b) அடையாளமிட்ட உட்பகுதியில், "பணம் செலுத்தப்பட்டதைக்குறித்து நோடிஸ் பெற்றிருந்து" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 56-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

18. ஷை ஆக்ட் 56-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

பிற்பட்டு கொள்பவர் வரிசைக்கிரமப்படுத்துவது.

"56. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களின் சொந்தக்காரர் அவைகளை ஒரு நபருக்குக் கொதுவை வைத்து, பிறகு அந்த சொத்துக்களில் ஒன்றையாவது பலவற்றையாவது வேறொரு நபருக்கு விற்பனை செய்தால், (அவைகளைக்) கொள்பவர் - இதற்கு விரோதமாக கான்ட்ராக்ட் ஏற்பட்டிராத பட்சத்திலே, தமக்கு விற்பனை செய்யப்படாத சொத்து அல்லது சொத்துக்கள் எவ்வளவிருக்கிறதோ அவ்வளவிலிருந்து கொதுவைக் கடனுக்குத் திருப்தி செய்வித்துக்கொள்ள பாத்தியதை உடையவராவார்; ஆனால், அந்தப்படி திருப்திசெய்வித்துக் கொள்கையில், கொதுவை வைத்துக்கொண்டவரின் அல்லது அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடுகிறவர்களின் சுதந்தரங்களுக்காகிலும் ஷை சொத்துக்களில் எதிலாவது யாதொரு உரிமையை ஐவேஜுக்காக அடைந்திருக்கிற வேறே யாதொரு நபரின் சுதந்தரங்களுக்காகிலும் பாதகம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 58-வது பிரிவில் திருத்தம்.

19. ஷை ஆக்ட் 58-வது பிரிவில்,—

(a) (a) குறிப்பிட்ட பகுதியில், "ட்ரான்ஸ்பர் செய்கிறதாக எதாவது ஆதரவு எழுதிக்கொடுக்கப்பட்டால் அது" என்னும்

வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "ட்ரான்ஸ்பர் செய்கிறதாக எழுதிக் கொடுக்கப்படும் ஆதரவு" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்;

(b) (c) குறிப்பிட்ட பகுதியுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"ஆனால், அப்படிப்பட்ட விவகாரம் எதுவும் - எந்த தஸ்தாவேஜுமூலமாய் விற்பனை செய்யப்படுகிறதோ அல்லது விற்பனை செய்வதாகப் பொருள்படுகிறதோ அந்த தஸ்தவேஜில் ஷை ஷரத்து சேர்க்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி கொதுவையாகக் கருதப்பட மாட்டாது";

(c) (d) குறிப்பிட்ட பகுதியில்,—

(i) "கொதுவைச் சொத்தைச் சுவாதீனம் செய்து" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது சுவாதீனம் செய்வதாக வெளிப்படையாகவாகிலும் அந்தப்படி அனுமானிக்கும்படியாகவாகிலும் தாம் கட்டுப்பட்டு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(ii) "குத்தகை அல்லது வாடகைப் பணத்தையும் லாபத்தையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "குத்தகை அல்லது வாடகைப் பணத்தையும் லாபத்தையுமாகிலும் அந்த குத்தகை அல்லது வாடகைப் பணம், லாபம் ஆகிய இவைகளில் யாதொரு பாகத்தையாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்; மேலும்,

(d) (e) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(f) இந்தப் பிரிவின் தாற்பரியப்படி ஒற்றியாகவாவது, அவ இக்கிரய கொதுவையாகவாவது, பெந்தக போக்கியமாகவாவது, இங்க்லிஷ் மாதிரியான கொதுவையாகவாவதிராத யாதொரு கொதுவையானது குறிக்கப்படாத கொதுவை என்று சொல்லப்படும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 59-வது பிரிவில் திருத்தம்.

20. ஷை ஆக்ட் 59-வது பிரிவில்,—

(a) "எதற்கு ஈடு வைக்கப்பட்டதோ அந்த அசல் தொகையானது நூறு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாயிருந்தால்" என்னும் வார்த்தைகளையும்,

(b) "எதற்கு ஈடு வைக்கப்பட்டதோ" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "சித்திக்கும்படிச் செய்யலாம்" என்னும் வார்த்தைகளில் முடிவாகிற இரண்டாவது பாராவையும் விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 59A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது.

21. ஷை ஆக்ட் 59-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது :

கொதுவை வைப்பவர்களேயும் கொதுவை வைத்துக் கொள்பவர்களேயும் குறித்துச் சொல்லியிருப்பவைகளில் அவர்களிடமிருந்து பாத்தியதை பெறும் நபர்களும் அடங்கவேண்டுமென்பது.

"59A. கொதுவை வைப்பவர்களேயும் கொதுவை வைத்துக்கொள்பவர்களேயும் குறித்து இந்த அத்தியாயத்தில் சொல்லியிருப்பவைகளில், வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, முறையே அவர்களிடமிருந்து பாத்தியதை பெறும் நபர்களேப்பற்றி சொல்லியிருப்பவையும் அடங்குவதாகக் கருதப்படும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 60-வது பிரிவில் திருத்தம்.

22. ஷை ஆக்ட் 60-வது பிரிவில்,—

(a) "செலுத்தப்படத்தக்கதான" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "பாக்கியாய் ஏற்பட்ட" என்னும் வார்த்தைகளே அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) "கொதுவைப் பத்திரம் ஏதாவதிருந்தால் அதை" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளே அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

"கொதுவைப் பத்திரத்தையும் கொதுவைச் சொத்துக்குச் சம்பந்தப்பட்டதாய்க் கொதுவை வைத்துக்கொண்டவரின் ஸ்வாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிற சகல தஸ்தவேஜுகளேயும்";

(c) "(ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவு மூலமாய்க் கொதுவை ஏற்பட்டிருக்குமாகில்)" என்னும் வார்த்தைகளேயும் நகவளேவுக் குறிகளேயும் விட்டுவிடவேண்டும்; மேலும்,

(d) "அடைந்திருந்தாலொழிய" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "அடைந்திருந்தால் மாத்திரமே யொழிய" என்னும் வார்த்தைகளே அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 61-வது பிரிவுக்குப் பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

23. ஷை ஆக்ட் 61-வது பிரிவுக்கும் அதைச் சேர்ந்த திருஷ்டாந்தத்துக்கும் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

தனித்தனியாகவோ ஏக காலத்திலோ மீட்டுக்கொள்ளச் சுதந்தரம்.

"61. கொதுவை வைப்பவர் ஒருவர் கொதுவை வைத்துக்கொள்ளும் ஒரே நபர் பெயருக்கு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கொதுவைப் பத்திரங்கள் எழுதிக்கொடுத்திருந்தால், அவர் இதற்கு மாருக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராதபட்சத்திலே, எவையேனும் இரண்டு அல்லது இரண்டுக்குமேற்பட்ட கொதுவைகளின் அசல் பணம் பாக்கியாய் ஏற்பட்டிருக்கும்போது, அப்படிப்பட்ட கொதுவைகளில் ஏதாவது ஒரு கொதுவையைப் பிரத்தியேகமாகவாகிலும் அந்தக் கொதுவைகளில் எவையேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கொதுவைகளேச் சேர்த்தாகிலும் மீட்டுக்கொள்ள பாத்தியதை உடையவராவார்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 62-வது பிரிவில் திருத்தம்.

24. ஷை ஆக்ட் 62-வது பிரிவில்,—

(a) "பெந்தக போக்கிய விஷயத்திலே" என்னும் வார்த்தைகளுக்கு முன் "யாதொரு" என்னும் வார்த்தையை அமைத்துக் கொள்ளவேண்டும்; மேலும்,

(b) (b) குறிப்பிட்ட பகுதியில்—

(i) "லாபத்திலுமிருந்து அசல் தொகைக்கு வட்டியை" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "லாபத்திலுமிருந்தாவது அவைகளின் யாதொரு பாகத்திலிருந்தாவது கொதுவைப் பணத்தில் ஒரு பாகத்தை மாத்திரம்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(ii) "அசல் தொகையை" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "கொதுவைப் பணத்தில் நிலுவையாயிருக்கும் தொகையை" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 63-வது பிரிவில் திருத்தம்.

25. ஷை ஆக்ட் 63-வது பிரிவில், "அதே வீத வட்டி சகிதமாய்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "அசலுக்குச் செலுத்தப்படத்தக்க வீதப்படியும், கொதுவைப்பத்திரத்தில் அப்படிப்பட்ட வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீதப்படியும் வட்டி சகிதமாய்" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 63A பிரிவைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

26. ஷை ஆக்ட் 63-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

கொதுவைச் சொத்தை அபிவிருத்திசெய்வது.

"63A. (1) கொதுவை வைத்துக்கொண்டவர் சுவாதீனத்திலுள்ள கொதுவைச் சொத்தானது கொதுவை அமுலிலிருந்துவரும் காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால், இதற்கு மாறாக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராத பட்சத்தில், (அந்த சொத்தை) மீட்டுக்கொள்வதன்மேல், ஷை அபிவிருத்தியை அடைய கொதுவை வைத்தவருக்குப் பாத்தியதை உண்டு; மேலும், கொதுவை வைத்தவர் - (2) குறிப்பிட்ட உட்பிரிவில நிபந்தனை கண்டிருக்கும் விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் அந்த அபிவிருத்திக்காகப் பிடித்த செலவைச் செலுத்துவதற்கு உள்ளாகமாட்டார்.

(2) அப்படிப்பட்ட யாதொரு அபிவிருத்தி கொதுவை வைத்துக்கொண்டவரின் செலவில் செய்யப்பட்டிருந்து, அது அந்த சொத்தை அழிந்துபோகாதபடியாவது சீர்கெட்டுப் போகாதபடியாவது

பாதுகாப்பதற்கு அவசியமானதாயிருந்தாலும், ஈடு போதாதாய்விடாதபடி தடுப்பதற்கு அவசியமானதாயிருந்தாலும், அல்லது யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தர் அல்லது பொதுவான அதிகாரசபையார் சட்டப்படி பிறப்பித்த உத்தரவை அனுசரித்துச் செய்யப்பட்டதாயிருந்தாலும், கொதுவை வைத்தவர் - இதற்கு மாறாக காண்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராதபட்சத்தில், அசல் தொகையுடன் கூட ஷை அபிவிருத்திக்காகப் பிடித்த சரியான தொகையை அசலுக்குச் செலுத்தப்படத்தக்க வீதப்படியும், கொதுவைப் பத்திரத்தில் அப்படிப்பட்ட வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்படாதிருந்தால், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீதப்படியும் வட்டி சகிதமாய்ச் செலுத்துவதற்கு உள்ளாவார்; மேலும், ஷை அபிவிருத்தி காரணமாக லாபம் ஏதாவது சேர்ந்துவரும்பட்சத்தில், அது கொதுவை வைத்தவர் பெயருக்கு வரவு வைக்கப்படும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 64-வது பிரிவில் திருத்தம்

27. ஷை ஆக்ட் 64-வது பிரிவில், "சில வருஷ காலத்திற்கு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 65-வது பிரிவில் திருத்தம்

28. ஷை ஆக்ட் 65-வது பிரிவில்,—

(a) (d) குறிப்பிட்ட பகுதியில் "சில வருஷகாலத்திற்கு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்; மேலும்,

(b) "(c) குறிப்பு உட்பிரிவிலாவது (d) குறிப்பு உட்பிரிவிலாவது சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையும் பின்னிட்டு பாக்கியாகும் குத்தகையை அல்லது வாடகையைச் செலுத்துவதற்குச் சம்பந்தப்படுகிறமட்டில், பெந்தக போக்கிய விஷயத்திலே பொருந்தமாட்டாது" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 65 A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது

29. ஷை ஆக்ட் 65-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

குத்தகை அல்லது வாடகைக்கு விட கொதுவை வைப்பவருக்குள்ள அதிகாரம்

"65A. (1) (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கொதுவை வைப்பவர் - கொதுவைச் சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கையிலே, கொதுவை வைத்துக்கொண்டவரைக் கட்டுப்படுத்தக்கூடியபடி அதைக் குத்தகை அல்லது வாடகைக்கு விட அதிகாரம் உடையவராவார்.

(2) (a) அந்தப்படி குத்தகை அல்லது வாடகைக்கு விடும் ஒவ்வொரு விஷயமும்-சம்பந்தப்பட்ட சொத்தை நிர்வாகம் செய்யும் சாதாரண கிரமத்தில் குத்தகை அல்லது வாடகைக்கு விட்டால் எப்படி விடப்படுமோ அப்படியும் யாதொரு பிரதேச சட்டம், மாமூல், வழக்கம் ஆகிய இவைகளை அனுசரித்தும் இருக்கவேண்டும்.

(b) அந்தப்படி குத்தகை அல்லது வாடகைக்கு விடும் ஒவ்வொரு விஷயத்தின் மூலமாகவும் எவ்வளவு நல்ல வாடகை நியாய

மாய்க் கிடைக்கக்கூடுமோ அவ்வளவு நல்ல வாடகை கிடைக்கும் படிச் செய்யவேண்டும்; மேலும், (ப்ரீமியம்) மேல்வாசித் தொகை செலுத்தவுங்கூடாது, செலுத்துவதாக வாக்குத்தத்தம் செய்யவும் கூடாது; அல்லாமலும், வாடகையும் முன்பணமாகச் செலுத்தப் படத்தக்கதாகாது.

(c) அப்படிப்பட்ட எந்த குத்தகை அல்லது வாடகையி லும் புதுப்பிப்பதற்கான உடன்படிக்கை எதுவும் இருக்கக்கூடாது.

(d) அப்படிப்பட்ட ஒவ்வொரு குத்தகை அல்லது வாட கையும் அது சம்பந்தமான ஏற்பாடு செய்யப்படுகிற தேதியிலிருந்து ஆறு மாதத்துக்கு மேற்படாத ஒரு தேதியிலிருந்து அமுலுக்கு வரவேண்டும்.

(e) சாகுபடிக்கான நிலத்தைக் குத்தகைக்கு அல்லது வாட கைக்கு விடும் விஷயத்திலே, அந்தக் குத்தகை அல்லது வாடகை யானது - 106-வது பிரிவில் கண்டிருக்கிறபடி வருஷவாரி குத்தகை அல்லது வாடகையாயிருப்பதை விட குத்தகைக்கு அல்லது வாட கைக்கு எடுத்துக்கொண்டவருக்கு அதிக அனுகூலமான ஷரத்து களின்படி ஏற்படுத்தப்படக்கூடாது.

(f) கட்டிடங்களைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடும் விஷயத்திலே, அவை கட்டப்பட்டிருக்கிற நிலத்துடன் குத்த கைக்கு அல்லது வாடகைக்கு விடப்பட்டாலுஞ்சரி அந்த நிலமில் லாமல் விடப்பட்டாலுஞ்சரி, குத்தகை அல்லது வாடகையின் கால அளவானது எந்த விஷயத்திலும் மூன்று வருஷத்துக்கு மேற்படக் கூடாது; மேலும், அந்தக் குத்தகை அல்லது வாடகையில் வாடகை செலுத்துவது சம்பந்தமாய் ஒரு உடன்படிக்கை அடங்கியிருக்க வேண்டியதுமல்லாமல், அதில் குறிப்பிடப்பட்ட ஒரு காலத்துக்குள் வாடகை செலுத்தப்படாதபட்சத்தில் மீண்டும் பிரவேசிப்பதற் கான ஒரு திட்டம் அடங்கியிருக்கவும் வேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள்-கொது வைப் பத்திரத்தில் இதற்கு மாறான உத்தேசம் குறிப்பிடப்பட்டிரா விட்டாலும் குறிப்பிடப்பட்டிராத வரையிலும் மாத்திரமே பிரயோ கப்படும்; மேலும், (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட நிபந்தனை களைக் கொதுவைப் பத்திரத்தைக்கொண்டு மாற்றலாம் அல்லது விரி வாக்கலாம்; அல்லாமலும், அந்தப்படி மாற்றப்பட்டும் விரிவாக்கப் பட்டுமுள்ளபடி அந்த நிபந்தனைகள் - கூடுமானமட்டில், அப்படிப் பட்ட மாறுதல்கள் அல்லது விரிவுகள் ஷை உட்பிரிவில் அடங்கி யிருந்தால் எம்மாதிரியோ அம்மாதிரியும் அதே மாதிரியான சகல இடைச்சம்பவங்களுடனும் பலப்பிராப்திகளுடனும் பிரயோகப் படும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 67-வது பிரிவில் திருத்தம்.

30. ஷை ஆக்ட் 67-வது பிரிவில்,—

(a) "செலுத்தப்படத்தக்கதான" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "பாக்கியாய்விட்ட" என்னும் வார்த்தையை அமைத் துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) (a) குறிப்பிட்ட பகுதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(a) அவதிக்கிரயக் கொதுவைக்காரனுகவாவது குறிக்கப்படாத எந்தக் கொதுவையின் ஷரத்துகளின்படி மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்ய கொதுவைக்காரனுக்குப் பாத்தியதை ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கொதுவைக்காரனுகவாவது இராத யாதொரு கொதுவைக்காரன் மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போவதற்கு வியாஜ்ஜியம் தொடரவாகிலும், பெந்தக போக்கியக்காரன் அப்படிப்பட்டவனுகவாயினும் அவதிக்கிரயக் கொதுவைக்காரன் அப்படிப்பட்டவனுகவாயினும் விற்பனை செய்வதற்காக வியாஜ்ஜியம் தொடரவாகிலும் அதிகாரம் கொடுப்பதாகவும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 67A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது.

31. ஷை ஆக்ட் 67-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

பல கொதுவைகளின் மேல் ஒரே வியாஜ்ஜியம் கொண்டுவர கொதுவை வைத்துக்கொண்டவர் இன்னபடிக்கானுல் கடமைப்பட்டவராவா ரென்பது.

"67A. கொதுவை வைத்துக்கொண்ட யாதொரு நபர் ஒரே கொதுவை வைத்தவரால் வைக்கப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கொதுவைகள் வைத்துக்கொண்டிருந்து, அவைகள் ஒவ்வொன்றின் விஷயத்திலும் 67-வது பிரிவின்படி ஒரே மாதிரியான உத்தரவு பெற அவருக்குச் சுதந்தரம் இருப்பதுடன் கொதுவைகள் ஏதாவதொன்றின் மேல் அப்படிப்பட்ட உத்தரவு பெற அவர் வியாஜ்ஜியமும் தொடரும்பட்சத்தில், அவர் - இதற்கு விரோதமாக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராவிட்டால், எந்தக் கொதுவைகளின் விஷயத்தில் கொதுவைப் பணம் பாக்கியாய்விட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல கொதுவைகளின்மேலும் வியாஜ்ஜியம் தொடர கடமைப்பட்டவராவார்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 68-வது பிரிவுக்குப் பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

32. ஷை ஆக்ட் 68-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

கொதுவைப் பணத்துக்காக வியாஜ்ஜியம் தொடர சுதந்தரம்.

"68. (1) கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைப் பணத்துக்காக அடியிற்கண்ட விஷயங்களில் வியாஜ்ஜியம் தொடரலாமேயொழிய, மற்ற விஷயங்களில் வியாஜ்ஜியம் தொடரக் கூடாது; அந்த விஷயங்கள் எவையென்றால் :—

(a) கொதுவை வைத்தவர் அந்தப் பணத்தை மறுபடியும் செலுத்த உடன்பட்டிருந்தால்;

(b) கொதுவை வைத்தவராவது கொதுவை வைத்துக் கொண்டவராவது யாதொன்றை அக்கிரமமாய்ச் செய்ததனுலாகிலும் செய்யத் தவறிப்போனதனுலாகிலுமல்லாமல் வேறே யாதொரு காரணத்தினுல், கொதுவைச் சொத்து முழுவதுமோ சிறிதுமட்

டிலோ அழிந்துபோய்விட்டாகிலும் 66-வது பிரிவின் தாற்பரியப்படி ஈடு போதாததாய்விட்டாகிலுமிருந்து, முழு ஈட்டையும் போதுமானதாக்குவதற்குப் போதுமான பின்னும் ஈட்டை ஏற்படுத்திக் கொடுக்க கொதுவை வைத்தவருக்கு கொதுவை வைத்துக்கொண்டவர் நியாயமான அவகாசம் கொடுத்திருந்தும் கொதுவை வைத்தவர் அந்தப்படி செய்யத் தவறிப்போயிருந்தால் ;

(c) கொதுவை வைத்தவர் அக்கிரமமாய் யாதொன்றைச் செய்ததனாலாவது செய்ததனிமித்தமாயாவது தவறிப்போனதனாலாவது தவறிப்போனதனிமித்தமாயாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குத் தம்முடைய ஈடு முற்றிலுமாகிலும் அதில் எவ்வளவாகிலும் ஒழிந்துபோனால் ;

(d) கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைச் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியதை பெற்றிருந்து, கொதுவை வைத்தவர் அந்த சொத்தைக் கொதுவைவைத்துக்கொண்டவருக்கு ஒப்பிக்கவாகிலும், தம்மாலாவது கொதுவை வைத்தவருக்குள்ள ஹக்கைக்காட்டிலும் மேலான ஹக்கின்படி பாத்தியதை கொண்டாடும் வேறே யாதொரு நபராலாவது சங்கடம் உண்டாகாமல் அந்த சொத்தின் சுவாதீனம் அவருக்குக் கிடைக்கும்படிச் செய்யவாகிலும் தவறிப்போனால்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படியாவது (b) அடையாளமிட்ட பகுதியின்படியாவது வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டால், அந்த வியாஜ்ஜியத்தையும் அதில் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும், இதற்கு மாறாக யாதொரு கான்ட்ராக்ட் ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, கொதுவை வைத்துக்கொண்டவர் தம்மிடத்தில் வைத்திருக்கும் ஈட்டை விட்டுவிட இஷ்டமுடையவராகவும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவு மூலமாய்க் கொதுவை அற்றுப்போகும்படிச் செய்யப்பட்டும் இருந்தாலன்றி மற்றப்படி, அவர் கொதுவைச் சொத்தின்மேலாகிலும் அதில் மிகுதியாயுள்ள யாதொரு பாகத்தின்மேலாகிலும் பெறக்கூடிய சகல பரிகாரங்களையும் பெற முயற்சி செய்தாகிறவரையில் நிறுத்திவைக்கவேண்டும்."

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 69-வது பிரிவில் திருத்தம்.

33. ௸ ஆக்ட் 69-வது பிரிவில்,—

(a) "கொதுவைப் பணம் செலுத்தத் தவறிப்போவதன் மேல்" என்னும் வார்த்தைகளில் ஆரம்பிக்கும் முதல் பாராவுக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிடவேண்டும் ;

(b) அந்தப்படி இலக்கமிட்ட உட்பிரிவில்—

விற்கும்படியான அதிகாரம் இன்னபடிக்கானால் செல்லாதென்பது.

(i) "கொதுவைப்பணம் செலுத்தத் தவறிப்போவதன் மேல், கோர்ட்டாருடைய சம்பந்தமில்லாமல் கொதுவைச் சொத்தையாவது அதில் யாதொரு பாகத்தையாவது விற்கும்படியாகிலும் விற்பதில் சம்மதித்திருக்கும்படியாகிலும் கொதுவை வைத்துக்கொண்டவனுக்காவது அவன் பட்சத்தில்

யாவனொருவனுக்காவது கொதுவைப்பத்திரத்தினுலே அதிகாரம் கொடுக்கப்பட்டால், அது அடியில் வரும் விஷயங்களில் செலாவணியாகுமேயல்லாமல் மற்ற விஷயங்களில் செலாவணியாகமாட்டாது. அப்படி செலாவணியாகும் விஷயங்களாவன :—" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அவையாவன :—

கோர்ட்டாரின் சம்பந்தமில்லாமல் விற்பது.

1866-ம் ஹூத்து 38-வது ஆக்ட்.

"ட்ரஸ்டிகள் கொதுவை வைத்துக்கொண்டவர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களைக்குறித்த 1866-ம் ஹூத்து ஆக்டில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, கொதுவைப் பணம்செலுத்தத் தவறிப்போவதன்மேல் கொதுவை வைத்துக்கொண்டவராவது அவர் பட்சத்தில் பிரவர்த்திக்கும் யாதொரு நபராவது- இந்தப் பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கோர்ட்டாருடைய சம்பந்தமில்லாமலே கொதுவைச் சொத்தையாகிலும் அதில் யாதொரு பாகத்தையாகிலும் விற்கவோ விற்பதில் சம்மதிக்கவோ அடியிற்கண்ட விஷயங்களில் அதிகாரம் உடையவராவாரேயன்றி மற்ற விஷயங்களில் அதிகாரம் உடையவராகமாட்டார் ; அந்த விஷயங்கள் எவையென்றால் :—"

(ii) (b), (c) குறிப்பிட்ட பகுதிகளில், முறையே "கொதுவை வைத்துக்கொண்டவர்", "கொதுவைச் சொத்தாவது" என்னும் வார்த்தைகளுக்குமுன், "கோர்ட்டாரின் சம்பந்தமில்லாமல் விற்கும் அதிகாரம் கொதுவைப் பத்திரத்தினுல் கொதுவை வைத்துக் கொண்டவருக்கு வெளிப்படையாய்க் கொடுக்கப்பட்டிருந்து" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(iii) (c) குறிப்பிட்ட பகுதியில் "அதில் எவ்வளவாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "கொதுவைப்பத்திரம் எழுதப்பட்ட தேதியில்" என்னும் வார்த்தைகளையும், "இருக்கிற விஷயத்தில்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "இருந்த விஷயத்தில்" என்னும் வார்த்தைகளையும், "வேறே யாதொரு பட்டணத்தில்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது விஸ்தீர்ணத்தில்" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) இரண்டாவது பாராவின் ஆரம்பத்திலுள்ள 'ஆனல்' என்னும் வார்த்தையை விட்டுவிட்டு, "அப்படிப்பட்ட அதிகாரம் செலுத்தப்படாது" என்னும் வார்த்தைகளில் முடிவாகிற அந்தப் பாராவுக்கு (2) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிட்டு, அந்தப் பாராவின் (1), (2) அடையாளமிட்ட பகுதிகளை முறையே (a), (b) என்னும் எழுத்துக்களால் குறிப்பிடவேண்டும் ;

(d) "அப்படிப்பட்ட அதிகாரத்தை" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "பரிகாரம் அடையலாகும்" என்னும் வார்த்தைகளில் முடிவாகிற மூன்றுவது பாராவுக்கு (3) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிடவேண்டும் ;

(e) "எதற்குச் சொத்தை உட்படுத்தி" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "நபருக்குச் செலுத்திவிடவேண்டும்" என்னும்

வார்த்தைகளில் முடிவாகிற நான்காவது பாராவுக்கு (4) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிடவேண்டும் ;

(f) "இந்தப் பிரிவிலே முற்பாகத்தில் சொல்லியிருக்கும்" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "சம்பந்தப்படமாட்டாது" என்னும் வார்த்தைகளில் முடிவாகிற ஐந்தாவது பாராவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பாராவை அமைத்துக்கொண்டு, அதற்கு (5) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிடவேண்டும் ; அதாவது :—

"(5) இந்தப் பிரிவிலாவது 69A பிரிவிலாவது சொல்லியிருப்பதெதுவும் - 1882-ம் ௵ ஜூலை மாதம் முதல் தேதிக்குமுன் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்குப் பிரயோகப்படமாட்டாது" ; மேலும்,

(g) "ட்ரஸ்டிகளுடைய அதிகாரங்களேயும்" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "பிரயோகப்படுவதாக எண்ணவேண்டும்" என்னும் வார்த்தைகளில் முடிவாகிற கடைசி பாராவை விட்டுவிடவேண்டும்.

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 69A பிரிவைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

34. ஷை ஆக்ட் 69-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

ரிஸீவரை நியமிப்பது.

"69A. (1) கொதுவை வைத்துக்கொண்டவருக்கு 69-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விற்பனேசெய்யும் அதிகாரம் இருந்து, அந்த அதிகாரத்தைச் செலுத்தும் சுதந்தரமானது அந்தப் பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்பட்டிருக்கும்பட்சத்தில், கொதுவை வைத்துக்கொண்டவர் - (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனேகளுக்குட்பட்டு, தம்மாலாவது தமக்காகவாவது கையெழுத்து செய்யப்பட்ட எழுத்துமூலமான ஆதரவைக்கொண்டு கொதுவைச்சொத்திலிருந்தாகிலும் அதன் யாதொரு பாகத்திலிருந்தாகிலும் கிடைக்கும் வரும்படிக்காக ரிஸீவர் ஒருவரை நியமிக்க பாத்தியதை உடையவராவார் ; ஷை விஷயத்தில் தவிர வேறெந்த விஷயத்திலும் அந்தப்படி நியமிக்க கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை கிடையாது.

(2) கொதுவைப்பத்திரத்தில் பெயர் கண்டிருக்கும் எந்த நபராகிலும் ரிஸீவராய்ப் பிரவர்த்திக்க இஷ்டமுள்ளவராயும் சக்தியுடையவராகவும் இருந்தால், கொதுவை வைத்துக்கொண்டவர் அவரை நியமிக்கலாம்.

அந்தப்படி எந்த நபரின் பெயரும் கண்டிராவிட்டாலும், பெயர் கண்டிருக்கும் சகல நபர்களும் பிரவர்த்திக்கச் சக்தியற்றவர்களாகவோ இஷ்டமில்லாதவர்களாகவோ இறந்துபோய்விட்டோ இருந்தாலும், கொதுவை வைத்துக்கொண்டவர் - எந்த நபரை நியமிப்பதற்குக் கொதுவை வைத்தவர் சம்மதிக்கிருரோ அப்படிப்பட்ட யாதொரு நபரை நியமிக்கலாம். அந்தப்படி சம்மதிக்கத் தவறிப்போனல், கொதுவை வைத்துக்கொண்டவர் - ரிஸீவரை நியமிப்பதற்காக கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள பாத்தியதை உடை-

யவராவார்; மேலும், கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட யாதொரு நபர் கொதுவை வைத்துக்கொண்டவரால் கிரமமாய் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்.

யாதொரு ரிஸீவர் - கொதுவை வைத்துக்கொண்டவர் - கொதுவை வைத்தவர் ஆகிய இவர்களாலாவது அவர்களுக்காகவாங்து கையெழுத்து செய்யப்பட்ட எழுத்துமூலமான ஆதரவைக்கொண்டாகிலும், மேற்படி இருதிறத்தாரில் எவராவது விண்ணப்பம் செய்துகொண்டு நியாயமான காரணம் காட்டப்படுவதன்மேல் கோர்ட்டாராலாகிலும் எப்போதாயினும் நீக்கிவிடப்படலாம்.

ரிஸீவர் உத்தியோகத்தில் காலி ஏற்பட்டால், அதை இந்த உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் பூர்த்திசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நியமிக்கப்பட்ட ரிஸீவர் கொதுவை வைத்தவருடைய ஏஜெண்டாகக் கருதப்படுவார்; மேலும், கொதுவைப் பத்திரத்தில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, கொதுவை வைத்தவர் - ரிஸீவர் செய்யும் காரியங்களுக்காவது தவறுதல்களுக்காவது முற்றிலும் உத்தரவாதியாவார்.

(4) தாம் எதற்கு ரிஸீவராக நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அதிலிருந்து கிடைக்கும் சகல வரும்படியையும் கொதுவை வைத்தவர் பெயரிலோ அல்லது கொதுவை வைத்துக்கொண்டவர் பெயரிலோ கொதுவை வைத்தவருக்குள்ள சுதந்தரத்தின் முழு அளவுக்குக் கேட்கவும், வியாஜ்ஜிய மூலமாகவாவது (டிக்ரி முதலியவைகளை) நிறைவேற்றுவது மூலமாகவாவது மற்றப்படியாவது வசூலிக்கவும், அப்பிரகாரமே அதற்காகச் சட்டப்படி செல்லத்தக்க ரசீதுகள் கொடுக்கவும், கொதுவை வைத்துக்கொண்டவர் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி தமக்குப் பிரித்துக் கொடுத்திருக்கக்கூடிய ஏதேனும் அதிகாரங்களைச் செலுத்தவும் ரிஸீவருக்கு அதிகாரம் உண்டு.

(5) ரிஸீவரை நியமித்தது சட்டப்படி செல்லுமா செல்லாதா என்று விசாரிப்பது ரிஸீவரிடம் பணம் செலுத்தும் யாதொரு நபரின் வேலையல்ல.

(6) ரிஸீவரானவர் - தம்மால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் யாதொரு பணத்திலிருந்து, தம்முடைய பிரதிபலனுக்காகவும் ரிஸீவர் ஹோதாவில் தாம் செய்திருக்கும் வியாஜ்ஜியச் செலவுகள் கட்டணங்கள் முதலிய சகல செலவுகளுக்காகவும், தம்மால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் சகல தொகைகளின் மொத்தத்தின்மேல் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்கு மேற்படாமல், தம்மை நியமித்திருக்கும் உத்தாவில் குறிப்பிட்டிருக்கும் ஒரு வீதப்படியும், அந்தப்படி வீதம் எதுவும் குறிப்பிட்டிராவிட்டால், ஷை மொத்த தொகையின்மேல் நூற்றுக்கு ஐந்து வீதப்படியும் அல்லது இது காரியத்துக்காக அவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கோர்ட்டாரால் தகுதியானதென்று அனுமதிக்கப்படக்கூடிய வேறே யாதொரு வீதப்படியும் கம்மிஷன் பிடித்துக்கொள்ள பாத்தியதை உடையவராவார்.

(7) கொதுவை வைத்துக்கொண்டவர் எழுத்துமூலமாய்க் கட்டளையிடும்பட்சத்தில், ரிஸீவரானவர் - கொதுவைச் சொத்தை யாவது இன்ஷூர் செய்யப்படத்தக்க தன்மையுடையதாயுள்ள அதன் யாதொரு பாகத்தையாவது தீயினுல் நஷ்டமாகிலும் சேதமாகிலும் உண்டாகாதபடி கொதுவை வைத்துக்கொண்டவர் எவ்வளவுக்கு இன்ஷூர் செய்திருக்கக்கூடுமோ அவ்வளவுக்கு, தம்மால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் பணத்திலிருந்து இன்ஷூர் செய்யவேண்டியதுமல்லாமல் இன்ஷூர் செய்துவைத்திருக்கவும் வேண்டும்.

(8) இன்ஷூரன்ஸ் பணத்தை உபயோகிப்பது சம்பந்தமாய் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ரிஸீவரானவர் - தம்மால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் பணத்தையெல்லாம் அடியில் கண்டபடி உபயோகிக்கவேண்டும்; அதாவது :—

(i) சகல வாடகைத் தொகைகளையும் வரிகளையும் நிலத்தீர்வையையும் வரி வீதங்களையும் கொதுவைச் சொத்தை பாதிக்கும்படியான எவையேனும் இதர செலவுகளையும் செலுத்திவிடுவது;

(ii) எந்தக் கொதுவையால் ஏற்படும் சுதந்தரத்தை அனுசரித்துத் தாம் ரிஸீவராயிருக்கிறாரோ அந்தக் கொதுவை சம்பந்தமாய்ச் சேரவேண்டிய வட்டி முதலியவைகளை முதலில் செலுத்திவிட்டு, வருஷவாரியில் செலுத்தப்படவேண்டிய சகல தொகைகளும் அல்லது இதர தொகைகளும் சகல அசல் தொகைகளின்மேலும் சேரவேண்டிய வட்டியும் சேர்ந்துபோகும்படி விடாமல் அவைகளைச் செலுத்திவருவது;

(iii) தமக்குச் சேரவேண்டிய கம்மிஷனையும், கொதுவைப் பத்திரத்தின்படியாவது இந்த ஆக்டின்படியாவது கிரமமாய்ச் செலுத்தப்படவேண்டிய பயர், லைவ் அல்லது வேறே இன்ஷூரன்ஸ் (ப்ரிமியம்) மேல்வாசித் தொகைகள் எவையேனும் இருந்தால் அவைகளையும், கொதுவை வைத்துக்கொண்டவர் எழுத்துமூலமாகக் கட்டளையிடும் அவசியமான அல்லது கிரமமான மாமத்துகளைச் செய்துமுடிப்பதற்காகப் பிடிக்கும் செலவையும் செலுத்துவது;

(iv) கொதுவைப்படி பாக்கியாய் ஏற்படும் வட்டியைச் செலுத்துவது;

(v) அசல் பணத்துக்காகவாவது அது விஷயமாகவாவது தொகை செலுத்தவேண்டுமென்று கொதுவை வைத்துக்கொண்டவர் எழுத்துமூலமாய்க் கட்டளையிட்டிருந்தால் அந்தப்படியே செலுத்துவது;

மேலும், ஷை ரிஸீவரானவர் - தாம் வரப்பெற்றுக்கொண்ட பணத்தில் மேலேகண்ட செலவுகளைச் செய்த பிறகு மிச்சம் ஏதாகிலும் இருக்கும்பட்சத்தில் அதை, ரிஸீவரின் சுவாதீனத்தில் ஷை சொத்து இராமலிருந்தால் தாம் எந்த வரும்படிக்காக ரிஸீவராய் நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அந்த வரும்படியைப் பெற்றுக்கொள்ள பாத்தியதை உடையவராயிருந்திருக்கும் அல்லது கொதுவைச் சொத்து விஷயத்தில் மற்றப்படி பாத்தியதை பெற்றிருக்கும் நபரிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

(9) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட நிபந்தனைகள் கொதுவைப் பத்திரத்தில் இதற்கு மாறுன உத்தேசம் தெரிவிக்கப்பட்டிரா விட்டாலும் தெரிவிக்கப்பட்டிராதவரையிலும் மாத்திரமே பிரயோகப்படும்; மேலும், (3) குறிப்பிட்டது முதல் (8) குறிப்பிட்டதுவரையில் (இவ்விரண்டு உட்பிரிவுகளும் அடங்க) உள்ள உட்பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளைக் கொதுவைப் பத்திரததின மூலமாய் மாற்றலாம் அல்லது விரிவாக்கலாம்; அல்லாமலும், அப்பிரகாரம் மாற்றப்பட்டபடிக்காவது விரிவாக்கப்பட்டபடிக்காவதுள்ள நிபந்தனைகள் - கூடுமானமட்டில் அந்த மாறுதல்களாகிலும் விரிவுகளாகிலும் ஷை உட்பிரிவுகளில் அடங்கியிருந்தால், எவ்விதமாகவும் எம்மாதிரியான இடைச்சம்பவங்களுடனும் பலப்பிராப்திகளுடனும் பிரயோகப்படுமோ அதே விதமாகவும் அதே மாதிரியான இடைச்சம்பவங்களுடனும் பலப்பிராப்திகளுடனும் பிரயோகப்படும்.

(10) கொதுவைச் சொத்தின் நிர்வாகம் அல்லது பரிபாலன விஷயமாய், சுருக்கவகையாய்ப் பைசல்செய்வது கிரமமல்லவென்று கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிற கஷ்டமான அல்லது முக்கியமான பிரசினைகளாயிராமல் அந்தந்த காலத்தில் ஏற்படும் வேறே எவ்வித பிரசினையைக் குறித்தாவது அவர்களுடைய அபிப்பிராயத்தையாகிலும் ஆலோசனையையாகிலும் உத்தரவையாகிலும் பெறுவதற்காக வியாஜ்ஜியம் தொடராமலே கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட விண்ணப்பத்துக்கு நகல் ஒன்றை அந்த விண்ணப்பத்திலே அக்கறையுடையவர்களில் எவர்களுக்குச் சேர்ப்பிப்பதும் அதைப்பற்றி விசாரணை செய்கையில் எவர்கள் ஹாஜராயிருப்பதும் தகுதியாயிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றக்கூடுமோ அப்படிப்பட்ட நபர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டியதுமல்லாமல் அப்படிப்பட்ட நபர்கள் அதைப்பற்றிய விசாரணையில் ஹாஜராகவும் வேண்டும்.

இந்த உட்பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தின் செலவுகளையும் இன்னுர் செலுத்தவேண்டுமென்று கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி தீர்மானிக்க வேண்டும்.

(11) இந்தப் பிரிவில், "கோர்ட்" என்பது - கொதுவையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான யாதொரு வியாஜ்ஜியத்தில் விசாரணை அதிகாரம் உடையதாயிருக்கும் கோர்ட் என்று அர்த்தமாகும்."

1882-ம் ஹூத்து 4-வது ஆக்ட் 71-வது பிரிவில் திருத்தம்.

35. ஷை ஆக்ட் 71-வது பிரிவில் "சில வருஷகாலத்திற்கு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1882-ம ஹூத்து 4-வது ஆக்ட் 72-வது பிரிவில் திருத்தம்.

36. ஷை ஆக்ட் 72-வது பிரிவில்,—

(i) "கொதுவையிலிருந்துகொண்டிருக்கையில், கொதுவை வைத்துக்கொண்டவன் கொதுவைச் சொத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டால், அவன்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "கொதுவை வைத்துக்கொண்ட யாதொரு நபர்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(ii) (a) குறிப்பிட்ட பகுதியை விட்டுவிடவேண்டும்;

(iii) (b) அடையாளமிட்ட பகுதியில், "அதைக் காப்பாற்றுவதற்காகவும்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "கொதுவைச் சொத்தைக் காப்பாற்றுவதற்காகவும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(iv) "அப்படிப்பட்ட வீதம்" என்னும் வார்த்தைகளுக்கு முன் "கொதுவைப் பத்திரத்தில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(v) "அசல் தொகையோடு சேர்க்கலாம்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

"ஆனால், கொதுவை வைத்தவர் சொத்தைப் பாதுகாப்பதற்காவது ஹக்கை பலப்படுத்துவதற்காவது தக்கபடியும் சரியான காலத்திலும் ஏற்பாடுகள் செய்யத்தவறிப் போயிருந்தாலன்றி மற்றப்படி, கொதுவை வைத்துக்கொண்டவர் (b), (c) குறிப்பிட்ட பகுதிகளின்படி பணம் செலவழிப்பது அவசியமாகக் கருதப்படமாட்டாது"; மேலும்,

(vi) "மேல்வாசிப்பணமானது அசல் தொகையோடு சேர்ந்து கொதுவைச் சொத்தின்மேல் பொறுப்பாயிருக்கவேண்டும்; மேலும், மேல்வாசிப்பண விஷயத்தில் (அசல் தொகையைப் போலவே) முன்னிட்டுச் செலுத்தும்படியான சுதந்தரமும் அதே வட்டி வீதமும் ஏற்படவேண்டும்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"மேல்வாசிப் பணத்தை அசல் பணத்துக்குச் செலுத்தப்படத்தக்க வட்டி வீதப்படியாவது, அப்படிப்பட்ட வீதம் கொதுவைப் பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீதப்படியாவது அசல் பணத்துடன் சேர்க்கவேண்டும்."

1882-ம் ௵த்து 4-வது ஆக்ட் 73-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

37. ௸ ஆக்ட் 73-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

ஸர்க்கார் தீர்வை பாக்கிக்காகச் செய்யப்படும் விற்பனையில் கிடைக்கும் பணத்தையாவது, சொத்தை எடுத்துக்கொள்வதற்காகக் கொடுக்கப்படும் பிரதிபலன் தொகையையாவது பெறுவதற்குள்ள சுதந்தரம்.

"73. (1) கொதுவைச் சொத்தாவது அதில் யாதொரு பாகமாவது அதிலுள்ள யாதொரு சுதந்தரமாவது ஸர்க்கார் தீர்வைபாக்கியையாகிலும் பொதுத்தன்மை வாய்ந்த இதர கட்டணங்களையாகிலும் அந்த சொத்து விஷயமாய் பாக்கியாயுள்ள வாடகையையாகிலும் செலுத்தத் தவறிப் போனதற்காக விற்பனை செய்யப்பட்டு, அந்தப்படி தவறிப்போன விஷயம் கொதுவை வைத்துக்கொண்டவருடைய யாதொரு தவறுதலினால் ஏற்பட்டிராவிட்டால், கொதுவை வைத்துக்கொண்டவர் ௸ பாக்கியை

யும் செலுத்தும்படி சட்டப்பிரகாரம் கட்டளையிடப்பட்ட சகல கட்டணங்களையும் இதர கழிவுத்தொகைகளையும் செலுத்திய பிறகு விற்பனைத் தொகையில் மிகுதியாயிருக்கும் யாதொரு தொகையிலிருந்து கொதுவைப் பணம் முழுவதையுமோ அதில் ஒரு பாகத்தையோ தம்மிடத்தில் செலுத்தும்படி தாவா செய்ய பாத்தியதை உடையவராவார்.

(2) கொதுவைச் சொத்தாவது அதில் யாதொரு பாகமாவது அதிலுள்ள யாதொரு சுதந்தரமாவது 1894-ம் ஸ்லத்து நிலம் எடுத்துக்கொள்வதற்கான ஆக்டின்படியாகிலும் அசையாப்பொருளை நிர்ப்பந்தமாய் எடுத்துக்கொள்வதற்காக நிபந்தனை கண்டு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியாகிலும் எடுத்துக்கொள்ளப்பட்டால், கொதுவை வைத்துக்கொண்டவர் - கொதுவை வைத்தவருக்குப் பிரதிபலனாகச் சேரவேண்டிய தொகையிலிருந்து கொதுவைப் பணம் முழுவதையுமோ அதில் ஒரு பாகத்தையோ தம்மிடத்தில் செலுத்தும்படி தாவா செய்ய பாத்தியதை உடையவராவார். 1894-ம் ஸ்லத்து 1-வது ஆக்ட்.

(3) அப்படிப்பட்ட தாவாக்கள் - முன்னிட்ட பொறுப்புதாரர்களின் தாவாக்களைத் தவிர மற்ற சகல தாவாக்களைக்காட்டிலும் முதன்மையானவையாய்க் கொள்ளப்படும்; மேலும், கொதுவையின் மேல் சேரவேண்டிய அசல் பணம் பாக்கிபாய் ஏற்பட்டிராவிட்டாலும் பாதகமில்லாமலே, ஷை தாவாக்களை அமுலுக்குக் கொண்டு வரலாம்."

1882-ம் ஸ்லத்து 4-வது ஆக்ட் 74, 75-வது பிரிவுகளை விட்டுவிடுவது.

38. ஷை ஆக்ட் 74-வது, 75-வது பிரிவுகளை விட்டுவிடவேண்டும்.

1882 ம் ஸ்லத்து 4-வது ஆக்ட் 76-வது பிரிவில் திருத்தம்.

39. ஷை ஆக்ட் 76-வது பிரிவில்,—

(a) (c) குறிப்பிட்ட பகுதியில் "மற்ற சகல செலவுகளையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "சகல குத்தகை அல்லது வாடகைத் தொகையையும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்;

(b) (h) குறிப்பிட்ட பகுதியில் "(c), (d)-உட்பிரிவுகளில் கண்டிருக்கிற செலவுகளையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "சொத்தை நிர்வாகம் செய்வதற்காகவும் குத்தகை அல்லது வாடகைத் தொகைகளையும் ஆதாயங்களையும் வசூலிப்பதற்காகவும் கிரமமாய்ப் பிடித்த செலவுகளையும் (c), (d) குறிப்பிட்ட பகுதிகளில் கண்ட இதர செலவுகளையும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொண்டு, "கொதுவைப் பணத்திற்கு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்;

(c) (i) குறிப்பிட்ட பகுதியில் "மொத்த" என்னும் வார்த்தையை விட்டுவிடவேண்டும்; மேலும், "கணக்குச் சொல்லவேண்

டும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"மேலும், அவன் - கொதுவைச் சொத்து சம்பந்தமாய் ஷை தேதி அல்லது காலத்துக்குப் பிறகு செய்யப்பட்ட எவையேனும் செலவுகளினிமித்தம் ஷை வரும்படியிலிருந்து யாதொரு தொகையைக் கழித்துக்கொள்ள பாத்தியதை உடையவனுகமாட்டான்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 80-வது பிரிவை விட்டுவிடுவது.

40. ஷை ஆக்ட் 80-வது பிரிவை விட்டு விடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 81-வது பிரிவுக்குப் பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

41. ஷை ஆக்ட் 81-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது :—

ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவது.

"81. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொத்துக்களின் சொந்தக்காரராயிருப்பவர் அவைகளை ஒரு நபருக்குக் கொதுவை வைத்து, பிறகு அந்த சொத்துக்களில் ஒன்றையாவது பலவற்றையாவது வேறொரு நபருக்குக் கொதுவை வைத்தால், பிற்பட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர் - இதற்கு மாறுக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராவிட்டால், தம்மிடத்தில் கொதுவை வைக்கப் படாத சொத்து அல்லது சொத்துக்கள் இருக்கும் அளவுக்கு அந்த சொத்து அல்லது சொத்துக்களிலிருந்து முந்திய கொதுவைக் கடனைத் தீர்த்துவிடும்படிச் செய்ய பாத்தியதை உடையவராவார்; ஆனால், அவர் - முந்திய கொதுவைக்காரரின் அல்லது ஐவேஜுக்காக அந்த சொத்துக்களில் எதிலாகிலும் பாத்தியதை அடைந்திருக்கிற வேறே யாதொரு நபரின் சுதந்தரத்துக்குப் பாதகம் உண்டாகும்படி மேற்சொல்லிய பிரகாரம் பாத்தியதையைச் செலுத்தக் கூடாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 82-வது பிரிவில் திருத்தம்.

42. ஷை ஆக்ட் 82-வது பிரிவில்,—

(1) "பல சொத்துக்களுக்கு" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "சொத்துக்கள் உள்ளாயிருக்கின்றன" என்னும் வார்த்தைகளில் முடியும் முதல் பாராவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"கொதுவைக்குட்பட்ட சொத்து இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்குச் சொந்தமானதாயிருந்து, அந்த சொத்தில் அவர்களுக்கு வெவ்வேறுன பிரத்தியேக சொத்துவ பாத்தியதைகள் இருந்தால், அப்படிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமாயுள்ள ஷை சொத்தின் வெவ்வேறு பாகங்கள் - இதற்கு மாறுக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராவிட்டால், கொதுவையினுல் ஈடு செய்யப்பட்டிருக்கிற கடனுக்காக வீதப்படி பணம் செலுத்துவதற்கு உள்ளாயிருக்கின்றன; மேலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு பாகமும் இன்ன வீதப்படி பணம் செலுத்தவேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் காரியத்துக்காக, அதன் கிரயத் தொகையானது - அது கொதுவை

வைக்கப்பட்ட தேதியில் உள்ளாயிருக்கக்கூடிய வேறே யாதொரு கொதுவை அல்லது பொறுப்பின் தொகையைக் கழித்த பின்பு ஷை தேதியில் அதன் கிரயத்தொகையாகக் கருதப்படும்."

(2) அதே பிரிவின் மூன்றாவது பாராவில், "இரண்டாவது" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "பிற்பட்ட" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 83-வது பிரிவில் திருத்தம்.

43. ஷை ஆக்ட் 83-வது பிரிவில்,—

(a) "அசல் தொகை செலுத்தப்படத்தக்கதான பின்பு" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "யாதொரு கொதுவை விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க அசல் தொகை பாக்கியாய் ஏற்பட்ட பின்பு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்;

(b) "அப்போது தன் வசத்திலாவது அதிகாரத்துக்குள்ளாவது கொதுவைப் பத்திரமிருந்தால் அதை" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "கொதுவைப் பத்திரத்தையும் கொதுவைச் சொத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாய்த் தன் வசத்திலாவது அதிகாரத்துக்குள்ளாவது இருக்கிற சகல தஸ்தவேஜுகளையும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(c) "கட்டப்பட்ட கொதுவைப் பத்திரம்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "கட்டப்பட்ட கொதுவைப் பத்திரமும் மேலேகண்ட இதரமான சகல தஸ்தவேஜுகளும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(d) "வேறே நபருக்காவது கொடுத்துவிடப்படும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட பாராவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

"கொதுவைச் சொத்து கொதுவை வைத்துக்கொண்டவருடைய சுவாதீனத்தில் இருந்தால், கோர்ட்டார் - மேலேகண்டபடி கட்டிவைக்கப்பட்ட தொகையை அவரிடத்தில் கொடுப்பதற்குமுன், கொதுவைச் சொத்தின் சுவாதீனத்தைக் கொதுவை வைத்தவருக்கு ஒப்புவிக்கும்படியும், கொதுவைச் சொத்தைக் கொதுவை வைத்தவருக்காவது கொதுவை வைத்தவர் குறிப்பிடக்கூடிய மூன்றும் நபருக்காவது கொதுவை வைத்தவருடைய செலவில் மறுபடியும் ட்ரான்ஸ்பர் செய்யும்படியும், அல்லது கொதுவை வைத்துக்கொண்டவருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட கொதுவை வைத்தவருடைய பாத்தியதையைப் பிரதிகூலமாய்ப் பாதிக்கக்கூடிய யாதொரு சுதந்தரம் அற்றுப் போகும்படிச் செய்யப்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொண்டு ஒரு கடிதம் எழுதி அதை ரெஜிஸ்டர் செய்விக்கும்படியும் கட்டளையிட வேண்டும்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 84-வது பிரிவில் திருத்தம்.

44. ஷை ஆக்ட் 84-வது பிரிவில்,—

(a) "செலுத்தப் பணம் காட்டப்பட்ட தேதி முதற்கொண்டாவது" என்னும வார்த்தைகளுக்குப் பிறகு "கட்டப்பட்ட தொ

கையின் விஷயத்தில், அப்படிப்பட்ட தொகை செலுத்துவதாக முன்னதாய்க் காட்டப்பட்டிராவிட்டால்," என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(b) "சங்கதிக்குத் தக்கபடி" என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, "செய்தவுடனேயாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக, "செய்து, 83-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி கொதுவை வைத்துக்கொண்டவருக்கு நோடிஸ் சேர்ப்பித்தானவுடனேயாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும், "நின்று போகவேண்டும்" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியில் கண்ட பாராவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"ஆனால், கொதுவை வைத்தவர் அப்படிப்பட்ட தொகையைச் செலுத்துவதாக முன்னே காட்டாமல் கட்டியிருந்து, பிற்பட்டு அதையாவது அதில் யாதொரு பாகத்தையாவது வாங்கிவிட்டிருந்தால், அந்தப்படி வாங்கிவிட்ட தேதியிலிருந்து அசல் பணத்துக்கு வட்டி செலுத்தப்படத்தக்கதாகும்" ; மேலும்,

(c) "கான்ட்ராக்ட் செய்யப்பட்டிருந்தால்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "கான்ட்ராக்ட் செய்யப்பட்டிருந்து, சந்தர்ப்பத்துக் கேற்றபடி மேலேகண்ட பிரகாரம் செலுத்தக் காட்டப்படுவதற்கு முன்னமேயாவது கட்டப்படுவதற்கு முன்னமேயாவது அப்படிப்பட்ட நோடிஸ் கொடுக்கப்படாதிருந்தால்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 91-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

45. ஷை ஆக்ட் 91-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

மீட்பதற்காக இன்னார் வியாஜ்ஜியம் தொடரலாமென்பது.

"91. கொதுவை வைத்தவரைத் தவிர அடியிற்கண்ட நபர்களில் எவராவது - கொதுவைச் சொத்தை மீட்கலாம் அல்லது மீட்பதற்காக வியாஜ்ஜியம் தொடரலாம் ; அதாவது :—

(a) (மீட்டுக்கொள்ள உத்தேசிக்கப்பட்ட சுதந்தரத்தைக் கொதுவை வைத்துக்கொண்டவரல்லாமல்) கொதுவைச் சொத்திலாவது அதை மீட்பதற்கான பாத்தியதையிலாவது யாதொரு சுதந்தரத்தையாகிலும் அதன்மேல் யாதொரு பொறுப்பையாகிலும் பெற்றிருக்கும் வேறே யாதொரு நபர் ;

(b) கொதுவைக் கடனையாவது அதில் யாதொரு பாகத்தையாவது செலுத்துவதற்கு ஜாமீனாயிருக்கும் யாதொரு நபர் ; அல்லது,

(c) கொதுவை வைத்தவருக்குக் கடன் கொடுத்து அவருடைய ஆஸ்தியைப் பரிபாலனம் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில் கொதுவைச் சொத்தை விற்பனை செய்வதற்காக டிக்ரி பெற்றிருக்கும் யாதொரு நபர்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 92, 93, 94-வது பிரிவுகளைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

46. ஷை ஆக்ட் 91-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :

ஒரு கடன்காரருக்குப் பதிலாக மற்றொரு கடன்காரர் பர்த்திசெய்யப்படுவது.

" 92. கொதுவை வைத்தவரும் கூட்டாய்க் கொதுவை வைத்த யாதொரு நபருமல்லாமல் 91-வது பிரிவில் சொல்லியிருக்கும் இதர நபர்களில் எவராவது-கொதுவைக்குட்பட்ட சொத்தை மீட்பதன் மேல், அப்படிப்பட்ட சொத்தை மீட்பது,மீட்கும் சுதந்தரம் அற்றுப்போகும்படிச் செய்வது அல்லது விற்பனை செய்வதைப் பொறுத்தமட்டில், கொதுவை வைத்துக்கொண்ட எந்த நபருடைய கொதுவையைத் தாம் மீட்கிறாரோ அவருக்குக் கொதுவை வைத்தவரின் அல்லது கொதுவை வைத்துக்கொண்ட வேறே யாதொரு நபரின் விஷயத்தில் என்ன சுதந்தரங்கள் ஏற்படுமோ அதே சுதந்தரங்களை உடையவராவார்.

இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் சுதந்தரத்துக்குப் பர்த்தி செய்யப்பெறும் சுதந்தரம் என்று பெயர்; மேலும், அதை அடையும் யாதொரு நபர் - கொதுவை வைத்துக்கொண்ட எந்த நபருடைய கொதுவையைத் தாம் மீட்கிறாரோ அவருடைய சுதந்தரங்களுக்குப் பர்த்திசெய்யப்பட்டதாகச் சொல்லப்படுவார்.

கொதுவை வைத்தவருக்கு யாதொரு நபர் பணம் கொடுத்திருந்து அதைக்கொண்டு கொதுவை மீட்கப்பட்டிருந்தால், அந்த நபர் கொதுவை வைத்துக்கொண்ட எவருடைய கொதுவை மீட்கப்பட்டிருக்கிறதோ அவரின் சுதந்தரங்களுக்குப் பர்த்தி செய்யப்படவேண்டுமென்று கொதுவை வைத்தவர் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவு மூலமாய்ச் சம்மதித்திருக்கிற பட்சத்திலே, ஷை நபர் அந்தப்படியே பர்த்திசெய்யப்படுவார்.

எந்தக் கொதுவையின் விஷயத்தில் பர்த்திசெய்யப்பெறும் சுதந்தரம் வேண்டுமென்று கேட்கப்படுகிறதோ அந்தக் கொதுவை பூர்த்தியாய் மீட்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு நபருக்கு இந்தப் பிரிவில் கண்டதெதனாலும் அப்படிப்பட்ட சுதந்தரம் உண்டாவதாகக் கருதப்படமாட்டாது.

வெவ்வேறு காலங்களில் கொடுக்கப்பட்ட ஈடுகளை ஒன்றாய்ச் சேர்க்கக்கூடாதென்று தடைப்பது.

93. கொதுவை வைத்துகொண்ட யாதொரு நபர் இடையில் ஏற்பட்ட யாதொரு கொதுவையைக்குறித்து நோடிஸ் பெற்றாகிலுஞ்சரி பெறாமலாகிலுஞ்சரி, யாதொரு முந்திய கொதுவைக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டால், அது காரணமாக அவருக்குத் தமது பிரதம ஈட்டின் விஷயமாய் எவ்வித முற்பட்ட பாத்தியதையும் ஏற்படமாட்டாது. மேலும், 79-வது பிரிவில் சொல்லியிருக்கிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே, கொதுவை வைத்துக்கொண்டவர் எவராவது இடையில் ஏற்பட்ட யாதொரு கொதுவையைக் குறித்து நோடிஸ் பெற்றாகிலுஞ்சரி பெறாமலாகிலுஞ்சரி, கொதுவை வைத்தவருக்குப் பின்னிட்டுப் பணம் கொடுத்தால், அதனால் அவர் அந்தப்படி பின்னிட்டுக் கொடுத்த பணத்துக்காக தம்முடைய ஈட்டின் விஷயத்தில் எவ்வித முற்பட்ட பாத்தியதையையும் அடையமாட்டார்.

94. அடுத்தடுத்துள்ள கடன்களுக்காக ஒருவருக்குப் பின் ஒருவராய்க் கொதுவை வைத்துக்கொள்பவர்கள் பலரிடத்தில் சொத்து கொதுவை வைக்கப்பட்டால், மத்தியில் கொதுவை வைத்துக் கொண்ட யாதொரு நபருக்குக் கொதுவை வைத்தவர்மேல் என்ன சுதந்தரங்கள் உண்டோ அதே சுதந்தரங்கள் அவருக்குப் பிந்தி கொதுவை வைத்துக்கொண்டவர்கள்மேல் அவருக்கு உண்டு."

மத்தியில் கொதுவை வைத்துக்கொண்டவருக்குள்ள சுதந்தரங்கள்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 95-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

47. ஷை ஆக்ட் 95-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அதாவது :—

"95. கொதுவை வைத்த பல நபர்களில் ஒருவர் கொதுவைச் சொத்தை மீட்கும்பட்சத்தில், அவர் தம்முடன் கூட்டாய்க் கொதுவை வைத்தவர்கள் மேல் 92-வது பிரிவின்படி பார்த்திசெய்யப் பெறுவதற்குத் தமக்குள்ள சுதந்தரத்தைச் செலுத்தும்போது, அந்தப்படி மீட்பதற்குக் கிரமமாய்ப் பிடித்த செலவில், ஷை சொத்தில் அவர்களுக்குள்ள பாகத்துக்கு விதிக்கக்கூடிய விதாசாரப்படி ஏற்படும் தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்கப்படத்தக்க கொதுவைப் பணத்துடன் சேர்த்துக்கொள்ள அவருக்குப் பாத்தியதை உண்டு."

கூட்டாய்க் கொதுவை வைத்தவர் மீட்கும் விஷயத்தில் செலவுகளைப் பெற அவருக்குள்ள சுதந்தரம்.

48. ஷை ஆக்ட் 98-வது பிரிவில், "ஒற்றியாகவாவது அவதிக் கிரயக் கொதுவையாகவாவது பெந்தக போக்கியமாகவாவது இங்கிலிஷ் மாதிரியான கொதுவையாகவாவது, அப்படிப்பட்ட கொதுவைகளில் முதலாவதும் மூன்றாவதும் அல்லது இரண்டாவதும் மூன்றாவதும் சேர்ந்த கொதுவையாகவாவிராத யாதொரு கொதுவை" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "குறிக்கப்படாத யாதொரு கொதுவை" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 98-வது பிரிவில் திருத்தம்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 100-வது பிரிவில் திருத்தம்,

49. ஷை ஆக்ட் 100-வது பிரிவில்,—

(a) "இதில் முன்னமே கொதுவை வைக்கிறவனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற சகல நிபந்தனைகளும் கூடியமட்டில் அந்த சொத்தின் சொந்தக்காரனுக்குச் சம்பந்தப்படவேண்டும் ; 81, 82-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளும் கூடியமட்டில் அப்படிப்பட்ட பொறுப்புடையவனுக்குச் சம்பந்தப்படவேண்டும்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக, "யாதொரு ஒற்றிக்குச் சம்பந்தப்பட்டவைகளாய் இதில் முன்னமே கண்டிருக்கிற சகல நிபந்தனைகளும் கூடியமட்டில் அப்படிப்பட்ட பொறுப்புக்குப் பிரயோகப்படும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும்,

(b) "அவருக்குள்ள பொறுப்புக்குச் சம்பந்தப்படமாட்டாது" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

"மேலும், அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தில் வெளிப்படையாய் வேறே விதமாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, எந்த சொத்தாகிலும் யாதொரு நபருக்குப் பெறுமான ஐவேஜுக்காகவும் யாதொரு பொறுப்பைப்பற்றிய நோடிஸ் இல்லாமலும் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்து அது அவருடைய சுவாதீனத்திலிருந்தால் அந்த சொத்தின்மேல் அந்தப் பொறுப்பை நிறைவேற்றக்கூடாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 101-வது பிரிவுக்குப் பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

50. ஷை ஆக்ட் 101-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

பின்னிட்டு ஏற்பட்ட சிக்குச் சிலுவின் விஷயத்தில் ஒன்றில் மற்றொன்று அடங்கிப்போகாதென்பது.

"101. அசையாப்பொருளைக் கொதுவை வைத்துக்கொண்ட யாதொரு நபராவது அதன்மேல் பொறுப்பு பெற்றிருக்கும் யாதொரு நபராவது, அந்தப்படி கொதுவை வைத்துக்கொண்டவரிடமிருந்தாகிலும் பொறுப்பு பெற்றிருப்பவரிடமிருந்தாகிலும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்ற யாதொரு நபராவது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி கொதுவை வைத்தவருக்காயினும் சொந்தக்காரருக்காயினும் ஷை சொத்தில் உள்ள சுதந்தரங்களைக் கிரயத்துக்கு வாங்கலாம் அல்லது மற்றப்படி அடையலாம்; ஆனால், அந்தப்படி கிரயத்துக்கு வாங்குவதனால் அல்லது அடைவதனால், தமக்கும் அதே சொத்தைப் பின்னிட்டுக் கொதுவை வைத்துக்கொண்ட யாதொரு நபருக்குமாவது, தமக்கும் அதே சொத்தின்மேல் பின்னிட்டுப் பொறுப்பு பெற்றிருக்கும் யாதொரு நபருக்குமாவது சம்பந்தப்பட்டமட்டில் ஷை கொதுவை பாத்தியதையாகிலும் பொறுப்பாகிலும் ஒன்றிலொன்று அடங்கிப்போய்விடமாட்டாது; மேலும், அந்தப்படி பின்னிட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவருக்காயினும் பொறுப்பு பெற்றவருக்காயினும் முந்திய கொதுவை அல்லது பொறுப்பை மீட்காமலோ அதற்கு உட்பட்டன்றி மற்றப்படியோ அந்த சொத்தை மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யவாகிலும் விற்பனை செய்யவாகிலும் பாத்தியதை ஏற்படமாட்டாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 102-வது பிரிவில் திருத்தம்.

51. ஷை ஆக்ட் 102-வது பிரிவில்,—

(a) "அப்படிப்பட்ட நோடிஸ் யாரிடத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டியதோ அந்த நபராவது ஏஜெண்டாவது மேற்படி டிஸ்ட்ரிக்டில் அகப்படாவிட்டாலும், நோடிஸ் சேர்ப்பிக்கவேண்டிய நபருக்கு அவன் இன்னானென்று தெரியாவிட்டாலும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "அப்படிப்பட்ட நோடிஸ் யாருக்குச்

சேர்ப்பிக்கப்படவேண்டுமோ அந்த நபராவது ஏஜெண்டாவது அகப்படாவிட்டாலும், நோடிஸ் சேர்ப்பிக்கவேண்டிய நபருக்கு அவன் இன்னுனென்று தெரியாவிட்டாலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) "யாதொரு நோடிஸானது போதுமானதாகவே எண்ணப்படும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"ஆனல், கட்டியிருக்கும் யாதொரு தொகை சம்பந்தமாய் 83-வது பிரிவின்படி கொடுக்கவேண்டியிருக்கிற நோடிஸ் விஷயத்தில், எந்தக் கோர்ட்டில் தொகை கட்டப்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.";

(c) "அப்படி யாருக்குப் பணம் செலுத்தக் காட்டப்படவேண்டியதோ அந்த நபராவது ஏஜெண்டாவது மேற்படி டிஸ்ட்ரிக்டுக்குள் அகப்படாவிட்டாலும், அவன் இன்னுனென்று பணம் செலுத்தக் காட்ட விரும்புகிறவனுக்குத் தெரியாவிட்டாலும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "அப்படி யாருக்குப் பணம் செலுத்தக் காட்டப்படவேண்டியதோ அந்த நபராவது ஏஜெண்டாவது அகப்படாவிட்டாலும், அவன் இன்னுனென்று பணம் செலுத்தக் காட்ட விரும்புகிறவனுக்குத் தெரியாவிட்டாலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(d) "கடைசியாய் மேலே சொல்லியிருக்கிற கோர்ட்டில்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "கொதுவைச் சொத்தை மீட்பதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவரப்படக்கூடிய யாதொரு கோர்ட்டில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 103-வது பிரிவில் திருத்தம்.

52. ஷை ஆக்ட் 103-வது பிரிவில்,—

(a) "க்யூரேட்டர் அப்படிப்பட்ட நோடிஸைச் சேர்ப்பிக்கலாம்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "க்யூரேட்டராவது க்யூரேட்டருக்காவது அப்படிப்பட்ட நோடிஸைச் சேர்ப்பிக்கலாம் அல்லது ஷை க்யூரேட்டர்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) "அப்படிப்பட்ட நோடிஸைச் சேர்ப்பிக்கவாவது" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "வியாஜ்ஜியத்திற்கு" என்னும் வார்த்தையில் முடிவாகிற வார்த்தைகளையும், "ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 31-ம் அத்தியாயத்திலுள்ள" என்னும் வார்த்தைகளில் ஆரம்பித்து "சம்பந்தப்படவேண்டும்" என்னும் வார்த்தையில் முடிவாகிற வார்த்தைகளையும் விட்டுவிடவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 106-வது பிரிவில் திருத்தம்.

53. ஷை ஆக்ட் 106-வது பிரிவில், "அந்த நபருக்கு நேராயாகிலும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:

"அந்த நபருக்குத் தபால்மூலமாய் அனுப்பவேண்டும், அல்லது அந்த நபருக்கு நேராயாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 107-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

54. ஷை ஆக்ட் 107-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

இன்னவிதமாய்க் குத்தகை அல்லது வாடகைக்கு விடவேண்டுமென்பது.

"107. மாதவாரியாகவாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத யாதொரு காலத்துக்காவது குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதைத் தவிர மற்றப்படி அசையாப்பொருளைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதாயிருந்தால், ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவின்மூலமாக மாத்திரமே விடக்கூடும்; மேலும், அப்படிப்பட்ட ஆதாரவையும், அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாரவுகள் இருக்கும்பட்சத்தில் அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆதாரவையும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுகிறவர், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்துக்கொள்ளுகிறவர் ஆகிய இருவரும் எழுதிமுடிக்கவேண்டும்:

ஆனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று, பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து, அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கும் யாதொரு வகையைச் சேர்ந்த அசையாப்பொருளைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடும் விஷயங்களில் ரெஜிஸ்டர்செய்யப்படாத ஆதாரவு மூலமாகவாகிலும் வாய்மொழியான உடன்படிக்கை மூலமாகவாகிலும் விடலாமென்று ஷை விளம்பரமூலமாய்க் கட்டளையிடலாம்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 108-வது பிரிவில் திருத்தம்.

55. ஷை ஆக்ட் 108-வது பிரிவிலே,—

(a) (h) குறிப்பிட்ட பகுதியில்—

(i) "சகல பொருள்களையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "குத்தகை அல்லது வாடகை முடிவாய்விட்ட பிறகும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(ii) "அந்த குத்தகை அல்லது வாடகை நடந்துகொண்டிருக்கும் காலத்தில் எப்போதாவது எடுத்துவிடலாம்; ஆனால்," என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக, "குத்தகை அல்லது வாடகைக்கு விடப்பட்ட சொத்து தன் சுவாதீனத்திலிருக்கும்போது எப்போதாகிலும் எடுத்துவிடலாம்; ஆனால், அதற்குப் பிறகு அந்தப்படி எடுத்துவிடக்கூடாது; மேலும்," என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அல்லாமலும்,

(b) (o) குறிப்பிட்ட பகுதியில், "வீடுகளை" என்னும் வார்த்தைக்குப் பார்த்தியாக "குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவ

னுக்குச் சொந்தமாயுள்ள வீடுகளை" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 111-வது பிரிவில் திருத்தம்.

56. ஷெ ஆக்ட் 111-வது பிரிவிற்கண்ட (g) குறிப்பிட்ட பகுதியில்,---

(a) "மறுபடி கைக்கொள்ளலாமென்றாவது அந்த குத்தகை அல்லது வாடகை செல்லாமற் போகவேண்டுமென்றாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "மறுபடி கைக்கொள்ளலாமென்று" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) "விட்டுவிட்டாகிலும்" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"அல்லது, (3) குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவன் கடனிறுக்கச் சக்கியற்றவனென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, அப்படிப்பட்ட சம்பவம் நேரிடுவதன்மேல் குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவன் மறுபடி கைக்கொள்ளலாமென்று குத்தகை அல்லது வாடகையில் நிபந்தனை கண்டாகிலுமிருந்து" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(c) "இவ்விரு விஷயத்திலும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "இவ்விஷயங்களில் எதிலாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(d) "தெரிவிக்கும்படியான எதோ ஒரு காரியத்தை" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "தெரிவிக்கும்படியாக, இழந்து போன விஷயத்தை வற்புறுத்தும்பொருட்டு சட்டசம்பந்தமான நடவடிக்கைகள் தொடங்குவதைத் தவிர வேறே யாதொரு காரியத்தை" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்டில் 114A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது.

57. ஷெ ஆக்ட் 114-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட புதிய பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

வேறே சில விஷயங்களில் சுதந்தரம் இழந்துபோகாமலிருப்பதற்குப் பரிகாரம்.

"114A. அசையாப்பொருளின் குத்தகை அல்லது வாடகையானது வெளிப்படையாய் யாதொரு திட்டம் எற்படுத்தி அதை மீறி நடந்தால் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் மறுபடி கைக்கொள்ளலாமென்று நிபந்தனை கண்டிருந்து, அந்த நிபந்தனையை மீறி நடந்ததற்காக சுதந்தரம் இழந்துபோய் அந்த குத்தகை அல்லது வாடகை முடிவாய்விட்டிருக்கும்பட்சத்தில்,—

(a) இன்ன வகையில் மீறி நடந்ததாய் முறையிட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டும்,

(b) மீறி நடந்ததற்காகப் பரிகாரம் செய்யக்கூடுமானால், அந்தப்படி மீறி நடந்ததற்காகப் பரிகாரம் செய்யும்படி குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவருக்கு உத்தரவு செய்தும்,

குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவருக்கு குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் நோடிஸ் சேர்ப்பித்திருந்தாலன்றி மற்றப்படியும் அந்தப்படி நோடிஸ் சேர்ப்பிக்கிறவரையிலும்,

மீறி நடந்ததற்குப் பரிகாரம் செய்யக்கூடுமானால், நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் பரிகாரம் செய்துகொடுக்க குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கினவர் தவறிப்போனாலன்றி மற்றப்படியும் தவறிப்போகிற வரையிலும் இஜெக்ட்மென்ட் செய்ய வியாஜ்ஜியம் தொடரலாகாது.

குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்பட்ட சொத்தை ஒப்படை செய்வது, கீழ்க்குத்தகை அல்லது வாடகைக்கு விடுவது, அதன் சுவாதீனத்தை விட்டுவிடுவது அல்லது அதை ஒருவகை செய்வதற்கு விரோதமாகவுள்ள வெளிப்படையான ஒரு திட்டத்துக்காவது, குத்தகை அல்லது வாடகைத்தொகை செலுத்தப்படாத விஷயத்தில் சுதந்தரத்தை இழந்துவிடுவதற்குச் சம்பந்தப்பட்டுள்ள வெளிப்படையான ஒரு திட்டத்துக்காவது இந்தப் பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 119-வது பிரிவுக்குப் பார்த்தியாக புதிய பிரிவை அமைத்துக் கொள்வது.

58. ஷை ஆக்ட் 119-வது பிரிவுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

பரிவர்த்தனையாகப் பெற்றுக்கொள்ளப் பட்ட பொருளை இழந்துவிட்ட நபருடைய சுதந்தரம்.

"119. யாதொரு பரிவர்த்தனைக்குச் சம்பந்தப்பட்ட எந்தக் கட்சிக்காராவது அப்படிப்பட்ட கட்சிக்காரர் மூலமாய்ச் சுதந்தரம் கொண்டாடும் யாதொரு நபராவது மற்றொரு கட்சிக்காரருடைய ஹக்கில் யாதொரு குறை இருப்பது காரணமாக தம்மால் பரிவர்த்தனையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருளையாகிலும் அதில் எவ்வளவையாகிலும் இழந்துபோய்விட்டால், அப்போது பரிவர்த்தனை சம்பந்தமான ஷரத்துகளிலிருந்து இதற்கு மாறான உத்தேசம் இருப்பதாகத் தெரியவந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட மற்றொரு கட்சிக்காரர் - இதனால் ஏற்பட்ட நஷ்டத்தை ஷை கட்சிக்காரருக்காகிலும் அவர் மூலமாய்ச் சுதந்தரம் கொண்டாடும் யாதொரு நபருக்காகிலும்கட்டிக்கொடுப்பதற்கோ அல்லது அந்தப்படி இழந்துவிட்ட நபர் இஷ்டப்படும்பட்சத்தில், ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட சொத்து அப்படிப்பட்ட மற்றொரு கட்சிக்காரரின் சுவாதீனத்தில் இன்னும் இருந்தால் அதைத் திருப்பிக்கொடுத்துவிடுவதற்கோ உட்பட்டவராவார்."

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 128-வது பிரிவில் திருத்தம்.

59. ஷை ஆக்ட் 128-வது பிரிவில், "எல்லாக் கடன்களையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக "எல்லாக் கடன்களையும், நிறைவேற்ற வேண்டிய எல்லாப் பொறுப்புகளையும்" என்னும் வார்த்தைகளையும், "செலுத்துவ

தற்கு" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "செலுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும்" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 129-வது பிரிவில் திருத்தம்.

60. ஷை ஆக்ட் 129-வது பிரிவில், "விதிக்காவது, 123-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர ஹிந்து அல்லது புத்த சட்டத்திலுள்ள யாதொரு விதிக்காவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "விதிக்கு" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 130-வது பிரிவில் திருத்தம்.

61. ஷை ஆக்ட் 130-வது பிரிவில்,—

(a) "வியாஜ்ஜியம் கொண்டுவரத்தக்க பாத்தியதையை ட்ரான்ஸ்பர் செய்வது" என்று பொருள்படுகிற வார்த்தைகளுக்கு முன்னே "ஐவேஜூடனாகிலுஞ்சரி ஐவேஜு இல்லாமலாகிலுஞ்சரி" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) "123-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே" என்று பொருள்படுகிற வார்த்தைகளை விட்டு விடவேண்டும்.

நிவாரணப்பகுதி.

62. இந்த ஆக்டின் பின்வரும் நிபந்தனைகளில், அதாவது 2, 3, 4, 5, 8, 9, 14, 16, 18, 19, 20-வது பிரிவுகள், 22-வது பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதி, 26-வது பிரிவு, 29-வது பிரிவு, 30-வது பிரிவைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட பகுதி, 31, 32, 33, 34, 45, 51, 54, 56, 57, 58, 60, 61-வது பிரிவுகள் ஆகிய இவைகளில் கண்டதெதனாலும்,—

(a) 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்குமுன் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட யாதொரு சொத்து ட்ரான்ஸ்பர் சம்பந்தமான ஷரத்துகளுக்காகிலும் இடைச்சம்பவங்களுக்காகிலும்,

(b) மேற்சொல்லிய தேதிக்குமுன் செய்யப்பட்ட அல்லது செய்யவிடப்பட்ட யாதொரு காரியம் சட்டப்படி செலாவணியாவதற்காகிலும் சட்டப்படி செலாவணியாகாமல் போவதற்காகிலும் அதன் பலப்பிராப்திக்காகிலும்,

(c) ஷை தேதிக்கு முன்பே உண்டான, ஏற்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட யாதொரு சுதந்தரத்துக்காகிலும் ஹக்குக்காகிலும் கடமைக்காகிலும் பொறுப்புக்காகிலும்,

(d) அப்படிப்பட்ட சுதந்தரம், ஹக்கு, கடமை அல்லது பொறுப்பு விஷயமாய்க் கிடைக்கும் யாதொரு பரிகாரம் அல்லது நடத்தப்படும் யாதொரு விவகாரத்துக்காகிலும்

எவ்விதமாகவேனும் பாதகம் உண்டாவதாகக் கருதப்படமாட்டாது; மேலும், 1929-ம் வருஷ ஜனவரி மாதம் முதல் தேதி யாதொரு கோர்ட்டிலே பைசலாகாமலிருக்கிற யாதொரு விவகாரத்தில் அந்தத் தேதிக்கு முன்பே செய்யப்பட்ட யாதொரு காரியமானது இந்த ஆக்டின்

வேறேயாதொரு நிபந்தனையில் கண்டதேதனுலும் சட்டசம்மதமற்றதாய்ப் போய்விடவுமாட்டாது, எவ்விதமாகவேனும் பாதிக்கப்படவுமாட்டாது; அல்லாமலும், இதில் சொல்லியிருக்கும் அப்படிப்பட்ட யாதொரு பரிகாரத்தையும் அப்படிப்பட்ட யாதொரு விவகாரத்தையும், இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டிராவிட்டால் எப்படியோ அப்படியே சந்தர்ப்பத்துக்கேற்றபடி அமுலுக்குக் கொண்டுவரலாம், தொடரலாம் அல்லது நடத்திக்கொண்டுபோகலாம்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

அடியில் அச்சிட்டிருக்கும் பிரத்தியேக கம்மிட்டியாரின் ரிபோர்ட்டில் இந்த மசோதா ஆக்டைப்பற்றி போதுமான அளவுக்கு விவரித்துச் சொல்லியிருக்கிறது.

1927-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 17உ. டபில்யு. டி. எம். ரைட்.

பிரத்தியேக கம்மிட்டியாரின் ரிபோர்ட்.

ஆலோசனை சபையிலுள்ள

சிறப்புற்றோங்கும் கவர்னர் ஜெனரலவர்களுக்கு.

(1882-ம் வருஷத்து 4-வது ஆக்டாகிய) சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்டில் கண்ட நிபந்தனைகளைப் பரிசோதித்துப் பார்க்கும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட கம்மிட்டியின் மெம்பர்களாகிய நாங்கள் - 1927-ம் வருஷம் எப்ரல்மீ 25உ லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மெண்டில் செய்யப்பட்ட (A அனுபந்தத்தில் கண்ட) நெ. F. 43/27-G. தீர்மானத்தின்படி, அடியிற்கண்டபடி வினயமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறோம் :—

1. அந்தக் கம்மிட்டி அடியிற்கண்டபடி அமைக்கப்பட்டது :—

அக்கிராசனாதிபதி.

கௌரவம் பொருந்திய மிஸ்டர் எஸ். ஆர். தாஸ், கவர்னர் ஜெனரலவர்களின் ஆலோசனை சபையில் சட்ட மெம்பர்.

மெம்பர்கள்.

1. மிஸ்டர் பி. எல். மித்தர், அட்வொகேட் ஜெனரல், வங்காளம்.

2. மிஸ்டர் டி. எப். முல்லா, எம்.ஏ., எல்எல்.பி., அட்வொகேட், பம்பாய் ஹைகோர்ட்.

3. டாக்டர் எஸ். என். ஸென், எம்.ஏ., எல்எல்.டி., அட்வொகேட், அலஹாபாத் ஹைகோர்ட்.

ஸெக்ரெடரி.

மிஸ்டர் ஜெ. ஆர். துரந்தர், பி.ஏ., எல்எல்.பி., பம்பாய் கவர்ன்மெண்ட் லீகல் டிபார்ட்மெண்டின் அஸிஸ்டண்ட் ஸெக்ரெடரி.

இந்தியா கவர்ன்மெண்ட் லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மெண்ட் ஸெக்ரெடரியாகிய டபில்யு. டி. எம். ரைட், ஸி.ஐ.இ., ஐ.ஸி.எஸ்.,

அவர்களும், இந்தியா கவர்ன்மெண்டின் ஜாயின்ட் ஸெக்ரெடரியும் ட்ராப்ட்ஸ்மனுமாகிய டி. ஜி. மிட்செல், ஸி.ஐ.இ., ஐ.ஸி. எஸ்., அவர்களும் இந்தக் கம்மிட்டியின் சபைகளுக்கு வந்திருந்தார்கள்.

2. இந்தக் கம்மிட்டியார் - 1927-ம் வருஷம் எப்ரல்மீ 27வ ஸிம்லாவில் கூடினார்கள். இந்தக் கம்மிட்டியின் முதல் கூட்டமானது 1927-ம் வருஷம் மேமீ 5வ கூட்டப்பட்டது. ஷை கம்மிட்டியார் 1927-ம் வருஷம் ஜூன்மீ 22வவரையில் கூடி ஆலோசனை செய்துவந்தார்கள். அன்றைய தினம் கம்மிட்டியின் கடைசி கூட்டம் நடத்தப்பட்டது. 1927-ம் வருஷம் ஜூன்மீ 15வ டாக்டர் ஸென் ஸிம்லாவை விட்டுப்போனார். ஆயினும், நாங்கள் - அதற்குள் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட் முழுவதையும் அதற்கு உடன்சேர்க்கையான மசோதா ஆக்டையும் பரிசோதித்துத் திருத்தக்கூடியவர்களாயிருந்தோம். அவர் ஸிம்லாவை விட்டுப்போன பிறகு எங்கள் மசோதாக்களில் சிலமாறுதல்கள் செய்வது அவசியமாயிருப்பதாகத் தெரியவந்தது. அந்த மாறுதல்களும் அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

3. இரண்டு மசோதா ஆக்டுகள் எங்களுடைய ஆலோசனைக்கு அனுப்பப்பட்டன. அவைகளில் ஒன்று சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டிலேயே கண்டிருக்கும் நிபந்தனைகளைத் திருத்துவதற்குச் சம்பந்தப்பட்டதாகும். மற்றொன்று - அந்தப்படி திருத்துவது காரணமாக அடியிற்கண்ட ஆக்டுகளில் செய்யவேண்டிய திருத்தங்களைப்பற்றிச் சொல்லும் உடன்சேர்க்கையான மசோதா ஆக்டாகும். அந்த ஆக்டுகள் எவையென்றால் :—

(1) 1874-ம் வருஷத்து விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்ட், 8-வது பிரிவு ;

(2) 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டம், 34-ம் அதிகாரம் ;

(3) 1908-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட், 17, 48, 49-வது பிரிவுகள் ;

(4) 1925-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட், 115 முதல் 117 வரையிலுள்ள பிரிவுகள்.

ஷை திருத்தங்கள் இன்ன காரணங்களுக்காகச் செய்ய உத்தேசிக்கப்பட்டனவென்பதை விவரமாய்க் கண்டெழுதிய பகுதிகளைப்பற்றிய குறிப்புகளும் எங்களுக்குமுன் வைக்கப்பட்டன.

4. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 1882-ம் வருஷம் பெப்ரவரிமீ 17வ சட்டமாக ஜாரி செய்யப்பட்டபோதிலும், அதன் முதல் மசோதாவானது விதிகள் ரூபமாக 1870-ம் வருஷத்தில் முதல் இந்திய சட்டக் கம்மிஷனால் தயாரிக்கப்பட்டது. அந்தக் கம்மிஷனில் லார்ட் ராமில்லி, எம். ஆர்., முன்னே வங்காளத்தில் சீவ் ஜஸ்டிஸாயிருந்த ஸர் எட்வர்ட் ரயன், லார்ட் ஷெர்ப்ரூக், ஸர் ராபர்ட் லஷ், இந்தியன் பினல் கோடைத் தயார்செய்வதில் லார்ட் மெகாலேய்க்கு உதவி செய்த ஸர் ஜான் மெக்லியாட் ஆகிய இவர்கள் மெம்பர்களாயிருந்தார்கள். ஷை மசோதா ஆக்ட் 1879-ம் வருஷத்தில்

இரண்டாவது இந்திய சட்டக் கம்மிஷனால் மறுபடியும் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. இந்தக் கம்மிஷனில் அப்போது சென்னையில் சீவ் ஜஸ்டிஸாயிருந்த ஸர் சார்லஸ் டர்னர், பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர் ரேமண்ட் வெஸ்ட், கவர்னர் ஜெனரலவர்களின் ஆலோசனை சபையில் சட்ட மெம்பராயிருந்த மிஸ்டர் விட்லி ஸ்டோக்ஸ் ஆகிய இவர்கள் மெம்பர்களாயிருந்தார்கள். கடைசி மசோதா ஆக்ட் 1882-ம் ௵த்தில் சட்டமாக ஜாரி செய்யப்பட்டதற்கு முன் ஏழு மசோதா ஆக்டுகளுக்குக் குறையாமல் தயார்செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. பிரசித்திபெற்ற நியாயவாதிகளும் சட்ட நிபுணர்களும் வெகு நீண்ட காலமாய் ஜாக்கிரதையாக ஆலோசித்து ஏற்படுத்திய ஒரு ஆக்டைத் திருத்தப் பிரயத்தனம் செய்வதென்றால், அதை அத்தியந்த சாவதானத்துடன் செய்யவேண்டுமென்பதை நாங்கள் முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், காலம் ஆக ஆக, சொத்தைக் குறித்த சட்ட சம்பந்தமாய்ப் புதிய கொள்கைகள் ஏற்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அந்த சட்டத்தில் கண்ட சில நிபந்தனைகள் விஷயமாய் நியாய விசாரணை முறையில் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதாலும், ஏறக்குறைய அரை நூற்றாண்டாக அந்த சட்டத்தை அனுசரித்து வேலை நடத்திவந்ததில் அடைந்த அனுபவத்தின் மூலமாய் அதில் குறைகள் இருப்பதாகத் தெரியவந்திருப்பதாலும், மேற்படி ஆக்டைத் திருத்துவது அவசியமென்று ஏற்பட்டது.

5. மேற்படி ஆக்ட் 45 வருஷகாலமாகச் செலாவணியாய்க்கொண்டிருக்கிறது. இந்த 45 வருஷகாலத்தில், அதில் கண்ட பற்பல நிபந்தனைகள் விஷயமாய் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள தீர்மானங்கள் ஏராளமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. 1903-ம் ௵த்திலேயே, (பிறகு ஸர் ராபர்ட் புல்டன் என்று பெயர் வழங்கின) மிஸ்டர் ஜஸ்டிஸ் ராம்பினி அவர்கள் - சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் 59-வது பிரிவைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டைப்பற்றி வியாக்கியானம் செய்யும்போது, ஷை ஆக்டைப் பொதுவாகவும் அடியோடும் திருத்த முயற்சி செய்வது யுக்தமாயிருக்குமென்று 1903-ம் ௵ ஆகஸ்ட் ௴ 21வ தாம் எழுதிய கடிதத்தில், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு யோசனை சொல்லியிருந்தார். அந்தக் கடிதத்தின் 3-வது, 4-வது பாராக்களில் அவர் அடியிற்கண்டபடி எழுதியிருந்தார் :—

"சொத்தை ட்ரான்பர் செய்வதற்கான ஆக்ட் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் ஜாரிசெய்யப்பட்டது. அது - 1798, 1806-ம் ௵ங்களில் செய்த வங்காள ரெகுலேஷன்களிலும் 1827-ம் ௵த்து பம்பாய் ரெகுலேஷன்களிலும் கண்டிருந்த நிபந்தனைகளைச் சேர்த்துச் சட்டநிரூபண சபையார் ஏற்படுத்திய முதல் ஆக்டாகும். இந்திய சட்டநிரூபண சபையார் செய்யும் கோடுகளை (சட்ட புத்தகங்களை) சுமார் இருபது வருஷ காலமான பிறகு திருத்துவது வழக்கமாகும். சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டை அந்தப்படி திருத்துவது பின்னும் அவசியமாயிருக்கிறது ; ஏனென்றால்—

(1) சட்டத்தின் எந்த பிரிவுக்கு அது சம்பந்தப்படுகிறதோ அந்த பிரிவைப்பற்றிச் சொல்லும் முதல் ஆக்ட் அதுவேயாகும் ; மேலும்,

(2) கடந்த இருபத்தைந்து வருஷ காலத்தில், இந்த விஷய சம்பந்தமாய் ஏற்பட்ட வியாஜ்ஜியங்களில் ஒன்றுக்கொன்று விரோதமாய்ச் செய்யப்பட்டுள்ள தீர்மானங்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆகவே, அவைகளை இப்போது பிரஸ்தாப ஆக்டில் சேர்ப்பதோ அல்லது ரத்துசெய்துவிடுவதோ யுக்தமாயிருக்கும்.

“ ‘கொதுவைகளைக் குறித்து இந்தியாவில் வழங்கும் சட்ட’ விஷயமாய்த் தாம் எழுதியிருக்கும் புத்தகத்தின் 3-ம் பதிப்பின் முகவுரையில் டாக்டர் ராஷ் பீஹாரி கோஷ் அடியிற்கண்ட படி எழுதியிருக்கிறார்: சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டிலே கொதுவைகளைக் குறித்துச் சொல்லியிருக்கும் அத்தியாயத்திற்கண்ட பிரிவுகளில் அவைகள் விஷயமாய் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள தீர்மானங்கள் செய்யப்பட்டிராத பிரிவு ஒன்றுகூட கிடையாது. இதற்கு அதிகமாகவும் நான் சொல்லத் துணிவேன்; அதாவது, கொதுவைகளைக்குறித்த அத்தியாயத்தின் விஷயத்தில் மாத்திரமேயல்லாமல் அந்த ஆக்டின் அனேகமாய் எல்லா அத்தியாயங்களின் விஷயத்திலும் பற்பல ஹைகோர்ட்டுகளுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.”

6. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 1882-ம் வருஷத்தில் ஜாரி செய்யப்பட்ட பிறகு, அதில் கண்டிருக்கும் நிபந்தனைகள் பன்னிரண்டு சமயங்களில் * திருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், பொதுவாய் அந்த ஆக்டைத் திருத்துவதற்கு முயற்சி செய்யப்பட்ட

---

* 1. 1-வது, 4-வது பிரிவுகளையும் 6-வது பிரிவிற்கண்ட (i) குறிப்பிட்ட பகுதியையும் 9-வது பிரிவையும் திருத்தியுள்ள 1885-ம் வருஷத்து 3-வது ஆக்ட்.

2. துரைத்தனத்தாருடைய க்ரான்டுகள் சம்பந்தமாய்ப் பாதுகாப்பு ஏற்படுத்தியுள்ள 1895-ம் வருஷத்து 15-வது ஆக்ட்.

3. 3-வது பிரிவையும் 6-வது பிரிவிற்கண்ட (c), (h) குறிப்பிட்ட பகுதிகளையும் 8-ம் அத்தியாயத்தையும் திருத்தியுள்ள 1900-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

4. 1, 59, 105, 117-வது பிரிவுகளைத் திருத்தியுள்ள 1904-ம் வருஷத்து 6-வது ஆக்ட்.

5. 85 முதல் 90 வரையிலுள்ள பிரிவுகளையும் 92, 94, 96, 97-வது பிரிவுகளையும் ரத்துசெய்து அவைகளை ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 34-ம் அதிகாரத்தில் மீண்டும் விதித்துள்ள 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

6. 59-வது, 69-வது பிரிவுகளைத் திருத்தியுள்ள 1915-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

7. ஆக்ராவிலும் அயோத்தியிலும் நடத்தப்பட்ட சில விவகாரங்களைச் சட்டப்படி செலாவணியாகத்தக்கவைகளாய்ச் செய்தும் 59-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் அவைகளுக்குப் பிரயோகப்படாதபடி நிவாரணை செய்துமுள்ள 1917-ம் வருஷத்து 26-வது ஆக்ட்.

8. 1-வது, 117-வது பிரிவுகளைத் திருத்தியுள்ள 1920-ம் வருஷத்து 38-வது ஆக்ட்.

9. 130-வது பிரிவைத் திருத்தியுள்ள 1925-ம் வருஷத்து 38-வது ஆக்ட்.

10. 3-வது பிரிவைத் திருத்தியும், 1927-ம் வருஷத்து 10-வது ஆக்டினால் பின்னும் திருத்தப்பட்டபடி ‘அத்தாட்சிக் கையெழுத்து’ என்பதற்கு அர்த்தம் அமைத்துமுள்ள 1926-ம் வருஷத்து 27-வது ஆக்ட்.

11. 8-வது பிரிவைத் திருத்தியுள்ள 1927-ம் வருஷத்து 10-வது ஆக்ட்.

12. சென்னை ராஜதானிப்பட்டணத்தில் குடிக்கூலிக்கிருப்பவர்களின் பாதுகாப்பைக் குறித்த 1922-ம் வருஷத்து ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஷை ஆக்ட் முழுவதையும் திருத்தியுள்ள சென்னபட்டணம் 1922-ம் வருஷத்து 3-வது-ஆக்ட்.

தாகவாவது முக்கியமான அல்லது அர்த்தபுஷ்டியுள்ள யாதொரு புதிய கோட்பாடு அதில் சேர்க்கப்பட்டதாகவாவது தெரியவில்லை.

7. இங்கிலாந்திலுள்ள எக்விட்டி கோர்ட்டுகள் என்னும் நியாய சபைகளால் 1881-ம் வருஷத்துக்குமுன் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஏற்கனவே இந்திய கோர்ட்டுகளால் அனுசரிக்கப்பட்டுவந்தன. அந்தத் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு 1882-ம் வருஷத்து 4-வது ஆக்டிற்கண்ட நிபந்தனைகளில் பெரும்பான்மையானவை ஏற்படுத்தப்பட்டன. (விக்டோரியா மஹாராணி அவர்களுடைய ஆளுகையின் 44, 45-வது வருஷத்து ஸ்டாட்யூட் 41-ம் அத்தியாயமாகிய) ஒப்படை செய்வதற்கான 1881-ம் வருஷத்து ஆக்ட் முந்திய வருஷத்தில் ஜாரிசெய்யப்பட்டது. ஆயினும், சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 57, 61, 69-வது பிரிவுகளைப்போன்ற சில நிபந்தனைகளைத் தவிர அந்த ஆக்டிற்கண்ட மற்ற நிபந்தனைகள் 1882-ம் வருஷத்து 4-வது ஆக்டைத் தயார்செய்வதில் உபயோகிக்கப்படவில்லை. 1882-ம் வருஷத்துக்குப் பிறகு, ஒப்படை செய்வதற்கான ஆக்டானது இங்கிலாந்தில் பல தடவை திருத்தப்பட்டிருக்கிறது. மேலும், சொத்தைக் குறித்த சட்டமுழுவதும் (V-ம் ஜார்ஜ் மஹாராஜா அவர்களுடைய ஆளுகையின் 15, 16-வது வருஷத்து ஸ்டாட்யூட் 20-ம் அத்தியாயமாகிய) சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் என்னும் புதிய ஆக்டில் இப்போது ஒன்றாய்ச் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது.

8. எங்களுடைய ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட இரண்டு மசோதா ஆக்டுகளையும் பரிசோதித்துப் பார்க்கையில், இந்த மசோதா ஆக்டுகளில் பிரேரேபித்திருக்கும் திருத்தங்களை அனுசரித்தாவது நியாய விசாரணை முறையில் செய்யப்பட்ட தீர்மானங்களை அனுசரித்தாவது இதர சந்தர்ப்பங்களை உத்தேசித்தாவது அந்த மசோதா ஆக்டுகளில் சேர்க்கப்பட்டிராத எந்தப் பிரிவுகளையாவது திருத்த வேண்டியிருக்குமாவென்று நிச்சயித்தறியும்பொருட்டு நாங்கள் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டிற்கண்ட நிபந்தனைகளைப்பிரிவு பிரிவாகப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறோம். இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சட்டக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டாகிலும் இங்கிலாந்து தேசத்துக் கோர்ட்டுகளின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டாகிலும் எழுதப்பட்டிருக்கும் நிபந்தனைகளின் விஷயத்தில், இங்கிலாந்தில் வழங்கும் சொத்தைக் குறித்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து ஏவையேனும் மாறுதல்கள் செய்யவேண்டியது அவசியமா என்று கண்டறியும்பொருட்டு நாங்கள் அந்த சட்டத்தின் நிபந்தனைகளை ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறோம். பிரஸ்தாப ஆக்டில் இப்போதுள்ள நிபந்தனைகளையாவது புதிதாய் அமைத்துக்கொள்ள பிரஸ்தாப மசோதா ஆக்டுகளில் உத்தேசித்திருக்கும் நிபந்தனைகளையாவது இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் ஆக்டைப்போல் மாற்றியெழுதலாமென்று தோன்றிய இடங்களில் அம்மாதிரியே எழுத முயன்றிருக்கிறோம். இங்கிலாந்து தேசத்துக் கோர்ட்டுகளில் செய்யப்பட்ட தீர்மானங்கள் இங்குள்ள கோர்ட்டுகளுக்கு உபயோகமாயிருக்குமாகையால், மேலேகண்டபடி செய்யும்பட்சத்தில் மேற்படி நிபந்தனைகளுக்குப் பொருள்கொள்வது சுலபமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

9. எங்களுடைய ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கும் மேலே கண்ட இரண்டு மசோதா ஆக்டுகளுக்குச் சம்பந்தப்பட்ட அடியிற் கண்ட அம்சங்கள் பிரதேச கவர்ன்மென்டுகளுக்கு அபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்டனவென்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது :—

(1) சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டை இது வரை அது பிரயோகிக்கப்பட்டிராத ராஜ்ஜியங்களுக்கு, அதாவது, பர்மா, ஸிந்து, பஞ்சாப் என்னும் மாகாணங்களுக்குப் பிரயோகிப்பது ;

(2) ஹிந்து, மகம்மதிய, புத்த மத சட்டசம்பந்தமான விதிகளுக்குச் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் 2-ம் அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படாதபடி நிவாரணை செய்தோ பாதுகாப்பு ஏற்படுத்தியோ 2-வது பிரிவில் கண்டுள்ள நிபந்தனையை விட்டுவிடுவது ;

(3) ரெஜிஸ்டர் செய்திருப்பதே ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜுகளைக் குறித்து நோடிஸ் கொடுத்ததற்குச் சமானமாகுமென்று நிபந்தனை ஏற்படுத்தியிருப்பது ;

(4) சகல விற்பனைகள், கொதுவைகள், குத்தகைகள் அல்லது வாடகைகளையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது ;

(5) குத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளை இரண்டு கட்சிக்காரர்களும் எழுதிமுடிக்கவேண்டுமென்று நிபந்தனை கண்டிருப்பது ;

(6) சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் தானங்களுக்குச் சம்பந்தப்பட்ட 7-ம் அத்தியாயத்தை ஹிந்து, மஹம்மதிய, புத்த மத சட்டங்களின்கீழ் வருகிற விஷயங்களுக்குப் பிரயோகிப்பது.

இவைகள் விஷயமாய்த் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் எங்களுக்கு அனுப்பப்பட்டன. அவைகளை அனுசரித்துச் செய்ய வேண்டிய திருத்தங்களைப்பற்றி நாங்கள் ஜாக்கிரதையாய் ஆலோசித்திருக்கிறோம்.

10. சொல்லமைப்பைச் சீர்திருத்துவதற்காக மாத்திரமே எந்த திருத்தமும் செய்ய முயற்சி செய்யாமல், பிரஸ்தாப ஆக்ட் ஜாரி செய்யப்பட்ட பிறகு நியாய விசாரணை தோரணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த முக்கியமாயுள்ள புதுக்கோட்பாடுகளை மாத்திரம் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்னும் கொள்கையே எங்களுக்கு அனுப்பியிருக்கும் மசோதா ஆக்டுகளில் அனுசரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. முக்கியமாய் நாற்பத்தைந்து வருஷகாலமாக அமுலில் இருந்துவந்த ஒரு ஆக்டின் விஷயத்தில் இம்முறையை அனுசரிப்பது உத்தமமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஏனென்றால், ஷை ஆக்டிலுள்ள சொற்றொடர்களைப் பொதுஜனங்களும் நியாயவாதிகளும் உபயோகித்துப் பழகியிருக்கிறார்கள். மேலும், யாதொரு சொற்றொடருக்கு நியாய விசாரணை தோரணையில் ஒரு வகையாய்ப் பொருள் செய்யப்பட்டிருந்து அது

காரணமாக அனுஷ்டானத்தில் யாதொரு அசௌகரியமோ நியாயத் தவறோ நேரிட்டிராத பட்சத்திலே, அந்த சொற்றொடரை மாற்று வது நல்லதல்ல. புதுக்கோட்பாடுகளை இந்த ஆக்டில் சேர்க்கும் படியாக அதைத் திருத்தவேண்டுமென்று நாங்களும் ஒத்துக் கொள்ளுகிறோம். மேலும், யாதொரு குறையினால் அசௌ கரியமாவது அசம்பாவிதமான முடிவுகளாவது ஏற்பட்டிருந்தால் அந்தக் குறையை நிவர்த்திக்கவும் நாங்கள் பிரேரேபித்திருக்கும் திருத்தங்களில் முயற்சி செய்திருக்கிறோம். அன்றியும், வெகுசாய் சம்பவிக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்துக்காகவும் விவரமாய் நிபந் தனை ஏற்படுத்த முயற்சிப்பது விரும்பத்தக்கதல்லவென்னும் கொள் கையைப் பின்பற்றி நாங்கள் பிரவர்த்தித்திருக்கிறோம். யாதொன் றைப்பற்றி எவ்வளவு விரிவாக எழுதியபோதிலும், அது சகல விஷ யங்களும் அடங்கியதாய்ப் பூர்த்தியாயிருக்கமுடியாது. மேலும், அந்தப்படி அதிவிஸ்தாரமாய் எழுதுவதனால், கோர்ட்டார் தாராள மாய் நடவடிக்கை நடத்தமுடியாதபடி தடை ஏற்படுவது மாத்திரமே யல்லாமல் சந்தேகங்களும் அதிகப்படும். இதைத் தவிர வேறே எவ்வித பயனும் உண்டாகாது. தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கும் இடங்களில் அவைகளை ஒருவழிப்படுத்த நாங் கள் முயற்சி செய்திருக்கிறோம்.

11. நாங்கள் பிரேரேபித்திருக்கும் சகல திருத்தங்களுக்கும் கார ணங்களை (B அனுபந்தமாகிய) பகுதிகளைப்பற்றிய குறிப்புகளில் விவரமாய் எழுதியிருக்கிறோம். ஆனால், இந்த இரண்டு மசோதா ஆக்டுகளில் சேர்க்கப்பட்டிருக்கும் கோட்பாடு சம்பந்தமான சில முக்கிய அம்சங்களைப்பற்றி பிரத்தியேகமாய் எடுத்துச் சொல்வது உசிதமாயிருக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அடியிற்கண்ட முக்கியமான மாறுதல்கள் செய்யவேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறது :—

(i) 2-வது பிரிவில் 'ஹிந்துக்கள், புத்தர்கள்' என்னும் வார்த் தைகளை விட்டுவிட்டிருப்பது ; இதனால், 2-ம் அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் மகம்மதிய சட்டத்தைச் சேர்ந்த விசேஷ விதியின்கீழ் வரும் விஷயங்கள் தவிர மற்ற சகல விஷயங்களுக்கும் பிரயோகப் படும் (பிரதான மசோதா ஆக்டின் 3-வது பகுதி) ;

(ii) (a) ரெஜிஸ்டர் செய்திருப்பதே ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜைக் குறித்து நோடிஸ் கொடுத்ததற்குச் சமானமாகு மென்று நிபந்தனை கண்டிருப்பது ;

(b) யாதொரு ஏஜென்ட் நோடிஸ் பெற்றிருப்பதாக ஊகிக் கும்படியாயிருப்பது முதலாளிக்கு நோடிஸ் கொடுத்ததாகுமென்று நிபந்தனை கண்டிருப்பது (பிரதான மசோதா ஆக்டின் 4-வது பகுதி) ;

(iii) யாதொரு வகுப்பைச் சேர்ந்தவர்களில் சிலர் ட்ரான்ஸ் பரை ஏற்றுக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கும்போது அந்த வகு ப்பாருக்கு அனுகூலமாகச் செய்யப்படும் ட்ரான்ஸ்பர்கள் சட்டப்படி செலாவாணியாகத் தக்கவைகளாயிருப்பது (பிரதான மசோதா ஆக் டின் 8-வது பகுதி) ;

(iv) குறித்த ஒரு கால அளவுக்கும் குறித்த சில காரியங்களுக்காகவும் சேர்த்துவைப்பது சம்பந்தமாய்ப் பிறப்பிக்கப்படும் கட்டளை சட்டப்படி செலாவணியாகத்தக்கதாயிருப்பது (பிரதான மசோதா ஆக்டின் 9-வது பகுதி);

(v) சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டைச் சட்டமூலமாய் அங்கீகாரம் செய்வது (பிரதான மசோதா ஆக்டின் 15-வது பகுதி);

(vi) எவ்வளவு விலை மதிப்புள்ளதாயிருந்தாலுஞ்சரி அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட விற்பனைகளையும் கொதுவைகளையும், மாதவாரியாகவாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்காவது விடப்படும் குத்தகைகள் அல்லது வாடகைகளைத் தவிர மற்ற சகல குத்தகைகளையும் அல்லது வாடகைகளையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது (பிரதான மசோதா ஆக்டின் 16, 19, 54-வது பகுதிகள்);

(vii) அவதிக்கிரயக் கொதுவை அல்லது மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வது விஷயமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டுள்ள குறிக்கப்படாத யாதொரு கொதுவையைத் தவிர மற்ற சகல கொதுவைகளின் விஷயத்திலும் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் பரிகாரத்தை எடுத்துவிடுவது (பிரதான மசோதா ஆக்டின் 30-வது பகுதி);

(viii) கொதுவை வைத்துக்கொண்ட ஒருவர் நபர்மேல் நடவடிக்கை நடத்திப் பரிகாரம் பெறத் தமக்குள்ள உரிமையைச் செலுத்துவதற்குமுன், கொதுவைச் சொத்தின்மேல் தாம் பெறக்கூடிய சகல பரிகாரங்களையும் அடைந்துவிட வேண்டுமென்று அவரை நிர்ப்பந்திக்கும்படி நிபந்தனை ஏற்படுத்தியிருப்பது (பிரதான மசோதா ஆக்டின் 32-வது பகுதி);

(ix) கோர்ட்டார் பிரவேசிக்காமல் நடத்தப்படும் விற்பனையைக் குறித்த நிபந்தனைகளைத் திருத்துவது (பிரதான மசோதா ஆக்டின் 34-வது பகுதி);

(x) 'ஒரு கடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரைப் பர்த்திசெய்வதென்னும்' கோட்பாட்டை விஸ்தாரமாய்ப் பிரயோகப்படும்படிச் செய்வது (பிரதான மசோதா ஆக்டின் 46-வது பகுதி);

(xi) 'ஒரு பாத்தியதையில் மற்றொரு பாத்தியதை அடங்கிப் போய்விடுவது' என்னும் சட்டத்தைத் திருத்துவது (பிரதான மசோதா ஆக்டின் 50-வது பகுதி);

(xii) குத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளை இருதிறத்தாரும் எழுதிக் கொடுக்கவேண்டுமென்னும் நிபந்தனை (பிரதான மசோதா ஆக்டின் 54-வது பகுதி).

12. ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 34-ம் அதிகாரத்தில், அடியிற் கண்ட அம்சங்களைக் குறித்து முக்கியமான திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது :—

(i) முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுகிறவரையிலாவது, கொதுவை சம்பந்தமான டிக்ரியை நிறைவேற்றுகையில் நடத்தப்பட்ட

விற்பனை ஊர்ஜ்ஜிதப் படுத்தப்படுகிறவரையிலாவது மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போகாதென்று ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது ;

(ii) வட்டி தீர்ப்பு செய்வதற்காக விவரமான நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன (உடன்சேர்க்கையான மசோதா ஆக்டின் 4-வது, 6-வது பகுதிகள்).

13. கொதுவை டிக்ரிகள் சம்பந்தமாய் ஸிவில் ப்ரொஸீஜர் கோடுடன் சேர்த்திருக்கும் முதல் ஷெட்யூலின் D அனுபந்தத்தில் கண்ட நமூனாக்கள் 34-ம் அதிகாரத்திலுள்ள திருத்தப்பட்ட விதிகளுடன் முற்றிலும் ஒத்திருக்கும்படிச் செய்திருக்கிறது. நாங்கள் அந்த நமூனாக்களைத் திருத்தி விரிவாக்கியிருப்பதுடன், அவைகளுடன் இன்னும் சில நமூனாக்களையும் சேர்த்திருக்கிறோம். வெளி ஜில்லாக்களிலுள்ள கோர்ட்டுகளில் டிக்ரிகள் எழுதுவதற்கு இந்த நமூனாக்கள் சௌகரியமாயிருக்குமென்று நம்புகிறோம். மீட்கும் பாத்தியதை பெற்றுள்ள பல நபர்கள் யாதொரு கொதுவை வியாஜ்ஜியத்தைச் சேர்ந்த கட்சிக்காரர்களாயிருந்தால், மீட்பதற்காக ஒன்றின்பின் ஒன்றாய்க் கால அளவுகள் ஏற்படுத்திக் கொடுக்கும் முறையை ஒழித்துவிட உத்தேசிக்கிறோம் (உடன்சேர்க்கையான மசோதா ஆக்டின் 8-வது பகுதியும் முதல் ஷெட்யூலும்).

14. அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட டிக்ரிகளையும் உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் ஒப்படைசெய்யும் விஷயங்களையும், அசையாப் பொருளைப் பாதிக்கும் ராஜி டிக்ரிகளையும் எப்போதும் ரெஜிஸ்டர்செய்யவேண்டுமென்று இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். மேலும், சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டை அமுலுக்குக்கொண்டுவருகையில், ரெஜிஸ்டர் செய்யப்படாத தஸ்தவேஜுகளைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கும்பொருட்டு 48-வது, 49-வது பிரிவுகளைத் திருத்தவேண்டுமென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம் (உடன்சேர்க்கையான மசோதா ஆக்டின் 9-வது பகுதி).

15. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 15 முதல் 18 வரையிலுள்ள பிரிவுகளிலே செய்திருக்கும் திருத்தங்களுக்குப் பொருத்தமாக 1925 ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்டில் திருத்தங்கள் செய்யும்படி ஆலோசனை சொல்லியிருக்கிறது (உடன்சேர்க்கையான மசோதா ஆக்டின் 10-வது பகுதி).

16. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் புதிதாய்ச் சேர்க்க உத்தேசித்திருக்கும் 53 A பிரிவில் கண்ட சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டை அமுலுக்குக்கொண்டுவருவதற்காக ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்டின் 2-ம் அத்தியாயத்தில் ஒரு நிபந்தனை சேர்த்திருக்கிறது (உடன்சேர்க்கையான மசோதா ஆக்டின் 3-வது பகுதி).

17. கடைசியாய், பம்பாய் ஜுடிஷல் ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த எங்களுடைய நண்பர் மிஸ்டர் ஜெ. ஆர். துரந்தர், பி.ஏ., எல் எல். பி. இந்தக் கம்மிட்டியின் நடவடிக்கைகள் நெடுக ஸெக்ரெடரியாகப் பிரவர்த்தித்து, இந்த ரிபோர்ட்

டைத் தயார்செய்வதில் எங்களுக்கு மிகவும் உபயோககரமாயிருந்து மிகுந்த உழைப்புடன் இந்த வேலையைச் செய்து முடித்தார். அவருக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை எழுதிவைக்க விரும்புகிறோம். மேலும், பிரஸ்தாப மசோதா ஆக்டுகளின் பகுதிகளை எழுதுவதில் எங்களுக்குப் பெரிதும் உதவி புரிந்ததற்காக லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த டபில்யு. டி. எம். ரைட், ஸி.ஐ.ஈ., ஐ.ஸி.எஸ்., அவர்களுக்கும் டி. ஜி. மிட்செல் ஸி.ஐ. ஈ., ஐ. ஸி.எஸ். அவர்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்த விரும்புகிறோம்.

ஸிம்லா, 1927-ம் வருஷம் ஜூலைமீ 29உ.	எஸ். ஆர். தாஸ், அக்கிராசனாதிபதி.
கல்கத்தா, 1927-ம் வருஷம் ஜூலைமீ 27உ.	பி. எல். மித்தர்.
பம்பாய், 1927-ம் வருஷம் ஜூலைமீ 26உ.	டி. எப். முல்லா.
அலஹாபாத், 1927-ம் வருஷம் ஜூலைமீ 26உ.	ஸுரேந்ரத்நாத் ஸென்.
ஸிம்லா, 1927-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 16உ.	ஜே. ஆர். துரந்தர், ஸெக்ரெடரி.

A அனுபந்தம்.

ஸிம்லா, 1927-ம் வருஷம் ஏப்ரல்மீ 25உ.

தீர்மானம்.

நெ. F.-43/27-G.—சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டைத் திருத்தும் விஷயத்தைப்பற்றி இந்தியா கவர்ன்மென்டார் சிறிது காலமாக ஆலோசனை செய்துவந்திருக்கிறார்கள். இதற்காகப் பிரதம மசோதா ஆக்ட் ஒன்று ஏற்கனவே தயார்செய்யப்பட்டது. இந்த மசோதா ஆக்டில் சங்கேதங்கள் விசேஷமாயிருக்கின்றன. ஆகவே, அதை இந்திய சட்டநிரூபண சபையில் கொண்டுவருவதற்குமுன், நீண்ட அனுபவமுள்ள நிபுணர்கள் அடங்கிய ஒரு சிறிய கம்மிட்டிக்கு அதைப் பரிசோதனைக்காக அனுப்ப ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் தீர்மானித்திருக்கிறார். ஏனென்றால், அவர்கள் மேற்படி மசோதா ஆக்டைப் பரிசோதித்துப் பார்க்கும் பட்சத்தில், பொது ஜனங்களுக்கு அது விஷயத்தில் நம்பிக்கை உண்டாகுமென்று அவர் உறுதியாய் நம்புகிறார். அந்தக் கம்மிட்டி அடியிற்கண்டபடி அமைக்கப்படும் :—

அக்கிராசனாதிபதி.—கௌரவம் பொருந்திய மிஸ்டர் எஸ். ஆர். தாஸ், பார்.-அட்-லா, கவர்னர் ஜெனரலவர்களின் ஆலோசனை சபையில் சட்ட மெம்பர் ;

மெம்பர்கள்.—கௌரவம் பொருந்திய மிஸ்டர் பி. எல். மித்தர், பார்.-அட்-லா, அட்வொகேட் ஜெனரல், வங்காளம் ; மிஸ்டர் டி. எப். முல்லா, எம்.ஏ., எல் எல்.பி.; டாக்டர் ஸுரேந்த்ரநாத் ஸென், எம்.ஏ., எல் எல்.டி.

பம்பாய் கவர்ன்மென்ட் லீகல் டிபார்ட்மென்டின் அஸிஸ்டன்ட் ஸெக்ரெடரியாகிய மிஸ்டர் ஜெ. ஆர். துரந்தர் மேற்படி கம்மிட்டியின் ஸெக்ரெடரியாயிருப்பார். இந்தக் கம்மிட்டியார் 1927-ம் ஸு ஏப்ரல்மீ 27 உக்குள் ஸிம்லாவில் கூடுவார்கள். இந்தியா கவர்ன்மென்டார் - இந்திய சட்டநிரூபண சபையாரின் அடுத்த கூட்டத்தில் இந்த மசோதா ஆக்டைக் கொண்டுவர உத்தேசிக்கிறார்கள்.

B அனுபந்தம்.

பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

[ஓரத்திலுள்ள பதிவுகள் - (1) சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவதற்கான) மசோதா ஆக்ட், சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவதற்கான) உடன் சேர்க்கையான மசோதா ஆக்ட் ஆகிய இவைகளின் பகுதிகளையும், (2) இப்போதுள்ள சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட், ஷை திருத்தங்கள் காரணமாக வேறே எந்த ஆக்டுகளில் திருத்தங்கள் செய்ய உத்தேசிககப்படுகிறதோ அந்த ஆக்டுகள் ஆகிய இவைகளின் பிரிவுகளையும் குறிப்பிடுகின்றன.]

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவதற்கான) மசோதா ஆக்ட்.

[(1882-ம் ஸு 4-வது ஆக்டாகிய) சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட்.]

பிரஸ்தாப ஆக்ட் 54-வது பிரிவைச் சேர்ந்த 3-வது பாராவை விட்டுவிடவேண்டுமென்று நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். ஆகவே, அது காரணமாக இந்த ஆக்டின் 1-வது 4-வது பிரிவுகளில் 3-வது பாராவைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதை விட்டுவிட்டு அந்தப் பிரிவுகள் திருத்தப்பட்டிருக்கின்றன. பகுதி 2. பிரிவு 1.

2-ம் அத்தியாயம் ஹிந்துக்கள், மகம்மதியர்கள் அல்லது புத்தர்களுக்குப் பிரயோகப்படமாட்டாதென்று நிவாரணைப் பகுதியாகிய 2-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கவில்லை. அந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமாயிராத ஹிந்து, மகம்மதிய அல்லது புத்த மத சட்டத்தின் யாதொரு விதிக்கு மாத்திரமே ஷை பிரிவினால் பாதுகாப்பு ஏற்படுகிறது. இந்த அத்தியாயத்தில் ட்ரான்ஸ்பர்கள் சம்பந்தமான பொது விதிகள் அடங்கியிருக்கின்றன. 5 முதல் 10 வரையிலுள்ள பிரிவுகளில் பொதுவாய்ப் பிரயோகப்படக்கூடிய விதிகள் அடங்கியிருக்கின்றனவென்பதும், அந்தப் பிரிவுகள் ஹிந்துக்கள் அல்லது புத்தர்களுக்கேயுரிய சட்டத்தில் விசேஷ பகுதி 3. பிரிவு 2.

மாய் அமைந்துள்ள யாதொரு விதி அல்லது கோட்பாட்டுக்கு எவ் விதத்திலும் விரோதமாயிருக்கவில்லையென்பதும் வெளிப்படை. அம்மாதிரியாகவே, 38 முதல் 53 வரையிலுள்ள பிரிவுகளும் குறித்த யாதொரு சட்டமுறைக்கு மாத்திரமே சம்பந்தப்படக்கூடியவை யல்ல. அவை நீதி, நியாயம், நல்ல மனசாக்ஷி ஆகிய இவைகளை அனுசரித்த விதிகளாகும். 11 முதல் 35 வரையிலுள்ள பிரிவுகள் இந்துதேசத்து தாயபாக ஆக்டிலுள்ள இதே மாதிரியான நிபந்தனை களை ஒத்திருக்கின்றன. ஜீவித்திருப்பவர்களுக்குள் சொத்து ட்ரா ன்ஸ்பர் செய்யப்படுவதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட விதிகளை இறந்துபோவதன்மேல் சொத்து போய்ச் சேருவதைப் பாதிக்கும் விதிகளுடன் ஒத்திருக்கும்படிச் செய்யும் பொருட்டு, ஷை பிரிவுகள் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அமைத்துக்கொள்ளப்பட்டன. 13-வது 20-வது பிரிவு கள் ட்ரான்ஸ்பர் செய்யப்படும் தேதியில் பிறந்திராத நபர் களின் பிரயோசனத்தை உத்தேசித்துச் செய்யப்படும் ட்ரான்ஸ்பர் களுக்குச் சம்பந்தப்படுகின்றன. நிரந்தரப் பிரயோசனம் உண்டா காதபடி தடுக்கும் விதியை 14-வது பிரிவில் திருத்தியிருக்கிறது. (இ. அ., ஸப். 47-வது வால்யுமில் கண்டிருக்கும்) டாகூருக்கும் டாகூருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ப்ரிவி கௌன்ஸில் என் னும் மந்திராலோசனை சபையார் செய்த தீர்மானத்தினால் விதிக் கப்பட்டபடி ஹிந்து லாவிற்கண்ட நிஷ்கரிஷையான கோட்பாடு களின் பிரகாரம், இனி பிறக்கப்போகும் நபர்களின் பிரயோசனத்தை உத்தேசித்து ட்ரான்ஸ்பர்கள் செய்தாலும் உயில்மூலமாய் ஆஸ்தி யேற்பாடுகள் செய்தாலும் அவை அடியோடு செல்லமாட்டா. ஆயினும், (1916-ம் வருஷத்து 15-வது ஆக்டாகிய) ஹிந்துக்கள் சொத்தை ஒருவகை செய்வதைக் குறித்த ஆக்டைக் கொண்டும் சென்னபட்டணம் (1914-ம் வருஷத்து 1-வது, 1921-ம் வருஷத்து 8-வது) ஆக்டுகளைக்கொண்டும் ஷை கோட்பாடு இப்போது திருத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஹிந்து லாவிற்கண்ட விதிகள் சம்பந்தப்பட்டமட்டில், 2-வது பிரிவில் அடங்கியிருக்கும் நிவா ரணைப் பகுதி அனாவசியமென்று தோற்றுகிறது. அதனால், அந்தப் பிரிவிலிருந்து 'ஹிந்து' என்னும் வார்த்தையை விட்டுவிடும்படி நாங்கள் பிரேரேபிக்கிறோம். மேலும், 2-வது பிரிவின் கடைசி பாராவிலிருந்து 'புத்த' என்னும் வார்த்தையை விட்டுவிடுவதற்கு பர்மா கவர்ன்மென்டாருக்கும் ரங்கூன் ஹைகோர்ட்டாருக்கும் ஆட் சேபனை இல்லையென்று எங்களுக்குத் தெரியவருகிறது. ஆகவே, அந்த வார்த்தையையும் விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம். இதை உத்தேசித்தும், இந்த ஆக்டின் 15-வது, 16-வது பிரிவுகளிலும் இந்துதேசத்து தாயபாக ஆக்டின் 115-வது, 116-வது பிரிவுகளிலும் செய்யும்படி பிரேரேபித்திருக்கும் மாறுதல்களை உத்தேசித்தும், மேற் சொல்லிய ஹிந்துக்கள் சொத்தை ஒருவகை செய்வதைக் குறித்த 1916-ம் வருஷத்து ஆக்டையும் சென்னபட்டணம் 1914-ம் வருஷத்து ஆக் டையும் 1921-ம் வருஷத்து ஆக்டையும் செலாவணியாகும்படி வைத் திருப்பது அவசியமல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகவே, இந்த ஆக்டுகளை ரத்துசெய்யவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

2-ம் அத்தியாயத்தில் அடங்கியுள்ள விதிகள் எல்லா விஷயங்களிலும் மகம்மதியர்களுக்கேயுரிய சட்டத்துக்குப் பொருத்தமாயிராதபடியால், "மகம்மதிய" என்னும் வார்த்தையை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறோம்.

3-வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி, 'கோடிஸ்' என்பதில் வாஸ்தவமாய் கோடிஸ் கொடுப்பதும் கோடிஸ் பெற்றிருப்பதாக ஊகித்துக்கொள்வதும் அடங்கும். இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படி யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதனுலேயே அந்த தஸ்தவேஜின் மூலமாய் நடத்தப்பட்ட விவகாரத்தைக் குறித்து கோடிஸ் பெற்றிருப்பதாக ஊகிக்கலாமா என்பதைக் குறித்துச் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று விரோதமானவையாயிருக்கின்றன. பம்பாய் ஹைகோர்ட்டாரும் அலஹாபாத் ஹைகோர்ட்டாரும் மேலேகண்டபடி ஊகிக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறார்கள் (இ.லா.ரி., பம்பாய் 6-ம் வால்யும் 168-வது பக்கம், பம்பாய் 9-ம் வால்யும் 427-வது பக்கம், பம்பாய் 26-ம் வால்யும் 538-வது பக்கம், அலஹாபாத் 16-ம் வால்யும் 478-வது பக்கம்). எந்த விஷயத்திலும் ரெஜிஸ்டர்செய்வது கோடிஸ் கொடுப்பதற்குச் சமானமாகமாட்டாதென்று சென்னை ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். ரெஜிஸ்டர் செய்வதை கோடிஸாக பாவிக்கவேண்டுமென்று சட்டநிரூபண சபையார் விரும்பியிருந்தால், அவர்கள் அந்தப்படியே வெளிப்படையான வார்த்தைகளில் சொல்லியிருப்பார்களென்று இ.லா.ரி., சென்னபட்டணம் 15-ம் வால்யும் 268-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டது. சில வியாஜ்ஜியங்களில் கல்கத்தா ஹைகோர்ட்டார் சென்னை ஹைகோர்ட்டார் கொண்ட அபிப்பிராயமே கொண்டார்கள் (இ.லா.ரி., கல்கத்தா 23-ம் வால்யும் 790-வது பக்கம், கல்கத்தா 27-ம் வால்யும் 7-வது பக்கம்). க.வீ.நோ. 2-ம் வால்யும் 750-வது பக்கத்தில் ஸர் லாரென்ஸ் ஜென்கின்ஸ் குறிப்பிட்டிருப்பதாவது :— பகுதி 4. பிரிவு 3.

"பிரமாணத்தைப்பற்றி பிறகு யோசிப்போம். இந்த தேசத்தில் பிரயோகப்படக்கூடிய சட்டதிட்டங்களைக் கவனிக்கும்போது, தீர்மானிக்கப்படவேண்டியிருக்கும் பிரசினை சட்டத்தைக் குறித்ததாயிராமல் சங்கதியைக் குறித்ததாயிருக்கிறதென்றும், ஒவ்வொரு விஷயமும் ஏற்படும்போது, குறித்த அந்த விஷயத்தில் ரெஜிஸ்டரில் தேடிப் பார்க்காமல் விட்டுவிட்டதை இதர சங்கதிகளுடன் சேர்த்து நோக்கினால் அது கோடிஸ் மூலமாய் விளையக்கூடிய பயன் விளையும்படிச் செய்யக்கூடிய அளவுக்கு முற்றிலும் அசட்டை செய்ததாகுமாவென்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறதென்றும் நான் நினைத்திருப்பேன். பிரஸ்தாப விஷயங்களை முதலில் பார்க்கும்போது அபிப்பிராய பேதம் இருப்பதாக வெளிக்குத் தோற்றினாலும் அதைச் சரிப்படுத்துவதற்கு இந்த சோதனைப்பிரமாணம் பிரயோசனகரமாயிருக்கக்கூடும்."

க.வீ. நோ. 7-ம் வால்யும் 11-வது பக்கத்தில் கண்ட அந்தத் தீர்மானத்தை அனுசரித்து, அதே ஹைகோர்ட்டார் அடியிற்கண்டபடி அபிப்பிராயம் கொண்டார்கள் :—

"ரெஜிஸ்டர் செய்வதே கோடிஸ் ஆகுமா ஆகாதா என்பது - ஒவ்வொரு கேஸுக்குச் சம்பந்தப்பட்ட சங்கதிகளையும் சந்தர்ப்பங்

களையும் பொருத்ததாயிருப்பதுமல்லாமல், சாதாரண ஜாக்கிரதை யுள்ள யாதொரு நபர் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படி வைத்துவரப் படும் ரெஜிஸ்டர்களைத் தம்முடைய சுதந்தரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பரிசோதித்துப் பார்ப்பதில் எவ்வளவு ஜாக்கிரதை யுடனும் சாவதானத்துடனும் நடந்துகொள்வது அவசியமோ அதை யும் பொருத்ததாயிருக்கிறதென்று நாங்கள் அபிப்பிராயப்படு கிறோம்."

இந்த பிரசினையைப்பற்றி (லா. ரி. 47-ம் வால்யும், இ. அ. 239-வது பக்கத்தில் கண்டிருக்கும்) **திலக்தாரி லாலுக்கும் கேதன் லாலுக்கும்** நடந்த வியாஜ்ஜியத்தில் ஜூடிஷல் கம்மிட்டி என்னும் நியாயவிசாரணைக் கம்மிட்டியார் ஆலோசனை செய்தார்கள். இந்திய தீர்மானங்கள் எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்த்த பிறகு, கௌரவம் பொருந்திய ப்ரிவி கௌன்ஸில் ஜட்ஜிகள் - க.வீ.கோ., 2-ம் வால்யும் 750-வது பக்கத்திலும், க.வீ.கோ., 7-ம் வால்யும் 11-வது பக்கத்திலும் கண்டுள்ள கல்கத்தா வியாஜ்ஜியங்களில் கொள்ளப்பட்ட அபிப்பிராயத்தையே அங்கீகரித்து, அடியிற்கண்டபடி எழுதினார்கள்:—

"ரெஜிஸ்டர் செய்வதே நோடிஸ் கொடுத்திருப்பதாக ஊகிப்பதற்குச் சமானமாகாதென்னும் கொள்கை ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக இந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. பற்பல இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டுகளையும் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் நோடிஸ் என்பதற்கு அர்த்தத்தையும் ஏற்படுத்தினபோதே, அப்போது பழமையாயிருந்த இந்தச் சட்டத்தை இந்திய சட்டநிரூபண சபையார் அறிந்திருக்கவேண்டும். ஆயினும், அப்பீல் வாதி வாதிக்கிற பிரகாரம், என்ன கோட்பாட்டின்படி அந்த ரெஜிஸ்டரில் . . . . ஏற்பாடு செய்திருப்பது அவசியமோ அந்தக் கோட்பாடு இன்னதென்று கண்டெழுதாமல் அவர்கள் விட்டுவிட்டார்களென்று கௌரவம் பொருந்திய ஜட்ஜிகள் உறுதியான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். . . . . . . இந்தக் காரணங்களைப்பற்றி, யாதொரு தஸ்தவேஜானது பத்திரங்களைக் குறித்த இந்திய ரெஜிஸ்டரில் காணப்படுமென்று தெரியவருவதனாலேயே நோடிஸ் கொடுத்திருப்பதாக எல்லா விஷயங்களிலும் கொள்ளமுடியாதென்று ஷை ஜட்ஜிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்."

ஸர் ராஷ் பீஹாரி கோஸ் சொல்லியிருக்கிறபடி, க. வீ. கோ., 2-ம் வால்யும் 750-வது பக்கத்தில் கண்டிருப்பதும் ப்ரிவி கௌன்ஸில் என்னும் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுமான பிரமாணத்தினால் விசேஷமாய்ப் பொய்ச் சத்தியம் பண்ணவும் வழக்காடவும் கட்டாயம் இடம் ஏற்படும். (கொதுவையைக் குறித்து கோஸ் அவர்கள் எழுதிய புத்தகம், 1-ம் வால்யும் 473-வது பக்கம்.) திலக்தாரியின் வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட ரிபோர்ட்டின் 252-ம் பக்கத்தில், ஜூடிஷல் கம்மிட்டி என்னும் சபையார்-ரெஜிஸ்டர் செய்வதன் உண்மை நோக்கம் இன்னதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, சொத்தின் விஷயத்தில் விவகாரம் நடத்தும் ஒவ்வொரு நபரும்-அந்த விவகாரம் ரெஜிஸ்டர்செய்யப்படவேண்டியதாயிருந்தால், ரெஜிஸ்டர்செய்யப்படாதிருந்தபோதிலும்சட்டப்படி செல்லத்தக்க ரெஜிஸ்

டர் செய்யப்படாத வேறொரு விவகாரத்தைக் குறித்து வாஸ்தவத்தில் தாம் நோடிஸ் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, ரெஜிஸ்டரில் கண்டெழுதியிருக்கும் விஷயங்களைத் தம்முடைய ஹக்கைப் பாதிக்கக்கூடிய சகல விவகாரங்களின் பூர்த்தியான முழு விவரமென்று நம்பக்கூடியபடி செய்வதே ஷை நோக்கமென்று அந்தக் கம்மிட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவிலே, ஒரு பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்வதானது யாதொரு சொத்தில் சட்டப்படியோ அல்லது நீதி முறைப்படியோ ஏற்படும் எவ்வித பாத்தியதையைக் குறித்தும் அதே சொத்தைப் பிற்பட்டு கிரயத்துக்கு வாங்குகிறவர்கள் எல்லோரும் நோடிஸ் பெற்றிருப்பதாக ஊகிப்பதற்குச் சமானமாகுமென்று கருதப் பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையைப் பிரயோகப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் காரணம் என்னவென்றால் :—

"ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்த ஆக்டுகளின் வெளிப்படையான போக்கையும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சொத்தைக் கிரயத்துக்கு வாங்கும் நபர் முந்திய சிக்குச்சிலுகுகள் உண்டாவென்று கண்டறியத் தேடிப்பார்க்கக் கடமைப் பட்டிருப்பதையும், அந்தப்படி தேடிப்பார்ப்பதற்குரிய வழிவகைகள் அவருடைய சுவாதீனத்திலிருப்பதையும், வாஸ்தவத்தில் பத்திரம் ஏற்பட்டிருப்பதைக் குறித்து நோடிஸ் கொடுத்திருப்பதைப்பற்றிய ருஜுவையாவது நோடிஸ் கொடாமலிருப்பதைப்பற்றிய ருஜுவையாவது வாய்மொழியாய்த் தெரிவிப்பதில் அபாயம் உண்டென்பதையும் ஆதாரமாகக் கொண்டு ஷை கொள்கை அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. இந்தக் கொள்கையினால் நிச்சயமான சங்கதி தெரியவருவதும், அது எங்கும் ஒரேமாதிரியாய்ப் பிரயோகப்படுவதும் இதனால் ஏற்படும் அனுகூலம் என்பதில் சந்தேகமில்லை. மேலும், பிற்பட்டு கிரயத்துக்கு வாங்குகிறவர்கள் சொத்துக்கள் விஷயத்தில் தங்களுக்குள்ள பாத்தியதைகளைப் பரிசோதித்துப் பார்ப்பதில் மாத்திரமே நியாயமான அளவுக்கு ஜாக்கிரதையாய்ப் பிரவர்த்திக்கும்படி ஷை கொள்கையினால் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது." (எக்விட்டி ஜூரிஸ்ப்ரூடென்ஸ் என்பதைப் பற்றி ஸ்டோரி என்பவர் எழுதிய புத்தகம், 510, 511-வது பக்கங்களில் கண்ட 534-வது பகுதியைப் பார்க்கவும்.)

இங்கிலாந்து தேசத்தில் மிடில்ஸெக்ஸ், யார்க்ஷைர் என்னும் கௌன்டிகளிலே பிரதேச பத்திரங்களின் ரெஜிஸ்டர் வைத்துவரும் முறை அனுசரிக்கப்பட்டுவருகிறது. அங்கேயுங்கூட, சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 197-வது பிரிவில், சட்ட சம்மதமான பாத்தியதை அல்லது பொறுப்பை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான அல்லது உண்டுபண்ணுவதற்கான யாதொரு ஆதரவின் குறிப்பைப் பிரதேச பத்திரங்களின் ரெஜிஸ்டரில் ரெஜிஸ்டர் செய்வதே சகல நபர்களுக்கும் எவ்வகையான சகல காரியங்களுக்காகவும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தேதியிலிருந்தும் ரெஜிஸ்டர் செய்தது செலாவணியாய்க்கொண்டிருக்கிறவரையிலும் ஷை சட்ட சம்மதமான பாத்தியதை அல்லது பொறுப்பை ட்ரான்ஸ்பர் செய்ததைப்பற்றியாவது உண்டுபண்ணினதைப்பற்றியாவது வாஸ்தவமாய் நோடிஸ்

கொடுத்ததாகக் கருதப்படுமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. அம்மாதிரியே, நிலசம்பந்தமான் பொறுப்புகளைக்குறித்த 1925-ம் வருஷத்து ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்படும் ஆதரவுகளின் விஷயத்தில், ரெஜிஸ்டர் செய்வதே அப்படிப்பட்ட ஆதரவினால் பாதிக்கப்படும் நிலத்துக்குச் சம்பந்தப்பட்ட சகல நபர்களுக்கும் சகல காரியங்களுக்காகவும் அந்த ஆதரவைக்குறித்து வாஸ்தவமாய் நோடிஸ் கொடுத்ததாகக் கருதப்படுமென்று 198-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது.

ரெஜிஸ்டர் செய்யும் முறை பொதுப்பட பிரயோகப்பட்டுவரும் இந்தியாவைப் போன்ற ஒரு தேசத்திலே, ரெஜிஸ்டர் செய்வது நோடிஸ் கொடுத்ததாகமாட்டாதெனக் கொள்ளப்படுமானால், எந்த நோக்கங்களுடன் பத்திரங்கள் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அந்த நோக்கங்களில் ஒன்று நிறைவேறாமற்போய்விடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், அடியிற்கண்டபடி நாங்கள் பிரேரேபித்திருக்கும் முக்கியமான மாறுதல்களில் ஒன்று பத்திரங்களைக் “ கட்டாயமாய் ரெஜிஸ்டர் செய்யவேண்டு ” மென்பதாகும். ஆகவே, அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்வதே அந்த பத்திரத்தைக் குறித்து அது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தேதியிலிருந்து நோடிஸ் கொடுத்ததாகுமென்பதை ஸ்பஷ்டப்படுத்துவதற்காக ஆக்டில் வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகும். இது காரியத்துக்காக, 3-வது பிரிவில் ‘நோடிஸ்’ என்பதன் அர்த்தத்துடன் 1-வது விவரணத்தைச் சேர்க்க உத்தேசிக்கிறோம்.

சுவாதீனத்தில் வைத்திருப்பதை இன்னமட்டில் நோடிஸாகக் கொள்ளலாமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை. சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதே சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபருக்கு இருக்கக்கூடிய பாத்தியதையைக் குறித்து அப்படிப்பட்ட நோடிஸ் கொடுத்ததாகுமென்று சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., அலஹாபாத், 25-ம் வால்யும் 366-வது பக்கம், சென்னபட்டணம் 16-ம் வால்யும் 148-வது பக்கம்). இதர வியாஜ்ஜியங்களில், இந்தப் பிரசினை விஷயமாய் யாதொரு அபிப்பிராயத்தை வெளியிடமுடியாமல் கோர்ட்டார் கஷ்டப்பட்டிருக்கிறார்கள் (இ.லா.ரி., கல்கத்தா 8-ம் வால்யும், 597-வது பக்கம்). ஆயினும், நோடிஸாகச் செலாவணியாகும் சுவாதீனமானது வாஸ்தவமான சுவாதீனமாக இருக்கவேண்டும். அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விவகாரத்தில் பிரவேசிக்கும் நபர் சுவாதீனத்தைக் குறித்த பிரசினையைக் கவனிக்காமல் விட்டுவிடக் கூடியவராயிருப்பதாவது, சுவாதீனத்தின் தன்மையைப்பற்றியாகிலும் தாம் எவருடன் விவகாரம் வைத்துக்கொண்டிருக்கிறாரோ அவர் அந்த சொத்தை வாஸ்தவத்தில் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவரா யிராவிட்டால், அப்படி சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவருக்குள்ள பாத்தியதையின் தன்மையைப்பற்றியாகிலும் விசாரிக்காமல் அசட்டை செய்வதாவது நியாயமா யிருப்பதாகத் தோற்றவில்லை. யாதொரு அசையாப் பொருளின் விஷயத்தில் விவகாரம் நடத்தும் நபர் அந்த காலத்தில் அதை வாஸ்

தவத்தில் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு நபருக்குள்ள பாத்தியதையைக்குறித்து நோடிஸ் பெற்றிருப்பதாகக் கருதப்படுவாரென்று நிபந்தனை ஏற்படுத்தி 'நோடிஸ்' என்பதன் அர்த்தத்துடன் 2-வது விவரணத்தைச் சேர்க்க நாங்கள் உத்தேசிக்கிறோம். இந்த விஷயத்தில் நோடிஸானது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதாக பாவிக்கவேண்டியதாக மாத்திரமேயுள்ள சுவாதீனத்துக்குப் பிரயோகப்படவில்லையென்பதைக் கவனிக்கலாம். இந்த விவரணமானது - ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 27-வது பிரிவைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட 3-வது திருஷ்டாந்தத்தின்படி இருக்கிறது.

நோடிஸ் என்பதற்கு இப்போது சொல்லியிருக்கும் அர்த்தத்திலே, ஏஜென்ட் மூலமாய் நோடிஸ் கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்டிருக்கும் கடைசி பாகமானது குறைவுள்ளதாயிருப்பதாக எங்களுக்குத் தோற்றுகிறது. இந்துதேசத்து கன்ட்ராக்ட் ஆக்ட் 229-வது பிரிவில் சொல்லியிருக்கிற சந்தர்ப்பங்களிலே, யாதொரு சங்கதியைக் குறித்து யாதொரு நபரின் ஏஜென்டுக்கு அறிக்கை செய்யப்பட்டிருந்தாலும் அந்த ஏஜென்ட் அதைத் தெரிந்துகொண்டிருந்தாலும், அந்த நபர் அந்த சங்கதியைக்குறித்து நோடிஸ் பெற்றவராவாரென்று அதில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஷை அர்த்தத்தில் உபயோகித்திருக்கும் "யாதொரு நபரின் ஏஜென்டுக்கு அறிக்கை செய்யப்பட்டிருந்தாலும் அந்த ஏஜென்ட் அதைத் தெரிந்துகொண்டிருந்தாலும்" என்னும் வார்த்தைகளினால், எந்த சங்கதிகள் ஏஜென்டுக்கு வாஸ்தவமாய்த் தெரிந்திருக்கின்றனவோ அல்லது எந்த சங்கதிகளைக்குறித்து ஏஜென்டுக்கு வெளிப்படையாய் அறிக்கை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த சங்கதிகளுக்கு மாத்திரமே ஷை விதி பிரயோகப்படுமென்று ஏற்படுகிறது. (இ.லா.ரி., கல்கத்தா 4-ம் வால்யும், 897-வது பக்கத்தில் ஜட்ஜ் பான்டிபெக்ஸ் அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.) இந்துதேசத்துக் கான்ட்ராக்ட் ஆக்ட் 229-வது பிரிவைக் குறிப்பிட்டிருப்பதனால் ஷை அர்த்தத்தின் வியாபகம் விரிவாய்விடவில்லை. யாதொரு ஏஜென்டுக்குக் கொடுக்கும் நோடிஸ் முதலாளிக்குக் கொடுத்த நோடிஸா யிருக்கும்பொருட்டு, முதலாளிக்காக ஏஜென்ட் வியாபாரம் நடத்திவருகையில் அது அவருக்குக் கொடுக்கப்படவேண்டும் அல்லது அவர் சங்கதி தெரிந்துகொண்டிருக்கவேண்டுமென்று மாத்திரமே அந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. கையிலிருக்கும் வியாபாரத்தின் காரியத்துக்காக யாதொரு ஏஜென்டானவர் முதலாளியின் ஸ்தானத்திலிருந்து அவருக்குப் பர்த்தியாகப் பிரவர்த்திக்கிறாரென்பது பொதுவாய் ஏற்பட்டிருக்கும் விதி. அவர் செய்யும் காரியங்களும் அவருக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களும் முதலாளி செய்யும் காரியங்களாகவும் முதலாளிக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களாகவும் எண்ணப்படுகின்றன. இதுவே நன்றாய் ஸ்திரமாக ஏற்பட்டிருக்கும் கொள்கையாகும். (இ.அ., 29-ம் வால்யும் 203-வது பக்கம், அலஹாபாத் 25-ம் வால்யும் 1-வது பக்கம் ஆகிய இவைகளில் கண்டிருக்கும்) ராம்பால் ஸிங்குக்கும் பல்பதர் ஸிங்குக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலே ஜுடிஷல் கம்மிட்டியார் எழுதியுள்ளபடி, " இது நோடிஸ் கொடுத்ததாக பாவி

க்கவேண்டுமோ அல்லது சங்கதியை ஊகித்திறியவேண்டுமோ என்பதற்குச் சம்பந்தப்பட்ட பிரசினை மாத்திரமே யல்ல; ஆனால், அது சட்ட சம்பந்தமான விதியாகும். அந்த விதியின்படி ஏஜெண்டுக்குத் தெரிந்திருக்கும் சங்கதி முதலாளிக்குத் தெரிந்ததாய்க் கொள்ளப்படுகிறது; அல்லது, (வேறே விதமாய்ச் சொல்லும்பட்சத்தில்) விவகாரம் 'நடந்துகொண்டிருக்கையில் எதையெல்லாம் முக்கியமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறதோ அதையெல்லாம் குறித்து முதலாளியின் சார்பாக நோடிஸ் பெறுவதற்கும் ஏஜென்ஸி பிரயோகப்படுகிறது." (இ.அ., 30-ம் வால்யும் 114-வது பக்கத்தில்கண்ட) மோஹரி பீபிக்கும் தர்மதாஸ் கோஸுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், முதலாளி கல்கத்தாவை விட்டுப்போயிருந்தபோதிலும் பிரஸ்தாப விவகாரத்தில் நேராய் அவர் கலந்துகொள்ளாதிருந்தபோதிலும், கல்கத்தாவிலிருந்த அவருடைய ஏஜெண்ட் அந்த விவகாரத்தின் காரியங்களுக்காக அவருக்குப் பர்த்தியாய்ப் பிரவர்த்தித்து வந்தாரென்றும், அந்த ஏஜெண்ட் செய்த காரியங்களும் அவருக்குத் தெரிந்திருந்த சங்கதியும் முதலாளி செய்த காரியங்களாகுமென்றும் அவருக்குத் தெரிந்திருந்த சங்கதியாகுமென்றும் ப்ரிவி கௌன்ஸில் என்னும் சபையைச் சேர்ந்த கௌரவம் பொருந்திய ஜட்ஜிகள் அபிப்பிராயப்பட்டார்கள். ஏஜெண்டுக்கு வாஸ்தவத்தில் நோடிஸ் கொடுத்திருந்தாலுஞ்சரி அவர் நோடிஸ் பெற்றிருப்பதாக ஊகிக்கவேண்டியிருந்தாலுஞ்சரி அது முதலாளிக்கு நோடிஸ் கொடுத்ததாகவோ அவர் நோடிஸ் பெற்றிருப்பதாய் ஊகிக்கவேண்டியதாகவோ ஏற்படாவிட்டால், "ஒவ்வொரு விஷயத்திலும் ஏஜெண்டுகளை நியமித்து நோடிஸ் கிடைக்காதபடி தடுத்துவிடக்கூடும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. [சா. 1-ம் வால்யும் 632-வது பக்கத்தில் கண்ட பெர்விக் அண்ட் கம்பெனிக்கும் ப்ரைஸுக்கும் (1905-ம் வருஷத்தில்) நடந்த வியாஜ்ஜியம்.]

ஏஜெண்டுக்குத் தெரிந்திருக்கும் சங்கதி முதலாளிக்குத் தெரிந்திருக்கும் சங்கதியாகும் என்னும் பொது விதிக்குச் சில வரையறைகள் இருக்கின்றனவென்பதில் சந்தேகமில்லை. எந்த விஷயத்துக்காக ஏஜெண்ட் நியமிக்கப்பட்டாரோ அதைப்பற்றி ஆலோசிப்பது அவசியமாகும். குறித்த எந்த வியாபாரத்துக்காக ஏஜெண்ட் நியமிக்கப்பட்டாரோ அந்த வியாபார தோரணையில் அவர் பிரவர்த்தித்துக் கொண்டிருப்பதும் அவசியமாகும். (இ.அ., 34-ம் வால்யும் 179-வது பக்கம்.) இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 199-வது பிரிவில் இந்தப் பொதுக் கொள்கை இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் ஷை அர்த்தத்துடன் 3-வது விவரணத்தைச் சேர்க்க உத்தேசிக்கிறோம்.

பகுதி 5. பிரிவு 4. 1-வது பிரிவைப்பற்றிய குறிப்பில் சொல்லியிருக்கிறபடி, 54-வது பிரிவைச் சேர்ந்த 3-வது பாராவைக் குறிப்பிட்டிருப்பதை இந்தப் பிரிவில் விட்டுவிட்டிருக்கிறது. இந்தப் பிரிவில் 1877-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதை, இப்போது செலாவணியாய்க் கொண்டுவரும் 1908-ம் வருஷத்து ஆக்டைக் குறிப்பிடுவதாக மாற்றியிருக்கிறோம்.

ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாத பற்பல வகையான சொத்துக்கள் பகுதி 6.
இன்னவையென்று 6-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. அந் பிரிவு 6.
தப் பிரிவைச் சேர்ந்த (d) குறிப்பிட்ட பகுதியில் சொந்தக்காரரே
நேரில் அனுபவிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிற
சொத்தில் உள்ள சுதந்தரம் அடங்குகிறது. ஜீவனாம்சம் கொடுக்
கும் பொறுப்பு குறித்த யாதொரு சொத்தின்மேலாவது அதிலி
ருந்து கிடைக்கும் வரும்படியின்மேலாவது ஏற்றப்பட்டிருந்தபோதி
லும், அப்படிப்பட்ட ஜீவனாம்சம் பெறும் சுதந்தரமானது ஒரு
நபருக்கேயுரிய சுதந்தரமாகும். ஜீவனாம்சம் முதலியவை பெற
யோக்கியதை பெற்றுள்ள ஒரு சொந்தக்காரரின், அதாவது,
ஒரு ஹிந்து ஸ்திரீயின், ஜீவனாம்சத்துக்காகவாவது அவள் தானே
அனுபவிப்பதற்காகவாவது சாதாரணமாய் உண்டுபண்ணப்படும் இ
ந்த சுதந்தரங்கள் பராதீனப்படுத்தப்படக்கூடாதவையாய் இருப்பது
பொதுஜன விவகார ரீதியை ஒத்ததாகும். ஆனால், ஜீவனாம்சத்
தொகை உடன்படிக்கை மூலமாகவாவது டிக்ரி மூலமாகவாவது
நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்தால், அதை ஒப்படை செய்யலா
மென்று சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்
கிறது. (இ. லா. ரி., பம்பாய் 5-ம் வால்யும் 99-வது பக்கம், கல்
கத்தா 38-ம் வால்யும் 13-வது பக்கம்.) யாதொரு உடன்படிக்கை
அல்லது டிக்ரியின்படி அப்படிப்பட்ட சுதந்தரம் நிஷ்கரிஷையான
தாய் ஏற்படக்கூடுமானாலும், அது ஜீவனாம்சம் பெற யோக்கியதை
பெற்றுள்ள சொந்தக்காரரின் சுய பிரயோசனத்துக்காக உண்டு
பண்ணப்பட்ட சுதந்தரமாகும். ஆகவே, அது பராதீனப்படுத்தப்
படக்கூடியதாயிருக்கக்கூடாது. ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்
60-வது பிரிவில், அப்படிப்பட்ட சுதந்தரத்தின் விஷயமாய் யாதொ
ரு ஸிவில் கோர்ட்டார் ப்ராஸெஸ் என்னும் கட்டளை பிறப்பிக்க
முடியாதபடி பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறது. அந்தப் பிரிவில்
உடன்படிக்கை மூலமாகவாவது டிக்ரிமூலமாகவாவது நிஷ்கரிஷை
செய்யப்பட்ட ஜீவனாம்சத்தின் விஷயத்தில் விலக்கு எதுவும் ஏற்
படுத்தப்படவில்லை. ஆயினும், மேலே சொல்லியிருக்கும் நியாயங்
கள் பாக்கியாய்ச் சேர்ந்துவந்திருக்கும் ஜீவனாம்ச நிலுவைத் தொகைக்
குப் பிரயோகப்படமாட்டா. இவ்விஷயத்தை ஸ்பஷ்டமாய்க் காட்டு
வதற்காக, அடியிற்கண்ட பகுதியை (dd) குறிப்பிட்ட பகுதியாக
அமைத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் ஆலோசனை சொல்லு
கிறோம் ; அதாவது :—

“ (dd) பிற்காலத்தில் ஜீவனாம்சம் பெறுவதற்கான சுதந்தரம்
எந்த விதமாக ஏற்படுவதாயிருந்தாலுஞ்சரி அல்லது கிடைத்திருந்
தாலுஞ்சரி அல்லது தீர்மானிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, அந்த சுதந்
தரத்தை ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாது.”

இந்தப் பிரிவில் எந்த மாறுதலும் செய்யும்படி நாங்கள் சொல்ல பிரிவு 10.
வில்லை. ஆனால், இந்தப் பிரிவில் அமைந்திருக்கும் கொள்கையை
ஹிந்துக்கள், மகம்மதியர்கள், புத்தர்கள் ஆகிய இவர்களுக்கும் பிர
யோகப்படும்படிச் செய்யவேண்டுமா என்பது விவகார தோரணை
யைப் பொறுத்த பிரசினையாகும்.

பகுதிகள் 7, 11. பிரிவுகள் 11, 40.

ஷை ஆக்டின் 11-வது, 40-வது பிரிவுகள் யாதொரு ட்ரான்ஸ்பரில் உடன்பாடாகவும் எதிர்மறையாகவுமுள்ள உடன்படிக்கைகளைக் குறிப்பிடுகிறது. ட்ரான்ஸ்பர் செய்தவர், ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஆகிய இவர்களுக்குள் ஏற்படும் சுதந்தரங்களைக் குறித்து 11-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. 40-வது பிரிவிலோ, மூன்றுவது நபர்களுக்கு ட்ரான்ஸ்பர் பெற்றவர்கள் விஷயத்திலுள்ள சுதந்தரங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. யாதொரு சொத்தில் ஒரு பாகம் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்து மற்றொரு பாகத்தைப் பிரயோசனகரமாய் அனுபவிப்பதற்காக ஏற்பட்ட உடன்பாடான உடன்படிக்கைகளை எல்லா விஷயங்களிலும் அமுலுக்குக் கொண்டுவரலாமென்று 11-வது பிரிவின் இரண்டாம் பாராவில் உபயோகித்திருக்கும் "அனுபவிக்கவேண்டுமென்று உட்படுத்துவதற்குண்டாகிய" என்னும் வார்த்தைகளினுலும், 40-வது பிரிவின் முதல் பாராவில் உபயோகித்திருக்கும் "அனுபவிக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கவாவது" என்னும் வார்த்தைகளினுலும் ஏற்படுகிறது. 1848-ம் வருஷத்தில் தீர்மானம் செய்யப்பட்ட வியாஜ்ஜியமாகிய Ph. 2-ம் வால்யும் 774-வது பக்கத்தில் கண்டிருக்கும் டல்குக்கும் மோக்ஸ்ஹேக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் வார்ட் காட்டென்ஹாம் எழுதிய குறிப்புகளை ஆதாரமாகக்கொண்டு மேற்படி பாரா எழுதப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனல், (கு. பெ. டி. 8-ம் வால்யும் 403-வது பக்கத்தில் கண்ட ஹேவுட்டுக்கும் ப்ரன்ஸ்விக் பில்டிங் ஸொஸைடி என்னும் சங்கத்துக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தைப்போல் இங்கிலாந்து தேசத்தில் பிற்பட்டு செய்யப்பட்ட தீர்மானங்களில், டல்க் என்பவரின் வியாஜ்ஜியத்தில் எழுதப்பட்ட குறிப்புகள் அங்கீகரிக்கப்படவில்லை. மேலும், சில விசேஷவிஷயங்களிவன்றி மற்றப்படி, உடன்பாடான உடன்படிக்கைகளைக் குறிப்பாய் அமுலுக்குக் கொண்டுவரமுடியாதென்று இப்போது முடிவாயிருக்கிறது. உதாரணமாக, சா. டி. 29-ம் வால்யும் 750-வது பக்கத்தில் கண்ட (1885-ம் வருஷத்தில்) ஆஸ்டர் பெர்ரிக்கும் ஓல்ட்ஹாம் கார்ப்பொரேஷனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், நிலத்துக்காகப் பணம் செலவழிக்கவேண்டுமென்று செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைப்பற்றி அந்த நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கினவருக்கு நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவரை அது கட்டுப்படுத்துவதாகக் கொள்ளப்படவில்லை. இந்தியக் கோர்ட்டுகளும் அதே கொள்கையை அனுசரித்துவந்திருக்கின்றன (பம்பாய் லா. ரி. 27-ம் வால்யும் 73-வது பக்கம்). ட்ரான்ஸ்பர் செய்தவர், ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஆகிய இவர்களுக்குள் செய்து கொள்ளப்பட்ட (11-வது பிரிவு) உடன்பாடான உடன்படிக்கையைப் பொறுத்தமட்டில் அது சட்டப்படி செல்லாததாயிராவிட்டாலும், எதிர்மறையான அல்லது நிர்ப்பந்தம் ஏற்படுத்தும்படியான உடன்படிக்கைகளை மாத்திரமே யாதொரு மூன்றும் நபருக்கு விரோதமாய்க் குறிப்பாக அமுலுக்குக் கொண்டுவரலாம் (40-வது பிரிவு) என்பதை ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு 11-வது பிரிவின் இரண்டாவது பாராவையும் 40-வது பிரிவின் முதல் பாராவையும் திருத்தவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்த ஆக்ட் 15-வது பிரிவில், யாதொரு வகுப்பாருக்குச் சொத்தை, ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அந்தப் பிரிவிலே, 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 102-வது பிரிவில் (இப்போதைய 1925-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 115-வது பிரிவில்) கண்ட நிபந்தனைகளைச் சொல்லமைப்பில் சொற்ப மாறுதல்களுடன் எடுத்தெழுதியிருக்கிறது. ஷை தாயபாக ஆக்டிற்கண்ட பிரிவானது- Mer. 2-ம் வால்யும் 363-வது பக்கத்தில் கண்ட (1817-ம் வருஷத்தில்) லீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தில் அடங்கியிருக்கும் கொள்கையை அனுசரித்து எழுதப்பட்டது. அந்தக் கொள்கை இன்னதென்று உயில்களைப்பற்றி தியோபால்ட் என்பவர் எழுதிய புத்தகத்தில் அடியிற்கண்டபடி சொல்லியிருக்கிறது :— பகுதி 8. பிரிவு 15.

“யாதொரு வகுப்பாருக்கு ஒரு தானம் செய்யப்பட்டிருந்து, அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவர்களேயாவது நிரந்தர பிரயோசனம் அடைவதற்குரிய வரையறைகளுக்கப்பால் போய் நிச்சயித்தறியவேண்டியிருந்தால், உதாரணமாக, உயிருடன் இருப்பவர் ஒருவருடைய மக்களில் இருபத்தைந்து வயது அடையக்கூடியவர்களுக்கு தானம் செய்யப்பட்டிருந்தால், அந்த தானம் முழுவதும் செல்லாமல்போகிறது.”

நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியைப்பாதிக்கும்படியாக யாதொரு வகுப்பாருக்குச் செய்யும் தானங்களுக்கு மாத்திரமே இந்த விதி பிரயோகப்படுகிறதென்பதைக் கவனிக்க வேண்டும்.

யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து, அது அவர்களில் சிலர் சம்பந்தப்பட்டமட்டில்,—

(1) ஆஸ்தி ஏற்பாடு செய்த காலத்தில் பிறந்திராத யாதொரு நபருக்கு வரையறுக்கப்பட்டசுதந்தரம் ஏற்படுத்திக் கொடுத்தால் எப்படியோ அப்படியே 100-வது பிரிவில் கண்ட விதி காரணமாகவாவது,

(2) நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியைப்போல் 101-வது பிரிவில் கண்ட விதி காரணமாகவாவது செல்லாததாயிருந்தால், அந்த ஆஸ்தி ஏற்பாடு முழுவதும் செல்லாததாய்விடுமென்று 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 102-வது பிரிவில் விதி ஏற்படுத்தியிருக்கிறது.

இப்போது குறிப்பிடப்போகும் சில விசேஷ ஆக்டுகள் ஏற்படுத்தப்பட்டதற்குமுன், தானம் செய்யும் காலத்தில் பிறந்திராத யாதொரு நபரின் பிரயோசனத்துக்காக தானம் செய்வதற்காகிலும், உயில் எழுதுகிறவர் இறந்துபோகும்காலத்தில் பிறந்திராத யாதொரு நபரின் பிரயோசனத்துக்காக ஆஸ்தி ஏற்பாடு செய்வதாகிலும் ஹிந்துலா என்னும் ஹிந்துக்களின் தரும சாஸ்திரத்தின்படி அனுமதி ஏற்படவில்லை [வங்காள லா. ரி. 9-ம் வால்யும் 377, 397, 400-வது பக்கங்களிலும், இ. அ. ஸப். 47-வது வால்யுமிலும் கண்ட (1872-ம் வருஷத்தில்) டாகூருக்கும் டாகூருக்கும் நடந்த வியாஜ்ஜியம்]. தானம் பெற்றுக்கொள்ளக்கூடிய நபர் தானம் செய்யப்

பட்ட தேதியில் இருந்திருக்கவேண்டுமென்னும் காரணத்தைக்கொண்டே மேலேகண்டபடி அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆயினும், ஒரு வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு தானம் செய்யப்பட்டு, தானம் செய்யப்பட்ட தேதியில் அவர்களில் சிலர் பிறந்தும் சிலர் பிறக்காமலும் இருந்தால் அப்படிப்பட்ட விஷயத்தில் கஷ்டங்கள் ஏற்பட்டன. இ. அ. 11-ம் வால்யும் 164-வது பக்கத்திலும் அலஹாபாத் 6-ம் வால்யும் 560-வது பக்கத்திலும் கண்ட (1884-ம் வருஷத்தில்) ராய் பிஷென் சந்துக்கும் முஸம்மத் அஸமெய்தா கோயெருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தை இதுவிஷயத்தில் முதன்மையான வியாஜ்ஜியமாகக் குறிப்பிடலாம். இந்த வியாஜ்ஜியத்திலே, ஒரு ஹிந்துவானவர் அப்போதிருந்த தன் பேரனாகிய S என்பவருக்கும் "அதற்குப் பிறகு பிறக்கக்கூடிய அவருடைய (S என்பவருடைய) சகோதரர்களுக்கும்" தம்முடைய சொத்தை தானம் செய்தார். வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்தவியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டும் பிரஸ்தாப விஷயம் 1865-ம் வருஷத்திய இந்து தேசத்து தாயபாக ஆக்ட் 102-வது பிரிவில் சொல்லியிருப்பதைப் போல் இருப்பதை அனுசரித்தும், தானம் செய்த காலத்தில் பிறந்திராத பேரப்பிள்ளைகளுக்குச் செய்யும் தானம் ஹிந்து லாவின்படி செல்லமாட்டாதாகையால், தானம் செய்த தேதியில் பிறந்திருந்த பேரன் கூட பிரயோசனம் அடைய முடியாதென்று வாதிக்கப்பட்டது. ஆனால், ஜுடிஷல் கம்மிட்டி என்னும் சபையார் இந்த வாதத்தை அடித்துவிட்டார்கள். தானம் செய்த காலத்தில் பிறந்திராத பேரப்பிள்ளைகளுக்குச் செய்யப்பட்ட தானமானது 100-வது பிரிவிலாகிலும் 101-வது பிரிவிலாகிலும் அடங்கியுள்ள விதிகள் காரணமாக செல்லாமற்போகவில்லையாகையாலும், ஷை காலத்தில் பிறந்திராத பேரப்பிள்ளைகள் ஷை தானத்தை நேரில் ஏற்றுக்கொள்ள முடியாமற் போனது காரணமாகவே அது செல்லாமற் போய்விட்டதாகையாலும் 102-வது பிரிவு பிரஸ்தாப கேஸின் சங்கதிகளுக்குப் பிரயோகப்படமாட்டாதென்று அந்தப் பிரிவின் விஷயமாய்ச் சொல்லப்பட்டது. தங்களுடைய தீர்ப்பில் கௌரவம்பொருந்திய ஜட்ஜிகள் சொல்லியிருப்பதாவது :

"அர்த்தம் செய்வது விஷயமாய் இங்கிலாந்து தேசத்தில் அனுசரிக்கும் ஒரு விதியானது, 102-வது பிரிவிற்கண்ட (b) குறிப்பிட்ட திருஷ்டாந்தத்தின் மூலமாக இந்தியாவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படுகிறதென்பது வாஸ்தவமாயிருக்கலாம். அந்தப்படி செய்வதனால் உயில் எழுதிவைப்பவரின் உத்தேசம் சாதாரணமாய் நிறைவேறாமற்போய்விடுகிறது."

அதற்குப் பிறகு அவர்கள் அடியிற்கண்டபடி எழுதியிருக்கிறார்கள் :—

"ஆனால், அர்த்தம் செய்வது விஷயமாய் இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சட்டத்திலிருந்து எடுத்து இங்கிலாந்து தேசத்து தான பத்திரங்களுக்குப் பிரயோகப்படக்கூடியவைகளாயுள்ள விதிகளைக்கொண்டு இந்த விவகாரத்தைத் தீர்மானிக்கவேண்டியிருப்பதைப் போல், அதைப் பாவிப்பது அவசியமல்லவென்று நாங்கள் எண்ணுகிறோம்."

வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப் பட்ட தீர்மானத்தைக் கல்கத்தா ஹைகோர்ட்டார் பல வியாஜ்ஜியங் களில் பிரயோகித்தார்கள்; உதாரணமாக, வங்காள லா. ரி. 8-ம் வால்யூம் 400-வது பக்கத்தையும் கல்கத்தா 2-ம் வால்யூம் 262-வது பக்கத்தையும் கல்கத்தா 4-ம் வால்யூம் 455-வது பக்கத்தையும் பார்க்கவும். ஆனால், ராய் பிஷென் சந்துக்கும் முஸாஹத் அஸ் மெய்தா கோயெருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜூடிஷல் கம் மிட்டியார் தீர்மானம் செய்த பிறகு போக்கு மாறிவிட்டது. மேலும், இந்தத் தீர்மானத்தில் அடங்கியுள்ள கொள்கையே இந்தியாவில் நடந்த பெரும்பான்மையான வியாஜ்ஜியங்களில் அனுசரிக்கப் பட்டுவந்திருக்கிறது.

வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப் பட்ட தீர்மானம் வாஸ்தவத்தில் இவ்வளவுமட்டில் வியாபிக்கிற தென்று கல்கத்தா 38-ம் வால்யூம் 188-வது பக்கத்தில் கண்டிருக்கும் (இ.அ. 41-ம் வால்யூம் 176-வது பக்கத்தில் ஊர்ஜ்ஜிதம் செய்யப் பட்டிருக்கும்) (1911-ம் வருஷத்தில்) ராதா ப்ரஸாதுக்கும் ராணி மணி தாஸிக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஸர் லாரென்ஸ் ஜென் கின்ஸால் எடுத்துக்காட்டப்பட்டது. அந்த தீர்மானத்தைப்பற்றிச் சொல்லுகையில் கற்றறிந்த ஜட்ஜவர்கள் 199-வது பக்கத்திலே அடியிற்கண்டபடி கூறினார்:

"பிரஸ்தாப வகுப்பைச் சேர்ந்தவர்களில் சிலர் தானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாதாகையால், தானமுழுவதும் சொல்லாமற்போய் விடுகிறதென்று ராணிமணியின் தரப்பில் வாதிக்கப்படுகிறது. மேலும், வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தை இதற்கு ஆதாரமாகக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தக் கேஸைத் தப்பாகப் பிரயோகிப்பதனாலும் யாதொரு வகுப்பாருக்குச் செய்யப் படும் தானத்தின் உண்மையான தன்மையைச் சரியாய் அறிந்து கொள்ளாததனாலும் இந்தப்படி வாதிக்கப்படுகிறது. வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலே, தானம் பெற்ற வகுப்பார் இன்னாரென்று நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாய் ஏற்பட்டுள்ள விதியில் கொடுத்திருக்கும் கால அளவுக்குள் நிச்சயித் தறியக்கூடாமல் இருந்ததனால், அந்த வகுப்பாருக்குச் செய்யப்பட்ட தானம் செல்லாமற்போய்விட்டது. இங்கே பிரஸ்தாபிக்கப்படும் தானமோ எவ்விதத்திலும் அந்த விதிக்கு விரோதமாயில்லை: உயில் மூலமாய்ச் சொத்தை அடையக்கூடியவர்களின் வகுப்பில் உயில் எழுதிவைத்தவர் இறந்துபோன தேதியில் பிறந்திராமலும், அது காரணமாக தானசொத்தை நேரில் ஏற்றுக்கொள்ளமுடியாமலும் இருந்த சிலர் இருப்பதொன்றுதான் இந்த தானத்தின் தோஷ மென்று சொல்லலாம். ஆகவே, இவ்விரண்டு வியாஜ்ஜியங்களுக்குமுள்ள வித்தியாசம் வெளிப்படையாயிருக்கிறது. யாதொரு வகுப்பாருக்குத் தானம் செய்கையில், உயில் எழுதிவைப்பவர் அந்த வகுப்பு முழுவதையும் ஒன்றாக பாவிக்கிறாரேயொழிய அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தனித்தனியாய்க் கவனிப்பதில்லை [A.C. 187, 191-வது பக்கங்களில் கண்ட (1901-ம் வருஷத்தில்) கிங்ஸ்பரிக்கும் வால்டருக்கும் நடந்த வியாஜ்ஜியம்]. மேலும், அந்த வகுப்பானது ஒரு வகையில் உருவகித்துச் சொல்லப்படுகிறது. ஆனால்,

நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியில் கொடுத்திருக்கும் காலத்துக்கப்பாலுள்ள ஒரு காலம் வரையில் அந்த வகுப்பை நிச்சயித்தறியக் கூடாமலிருந்தால், பிரஸ்தாப தானத்தைச் சட்டப்படி அடையக்கூடிய வகுப்பு எதுவும் இராமற்போய்விடும். ஆனால், இந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்டிருப்பதைப்போல், சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கால அளவுக்குள் யாதொரு வகுப்பை நிச்சயித்தறிவது கூடாமையாயிருப்பதல்லாமல், அந்த வகுப்பைச் சேர்ந்த சிலர் தானத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாதவர்களாயிருப்பதே தோஷமாயிருக்கும்பட்சத்தில், வேறே விதமாய் இந்த வியாஜ்ஜியத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டியிருக்கிறது."

யாதொரு வகுப்பாருக்குத் தானம் செய்யும் பிரசினை முழுவதையும், கல்கத்தா 12-ம் வால்யும் 663-வது பக்கத்தில் கண்ட (1886-ம் வருஷத்தில்) ராம்லால் ஸேத்துக்கும் கனைலால் ஸேத்துக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜட்ஜ் வில்ஸன் அவர்கள் விரிவாய் ஆராய்ச்சி செய்தார். இந்த வியாஜ்ஜியத்தில் கற்றறிந்த ஜட்ஜ் அவர்கள் லீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை ஹிந்து உயில்களுக்கு அர்த்தம் செய்கையில் அனுசரிப்பதற்கு, இந்தியாவிலே பிரமாணமாகக் கொள்ளப்படும் கேஸுகளை விமரிசை செய்து அவை பிரஸ்தாப வியாஜ்ஜியத்துக்குப் பொருந்தாவென்று தள்ளிவிட்டார். பிரஸ்தாப விஷயமாய்க் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்களுக்குள் ஒப்புமை இருப்பதாகத் தப்பபிப்பிராயம் கொண்டு, மேலேகண்ட தீர்மானம் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டதென்று அவர் எண்பித்ததுமல்லாமல் அடியிற்கண்டபடியும் எழுதியிருக்கிறார் :—

"இங்கிலாந்து தேசத்து தஸ்தவேஜுகளுக்கு அர்த்தம் செய்வதற்காக இங்கிலாந்து தேசத்துக் கோர்ட்டுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதிகள் இந்த தேசத்து சுதேசிகளுக்குள் நடக்கும் விவகாரங்களுக்கு அப்படியே பிரயோகப்படமாட்டாவென்பது புதிய கொள்கையல்ல. அர்த்தம் செய்வதற்கான விதிகள் - உத்தேசம் இன்னதென்று நிச்சயித்தறியும் விஷயத்தில் உதவியாயிருக்கும்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளாகும். அப்படிப்பட்ட விதிகளில் அனேகம் எவர்களின் பாஷைக்குப் பிரயோகப்படுத்தப்படுகின்றனவோ அவர்கள் ஆலோசனை செய்யும் வழக்கத்தையும் பேசும் விதத்தையும் பொறுத்துப் பிரயோகிக்கப்படக்கூடியவைகளாகும். அர்த்தம் செய்வது சம்பந்தமாய் இங்கிலாந்து தேசத்தில் அனுசரிக்கப்பட்டு வரும் விதிகள் சொத்தைக்குறித்த ஒரு விசேஷ சட்டத்துடனும் ஒப்படை செய்வதைக்குறித்த ஒரு கல்பனையான முறையுடனும் கூடவே ஏற்பட்டுவந்திருக்கின்றன. மேலும், எவர்களுடைய பாஷைக்கு அர்த்தம் கூற இந்த விதிகள் உபயோகிக்கப்படுகின்றனவோ அவர்களுடைய வாஸ்தவமான உத்தேசத்தை நிறைவேற்றுவதில் அவை சித்திகரமாயிருப்பது - அதுகாரியத்துக்கு அவை தம்மட்டிலே தகுதியாயிருப்பதை அவ்வளவாய்ப் பொறுத்திருக்கவில்லை. ஆனால், அவை அந்தப்படி சித்திகரமாயிருப்பது - கிரமாசாரப்படி இங்கிலாந்து தேசத்தில் எழுதப்படும் தஸதவேஜுகள் பிற்பட்டு அவைகளுக்குப் பிரயோகிக்கப்படும் அர்த்தம் செய்வது சம்பந்தமான விதிகள் இன்னவையென்று அறிந்தே சாதாரண

மாய்த் தயார்செய்யப்படுகின்றனவென்பதைப் பொறுத்திருக்கிறது. அப்படிப்பட்ட விதிகளை, பெரும்பான்மையான விவகாரங்களை இங்கிலிஷ்காரரினின்றும் வேறு விதமான உத்தேசத்துடன் நோக்குகிறவர்களாயும், வேறே விதமாய் நினைக்கிறவர்களாயும், வேறே மாதிரியாய்ப் பேசுகிறவர்களாயும், பிரஸ்தாப விதிகளைப்பற்றி கேட்டேயிராதவர்களாயுமுள்ள ஹிந்துக்களின் ஆதாரவுகளுக்கு அர்த்தம் செய்வதில் உபயோகிப்பது மிகவும் ஆபத்தான காரியமாகும்."

தீர்ப்பின் முடிவில் கற்றறிந்த ஜட்ஜ் அவர்கள் அடியிற்கண்டபடி எழுதியிருக்கிறார்; அதாவது:—

"யாதொரு வகுப்பாருக்கு தானம் செய்யப்பட்டிருந்து, அவர்களில் சிலர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி தானம் செய்யப்பட்ட தேதியிலோ உயில் எழுதிவைத்தவர் இறந்துபோன தேதியிலோ பிறந்திராத காரணமாக அதை ஏற்றுக்கொள்வதற்குச் சக்தியற்றவர்களாயிருந்தாலும் சக்தியற்றவர்களாயிருக்கக்கூடுமானாலும், அந்த தானத்தைப்பற்றி வேறே எந்த ஆட்சேபணையும் இராதபட்சத்தில், அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களில் அதை ஏற்றுக்கொள்ளச் சக்தியுள்ளவர்களாயிருப்பவர்களின் பிரயோசனத்தைப் பொறுத்தமட்டில் அது செலாவணியாகவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பேன்" என்று எழுதிவைத்திருக்கிறார்.

இ. அ. 38-ம் வால்யும் 54-வது பக்கத்தில் கண்ட (1911-ம் ௵த்தில்) பகபதிக்கும் காளி சாணுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ப்ரிவி கௌன்ஸில் ஜட்ஜுகள்-ஜட்ஜ் வில்ஸன் அவர்கள் செய்த தீர்ப்பைச் சற்று விஸ்தாரமாய்க் குறிப்பிட்டதுமல்லாமல், "அந்தத் தீர்ப்பைத் தாங்கள் முற்றிலும் ஒப்புக்கொள்வதாகவும்" தெரிவித்திருக்கிறார்கள்.

வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தின் விஷயத்தில் இங்கிலாந்து தேசத்திலும் குறைகூறுமற்போகவில்லையென்பதையும் கவனிக்கவேண்டும். கல்கத்தா 32-ம் வால்யும் 992-வது பக்கத்தில் கண்ட (இ. அ. 38-ம் வால்யும் 54-வது பக்கத்தில் ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்ட) (1905-ம் ௵த்தில்) பகவதிக்கும் காளி சரண் ஸிங்குக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் சீவ் ஜஸ்டிஸ் மக்ளீன் அவர்கள் சொல்லியிருப்பதாவது:—

"வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானம் இங்கிலாந்திலும் அசம்மதத்தை வெளியிடாமல் அனுசரிக்கப்படவில்லை. வீக்குக்கும் ராபின்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலேயே ஸர் வில்லியம் க்ரான்ட் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: 'அதிகமாயுள்ள பாகத்தை ஸ்பஷ்டமாய் நிச்சயித்தறியக்கூடுமானால், அந்தப்படி அதிகமாயுள்ள பாகத்தின் விஷயத்தில் மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருக்கும் வரையறைகளை மீறி நிறைவேற்றும் அதிகாரத்துடன் செய்யப்பட்ட உயிலானது சட்டசம்மதயமற்றதாகுமென்று கோர்ட்டார் பிரதமத்தில் அபிப்பிராயப்பட்டிருப்பார்களாயின் அது ஒரு வேளை நன்றாயிருந்திருக்கும்.' சா. டி. 11-ம் வால்யும் 555-வது பக்கத்தில் கண்ட (1879-ம் ௵த்தில் நடந்த) மோஸ்லி ட்ரஸ்டுகள் சம்பந்தமான வியாஜ்ஜியத்தில் கௌரவம் பொருந்திய

ஜட்ஜுகள் மேற்படி தீர்மானத்தை அநுசரிக்கக் கடமைப்பட்டவர்களாயிருந்தபோதிலும், அந்த தீர்மானத்துக்குக் காரணமாயிருந்த நியாயத்தைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பதை அம்மாதிரியே வெளியிட்டார்கள். மோஸ்லி ட்ரஸ்டுகள் சம்பந்தமான வியாஜ்ஜியத்தில் ஷை ஜட்ஜிகள் செய்த தீர்மானத்தின்மேல் அப்பீல் செய்யப்பட்டு, அ. கே. 5-ம் வால்யும் 714-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1880-ம் வருஷத்தில்) பிர்க்ஸுக்கும் மோஸ்லிக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலே, லார்ட் ஸெல்போர்ன் அவர்களும் லார்ட் பென்ஸான்ஸ் அவர்களும் லார்ட் ப்ளாக்பர்ன் அவர்களும் மேற்படி தீர்மானத்தைத் தாங்கள் ஆமோதிக்கவில்லையென்பதைப் போதுமானமட்டில் தெரிவித்தார்கள். ஆயினும், அந்தத் தீர்மானமானது - ஒன்றின்பின் ஒன்றாக நடந்த அனேக வியாஜ்ஜியங்கள் மூலமாய் இங்கிலாந்தில் ஊர்ஜ்ஜிதப்படுத்தப்பட்டது. சட்டநிருபண மூலமாகவன்றி மற்றப்படி அதை மாற்றவோ திருத்தவோ முடியாது."

யாதொரு ஹிந்துவானவர் தம்முடைய சொத்தை இனி பிறக்கப் போகும் ஒரு நபரின் பிரயோசனத்துக்காக தான மூலமாகவாவது விற்பனை மூலமாகவாவது ஒருவகை செய்யமுடியாதென்னும் விதியின் காரணமாக சொத்தைத் தாராளமாய் ஒருவகைசெய்யும் விஷயத்தில் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இந்த அசமர்த்ததையை நிவர்த்திசெய்வதற்காக மூன்று ஆக்டுகள் ஜாரிசெய்யப்பட்டன. அவையாவன: (1) சென்னபட்டணம் 1914-ம் வருஷத்து 1-வது ஆக்ட்; (2) ஹிந்துக்கள் சொத்தை ஒருவகைசெய்வதைக்குறித்த 1916-ம் வருஷத்து 15-வது ஆக்ட்; (3) சென்னபட்டணம் 1921-ம் வருஷத்து 8-வது ஆக்ட். சென்னபட்டணம் 1914-ம் வருஷத்து 1-வது ஆக்டானது சென்னை ராஜதானிப்பட்டணம் நீங்கலாக சென்னை ராஜதானி முழுவதுக்கும் பிரயோகப்படுகிறது. சென்னபட்டணம் 1921-ம் வருஷத்து 8-வது ஆக்டானது சென்னை ராஜதானிப்பட்டணத்துக்குப் பிரயோகப்படுகிறது ஹிந்துக்கள் சொத்தை ஒருவகைசெய்வதைக் குறித்த ஆக்டானது-சென்னை ராஜதானி நீங்கலாக ப்ரிடிஷ் இந்தியா முழுவதுக்கும் வியாபிக்கிறது. அந்த மூன்று ஆக்டுகளில் கண்ட முக்கியமான அம்சங்களைக் கீழே சுருக்கமாய்க் குறிப்பிட்டிருக்கிறது:—

(1) யாதொரு டிரான்ஸ்பர் பெறுகிறவராவது யாதொரு உயில் ஏற்பாடு செய்யப்பெறுகிறவராவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தேதியிலாகிலும் உயில் எழுதிவைத்தவர் இறந்துபோன தேதியிலாகிலும் பிறந்திருக்கவில்லையென்னும் காரணத்தினாலேயே உயிருடனிருக்கும்போது யாதொரு சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதாயினும் அதை உயில் மூலமாக ஒருவகைசெய்வதாயினும் சட்டப்படி செல்லாததாகமாட்டாதென்று ஷை மூன்று ஆக்டுகளிலும் நிர்ணயித்திருக்கிறது. இனி பிறக்கப்போகும் நபர்களுக்குச் செய்யும் தானங்களும் ஆஸ்தி ஏற்பாடுகளும் சட்டப்படி செல்லுமென்று நிர்ணயிக்கப்பட்டபடியால், அந்த தானமாவது ஆஸ்தி ஏற்பாடாவது இன்ன காலத்துக்குள் சங்கிரமிக்கவேண்டுமென்று ஒரு வரையறை நிஷ்கரிஷை செய்வது அவசியமாயிற்று.

இத் - அப்படிப்பட்ட தானங்களுக்கும் ஆஸ்தி ஏற்பாடுகளுக்கும் நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதி அடங்கியிருக்கும் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 14-வது பிரிவிலும் 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 101-வது பிரிவிலும் முறையே கண்டிருக்கும் நிபந்தனைகளைப் பிரயோகிப்பதனால் நிறைவேற்றப்பட்டது.

(2) மேலும், ஹிந்துக்கள் சொத்தை ஒருவகைசெய்வதைக் குறித்த ஆக்ட் மூலமாக, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 13-வது பிரிவிலும் 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 100-வது பிரிவிலும் கண்டிருக்கும் நிபந்தனைகள் இனி பிறக்கப் போகும் நபர்களுக்குச் செய்யும் தானங்களுக்கும் ஆஸ்தி ஏற்பாடுகளுக்கும் பிரயோகப்படும்படிச் செய்யப்பட்டன. ஆனால், சென்னப் பட்டணத்து ஆக்டுகள் மூலமாக அந்தப்படி செய்யப்படவில்லை.

(3) மேற்படி மூன்று ஆக்டுகளும் யாதொரு வகுப்பாருக்குச் செய்யும் தானங்களுக்கும் ஆஸ்தி ஏற்பாடுகளுக்கும் சம்பந்தப்பட்டவைகளாயிருக்கும் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் 15-வது பிரிவையும் 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்டின் 102-வது பிரிவையும் சற்றும் கவனிக்காது விட்டுவிட்டன.

மேலேகண்ட ஆக்டுகளினால் ஏற்பட்ட ஒரு முக்கியமான பலனை இங்கே குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஷை மூன்று ஆக்டுகளை ஜாரி செய்வதற்குமுன், 1870-ம் வருஷத்திய ஹிந்து உயிலாக்ட் பிரயோகப்படுகிற யாதொரு விஷயத்திலே, யாதொரு ஹிந்துவால் உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து, உதாரணமாக, தன்னுடைய மகளின் ஆயுள்பரியந்தம் அவளுக்கும், அவள் இறந்துபோன பிறகு "அவளுடைய மக்களில் 21 வயது அடைபவர்களுக்கும்" ஷை ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து, மக்களில் சிலர் உயில் எழுதிவைத்தவர் இறந்துபோவதற்கு முன்னும் சிலர் அவர் இறந்து போனபிறகும் பிறந்திருந்தால், அந்த ஆஸ்தி ஏற்பாடானது உயில் எழுதிவைத்தவர் இறந்துபோகையில் பிறந்திராதவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் செல்லாததாய்விட்டபோதிலும், அது முழுவதும் செல்லாததாய்விடவில்லை. ஆனால், உயில் எழுதி வைத்தவர் இறந்துபோகும் காலத்தில் இருந்தவர்களின் பிரயோசனத்தைப் பொறுத்தமட்டில் செலாவணியாகத்தக்கதாயிருந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால், அப்படிப்பட்ட விஷயத்திலே, இனி பிறக்கப்போகும் நபர்களுக்குச் செய்யப்பட்ட ஆஸ்தி ஏற்பாடு இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 101-வது பிரிவில் நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாய் அடங்கியுள்ள விதியின் காரணமாகச் செல்லாமற்போகவில்லை. ஆனால், அந்த நபர்கள் அதை நேரில் ஏற்றுக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருந்தது காரணமாக அது செல்லாமற்போய்விட்டது. ஆனால், அந்தப்படி நபர்கள் சக்தியற்றவர்களாயிருப்பதனால் ஏற்படும் தடை மேற்படி மூன்று ஆக்டுகளினால் நீக்கிவிடப்பட்டது. அந்தப்படி நீக்கிவிட்டதனால் ஏற்பட்ட பலன் என்னவென்றால், மேலே கூறப்பட்ட விஷயத்தில் இனி பிறக்கபோகும் குழந்தைகளுக்குச் செய்யப்பட்ட ஆஸ்தி ஏற்பாடானது

நிரந்தரப் பிரயோசனம அடைவதற்கு விரோதமாய் 101-வது பிரிவில் அடங்கியுள்ள விதியின் காரணமாக இப்போது செல்லாததாய் விடும். ஏனென்றால், "21 வயது அடையும் குழந்தைகளுக்கு" தானம் செய்யப்பட்டிருப்பதால், அது அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் பொறுத்தமட்டில் செல்லாததாய்விடும். மேற்படி மூன்று ஆக்டுகள் ஜாரி செய்யப்படுவதற்குமுன், தானம் செய்த காலத்தில் பிறந்திராத யாதொரு நபர் அதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. ஆகவே, நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதி பிரயோகப்படுவதற்கு இடமே யிராது. மேற்படி மூன்று ஆக்டுகள் ஜாரி செய்யப்பட்ட பிறகு, தானம் செய்த காலத்தில் பிறந்திராத யாதொரு நபர் தானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடும். ஆனால், அவர் 21 வயது அடைந்த பிறகு அதை ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிருந்தால், அந்த ஆஸ்தி ஏற்பாடானது நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியை மீறினதாகிறது. ஆகவே, அது - 101-வது பிரிவில் அடங்கியிருக்கும் விதியின் காரணமாகச் செல்லாததாகிறது. அது காரணமாக, அதற்கு 102-வது பிரிவு பிரயோகப்பட்டு பிரஸ்தாப வகுப்பார் எல்லோரின் விஷயத்திலும் மேற்படி ஆஸ்தி ஏற்பாடு செல்லாமற்போகிறது. இ. அ. 52-ம் வால்யும் 310-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1925-ம் வருஷத்தில்) ஸௌந்தர ராஜனுக்கும் நடராஜனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் வாஸ்தவத்தில் மேற்சொல்லிய மாதிரியே நடந்திருக்கிறது. அதாவது, மேற்படி மூன்று ஆக்டுகள் ஜாரி செய்யப்படுவதற்குமுன் யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து, அவர்களில் சிலர் உயில் எழுதிவைத்தவர் இறந்துபோகையில் இருந்திராவிட்டால் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரின் விஷயத்திலும் அந்த ஆஸ்தி ஏற்பாடு செல்லாததாய்விடவில்லை. ஆனால், இந்த ஆக்டுகளின் காரணமாக ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆக்டுகள் ஜாரி செய்யப்பட்டபோது அப்படிப்பட்ட முடிவு ஏற்படுமென்று உத்தேசிக்கப்படவேயில்லை.

மேலே சொல்லியதை உத்தேசித்து, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 15-வது பிரிவை அடியிற்கண்டபடி மாற்ற உத்தேசித்திருக்கிறது :—

எந்த வகுப்பினரில் சிலர் 13, 14-வது பிரிவுகளுக்கு உட்பட்டிருக்கிறார்களோ அந்த வகுப்பினருக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

"15. சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்படுவதன்மேல் யாதொரு வகுப்பினர் பட்சத்திலே அதில் யாதொரு சுதந்தரம் உண்டுபண்ணப்பட்டு, 13-வது, 14-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளில் எதனிமித்தமாயாவது அந்த வகுப்பினரில் சிலருக்கு அப்படிப்பட்ட சுதந்தரம் தவறிப்போனால், அந்த சுதந்தரம் அந்த நபர்களுக்குமாத்திரம் தவறிப்போகிறதேயொழிய அந்த வகுப்பினர் சகலருக்கும் தவறிப்போவதில்லை."

இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 115-வது பிரிவையும் அடியிற்கண்டபடி திருத்த உத்தேசித்திருக்கிறது :

“ஒரு வகுப்பாருக்கு ஆஸ்தி வைக்கப்பட்டு, அவர்களில் சிலர் விஷயத்தில் 113-வது பிரிவிலாவது 114-வது பிரிவிலாவது கண்டிருக்கும் நிபந்தனைகளினிமித்தம் அது செல்லாததாயிருக்குமாகில், அப்படிப்பட்ட ஆஸ்தி ஏற்பாடானது அந்த நபர்களின் விஷயத்தில் மாத்திரம் செல்லாமற்போகுமேயொழிய அந்த வகுப்பைச் சேர்ந்த சகலரின் விஷயத்திலும் செல்லாமற்போகாது.”

113, 114-வது பிரிவுகளிற்கண்ட விதிகளுக்குள் வரும்படியான சிலர் சேர்ந்திருக்கிற ஒரு வகுப்பாருக்கு ஆஸ்தி வைப்பது.

மேற்கூறிய காரணங்களுக்காக நாங்கள் - மேற்படி மூன்று ஆக்டுகள், அதாவது, சென்னபட்டணம் 1914-ம்௵த்து 1-வது ஆக்ட், ஹிந்துக்கள் சொத்தை ஒருவகை செய்வதைக்குறித்த 1916-ம்௵த்து 15-வது ஆக்ட், சென்னபட்டணம் 1921-ம்௵த்து 8-வது ஆக்ட் ஆகிய இவைகளை ரத்துசெய்துவிடவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறோம்.

இந்த ஆக்டின் 15-வது பிரிவை மேலேகண்டபடி திருத்தினால், யாதொரு ட்ரான்ஸ்பர் தவறிப்போகும் விஷய சம்பந்தமாய் அதில் நிபந்தனை இனி இருக்காதாகையால், 16-வது பிரிவில் அந்தப் பிரிவைக் குறிப்பிடவேண்டியது அனாவசியமாகும். ஆகவே, அதை விட்டுவிடவேண்டும். ஆயினும், 13-வது, 14-வது பிரிவுகளில் அடங்கியிருக்கும் விதிகளின் காரணமாக, ட்ரான்ஸ்பரானது யாதொரு வகுப்பைச் சேர்ந்த சகலருக்கும் தவறிப்போகக்கூடிய யாதொரு விஷய சம்பந்தமாய் நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகும். யாதொரு சங்கம் அல்லது வகுப்பைச் சேர்ந்த நபர்களின் பிரயோசனத்துக்காக ஒரு தானத்துக்குப்பிறகு செய்யப்பட்ட மற்றொரு தானமானது முந்தி செய்யப்பட்ட தானம் அமுலுக்கு வந்த பிறகு அமுலுக்கு வரவேண்டுமென்று உத்தேசிக்கப்படுகிறபட்சத்திலே, மேற்சொல்லிய சந்தர்ப்பம் வாய்க்கும். ஆனால், முந்திய தானம் தவறிப்போகிறது. அப்படிப்பட்ட விஷயத்திலே, அந்த வகுப்பைச் சேர்ந்த நபர்களின் பிரயோசனத்துக்காக முந்தி செய்யப்பட்ட தானமானது 13-வது, 14-வது பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் காரணமாகத் தவறிப்போகும்பட்சத்தில், அதன்மேல் செய்யப்பட்ட தானமும் தவறிப்போகிறது. இந்த அம்சத்தை ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு, 16-வது பிரிவை அடியிற்கண்டபடி திருத்த வேண்டும்:— பகுதி 9. பிரிவு 16.

“16. யாதொரு நபரின் அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களின் பிரயோசனத்துக்காக உண்டுபண்ணப்பட்ட சுதந்தரமானது 13-வது, 14-வது பிரிவுகளில் அடங்கியிருக்கும் விதிகளில் எதன் காரணமாகவாயினும் அப்படிப்பட்ட நபரின் விஷயத்திலாகிலும் அப்படிப்பட்ட வகுப்பு முழுவதன் விஷயத்திலாகிலும் தவறிப்போனால், அதே விவகாரத்தில் உண்டுபண்ணப்பட்டு ஷை முன்னிட்ட சுதந்தரம் தவறிப்போன பிறகாவது தவறிப்போவதன்மேலாவது செல்லும்படி உத்தேசிக்கப்பட்டிருக்கும் யாதொரு சுதந்தரமும் தவறிப்போகிறது.”

14-வது, 16-வது பிரிவுகளில் அடங்கியிருக்கும் நிர்ப்பந்தங்களும் (வரும்படியைச்) சேர்த்துவைப்பது சம்பந்தமாயுள்ள நிர்ப்பந்தங்களும் தருமங்களுக்குப் பிரயோகப்படக்கூடாது. ஆகவே, பகுதி 9-தொடர்ச்சி. பிரிவு 17.

சேர்த்துவைக்கும் விஷயங்களைப்பற்றிச் சொல்லும் பிரிவானது 16-வது பிரிவுக்குப் பிறகு அடுத்தாற்போல் வரவேண்டுமென்றும் அது 17-வது என்று இலக்கமிடப்படவேண்டுமென்றும், தருமங்களைப்பற்றிச் சொல்வதாய் 17-வது என்று இப்போது இலக்கமிடப்பட்டிருக்கும் பிரிவுக்கு 18-வது என்று இலக்கமிடவேண்டுமென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம். சேர்த்துவைக்கும்படி செய்யப்பட்ட ஒரு கட்டளையானது நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியை மீறினதாயிருந்தபோதிலும், இந்தியாவிலே ஹிந்துமத சம்பந்தமான இனங்களின் விஷயத்திலும் மகம்மதிய மதசம்பந்தமான இனங்களின் விஷயத்திலும் அது சட்டப்படி செல்லத்தக்கதாக பாவிக்கப்பட்டிருக்கிறது (இ. லா. ரி., கல்கத்தா 34-ம் வால்யும் 5-வது பக்கம், க. லா. ஜ. 23-ம் வால்யும் 241-வது பக்கம், சென்னபட்டணம் 34-ம் வால்யும் 12-வது பக்கம்).

பகுதி 9-தொடர்ச்சி. பிரிவு 18.

(வரும்படியைச்) சேர்த்துவைப்பதற்கு விரோதமாயுள்ள விதியைப்பற்றி 18-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட யாதொரு சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை ட்ரான்ஸ்பர் பெற்றவர் பெற்றுக்கொண்டு அனுபவிப்பதைத் தடுக்கும்பொருட்டு எவ்வளவு காலம் அதைச் சேர்த்துவைக்கும்படி கட்டளையிடக்கூடுமென்பது விஷயமாய் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தப்பிரிவின்படியும் இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 117-வது பிரிவின்படியும் சில விஷயங்களில் ஒரு வருஷகாலத்துக்கு மாத்திரமே சேர்த்துவைக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் தெல்லூஸன் ஆக்டின்படி இன்னும் நீண்ட காலம் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், சேர்த்துவைப்பது கூடாதென்று ஏற்படுத்தப்பட்ட நிர்ப்பந்தம் சில விஷயங்களில் பிரயோகப்படவே யில்லை. ஆகவே, கடன்களைச் செலுத்தவும் குழந்தைகளுக்காக நிதி ஏற்படுத்தவும் (வரும்படியைச்) சேர்த்துவைக்க மேற்படி ஆக்டின் பிரகாரம் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. சொத்தை நல்ல ஸ்திதியில் வைத்துவருவதற்காக (வரும்படியைச்) சேர்த்துவைக்கவும் இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தின்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது [(1891) சா. 2-ம் வால்யும், 13-வது பக்கம்]. சேர்த்துவைப்பதைக்குறித்த 1892-ம் வருஷத்து ஆக்டின்படியும் சொத்தைக் குறித்த 1922-ம் வருஷத்து ஆக்டின்படியும் தெல்லூஸன் ஆக்டில் ஏற்படுத்தப்பட்ட விதியுடன் பின்னும் சில விலக்குகள் சேர்க்கப்பட்டன. இந்த சட்டம் முழுவதும் சொத்தைக்குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 164 முதல் 166 வரையிலுள்ள பிரிவுகளில் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது (5-வது ஜார்ஜ் மகாராஜா அவர்களுடைய ஆளுகையின் 15-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 20-வது அத்தியாயம்).

இரண்டாவது இந்திய லா கம்மிஷன் என்னும் சட்ட விசாரணைச் சபையார் தங்களுடைய ரிபோர்ட்டில் குறிப்பிட்டிருப்பதாவது :—

" சேர்த்துவைக்கக்கூடாதென்று தடுக்கும் விதியின்விஷயத்தில், (3-வது ஜார்ஜ் மகாராஜா அவர்களுடைய ஆளுகையின் 39-ம், 40-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 98-வது அத்தியாயத்தில் அடங்கியுள்ள)

தெல்லூஸன் ஆக்டில் கண்டிருக்கும் வெகு தாராளமாயுள்ள விதிகள் மேலானவைகளென்று எங்களுக்குத் தோற்றுகிறது. ஏனென்றால், அந்த விதிகளின்படி 21 வருஷம் சேர்த்துவைக்கலாம். மேலும், கடனைச் செலுத்துவது சம்பந்தமாகவாவது மக்களுக்காக ஒரு பாகத்தை ஒதுக்கி வைப்பது சம்பந்தமாகவாவதுள்ள நிபந்தனைகளுக்கு அவைகளினால் பாதகம் ஏற்படுகிறதில்லை. ஆனால், தாயபாக ஆக்ட் 104-வது பிரிவில் அடங்கியுள்ளவிதி இப்போதைக்கு 14 வருஷ காலமாய் இருந்துவருகிறபடியால் மிஸ்டர் ஸ்டோக்ஸும் மிஸ்டர் வெஸ்டும் அதை மாற்றும்படி வற்புறுத்தவில்லை." ஆயினும், பெரிய ஜமீன்தாரி சொத்துக்களின் சந்தர்ப்பங்களைக் கவனிக்கும்போது மேற்படி நிவாரணைகள் அடிக்கடி அவசியமாயிருந்தனவென்று ஸர் சார்ல்ஸ் டர்னர் அபிப்பிராயப்பட்டார்.

இந்த ஆக்டின் 18-வது பிரிவாகிலும் (1925-ம் வருஷத்திய இந்து தேசத்து தாயபாக ஆக்டின் 117-வது பிரிவாகிய) 1865-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்டின் 104-வது பிரிவாகிலும் பிரயோகப்படாத விஷயங்களில், பின் வரும் விதி அனுசரிக்கப்பட்டது. அதாவது, சேர்த்துவைக்கும்படிச் செய்யப்படும் கட்டளையில் அதைப் பொறுத்தமட்டில் சட்ட விரோதமான தெதுவும் இராமலிருந்து, அந்தக் கட்டளையானது அதில் கண்டிருக்கும் திட்டங்களைப் பொறுத்தமட்டில் பொது விவகார தோரணைக்கு விரோதமாயிருக்கக்கூடிய அளவுக்கு நியாயமற்றதாகவாகிலும் யாதொரு சட்டவிரோதமான நோக்கத்தை நிறைவேற்றும் காரியத்துக்காக செய்யப்படாமலாகிலும் இருக்கும்பட்சத்தில், அந்தக் கட்டளையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே மேற்படி விதியாகும் (இ. லா. ரி., கல்கத்தா, 34-ம் வால்யும் 5-வது பக்கம்). இ. லா. ரி., கல்கத்தா 47-ம் வால்யும் 93-வது பக்கத்தில் கண்டிருக்கும் அடிக்குறிப்பில் ஒரு கேஸ் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதில் ஸர் லாரென்ஸ் ஜென்கின்ஸ் - இது விஷயமாய் இங்கிலாந்து தேசத்து நூலாசிரியர்களும் இந்தியாவின் நூலாசிரியர்களும் எழுதியிருப்பதைப் பரிசோதித்துப் பார்த்த பிறகு பின் வருமாறு குறிப்பிடுகிறார்:— "சேர்த்து வைக்கப்படும் தொகைகளை தானம் செய்வதுடன் சேர்த்துவைக்கும்படி கட்டளையிடுவது முக்கியாம்சத்தில் கெட்டதல்ல. ஹிந்து லாவைச் சேர்ந்த இதற்குச் சம்பந்தப்பட்டிராத வேறே யாதொரு விதிக்கு விரோதமாயிருந்தால் மாத்திரமே அந்தக் கட்டளை தவறிப்போகிறது . . . . . . இல்லாவிட்டால், சேர்த்துவைக்கும்படிச் செய்யும் உத்தரவானது பிரதிகூலமானதா யிருக்கக்கூடும். அதுகாரணமாக, அந்தக் கட்டளையானது யாதொரு நபருடைய சொத்தாய்விட்டதை அவர் அனுபவிக்காதபடி செய்வதற்காகச் செய்யும் பிரயத்தனமாகக் கொள்ளப்பட்டு செல்லாததாய்விடக்கூடும். ஆனால், நான் எடுத்துக் கூறியிருக்கும் தீர்மானங்களிலிருந்து ஏற்படுகிறபடி, சொத்திலிருந்து சேர்த்து வைக்கப்படும் தொகைகளைத் தம்முடைய சொந்த சொத்துடன் சேர்க்கவேண்டும் அல்லது அதன் பாகமாக்கவேண்டுமென்று கட்டளையிட உயில் எழுதிவைக்கும் யாதொரு ஹிந்துவுக்கு அதிகாரம்

இருந்திருக்கும்பட்சத்தில், அவர் அதை யாதொரு நபருக்குத் தானம் செய்து, அதே தானத்தின்படி அந்த நபர் உயில் எழுதிவைத்தவருடைய சொத்தின் பிரதம முக்கிய பாகத்துக்குப் பாத்தியதை உடையவராவதில் கஷ்டம் இருந்திருக்குமென்று தோற்றவில்லை. . . . . . . அப்படியானால், எந்தக் கால அளவுக்குள் சேர்த்து வைக்கும்படி கட்டளையிட்டால் அந்தக் கட்டளை சட்டப்படி செல்லத்தக்கதாகும்? பூரா சுதந்தரமும் அறுதியாய்ச் சங்கிரமிக்காதபடி எவ்வளவு காலம் நிறுத்திவைக்கக்கூடுமோ அந்தக் கால அளவுவரையிலாவது, எந்தக் கால அளவுக்குள் மேற்படி சொத்தின் முக்கிய பாகத்தைப் பராதீனப்படுத்தாதபடி செய்யக்கூடுமோ அல்லது அதன் போக்கையாகிலும் அது வேறொருவருக்கு ஒப்புவிக்கப்படுவதையாகிலும் உயில் எழுதிவைத்தவர் ஒருவகைப்படுத்தி மேல்விசாரணை செய்யக்கூடுமோ அந்தக் கால அளவுவரையிலாவது மேற்படி கட்டளை செல்லத்தக்கதா யிருக்கவேண்டுமென்று, கோட்பாட்டைப் பொறுத்தமட்டில் நான் அபிப்பிராயப்படுகிறேன்." சில நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு தொகைகளைச் சேர்த்துவைக்கும்படிக் கட்டளையிடலாமென்று இந்தத் தீர்மானங்களிலிருந்து ஏற்பட்டபோதிலும், திட்டமாயுள்ளதும் கோர்ட்டார் சுலபமாய் அனுசரிக்கக் கூடியதுமான விதி எதுவும் அந்தத் தீர்மானங்களின் மூலமாய் ஏற்படவில்லை. சேர்த்துவைப்பது சம்பந்தமான ஒரு திட்டம் இன்ன கால அளவுகளுக்கும் இன்ன நோக்கங்களுக்காகவும் செய்யப்பட்டால் அதைச் சட்டப்படி செல்லத்தக்கதாகக் கொள்ளவேண்டுமென்று இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தில் விதித்திருக்கிற மாதிரியே திட்டமாய் விதிப்பது விரும்பத்தக்கதாகும். ஆயினும், சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்டில் அடங்கியுள்ளபடி இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தை அப்படியே முழுவதும் அனுசரிப்பது கஷ்டமாகும். நான்கு கால அளவுகளுக்குள் சட்டப்படி செல்லத்தக்கவிதமாய்த் தொகை சேர்த்துவைக்கக் கட்டளையிடலாமென்று 164-வது பிரிவில் நிர்ணயித்திருக்கிறது; அந்தக் கால அளவுகள் எவையென்றால்:—

(a) கொடுப்பவரின் அல்லது ஏற்பாடு செய்பவரின் ஜீவித காலம்;

(b) கொடுத்தவர், ஏற்பாடு செய்தவர் அல்லது உயில் எழுதிவைத்தவர் இறந்துபோனதிலிருந்து 21 வருஷகாலம்;

(c) கொடுத்தவர், ஏற்பாடு செய்தவர் அல்லது உயில் எழுதிவைத்தவர் இறந்துபோகையில் ஜீவித்திருந்த அல்லது கர்ப்பத்திலிருந்த யாதொரு நபர் அல்லது நபர்கள் மாத்திரம் மைனராய் அல்லது முறையே மைனர்களாய் இருந்துவரும் காலம்;

(d) தொகைகளைச் சேர்த்துவைக்கும்படி கட்டளையிட்டிருக்கும் ஆதாரவிற்கண்ட வரையறைகளின்படி எந்த நபர் அல்லது நபர்கள் அந்த காலத்தில் பூர்த்தியான வயதடைந்திருந்தால் சேர்த்துவைக்கும்படி கட்டளையிடப்பட்ட வரும்படியைப் பெற பாத்தியதையுடையவரா யிருந்திருப்பாரோ அப்படிப்பட்ட யாதொரு நபர் அல்லது நபர்கள் மாத்திரம் மைனராய் அல்லது முறையே மைனர்களாய் இருந்துவரும் காலம்.

சேர்த்துவைப்பது சம்பந்தமான விதிகள் நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாயுள்ள விதியுடன் நெருக்கமாய்ச் சம்பந்தப்பட்டவையாகும் (மாடர்ன் ரியல் ப்ராபெர்ட்டி என்னும் விஷயத்தைக் குறித்து செஷைர் எழுதியுள்ள புஸ்தகத்தின் 482-வது பக்கம்; கன்டின்ஜென்ட் ரிமெய்ண்டர்ஸ் என்னும் விஷயத்தைக் குறித்து பெர்ன் எழுதியிருக்கும் புத்தகம் 537-வது பக்கம்). நிரந்தரப் பிரயோசனம் அடைவது சம்பந்தமாக இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் விதியின் உற்பத்தியைக் குறித்து சரித்திர பூர்வகமான வரலாறு இருக்கிறது. மேலும், அது இந்தியாவில் பூர்த்தியாய் அனுசரிக்கப்படவில்லை. இங்கிலாந்தில் வழங்கும் சட்டப்படி, பிரஸ்தாப சுதந்தரத்தை உண்டாக்கும் பத்திரமானது உயிலாவது வழங்கத்தொடங்கும் காலத்தில் உயிருடன் இருக்கிற அல்லது கர்ப்பத்தில் இருக்கிறயாதொரு நபரின் அல்லது பல நபர்களுக்குப் பின் உயிருடனிருப்பவரின் ஆயுள் காலமும் அந்தப்படி பெயர் குறிப்பிடப்பட்ட நபராவதுபெயர் குறிப்பிடப்பட்ட பல நபர்களுக்குப்பின் உயிருடனிருப்பவராவது இறந்துபோகும் கால முதல் 21 வருஷமும் சேர்ந்த கால அளவானது நிரந்தரப் பிரயோசனம் அடையும் கால அளவாகும் [Cl. and F., 1-ம் வால்யும் 372-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1833-ம் வருஷத்தில்) காடெல்லுக்கும் பாமருக்கும் நடந்த வியாஜ்ஜியம்]. உயிருடனிருக்கும் இரண்டு நபர்களுக்குள் செய்யப்படும் யாதொரு ட்ரான்ஸ்பர் சம்பந்தப்பட்டமட்டில், நிரந்தரப் பிரயோசனம் அடைவதற்கு விரோதமாய் இந்தியாவில் வழங்கிவரும் விதிகள் 13-வது, 14-வது பிரிவுகளில் அடங்கியிருக்கின்றன. யாதொரு சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டால், ட்ரான்ஸ்பர் செய்யப்படும் தேதியில் உயிருடனிருக்கும் ஒரு நபர் அல்லது பல நபர்களின் ஆயுள் காலத்துக்குப் பிறகும், அந்தக் காலம் கடந்துபோகும்போது யாதொரு நபர் உயிருடனிருந்து உண்டாக்கப்பட்ட சுதந்தரமானது அந்த நபர் பூரண வயது அடைவதன்மேல் அவருக்குச் சேரவேண்டியதாயிருந்தால் அவர் மைனராயிருக்கும் காலத்துக்குப் பிறகும் அமுலுக்கு வரவேண்டியதான ஒரு சுதந்தரம் 14-வது பிரிவின்படி அந்த ட்ரான்ஸ்பரினால் உண்டாகமாட்டாது. சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்டின் 164-வது பிரிவில் கண்டிருக்கும் கால அளவுகளை, 13-வது, 14-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குப் பாதகமில்லாமலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அப்படியே பூர்த்தியாய்ச் சேர்த்துக்கொள்ள முடியாது. ஆகவே, அடியிற்கண்ட கால அளவுகளில் மாத்திரமே சேர்த்துவைக்க அனுமதி கொடுப்பது விரும்பத்தக்கதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்:—

(1) ட்ரான்ஸ்பர் செய்கிறவரின் ஆயுள் காலம்; அல்லது,

(2) அதற்குப் பிறகு 18 வருஷகாலம்.

இந்தப்படி செய்தால், அர்த்தம் செய்வதில் கஷ்டம் எதுவும் ஏற்படமாட்டாது. ஆயினும், கடன்களைச் செலுத்துவது, குழந்தைகளுக்காக ஒரு பாகத்தை ஒதுக்கிவைப்பது, ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட சொத்தை மரமத்து பண்ணுவது ஆகிய இவைகளுக்கான நிபந்தனைகளுக்கு சம்பந்தப்பட்டவைகளைப்போல் நன்றாய் அங்கீகரிக்கப்

பட்ட சில சட்ட விலக்குகளை ஏற்றுக்கொள்வதும் விரும்பத்தக்க தென்று நாங்கள் நினைக்கிறோம். ஆகவே, 18-வது பிரிவை அப்பிர காரமே திருத்தவேண்டும்.

பகுதி 10. பிரிவு 39. யாதொரு அசையாப் பொருளிலிருந்து கிடைக்கும் லாபத்திலி ருந்து ஜீவனாம்சம் பெற பாத்தியதை உடையவர்களாகவோ அபி விருத்திக்காகவாவது விவாகத்துக்காகவாவது ஏற்பாடு செய்யப் பெற்றவர்களாகவோவுள்ள நபர்களைப் பாதுகாப்பதற்காக 39-வது பிரிவு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஷை உரிமை பலிக்காமல் போக வேண்டுமென்னும் உத்தேசத்துடன் பிரஸ்தாப சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்து ட்ரான்ஸ்பர் பெற்றவருக்கு அது சங்கதி தெரிவிக்கப்பட்டிருந்தால், அந்தப்படி ட்ரான்ஸ்பர் பெற்றவரின் மேல அந்த உரிமையை அமுலுக்குக் கொண்டுவரலாமென்று மேற் படி பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆகவே, ட்ரான்ஸ்பர் செய்தவருக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இருந்ததென்றும், அந்த உத்தேசம் இருப்பதாக ட்ரான்ஸ்பர் பெற்றவருக்குத் தெரிவிக்கப் பட்டதென்றும் ருஜு வேண்டுமெனக் கோர்ட்டார் எப்போதும் கேட்டிருக்கிறார்கள் (இ. லா. ரி. அலஹாபாத் 22-ம் வால்யூம் 226-வது பக்கம், அலஹாபாத் 24-ம் வால்யூம், 160-வது பக்கம்). ஷை பிரிவுடன் சேர்த்திருக்கும் திருஷ்டாந்தம் அந்தப் பிரிவுக்குப் பொ ருத்தமாயில்லை. மேலும், அதில் ட்ரான்ஸ்பர் செய்கிறவரின் உத் தேசத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலேகண்ட உத் தசம் மாத்திரம் இருப்பதாக அனுஷ்டானத்தில் ருஜு காட்டுவது அசாத்தியமாகும். பம். லா. ரி., 12-ம் வால்யூம் 1077-வது, 1078-வது பக்கங்களில் சொல்லியிருக்கிறபடி, அப்படிப்பட்ட ருஜு கொடுப்பது சாத்தியமாயிருக்கும்பொருட்டு, ஜீவனாம்சம் பெற பாத் தியதை பெற்றிருக்கும் நபர்களுடைய உரிமைகள் செல்லாதபடி செய்யவேண்டுமென்னும் மோசக் கருத்தை ட்ரான்ஸ்பர் செய்கிறவர் தெரிவித்திருக்கவேண்டும். மேலும், அவர் அந்தப்படி தெரிவித் திருப்பதை ட்ரான்ஸ்பர் பெறுகிறவர் கேட்டிருக்கவேண்டும். சொத்தை அஜாக்கிரதையாய்க் கைப்பற்றில் வைத்திருப்பவர்களிட மிருந்து ஜீவனாம்சம் பெற பாத்தியதை பெற்றிருக்கும் நபர்களையா வது அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறவர்களையா வது பாதுகாப்பது விரும்பத்தக்கதாகும். ஆகவே, இந்தப் பிரிவில் ட்ரான்ஸ்பர் செய்தவரின் உத்தேசத்தைப்பற்றி குறிப்பிடும் பாகத் தை விட்டுவிடுவது அவசியமாகும். அந்தப் பிரிவை அம்மாதிரியே திருத்தவேண்டும்.

பகுதி 11. பிரிவு 40. 11-வது பிரிவைப்பற்றி விவரித்துச் சொல்லும்போது 40-வது பிரிவைப்பற்றியும் முந்தியே விவரித்துச் சொல்லியிருக்கிறது.

பகுதி 12. பிரிவு 43. யாதொரு அசையாப்பொருளை ட்ரான்ஸ்பர் செய்ய தனக்கு அதிகாரமுண்டென்று தப்பாகத் தெரிவிக்கும் ஒரு நபரைப்பற்றி 43-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. அதற்கு அடிப்படையாயுள்ள கோட்பாடானது மோசடியாய்ச் சங்கதி தெரிவிக்கப்படும் விஷயத் துக்குங்கூட பிரயோகப்படும். வாஸ்தவத்திலே, மோசம் சம்பந்தப் பட்டிருந்தாலுஞ்சரி மோசம் சம்பந்தப்பட்டிராவிட்டாலுஞ்சரி, "தப்பாக" என்னும் வார்த்தையில் சங்கதி தெரிவிக்கும் சகல விஷ யங்களும் அடங்குவதாக அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது (இ.

லா. ரி., அலஹாபாத் 7-ம் வால்யும் 864-வது பக்கம், கல்கத்தா 20-ம் வால்யும் 296-வது பக்கம்). ஆயினும், "தப்பாக" என்னும் வார்த்தையுடன் "மோசடியாக" என்னும் வார்த்தையையும் உபயோகித்து அர்த்தத்தை ஸ்பஷ்டமாக்குவது அவசியமாகும்.

இந்தப் பிரிவில் இன்னொரு நிபந்தனேயும் கண்டிருக்கிறது. அதாவது, யாதொரு ட்ரான்ஸ்பர் செய்யத் தமக்கு அதிகாரம் இருக்கிறதென்று தப்பாகத் தெரிவித்து எந்த நபராவது செய்யும் ட்ரான்ஸ்பரானது ட்ரான்ஸ்பரைக் குறித்த கான்ட்ராக்ட் சென்றுகொண்டிருக்கும்போது எப்போதாகிலும் அந்தப் பொருளில் ஷை நபர் அடையும் யாதொரு சுதந்தரத்துக்கும் வியாபிக்கிறது. "பிற்பட்டு மறுக்கமுடியாதபடி ஒப்புக்கொண்டிருக்கும் யாதொரு விஷயத்துக்கு சொத்தின் மூலமாய் ஆதரவு கிடைப்பது" என்னும் கொள்கை அந்தப் பிரிவில் அடங்கியிருக்கிறது. "ட்ரான்ஸ்பரைக் குறித்த கான்ட்ராக்ட் சென்றுகொண்டிருக்கும்போது" என்னும் வார்த்தைகள் சரியாய் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர் இஷ்டப்பட்டால் ட்ரான்ஸ்பரை அமுலுக்குக் கொண்டுவரலாம் அல்லது கான்ட்ராக்டை மறுக்கலாம் என்று அந்த வார்த்தைகளினுல் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. இ.லா.ரி., சென்னபட்டணம் 18-ம் வால்யும் 492-வது பக்கத்தில் சென்னே ஹைகோர்ட்டார் - யாதொரு ட்ரான்ஸ்பரை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகத் தொடரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்திலே பிறப்பிக்கப்பட்ட டிக்ரியானது பூர்த்தியாய் சரிச் சொல்லப்படாதவரையில் ட்ரான்ஸ்பர் சம்பந்தமான கான்ட்ராக்ட் சென்றுகொண்டிருக்குமென்றும், அதுவரையில் ட்ரான்ஸ்பர் செய்தவர் பிரஸ்தாப சொத்தில் பிற்பட்டு அடையும் யாதொரு சுதந்தரத்தின் பிரயோசனத்தின் விஷயத்தில் பாத்தியதை கொண்டாட ட்ரான்ஸ்பர் பெற்றவர் அர்ஹராவாரென்றும் பொதுப்பட விதித்திருக்கிறார்கள். அந்த வியாஜ்ஜியத்தில் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின் ஷரத்துகளைக் கவனிக்கும்போது அந்தத் தீர்மானம் தப்பானதென்று சொல்லமுடியாதாயினும், மேலேகண்டபடி விதித்திருப்பது நியாயமென்று எங்களுக்குத் தோற்றவில்லை. யாதொரு விவகாரத்தைப் பூர்த்தி செய்யப்பட்ட ட்ரான்ஸ்பராகக் கொண்டு அதன்மேல் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டுவிட்டால், அந்த ட்ரான்ஸ்பரைக் குறித்த கான்ட்ராக்டானது டிக்ரியில் அடங்கிப்போயிருப்பதாகக் கொள்ளவேண்டும். அதன்மேல் புதிய சுதந்தரங்கள் அந்த டிக்ரியின்படி ஏற்படுகின்றனவேயொழிய ஷை கான்ட்ராக்டின் பிரகாரம் ஏற்படுவதில்லை.

சென்னே ஹைகோர்ட்டார் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைக் கவனிக்கும்பொருட்டு, ஷை பிரிவில் "ட்ரான்ஸ்பர் வியாபிக்கவேண்டும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட பாராவை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்; அதாவது :—

"ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவருக்கு ட்ரான்ஸ்பரின்படி ஏற்படும் சுதந்தரத்தை அமுலுக்குக் கொண்டுவர அவர் வியாஜ்ஜியம் தொடரும்பட்சத்தில், அந்த வியாஜ்ஜியத்திலே அப்பீல் செய்து

கொள்ளக்கூடாத டிக்ரி பிறப்பிக்கப்படுவதற்கு முன்னிட்டு எப்போதாவது அந்த சொத்தில் ட்ரான்ஸ்பர் செய்தவருக்குக் கிடைக்கக்கூடிய யாதொரு சுதந்தரத்தை அடையவேண்டுமென்று தாவா செய்ய ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவருக்குப் பாத்தியதை உண்டு; ஆனால், மேற்படி டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகு அந்தப்படி பாத்தியதை ஏற்படமாட்டாது."

பகுதி 13. பிரிவு 52. 'பைசலாகாமலிருக்கிற வியாஜ்ஜியம்' என்னும் கோட்பாட்டைப் பற்றி 52-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. அந்தப் பிரிவானது "ப்ரிடிஷ் இந்தியாவிலே . . . . அசையாப் பொருளிலுள்ள யாதொரு சுதந்தரம் குறித்தபடி நேராய் விவாதத்திலிருக்கிற வியாஜ்ஜியம் அல்லது விவகாரம் நடந்தேறி வந்துகொண்டிருக்கும் காலத்தில்" என்னும் வார்த்தைகளில் ஆரம்பிக்கிறது. "சொத்தைக் குறித்து வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் அந்த சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வது" என்பது ஓர் குறிப்பாகும். "நடந்தேறி வந்துகொண்டிருக்கும் காலத்தில்" என்னும் வார்த்தைகளைப் பொறுத்தமட்டில், ப்ளெய்ன்டைத் தாக்கல்செய்த பிறகு ஸம்மன் சேர்ப்பிக்கவாவது தம்முடைய வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டு டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகு அப்பீல் தாக்கல் செய்யவாவது வாதி ஏற்பாடு செய்திராவிட்டால் வியாஜ்ஜியம் நடந்தேறிவருவது என்னும் செயல் ஏற்பட்டிருப்பதாக பாவிக்கமுடியாதென்று கொள்ளப்பட்டிருக்கிறது (கல்கத்தா 18-ம் வால்யும் 188-வது, 195-வது பக்கங்கள்; கல்கத்தா 28-ம் வால்யும் 23-வது, 26-வது பக்கங்கள்). பம்பாயில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் பொருத்தமாயில்லே. அங்கே பொதுவாய்க் கொள்ளப்பட்டிருக்கும் அபிப்பிராயம் என்னவென்றால், டிக்ரியை நிறைவேற்ற நடவடிக்கை நடத்தாமலும் டிக்ரியில் அடங்கிய சொத்து பம்பாய் 37-ம் வால்யும் 621-வது பக்கத்தில் கண்டிருக்கிறபடி டிக்ரிக்குப் பிறகு நான்கு வருஷம் கழித்தாவது பம்பாய் 12-ம் வால்யும் 217-வது பக்கத்தில் கண்டிருக்கிறபடி டிக்ரியின் தேதிக்குப் பிறகு ஏழு வருஷம் கழித்த பிறகாவது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டுமிருந்தால், ட்ரான்ஸ்பரானது விவகாரம் பைசலாகாமலிருக்கையில் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லமுடியாது. பின்னே சொல்லப்பட்ட விஷயத்தில், பைசலாகாமலிருக்கும் வியாஜ்ஜியம் டிக்ரி பிறப்பித்தவோடு முடிவாய் விட்டதென்றுகூட கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். பம்பாய் 22-ம் வால்யும் 939-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் இந்த அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், அந்த விதி "பரிபாலன சம்பந்தமான வியாஜ்ஜியங்களிலும் யாதொரு கணக்குக்குச் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியங்களிலும் இவைபோன்ற இதர வியாஜ்ஜியங்களிலும் டிக்ரி பிறப்பிப்பது பிற்பட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதாகுமாகையால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களுக்குப்" பிரயோகப்படமாட்டாதென்று கொள்ளப்பட்டது. பம்பாய் 22-ம் வால்யும் 939-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியமானது கொதுவை சம்பந்தமான ஒரு வியாஜ்ஜியமாகும். விற்பனை செய்யும்படி டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகும் விற்பனையின் தேதிக்கு முன்னும் அந்த வியாஜ்ஜியத்திலே ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டது. லா.ரி., இ.அ., 15-ம் வால்யும் 97-வது பக்கத்திலே ஜுடிஷல் கம்மிட்டி என்

னும் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட W.R. 21-ம் வால்யும் 349-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தை அனுசரித்து ஷை ட்ரான்ஸ்பர் பைசலாகாமலிருக்கும் வியாஜ்ஜியமாகக் கொள்ளப்பட்டது.

"விவாதத்திலிருக்கிற" என்னும் வார்த்தையின் விஷயத்தில், பிரதிவாதிக்கு ஸம்மன் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தான் யாதொரு வியாஜ்ஜியமானது விவாதத்திலிருக்கிறதாகிறதென்று சில விஷயங்களில் கொள்ளப்பட்டது (கல்கத்தா 15-ம் வால்யும் 647-வது பக்கம்; கல்கத்தா 27-ம் வால்யும் 77-வது பக்கம்; அலஹாபாத் 21-ம் வால்யும் 408-வது பக்கம்). மேலும், சில விஷயங்களில் அது-எதிர்வாதம் செய்யத் தொடங்கினபோது விவாதத்திலிருக்கிறதாயிற்றென்று கொள்ளப்பட்டது. (கல்கத்தா 31-ம் வால்யும் 658-ம் பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியம்—இது பாகப்பிரிவினை சம்பந்தமான ஒரு வியாஜ்ஜியமாகும்). ஆனால், இ.அ. 34-ம் வால்யும் 102-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1907-ம் வருஷத்தில்) பையஸ் ஹுஸெய்ன்கானுக்கும் ப்ராக் நாராயணுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜுடிஷல் கம்மிட்டியாரால் செய்யப்பட்ட தீர்மானத்துக்குப் பிறகு ஷை தீர்மானங்கள் சரியான சட்டமாகா. ஏனென்றால், இந்தப் பிரிவின் வாஸ்தவமான அர்த்தத்தின்படி, வியாஜ்ஜிய மூலத்தையும் தன்மையையும் கவனிக்கும்போது விவாதத்திலிருக்கிறதாயுள்ள யாதொரு வியாஜ்ஜியமானது எதிர் கட்சிக்காரருக்கு ஸம்மன் சேர்ப்பிக்கப்பட்டாகிறவரையில் இந்தப் பிரிவின் தாற்பரியப்படி விவாதத்திலிருக்கிறதாகமாட்டாதென்று அபிப்பிராயப்படுவதற்கு ஆதாரமில்லையென்று மேற்படி வியாஜ்ஜியத்தில் கொள்ளப்பட்டது.

"நடந்தேறி வந்துகொண்டிருக்கும்", "விவாதத்திலிருக்கிற" என்னும் வார்த்தைகளை உபயோகித்திருப்பது காரணமாக உண்டாயிருக்கும் கஷ்டங்களை உத்தேசித்து, "நடந்தேறி வந்துகொண்டிருக்கையில்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "பைசலாகாமலிருக்கையில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டு, "விவாதத்திலிருக்கிற" என்னும் வார்த்தையை விட்டுவிட உத்தேசித்திருக்கிறது. மேலும், யாதொரு வியாஜ்ஜியம் அல்லது விவகாரம் பைசலாகாமலிருக்கும் நிலைமை எப்போது தொடங்குவதாகக் கருதப்படுமென்பதையும் எப்போது அது முடிவதாகக் கருதப்படுமென்பதையும் ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு விவரணம் ஒன்றைச் சேர்க்கவும் உத்தேசித்திருக்கிறது.

பிரஸ்தாப பிரிவில் "கூட்டாய் மோசக்கருத்துடன் கொண்டுவரப்படாததும்" என்னும் வார்த்தைகளைச் சேர்க்கவும் உத்தேசிக்கிறோம். ஏனென்றால், மோசக் கருத்துடன் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியம் வாஸ்தவத்தில் வியாஜ்ஜியமே அல்ல. ஆனால், அது வியாஜ்ஜியம் இருப்பதாக பாவனை காட்டுவதே யாகும் (பம்பாய் 6-ம் வால்யும் 703-வது பக்கம்; பம்பாய் 11-ம் வால்யும் 708-வது பக்கம்). மேலும், பைசலாகாமலிருக்கும் வியாஜ்ஜியம் என்னும் கொள்கை பிரயோகப்படவேண்டுமானால், வியாஜ்ஜியமானது தகுதியான விசாரணை அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டில் பைசலாகாமல் இருக்கவேண்டும். இந்த விஷயம் விவரணத்தில் ஸ்பஷ்டமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையிலே, மத்தியில் பிரவேசிப்பவரின்மேல் உத்தரவு பிறப்பிகசுப்படும் விஷயங்களை விவரணத்தில் சேர்ப்பது எங்களுக்குத் தகுதியாகத் தோற்றவில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட விஷயங்களில் 1908-ம்ஹஸ்த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 21-ம் அதிகாரத்தைச் சேர்ந்த 63-வது விதியின்படி வியாஜ்ஜிம் தொடருவதே தகுந்த பரிகாரமாகும். புனர்விசாரணை செய்யும் விஷயங்களையும் நாங்கள் விலக்கியிருக்கிறோம்.

'பைசலாகாமலிருக்கிற வியாஜ்ஜியம்' என்னும் கொள்கையைப் பிரயோகிப்பதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் நேரிடாதபடி செய்யும்பொருட்டு, இங்கிலாந்தில் வழங்கிவரும் வியாஜ்ஜியங்களை ரெஜிஸ்டர் செய்யும் முறையை இந்ததேசத்தில் ராஜதானிப்பட்டணங்களிலாவது அனுசரிக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. இது வாஸ்தவத்தில் பரிபாலன சம்பந்தமான பிரசினையாகும். மேலும், இது எங்களுடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்ட விஷயங்களைச் சேர்ந்ததல்ல.

பகுதி 14. பிரிவு 53. இந்தப் பிரிவைச் சேர்ந்த முதவாவது மூன்றுவது பாராக்கள் எலிஜபெத் மகாராணியவர்களுடைய ஆளுகையின் 13-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 5-வது அத்தியாயத்திலிருந்தும் ஷை மகாராணியவர்களுடைய ஆளுகையின் 27-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்திலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு சாஸனங்களும் ராஜதானிப்பட்டணங்களுக்குப் பிரயோகப்பட்டன. (W.R. 22-ம் வால்யும் 60-வது பக்கம்; சென்னபட்டணம் ஹை. கோ. ரி. 6-ம் வால்யும் 455-வது, 474-வது பக்கங்கள்; பம்பாய் 25-ம் வால்யும் 202-வது, 208-209-வது பக்கங்கள்). அவை அந்தப் பட்டணங்களுக்குப் பிரயோகப்பட்டமட்டில் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டினால் ரத்துசெய்யப்பட்டன. எலிஜபெத் மகாராணியவர்களுடைய ஆளுகையின் 13-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 5-வது அத்தியாயத்தில், கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் உத்தேசத்துடனே அவர்கள் பணம் பெற்றுக்கொள்வதில் தாமதம் உண்டுபண்ணும்படிச் செய்யும் உத்தேசத்துடனே செய்யப்படும் ட்ரான்ஸ்பர்களைப்பற்றிச் சொல்லியிருந்தது. பிற்பட்டு ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்களை மோசம் செய்யும் உத்தேசத்துடன் செய்யப்படும் ட்ரான்ஸ்பர்களைப்பற்றி எலிஜபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 27-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்தில் சொல்லியிருந்தது.

53-வது பிரிவின் முதல் பாராவில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. அவைகளில், பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்களுக்குச் சம்பந்தப்பட்ட முதல் பாகமானது எலிஜபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 27-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்தின் 2-வது பிரிவை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. கடன் கொடுத்தவர்களுக்குச் சம்பந்தப்பட்ட இரண்டாம் பாகமானது எலிஜபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 13-ம்ஹஸ்த்து ஸ்டாட்யூட் 5-வது அத்தியாயத்தின் 1-வது பாராவை அனு

சரித்து எழுதப்பட்டிருக்கிறது. 53-வது பிரிவின் இரண்டாம் பாரா வானது ஷை சாஸனங்கள் இரண்டில் எதிலும் கிடையாது. இவ்விரண்டு சாஸனங்களின்மேல் செய்யப்பட்ட தீர்மானங் களை ஆதாரமாகக்கொண்டு அந்தப் பாரா எழுதப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. மேற்படி பிரிவின் மூன்றும் பாராவானது - எலி ஜபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 13-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 5-வது அத்தியாயத்தின் 5-வது பிரிவையும் ஷை மஹாராணி யவர்களுடைய ஆளுகையின் 27-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்தின் 4-வது பிரிவையும் அனுசரித்து எழுதப்பட் டிருக்கிறது.

எலிஜபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 27-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்தின்மேல் இங்கிலாந்து தேசத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஸ்பஷ்டமாயிருக்கின்றன. அவை களின்படி, யதேச்சையாய் யாதொரு ட்ரான்ஸ்பர் செய்யப்பட் டிருந்து, அது பெறுமான ஐவேஜுக்காகப் பிற்பட்டு யாதொரு நப ருக்கு ஒப்படை செய்யப்பட்டால், யதேச்சையாய் ட்ரான்ஸ்பர் செய் ததில் வாஸ்தவத்தில் மோசம் இராவிட்டாலும், பைசலானதைக் குறித்துக் கிரயத்துக்கு வாங்கினவருக்குச் சங்கதி தெரிவிக்கப்பட்டி ருந்தபோதிலும் மேலேகண்டபடி ட்ரான்ஸ்பர் செய்ததைப் பிற் பட்டுக் கிரயத்துக்கு வாங்கினவர் தடுத்துவிடலாம்; ஸ்மித் என்பவ ரால் எழுதப்பட்ட பிரதான கேஸுகள் என்னும் புத்தகம் 12-ம் பதிப்பின் 1-ம் வால்யும 27-வது பக்கத்தைப் பார்க்கவும். நிலத்தை விற்பனை ஏற்பாடு செய்தவர் அந்த நிலத்தைப் பிற்பட்டு ஐவேஜுக் காக கிரயத்துக்கு வாங்கினவருக்கு ஒப்படை செய்தாரென்பதிலி ருந்து, எதேச்சையாய்ச் செய்யப்பட்ட ஒப்படையானது வாங்குகிற வரின் காரியம் நிறைவேறவொட்டாமல் செய்யும் உத்தேசத்துடன் செய்யப்பட்டதென்று ஊகிக்கப்பட்டது. "சொத்தைப் பெறுமான ஐவேஜுக்கு விற்பனை செய்வதனால், விற்பனை ஏற்பாடு செய்தவர் - முதலில் எதேச்சையாய்ச் செய்த ஒப்படையை முற்றிலும் மறுக்கி ருரென்பதும், விற்பனை செய்யத் தாம் உத்தேசித்திருப்பதாகக் காட் டுகிருரென்பதும், அது அவருக்கும் அவர் எந்த நபருக்கு ஒப்படை செய்தாரோ அவருக்கும் முடிவாய் விரோதமாயிருப்பதாகக்கொள்ள ப்படுமென்பதும், அப்படிப்பட்ட உத்தேசம் ஒப்படை செய்தபோது இருந்ததென்பதும், அந்த ஒப்படை கிரயத்துக்கு வாங்குகிறவரின் காரியம் நிறைவேருதிருக்கும்பொருட்டுச் செய்யப்பட்டதென்பதுமே மேற்சொல்லியபடி ஊகித்ததற்கு அடிப்படையான கோட்பாடாயி ருப்பதாகத் தெரியவருகிறது." மாஸ்டர் ஆவ் தி ரோல்ஸாய் இருந்த க்ரான்ட் என்பவர் சொன்னதாவது: "எதேச்சையாய் ஏற்பாடு செய்யும்போது வாஸ்தவத்தில் மோசம் செய்யும் எண்ணம் சிறிதும் இராமற்போனபோதிலும், எதேச்சையாய்ச் செய்யும் ஏற்பாடானது அந்த சாஸனம் (எலிஜபெத் மஹாராணி யவர்களுடைய ஆளுகை யின் 27-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 4-ம் அத்தியாயம்) பிரயோகப்ப டுவது காரணமாக மோசடியானதாய்க் கருதப்படுவதுமல்லாமல், பிற்பட்டுப் பெறுமான ஐவேஜுக்கு கிரயத்துக்கு வாங்கும்போது எதேச்சையாய் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட் டிருந்தாலுங்கூட கிரயத்துக்கு வாங்குகிறவரைப் பொறுத்த

மட்டில் செல்லாததுமாகுமென்று பாவிக்கலாம்.” ஆயினும், ஷை சாஸனத்தின் சொல்லமைப்பானது மேலே கண்டபடி அர்த்தம்பண்ணுவதற்கு இடம் கொடுத்ததென்றாவது, அந்த சாஸனத்தின் உத்தேசத்தை நோக்கும்போது ஷை சொல்லமைப்புக்கு அந்தப்படி அர்த்தம் பண்ணவேண்டியிருந்ததென்றாவது எண்ணுவது தமக்கு மிகவும் கஷ்டமாயிருந்ததென்று அவர் சொன்னார். ஏனென்றால், கிரயத்துக்கு வாங்கினவருக்குக் கிரயத்துக்கு வாங்குவதற்கு முந்தி ஏற்பாடாயிருப்பதாக சங்கதி தெரிவிக்கப்பட்டிருந்தால், அவரை எப்படி மோசம் செய்யக்கூடுமென்பது சுலபமாய்ப் புலப்படவில்லை.

W. R. 22-ம் வால்யும் 60-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1874-ம் ௵த்தில்) ஜுடாவுக்கும் அப்துலுக்கும் நடந்த வியாஜ்ஜியம் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் செலாவணியாகத் தொடங்குவதற்குமுன் தீர்மானிக்கப்பட்டது. இதில் சீவ் ஜஸ்டிஸாகிய கௌச் அவர்கள் இங்கிலாந்து தேசத்துத் தீர்மானங்களைப் பின்பற்றினர். கல்கத்தா 22-ம் வால்யும் 185-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1895-ம்௵த்தில்) ஜாஷுவாவுக்கும் ஸிம்லா அலையன்ஸ் பாங்குக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜட்ஜ் ஸேல் அவர்கள் - மேலே கண்ட கொள்கையைப் பின்பற்றி, பிரஸ்தாப பிரிவின் 2-வது பாராவில் “கொள்ளலாம்” என்னும் வார்த்தைக்கு “கொள்ளவேண்டும்” என்னும் வார்த்தைக்குச் சமமாக அர்த்தம் பண்ணவேண்டுமென்றும், யாதொரு அசையாப்பொருளை எதேச்சையாக ட்ரான்ஸ்பர் செய்திருந்து பிற்பட்டு அது ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டால், பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவருக்கு முந்திய ட்ரான்ஸ்பரைக்குறித்துச் சங்கதி தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவரைப் பொறுத்தமட்டில் எதேச்சையாய் ட்ரான்ஸ்பர் செய்தது செல்லமாட்டாதென்றும் அபிப்பிராயம் கொண்டார். ஜட்ஜ் ஸேல் அவர்கள் செய்த தீர்ப்பின்மேல் அப்பீல் செய்யப்பட்டது. ஆனால், அப்பீல் கோர்ட்டார் “கொள்ளலாம்” என்னும் வார்த்தையால் ஏற்பட்ட சட்ட விஷயத்தைப்பற்றிக் குறிப்பாய் ஆராய்ச்சி செய்யாமல், வேறே முகாந்தரங்களைக்கொண்டு ஷை தீர்ப்பை ஊர்ஜ்ஜிதப்படுத்தினார்கள். பம்பாய் லா. ரி. 7-ம் வால்யும் 267-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1905-ம்௵த்தில்) பாய் கூவர்பாய்க்கும் மஹம்மதுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் சீவ் ஜஸ்டிஸ் ஜென்கின்ஸ் அவர்கள் ஜட்ஜ் ஸேல் அவர்கள் கொண்ட அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவில்லை. கடன் கொடுத்தவர்களை மோசம் செய்யவேண்டுமென்னும் உத்தேசத்துடன் செய்யப்பட்ட ட்ரான்ஸ்பர்களின் விஷயத்தில், இரண்டாவது பாராவிலுள்ள “கொள்ளலாம்” என்னும் வார்த்தைக்கு அதன் வெளிப்படையான அர்த்தத்தை, அதாவது, 1872-ம்௵த்திய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்ட் 3-வது பாராவில் அதற்குள்ள அர்த்தத்தைக் கொடுக்கவேண்டுமென்று இந்தியாவிலுள்ள கோர்ட்டார் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்படும் முடிவு என்னவென்றால், “கொள்ளலாம்” என்னும் ஒரே வார்த்தைக்கு பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்களை மோசம் பண்ணுவதற்காகச் செய்யும்

ட்ரான்ஸ்பர்களின் விஷயத்தில் ஒரு அர்த்தம் இருப்பதும், கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் எண்ணத்துடனுவது அவர்கள் பணம் பெற்றுக்கொள்ளுவதில் தாமதம் உண்டுபண்ணும் எண்ணத்துடனுவது செய்யும் ட்ரான்ஸ்பர் களின் விஷயத்தில் வேறொரு அர்த்தம் இருப்பதுமேயாகும். மேலும், முந்தி எதேச்சையாய்ச் செய்யப்பட்ட ஒரு ட்ரான்ஸ்பர் விஷயமாயும் பிற்பட்டு ஐவேஜுக்காகச் செய்யப்பட்ட ட்ரான்ஸ்பர் விஷயமாயும் விவாதம் ஏற்பட்டிருக்கும் விஷயங்களுக்குப் பிரஸ்தாப பிரிவின் 3-வது பாரா பிரயோகப்படமாட்டாது. விஷயம் இப்படி இருக்கிறபடியால், இந்தப் பிரிவை இரண்டு பாகங்களாகப் பிரித்து, ஒன்று கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப் போகும்படிச் செய்யப்படும் ட்ரான்ஸ்பர்களுக்கே பிரயோகப்படும் படியும் மற்றொன்று பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்களை மோசம் செய்யும் உத்தேசத்துடன் செய்யப்படும் ட்ரான்ஸ்பர்களுக்குப் பிரயோகப்படும்படியும் செய்வது விரும்பத்தக்கதாகும். இவ்விரண்டு உட்பிரிவுகளையும் நாங்கள் இங்கிலாந்துதேசத்து சொத்தைக்குறித்த 1925-ம் வருஷத்து சட்டத்தின் முறையே 172, 173-வது பிரிவுகளின் போக்கை அனுசரித்து எழுதியிருக்கிறோம்.

53-வது பிரிவின் 2-ம் பாராவில் சாட்சிய சம்பந்தமான ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாதொரு அசையாப்பொருளை ட்ரான்ஸ்பர் செய்வதனாலே கடன்கொடுத்தவர்களை மோசம் செய்வதாகவோ தாமதம்பண்ணுவதாகவோ இருந்து அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் இலவசமாகச் செய்யப்பட்டால், அந்த ட்ரான்ஸ்பரானது- கடன்கொடுத்தவர்களின் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் உத்தேசத்துடனே அவர்கள் பணத்தைப் பெறுவதில் காலதாமதம் உண்டாகும்படிச் செய்யும் உத்தேசத்துடனே செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். "யாதொரு ட்ரான்ஸ்பர் செய்வதனால் கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதாயிருந்தாலும் அவர்கள் பணம் பெற்றுக்கொள்ளத் தாமதம் உண்டுபண்ணுவதாயிருந்தாலும்" என்னும் வார்த்தைகளினுல் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், எதேச்சையாய்ச் செய்யப்படும் ட்ரான்ஸ்பருக்கு எப்போது மேலேகண்ட பலன் ஏற்படுமென்பதைத் தீர்மானிப்பதற்காகக் கோர்ட்டார் இங்கிலாந்து தேசத்துத் தீர்மானங்களைப் பின்பற்றியிருக்கிறார்கள். ஆனால், இங்கிலாந்தில்கூட இதுசம்பந்தமான தீர்மானங்களின் போக்கு ஒரே மாதிரியாயில்லை. DeG. J. & S. 3-ம் வால்யும் 293-வது பக்கத்தில் கண்டிருக்கும் ஸ்பிரெட்டுக்கும் வில்லோஸுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் லார்ட் வெஸ்ட்பரி அவர்கள் தனித்தனியான இரண்டு விதிகள் ஏற்படுத்தினர்—அவைகளில் ஒன்று ட்ரான்ஸ்பர் தேதியில் உள்ள கடன் கொடுத்தவர்களுக்கும் மற்றொன்று பிற்பட்டு கடன் கொடுத்தவர்களுக்கும் சம்பந்தப்படுகிறது. கு. பெ. 2-ம் வால்யும் 508-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1900-ம் வருஷத்தில் நடந்த) வேன் - பாக்ஸ் என்னும் வியாஜ்ஜியத்தில் ஜட்ஜ் ரைட் அவர்கள் லார்ட் வெஸ்ட்பரி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது விதியை அனுசரித்தார். மேலும், கடன்களைக்

கொடுத்துவிடச் சக்தியுள்ளவராயிருக்கும் யாதொரு நபரால் நல்ல எண்ணத்துடன் எதேச்சையாய்ச் செய்யப்பட்ட ஏற்பாடானது பிற்பட்டுக் கடன் கொடுத்தவர்களுடைய பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதாகவோ அவர்கள் பணம் பெற்றுக்கொள்ள தாமதம் உண்டுபண்ணுவதாகவோ இருக்கிறதென்று சில வருஷங்களுக்குப் பிறகு ருஜுவாவதனாலேயே செல்லாததாய் விடமாட்டாதென்று அபிப்பிராயப்பட்டார். சா. அ. 5-ம் வால்யும் 538-வது பக்கத்தில் கண்டிருக்கும் ப்ரீமனுக்கும் போப்புக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், "யாதொரு காரியம் செய்ததனால் அவசியம் ஏற்படும் பலன் கடன் கொடுத்தவர்கள் பணம் பெற்றுக்கொள்வதில் தாமதம் உண்டுபண்ணுவதாகுமென்று பிரஸ்தாப சங்கதிகளிலிருந்து தெரிய வந்தால், அவர்கள் பணம் பெற்றுக்கொள்வதில் தாமதம் உண்டு பண்ண **வாஸ்தவத்தில்** யாதொரு உத்தேசம் இருந்ததென ருஜுப்படுத்துவது அவசியம்" அல்லவென்றும், அப்படிப்பட்ட விஷயங்களில் உத்தேசத்தைஊகித்தறிய **வேண்டு**மென்றும் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. சா. 2-ம் வால்யும் 360-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1902-ம் வருஷத்தில் நடந்த) ஹாலண்ட் என்னும் வியாஜ்ஜியத்தில் அப்பீல் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட்ட வியாஜ்ஜியமாகிய கு.பெ.டி. 17-ம் வால்யும் 290-வது பக்கத்தில் கண்டிருக்கும் எக்ஸ்பார்டி மெர்ஸர் (Ex parte Mercer) வியாஜ்ஜியத்தில் ஷை கோட்பாடு பிழையுள்ளதென்று கூறப்பட்டது.

இங்கிலாந்து தேசத்திலுள்ள கோர்ட்டுகளால் இப்போது சாதாரணமாய் அனுசரிக்கப்படும் கோட்பாடானது - Drew 4-ம் வால்யும் 632-ம் பக்கத்தில் கண்டிருக்கும் தாம்ஸனுக்கும் வெப்ஸ்டருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் கிண்டர்ஸ்லி, வி.ஸி. அவர்களால் ஏற்படுத்தப்பட்டதாகும். அந்தக் கோட்பாடு என்னவென்றால் :—

"எதேச்சையாய் எழுதப்பட்ட ஒரு பத்திரத்தை ரத்துசெய்வதற்காக, ஏற்பாடு செய்தவர் வாஸ்தவத்திலே **கடனிறுக்கச் சக்தியற்ற** நிலைமையில் இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கோட்பாடு என்னவென்றால் : கடன் கொடுத்தவர்களின் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் உத்தேசத்துடனாவது அவர்களுக்குத் தடங்கல் உண்டுபண்ணும் உத்தேசத்துடனாவது அவர்கள் பணம் பெறுவதைத் தாமதப்படுத்தும் உத்தேசத்துடனாவது யாதொரு சொத்தை ஒப்படை செய்தால் அது அந்தக் கடன்காரர்களைப் பொறுத்தமட்டில் செல்லமாட்டாதென்று ஆக்டின் சொல்லமைப்பிலிருந்து ஏற்படுகிறபடியால், குறித்த ஒவ்வொரு விஷயத்திலும் எல்லா சந்தர்ப்பங்களையும் நோக்கும்போது, தமக்குக் கடன் கொடுத்தவர்களின் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதாகிலும் அவர்களுக்குத் தடங்கல் உண்டுபண்ணுவதாகிலும் அவர்கள் பணம் பெறுவதைத் தாமதப்படுத்துவதாகிலும் ஏற்பாடு செய்தவருக்கு அந்தபபடி ஏற்பாடு செய்ததில் உத்தேசமாகுமென்னும் முடிவுக்குத் தாங்கள் வரக்கூடுமா என்று கோர்ட்டார் தீர்மானம் செய்யவேண்டியிருக்கிறது."

மேலேகண்டபடி சட்டத்தைக் குறிப்பிட்டிருப்பது சரியாகுமென்று அ.கே. 13-ம் வால்யும் 497-வது பக்கத்தில் கண்டிருக்கிற

காட்ப்ரேக்கும் போலுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜூடிஷல் கமிட்டி என்னும் நியாய விசாரணை சபையார் ஒப்புக்கொண்டார்கள். மறுபடியும் சா. 2-ம் வால்யும் 360-வது பக்கத்தில் கண்டிருக்கிற (1902-ம் வருஷத்தில் நடந்த) ஹாலண்ட் என்னும் வியாஜ்ஜியத்தில் யாதொரு ஒப்படை சாஸனத்தின்படி செல்லாததா என்று ஆலோசிக்கும்போது, கோர்ட்டார் ஒப்படைப்பத்திரம் எழுதி முடிக்கப்பட்டதைச் சார்ந்துள்ள சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் கவனித்து கடன் கொடுத்தவர்களின் பாத்தியதை அற்றுப்போகும் படிச் செய்யும் உத்தேசத்துடனும் அவர்கள் பணம் பெற்றுக்கொள்வதைத் தாமதப்படுத்தும் உத்தேசத்துடனும் வாஸ்தவத்தில் எழுதி முடிக்கப்பட்டதாவென பார்க்கவேண்டுமென்று அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். ஆகவே, 53-வது பிரிவைச் சேர்ந்த 2-வது பாராவை விட்டுவிடவும் உத்தேசத்தைப்பற்றிய பிரசினையைத் தீர்மானிக்கும் விஷயத்தில் சாட்சிய சம்பந்தமான சாதாரண விதிகளின் பிரகாரம் பிரவர்த்திக்கும்படி விட்டுவிடவும் உத்தேசித்திருக்கிறது.

ஐவேஜுக்காகப் பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுபவர்களை மோசம் செய்யும் உத்தேசத்துடன் செய்யப்படும் ட்ரான்ஸ்பர்களைப்பற்றி இனி பேசுவோம். பிற்பட்டு ஐவேஜுக்காகக் கிரயத்துக்கு வாங்குகிறவர்களைப் பொறுத்தமட்டில், அசையாப்பொருளை எதேச்சையாய் ஒப்படை செய்யும் ஒவ்வொரு விஷயமும் செல்லமாட்டாதென்று இங்கிலாந்து தேசத்தில் சில வியாஜ்ஜியங்கள் மூலமாகத் தீர்மானிக்கப்பட்டது. அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களை நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். மேலேகண்டபடி இந்த தீர்மானங்கள் ஜட்ஜ் ஸேல் அவர்களால் அனுசரிக்கப்பட்டன. ஆனால், இங்கிலாந்துதேசத்துச் சட்டமானது (விக்டோரியா மஹாராணி அவர்களுடைய ஆளுகையின் 56, 57-வது வருஷத்து ஸ்டாட்யூட் 21-வது அத்தியாயமாகிய) எதேச்சையான ஒப்படைகளைக்குறித்த 1893-ம் வருஷத்து ஆக்ட் 2-வது பிரிவினால் மாற்றப்பட்டது. அந்த மாறுதலில், எதேச்சையான ஒப்படையானது நல்ல எண்ணத்துடனும் மோசமான உத்தேசம் எதுவும் இல்லாமலும் செய்யப்பட்டால் அதை, பிற்பட்டு ஐவேஜுக்காக எவராவது கிரயத்துக்கு வாங்கினது காரணமாக எலிஜபெத் மஹாராணி அவர்களுடைய ஆளுகையின் 27-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாத்தின் தாற்பரியப்படி மோசடியானதாகக் கருதக்கூடாதென்று நிபந்தனை கண்டிருந்தது. எதேச்சையான ஒப்படைகளைக்குறித்த ஆக்டின் 2-வது பிரிவானது - இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் 1925-ம் வருஷத்திய சொத்தைக் குறித்த ஆக்டினால் ரத்துசெய்யப்பட்டு, அந்த ஆக்ட் 173-வது பிரிவில் மீண்டும் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. அதே மாதிரியான நிபந்தனை ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். அப்பிரகாரமே (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஏற்கனவே கண்டிருக்கும் காரணங்களுக்காக 53-வது பிரிவின் 3-வது பாராவை (1) குறிப்பிட்ட புதிய உட்பிரிவில் சேர்த்திருக்கிறோம்.

(1) குறிப்பிட்ட உட்பிரிவு இப்போது பிரயோகப்படுவதைக் காட்டிலும் இன்னும் விஸ்தாரமாய்ப் பிரயோகப்படும்படிச் செய்யும் பொருட்டு, இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் 1925-ம் ௵த்திய சொத்தைக் குறித்த ஆக்ட் 172-வது பிரிவில் நிபந்தனை ஏற்படுத்தியிருப்பதைப்போலவே, கடனிறுக்கச் சக்தியற்றிருப்பது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டத்துக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாதென்று நிபந்தனை கண்டிருக்கிறோம். ஆகவே, யாதொரு ஏதேச்சையான ட்ரான்ஸ்பர் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சரியானதாயிருந்தாலும், ராஜதானிப்பட்டணங்களில் (இன்ஸால்வென்ஸி) கடனிறுக்க சக்தியற்றிருப்பதைப்பற்றிய 1909-ம் ௵த்து ஆக்ட் 55-வது பிரிவிலும் 1920-ம் ௵த்து ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்ட் என்னும் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பவர்களைப்பற்றிய ப்ரொவின்ஷியல் ஆக்ட் 53-வது பிரிவிலும் சொல்லியிருக்கும் சந்தர்ப்பங்களில் நடத்தப்படும் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பது சம்பந்தமான நடவடிக்கைகளில் அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் செய்யாதபடி தடுக்கலாம். அம்மாதிரியே, யாதொரு ட்ரான்ஸ்பரானது-ட்ரான்ஸ்பர் செய்பவருடைய சகல சொத்தையும் குறித்த யாதொரு கடன்காரரின் அல்லது சில கடன்காரர்களின் பிரயோசனத்துக்காக ஒப்படை செய்ததாகிறதென்னும் காரணத்தினாலேயே, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செல்லாமற் போகவேண்டிய அவசியமில்லை [லா. ரி., சா. 4-ம் வால்யும் 622-வது, 626-வது பக்கங்களில் கண்டிருக்கும் (1869-ம் ௵த்தில்) ஆல்டனுக்கும் ஹாரிஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியம்]. ஆனால், அது-ராஜதானிப் பட்டணங்களில் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பதைப்பற்றிய ஆக்ட் 9-வது பிரிவின்படியும் ப்ரொவின்ஷயல் இன்ஸால்வென்ஸி ஆக்ட் என்னும் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பவர்களைப்பற்றிய ப்ரொவின்ஷியல் ஆக்ட் 6-வது பிரிவின்படியும் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பது சம்பந்தமான செய்கையாகக் கொள்ளப்படலாம், அல்லது ராஜதானிப் பட்டணங்களில் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பதைப்பற்றிய ஆக்ட் 56-வது பிரிவின் தாற்பரியப்படியும் ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்ட் 54-வது பிரிவின் தாற்பரியப்படியும் மோசம் செய்யும் உத்தேசத்துடன் ஒருவரை மற்றவர்களைக் காட்டிலும் முதன்மையாகக் கொள்வதாகக் கொள்ளப்பட்டு செல்லாமற்போகலாம்.

யாதொரு ட்ரான்ஸ்பர் கடன் கொடுத்தவர்களின் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் உத்தேசத்துடனாவது அவர்கள் பணம் பெறுவதைத் தாமதப்படுத்தும் உத்தேசத்துடனாவது செய்யப்பட்டதென்னும் முகாந்தரத்தைக்கொண்டு அதை ரத்து செய்வதற்கான வியாஜ்ஜியத்தை கடன் கொடுத்தவர்கள் எல்லோரின் சார்பிலும் கொண்டுவரவேண்டுமா, அல்லது கடன் கொடுத்தவர் எவராவது ஒருவருக்கு அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடர யோக்கியதை உண்டா என்பது விஷயமாய்ச் சிறிது அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. தீர்மானங்களின் போக்கானது பிரதிநிதித்துவ ஹோதாவில் வியாஜஜியம் தொடர்வதற்கு அனுகூலமாயிருக்கிறது. கல்கத்தா 34-ம் வால்யும் 999-வது பக்கத்திலும், பம்பாய் 16-ம் வால்யும் 1-வது பக்கத்திலும், பம்பாய் 27-ம் வால்யும் 322-வது பக்கத்தி

னும் கண்டிருக்கும் வியாஜ்ஜியங்களில், ஷை வியாஜ்ஜியம் கடன் கொடுத்தவர்கள் எல்லோரின் சார்பிலும் கொண்டுவரப்படவேண்டுமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. எலிஸபெத் மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 13-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 4-வது அத்தியாயத்தில் இதற்குப் பொருத்தமான பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானங்களும் மேற்படி அபிப்பிராயத்துடனேயே செய்யப்பட்டன. மேலும், அந்தப் பிரிவின்படி வாதியானவர் தம் சார்பிலும் இறந்துபோனவருடைய கடன் தீர்க்கப் பெற்றிராத மற்ற சகல கடன்காரர்கள் சார்பிலும் நடவடிக்கை நடத்தத் தொடங்கவேண்டுமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. DeG.M. & G. 6-ம் வால்யும் 95-வது பக்கத்தில் கண்டிருக்கும் 'ப்ரென்சுக்கும் ப்ரென்சுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தையும் Jac. 552-வது பக்கத்தில் கண்டிருக்கும் ரிச்சர்ட்ஸனுக்கும் ஸ்மால்வுடுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தையும் பார்க்கவும். ஆயினும், சென்னபட்டணம் 42-ம் வால்யும் 143-வது பக்கத்திலே கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில், கடன் கொடுத்தவர்களை மோசம் செய்யும் உத்தேசத்துடன் செய்யப்பட்ட ஒரு ட்ரான்ஸ்பரை விலக்குவதற்கான வியாஜ்ஜியத்தைக் கடன் கொடுத்தவர் ஒருவர் தொடரலாமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இந்த அபிப்பிராயத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியவில்லை. கல்கத்தா, பம்பாய் ஹைகோர்ட்டுகளால் அனுசரிக்கப்படும் முறையானது - ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 1-வது ஷெட்யூலின் D அனுபந்தத்தில் கண்டிருக்கும் 13-ம் நெ. நமூனாவுக்குப் பொருத்தமாயிருக்கிறது. மேலும், ஷை முறையானது-ட்ரான்ஸ்பர் பெறுகிறவர் வெவ்வேறு கடன்காரர்களால் கொண்டுவரப்படும் பற்பல வியாஜ்ஜியங்களுக்கு ஆளாக்கப்படக்கூடாதென்னும் உத்தமமான கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இந்த முறையைச் சட்டவாயிலாய் அங்கீகாரம் செய்வது விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம். டிக்ரி பெற்றவர் கடன் கொடுத்தவராகமாட்டாரென்றும், ஆகவே ட்ரான்ஸ்பரை ரத்துசெய்யும்படி அவர் தம் சார்பிலேயே வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்றும் சென்னை ஹைகோர்ட்டார் தெரிவித்த அபிப்பிராயத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அப்பிரகாரமே நாங்கள் ஒரு புதிய பாராவைச் சேர்த்திருக்கிறோம்.

53-வது பிரிவின் முதல் பாராவில், "முன்னிட்டாவது பின்னிட்டாவது ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர்களை" என்னும் வார்த்தைகள் அடங்கியிருக்கின்றன. ஆனால், முன்னிட்டு ட்ரான்ஸ்பர் பெற்றவர் எந்த விஷயங்களில் குறைகூற நியாயமிருக்கக்கூடுமென்று தெரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது. ஏனென்றால், யாதொரு பூர்த்திசெய்யப்பட்ட ட்ரான்ஸ்பரானது-ட்ரான்ஸ்பர் பெற்றவரைப் பிணைப்படுத்தும் ஒரு விசேஷ ஒப்பந்தம் இராதபட்சத்தில், பிற்பட்டு செய்யப்படும் ஒரு ட்ரான்ஸ்பருக்குமுன் செலாவணியாகத்தக்கதாகும்; ஷை ஆக்ட் 48-வது பிரிவைப் பார்க்கவும். ஆகவே, ஷை பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவில் "முன்னிட்ட" என்னும் வார்த்தையை விட்டுவிட்டிருக்கிறோம்.

முதல் பாராவில், "யாதொரு அசையாப் பொருளில் சுதந்தரமுடைத்தாயிருக்கிற கூட்டுச் சொந்தக்காரர்களையாவது மற்றவர்

களையாவது” என்னும் வார்த்தைகள் அடங்கியிருக்கின்றன. சொத்தில் சுதந்தர முடைத்தாயிருக்கிற கூட்டுச் சொந்தக்காரராவது வேறே நபராவது ட்ரான்ஸ்பர் செய்கிறவர் செய்யும் எதேச்சையான ட்ரான்ஸ்பர் காரணமாக பாத்தியதை யற்றவராகக்கூடிய விஷயம் எதையும் நாங்கள் ஊகிக்கக்கூடவில்லை. இந்த வார்த்தைகள்-இவைகளுக்குப் பொருத்தமான இங்கிலாந்து தேசத்து சாஸனங்கள் எதிலும் இல்லை. அப்பிரகாரமே இந்த வார்த்தைகளை (2) குறிப்பிட்ட உட்பிரிவில் விட்டுவிட்டிருக்கிறோம்.

பகுதி 53 A பிரிவு.

15. அசையாப்பொருள்களை ட்ரான்ஸ்பர் செய்யும் விஷயத்தில் ரெஜிஸ்டர் செய்யும் முறையை உபயோகிப்பதைப்பற்றி, இப்போது சட்டப்படி ஒரு நடவடிக்கை முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கை முறையைக்காட்டிலும் கண்டிதமான ஒரு நடவடிக்கை முறையை நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். நாங்கள் பிரேரேபித்திருக்கும் மாறுதல்களினால் அசத்தியங்கள் செய்வதும் மோசம் செய்வதும் தடுக்கப்படாவிட்டாலும் அவை அதிகமாய்க் குறையக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், ரெஜிஸ்டர் செய்வது சம்பந்தமான சட்டத்தைக் கண்டிதமாய்ப் பிரயோகிக்கும்போது மோசம் செய்வது தடுக்கப்படுவதற்குப் பார்த்தியாக மோசம் செய்வதாகவே முடியக்கூடிய சந்தர்ப்பங்கள் அனுஷ்டானத்தில் நேரிடுகின்றன என்னும் விஷயத்தை நாங்கள் கவனிக்காமல் விட்டுவிட முடியாது. அம்மாதிரி சந்தர்ப்பங்கள் காரணமாக, சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாடு இங்கிலாந்து தேசத்தில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

(Car. II. 29-ம் வால்யும் 3-வது அத்தியாயத்தில் கண்ட மோசங்கள் சம்பந்தமான (1677-ம்௵த்து) சாஸனத்தின் 4-வது பிரிவில், யாதொரு நிலத்தின் சம்பந்தமான பொறுப்பு எவருக்காகிலும் ஏற்படுத்தப்பட்டால், அந்த நில சம்பந்தமான ஒரு உடன்படிக்கை எழுத்துமூலமானதாயும் அந்த நபரால் கையெழுத்து செய்யப்பட்டதாயும் இராதபட்சத்தில், அதை அனுசரித்த யாதொரு நடவடிக்கை அல்லது வியாஜ்ஜியம் நிற்கமாட்டாதென்று நிபந்தனை கண்டிருக்கிறது. நில சம்பந்தமாக வாய்மொழியாய்ச் செய்யப்பட்ட உடன்படிக்கையானது ஒரு கட்சிக்காரரால் சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டிருந்தபோதிலும் குறித்தபடி அதை நிறைவேற்றும்படி மற்றொரு கட்சிக்காரர்மேல் அவர் வியாஜ்ஜியம் தொடர முடியாத விஷயங்களில், ஷை நிபந்தனையைக் கண்டிப்பாய்ப் பிரயோகித்தது காரணமாக மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, பின்னே சொல்லப்பட்ட கட்சிக்காரர் முன்னே சொல்லப்பட்ட கட்சிக்காரரை மோசம் செய்வது சாத்தியமாயிருந்தது. அப்படிப்பட்ட விஷயங்களில், சிறிதுமட்டில் உடன்படிக்கையை நிறைவேற்றுவதனால் அந்த விஷயங்களுக்கு மோசங்களைக் குறித்த சாஸனம் பிரயோகப்படாமல் போகிறதென்னும் அபிப்பிராய முள்ளவர்களாய், தருமத்தை உத்தேசித்து கோர்ட்டார் பிரவேசித்து குறித்தபடி உடன்படிக்கையை நிறைவேற்றும்படி நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கோட்பாட்டிற்கு ஆதாரமாயுள்ள பொது முகாந்தரம் என்னவென்றால்

மோசம் செய்யாதபடி தடுப்பதேயாகும். ஒரு கட்சிக்காரர் யாதொரு உடன்படிக்கையில் தாம் செய்துமுடிக்கவேண்டிய பாகத்தை, மற்றொரு கட்சிக்காரர் செய்துமுடிக்கவேண்டிய பாகத்தை அவர் செய்துமுடிப்பாரென்னும் நம்பிக்கையின்மேல் செய்துமுடித்திருந்து, பின்னே சொல்லப்பட்டவர் அந்தப்படி செய்ய மறுத்தால், அப்பிரகாரம் மறுத்ததைப் பொறுத்துக்கொண்டு பிரதிகூலமடைவது முன்னே சொல்லப்பட்டவரை மோசம் செய்ததாகுமென்பது வெளிப்படையென்று சொல்லப்பட்டிருக்கிறது. (தரும நீதியைப்பற்றி ஸ்டோரி என்பவர் எழுதிய புத்தகம் 1045-வது பிரிவைப் பார்க்கவும்.) மேலும், "இம்மாதிரி விஷயங்களில் பிரயோகப்படவேண்டியதாய் மேற்சொல்லிய முகாந்தரத்தைக் காட்டிலும் இன்னும் பொதுவாயுள்ள முகாந்தரம் என்னவென்றால், யாதொரு காரியம் செய்யப்பட்டிருந்து அதன் காரணமாக உடன்படிக்கை பூர்த்தியாய் நிறைவேற்றப்பட்டாலன்றி மற்றப்படி, யாதொரு கட்சிக்காரரை மோசம் செய்வதான நிலைமை ஏற்படாவிட்டால், அப்படிப்பட்ட காரியம் எதையாகிலும் செய்வதை உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றினதாகக் கொள்ளக்கூடாதென்பதே." (ஷை புத்தகம் 1047-வது பிரிவு).

உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டைப் பிரயோகிப்பதில், அந்தக் கோட்பாட்டுக்குக் கோர்ட்டார் மிகவும் கண்டிதமான வரையறைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது வரையில் தீர்மானிக்கப்பட்ட வியாஜ்ஜியங்களிலிருந்து, அந்தக் கோட்பாட்டைப் பிரயோகிப்பதற்கு அடியிற்கண்ட பிரதான அம்சங்கள் அவசியமாயிருப்பதாகக் கொள்ளலாம்:—

(1) ட்ரான்ஸ்பர் பெற்றவருக்குச் சொத்து சுவாதீனம் செய்யப்பட்டிருக்கிறதென்பது;

(2) அவர் அந்தப்படி சுவாதீன மடைந்திருப்பது குறித்த ட்ரான்ஸ்பரின் மூலமாக ஏற்பட்டதேயொழிய வேறே எந்த சம்பந்தத்தினாலும் ஏற்பட்டதல்லவென்று சொல்லக்கூடுமென்பது;

(3) ட்ரான்ஸ்பர் செய்தவர் அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பரினின்றும் விலகிக்கொள்வது மோசம் செய்வதாகுமென்பது; மேலும்,

(4) ட்ரான்ஸ்பர் சம்பந்தமான ஷரத்துகளை நியாயமான அளவுக்கு நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளக்கூடுமென்பது.

இதற்கு விரோதமாக பிரபலமான அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தபோதிலும், இந்தக் கோட்பாடு இங்கிலாந்து தேசத்தில் இன்னும் அவசியமாயிருப்பதாகத் தெரியவருகிறது. அந்தக் கோட்பாடு அம்மாதிரியே இந்தியாவில் பிரயோகப்படக்கூடியதாயிருந்தபோதிலும், இங்கேயுள்ள நிலைமை சற்று வித்தியாசப்படுகிறது. உடன்படிக்கை எழுத்துமூலமா யிராதபட்சத்திலே, இங்கிலாந்து தேசத்தில் மோசங்களைப்பற்றிய சாஸனமானது வியாஜ்ஜியம் தொடருவதற்காவது நடவடிக்கை நடத்துவதற்காவது தடையாயிருக்கிறது. இந்தியாவிலோ ட்ரான்ஸ்பர் சட்டப்படி செல்லத்தக்கதாயிருப்பதற்கு ரெஜிஸ்டர் செய்வது அவசியமாகும். இப்படிப்பட்ட வித்தியாசம் இருந்தபோதிலும், மோசம் செய்யாமல் தடுப்பது இவ்விரண்டு தேசங்களிலும் ஒரே மாதிரியாய் அவசியமாக இருக்கிறது.

ஆகவே, ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவு மூலமாய் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிராத விஷயங்களுக்கு இந்தியக் கோர்ட்டார் மேற்படி கோட்பாட்டைப் பிரயோகித்திருக்கிறார்கள். (இ. அ. 42-ம் வால்யும் 1-வது பக்கத்தில் கண்ட) மகம்மத் மூஸாவுக்கும் அகோர் குமார் கங்குலிக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் கௌரவம் பொருந்திய ப்ரிவி கௌன்ஸில் ஜட்ஜிகள் அடியிற்கண்டபடி எழுதியிருக்கிறார்கள் :—

"இந்தியாவில் வழங்கும் சட்டத்திலாவது இங்கிலாந்தில் வழங்கும் சட்டத்திலாவது அதற்கு (உடன்படிக்கையைச் சிறிது மட்டில் நிறைவேற்றுவது சம்பந்தமான கோட்பாட்டுக்கு) பொருத்த மற்றதெதுவும் இருப்பதாக நாங்கள் எண்ணவில்லை. ஆனால் அதற்கு மாறாக, மேற்படி சட்டங்கள் ஒரே விதியை அனுசரித்தவைகளாயிருக்கின்றவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். (அ. கே. 8-ம் வால்யும் 467-வது பக்கத்தில் கண்டிருக்கும்) மாடிஸனுக்கும் ஆல்டெர்ஸனுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், லார்ட் ஸெல்போர்ன் அவர்கள் சொன்னதாவது, ... அந்தப்படி உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதை அனுசரித்துச் செய்யப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்திலே, ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் செய்யப்பட்ட காரியங்களின் பயனாய் ஏற்படும் தரும சம்பந்தமான பிரசினைகளை அனுசரித்துப் பிரதிவாதியின்மேல் வாஸ்தவத்தில் 'பொறுப்பு' ஏற்படுத்தப்படுத்தப்படுகிறதேயொழிய . . . . . ஒப்பந்தத்தையே அனுசரித்து ஏற்படுத்தப்படுவதில்லை. தரும சம்பந்தமான அப்படிப்பட்ட அம்சங்களை விலக்கிவிடும்பட்சத்தில், பிரஸ்தாப சாஸனத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்ததென்று எண்ண முடியாத விதமான அநீதி விளையும்."

மேற்படி ஜட்ஜிகள் பின்னும் என்ன சொன்னார்களென்றால் :—

"பிரஸ்தாப விஷயமானது ஒப்பந்த தசையைத் தாண்டிப் போய்விட்டிருக்கிறது. அது அடைந்திருக்கும் தசையின் காரணமாக ஏற்படும் தரும சம்பந்தமான தாவாக்களை ஒப்பந்தத்தை மதித்தாலன்றி மற்றப்படி அமுலுக்குக் கொண்டுவர முடியாது."

அவர்கள் பின்னும் சொல்லிக்கொண்டு போவதாவது —

"இந்த சித்தாந்தங்களுக்கு ஆதாரமாய் இங்கிலாந்தில் வழங்கும் சட்டத்திலிருந்தும் ஸ்காட்லண்டில் வழங்கும் சட்டத்திலிருந்தும் அனேக பிரமாணங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும், யாதொரு விவகாரமானது சட்ட சம்பந்தமான சில கிரமாசாரங்களின்படி செய்யப்பட்டிருந்து உடன்படிக்கையை நிறைவேற்றின பிறகு, அந்த கிரமாசாரங்கள் மேற்படி விவகாரம் முடிவாய்ச் செய்யப்பட்டிருப்பதை உணர்த்துகிறவைகளாயிருந்தால், அந்த விவகாரத்துக்கு தரும சம்பந்தமான தாவாவினால் ஆதாரம் ஏற்படமாட்டாதென்னும் சித்தாந்தம் கவனிக்கப்படவேயில்லை. மேற்படி பிரமாணங்களிலிருந்து, (Ves. 1-ம் வால்யும் 441-வது பக்கத்தில்) ஸர் ஜான் ஸ்ட்ரேஞ்ஜ் கூறியிருப்பதிலிருந்து லார்ட் ஸெல்போர்ன் மேற்கோளாகக் காட்டியுள்ள ஒரு விதியை இங்கே எடுத்துரைக்கலாம்: 'ஒப்புக்கொள்ளப்பட்டாலும் சிறிதுமட்டில் செய்துமுடிக்கப்பட்டா

லும் அது கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்துவதாகும். மேலும், அந்தப்படி கட்டுப்படுத்துவதாயிருக்கும் காரணத்தினால், தருமத்தை அனுசரித்துப் பின்னும் செய்துமுடிக்கப்பட்டதாகும்.' இந்தியாவில் வழங்கும் சட்டம் ஷை கொள்கைகளுக்குப் பொருத்தமற்றதாயிருக்கிறதென்று நாங்கள் நினைக்கவில்லை. அதற்கு மாருக, ஷை சட்டமானது அவைகளை அனுசரித்தேயிருக்கிறது."

இந்தக் கோட்பாடு இந்தியாவில் அனேக வியாஜ்ஜியங்களுக்குப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது; உதாரணமாக :—

க.வீ.நோ. 18-ம் வால்யும் 445-வது பக்கம் (1914).
க.வீ.நோ. 20-ம் வால்யும் 149-வது பக்கம் (1915).
க.வீ.நோ. 22-ம் வால்யும் 522-வது பக்கம் (1917).
க.வீ.நோ. 23-ம் வால்யும் 284-வது பக்கம் (1918).
க.வீ.நோ. 24-ம் வால்யும் 462-வது பக்கம் (1919).
க.வீ.நோ. 25-ம் வால்யும் 905-வது பக்கம் (1920).
பம்பாய் 41-ம் வால்யும் 438-வது பக்கம் (1917).
பம்பாய் 45-ம் வாலயும் 1170-வது பக்கம் (1921).
அலஹாபாத் 40-ம் வால்யும் 187-வது பக்கம் (1918).
சென்னை 46-ம் வால்யும் 919-வது பக்கம் (1920).
ரங்கூன் 1-ம் வால்யும் 419-வது பக்கம் (1923).
ரங்கூன் 3-ம் வால்யும் 243-வது பக்கம் (1925).

தரும ரீதியாயுள்ள இந்த கோட்பாட்டை விட்டுவிட்டு அதற்குப் பர்த்தியாக ரெஜிஸ்டர் செய்வது சம்பந்தமான சட்டத்தைக் கண்டிதமாய்ப் பிரயோகிப்பதற்குக் காலம் வந்துவிட்டதென்றும், அந்தப்படி செய்வதனால் பாதகம் உண்டாகமாட்டாதென்றும் நாங்கள் நினைக்கவில்லை. இந்த தேசத்தில் ட்ரான்ஸ்பர் பெற்றவர்கள் கல்வியறிவில்லாதவர்களாயிருந்து, அவர்கள் யாதொரு ஒப்பந்தத்தைச் சிறிதுமட்டில் நிறைவேற்றியிருக்கிற பட்சத்திலே, அவர்களுக்கு இங்கிலாந்திலுள்ள ட்ரான்ஸ்பர் பெற்றவர்களைவிட அதிக பாதுகாப்பு அவசியமாயிருக்கிறது. யாதொரு ட்ரான்ஸ்பர் பெற்றவர் ட்ரான்ஸ்பர் சட்டப்படி பூர்த்தி செய்யப்படுமென்னும் நம்பிக்கையுடன் சுவாதீனப்படுத்திக்கொண்டிருந்தால், ட்ரான்ஸ்பர் பெற்றவரை ஹத்துமீறி நடந்தவராக ட்ரான்ஸ்பர் செய்தவர் பாவிக்க விடுவது தருமமாகமாட்டாது. ஆகவே, உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவது சம்பந்தமான கோட்பாடு சட்டவாயிலாய் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அந்தப்படி அங்கீகரிக்கையில், ரெஜிஸ்டர் செய்வது சம்பந்தமான சட்டத்தின்படி நடந்துகொள்ளாமல் தப்பித்துக்கொள்ளாதபடியும், ஷை கோட்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதனால் "அசத்தியம் செய்வதற்கும் மோசம் பண்ணுவதற்கும்" இடம் உண்டாகாதபடியும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், அசத்தியம் செய்வதையும் மோசம் பண்ணுவதையும் தடுப்பதே ஷை கோட்பாட்டின் நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் நாங்கள் அடியிற்கண்டபடி பிரேரேபித்திருக்கிறோம் :—

(1) உடன்படிக்கையானது எழுத்துமூலாமா யிருக்கவேண்டியதுமல்லாமல், அதன் மூலமாய் யாசைப் பிணைப்படுத்த உத்தேசிக்

கப்படுகிறதோ அந்தக் கட்சிக்காரராலாவது அவருடைய ஏஜென்டாலாவது கையெழுத்து செய்யப்படவும் வேண்டும்;

(2) ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஒப்பந்தத்தைச் சிறிது மட்டில் நிறைவேற்றுகையில் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளவேண்டும்; அல்லது ஏற்கனவே சுவாதீனப்படுத்திக்கொண்டிருந்தால், சுவாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; மேலும், பின்னே சொல்லப்பட்ட விஷயத்தில், ஒப்பந்தத்தைப் பின்னும் நிறைவேற்றுவதற்காக யாதொரு காரியத்தைச் செய்யவேண்டும்;

(3) ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஷை கோட்பாட்டினால் பிரயோசனம் அடையவேண்டுமென்று கோரும்பட்சத்தில், அவர் உடன்படிக்கையில் எழுதியுள்ளபடி தாம் எவ்வளவு பாகத்தைச் செய்து முடிக்கவேண்டியிருக்கிறதோ அவ்வளவு பாகத்தைச் செய்துமுடிக்க வேண்டும் அல்லது செய்துமுடிக்க இஷ்டமுள்ளவராயிருக்கவேண்டும்;

(4) ஒப்பந்தம் சிறிதுமட்டில் செய்து முடிக்கப்பட்டபோது, விவகாரம் சட்டப்படி பூர்த்திசெய்யப்பட்டிராவிட்டாலும் பாதகமில்லாமலே, ஒப்பந்தத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்குள் ஒப்பந்தத்தின்படி சகல உரிமைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்படத்தக்கவைகளா யிருக்கவேண்டும்; மேலும்,

(5) ஐவேஜுக்காக ஒருவர் ட்ரான்ஸ்பர் பெற்றிருந்து அவருக்குப் பிரஸ்தாப ஒப்பந்தத்தைக் குறித்தாவது அதைச் சிறிதுமட்டில் நிறைவேற்றியிருப்பதைக் குறித்தாவது சங்கதி தெரிவிக்கப்பட்டிராதபட்சத்திலே, ஷை கோட்பாட்டைப் பிரயோகிப்பதனால் அவருடைய உரிமைகளுக்குப் பாதகம் உண்டாகக்கூடாது.

ஒப்பந்தத்தின் ஷரத்துகள் அதில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்தினாலுங்கூட, ட்ரான்ஸ்பரானது சட்டப்படி செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, அதாவது, எழுதிமுடித்து ரெஜிஸ்டர் செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, ட்ரான்ஸ்பர் பெற்றவருக்கு உடன்படிக்கை சிறிதுமட்டில் நிறைவேற்றப்படுவது காரணமாக, நல்ல பாத்தியதை ஏற்படமாட்டாதென்னும் விஷயத்தை ஸ்பஷ்டமாய்க் காட்டவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த அபிப்பிராயப்படி, ட்ரான்ஸ்பர் பெற்றவர் பூர்த்தியானதும் விற்பனை செய்யக்கூடியதுமான பாத்தியதையை அடையும்பொருட்டு ரெஜிஸ்டர் செய்வது அவசியமாகத்தான் இருக்கும். ஆனால், ரெஜிஸ்டர் செய்யப்படாதது காரணமாக பாத்தியதை எதுவும் போய்விட்டிராதபோதிலும், உடன்படிக்கை சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டது காரணமாக, தரும சம்பந்தமான பிரசினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைக் கோர்ட்டார் அங்கீகரித்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். மகம்மத் மூஸாவின் வியாஜ்ஜியத்தில் எடுத்துக்காட்டப்பட்டபடி, "யாதொரு ஒப்பந்தம் சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டால், அந்த விஷயமானது ஒப்பந்த தசையைத் தாண்டிப்போய்விட்டதாகிறது. அது அடைந்திருக்கும்

தசையின் காரணமாக ஏற்பட்டிருக்கும் தரும ரீதியான விஷயங்களை ஒப்பந்தம் மதிக்கப்பட்டாலன்றி மற்றப்படி அதாவது, விவகாரம் சட்டப்படி பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அமுலுக்குக் கொண்டுவர முடியாது". ஆகவே, எழுத்துமூலமாய்க் கண்டுள்ளபடி ஒப்பந்தத்தினால் ஏற்படும் சகல உரிமைகளும் பொறுப்புகளும் அமுலுக்குக் கொண்டுவரப்படத்தக்கவைகளா யிருக்க வேண்டுமேயொழிய அதற்கதிகமாய் எதுவும் அமுலுக்குக் கொண்டுவரப்படத்தக்கதா யிருக்கக்கூடாதென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். விற்பனை அல்லது கொதுவையின் விஷயத்தில் கஷ்டமேயில்லை. ஏனென்றால், விற்பனை செய்வதாக அல்லது கொதுவை வைப்பதாகச் செய்துகொள்ளும் ஒப்பந்தமானது எழுத்துமூலமா யிருக்கவேண்டியதுமில்லை, ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியதுமில்லை. யாதொரு குத்தகை சம்பந்தமான உடன்படிக்கையின்படி தற்காலம் சொத்தை ஒப்படை செய்யவேண்டியிருந்தால், அந்த உடன்படிக்கையின் விஷயமாகப் பிரசினைகள் ஏற்படலாம். அப்படிப்பட்ட உடன்படிக்கைகளை எழுதி ரெஜிஸ்டர்செய்வது அவசியமாயிருக்கிறது. அப்படிப்பட்ட உடன்படிக்கையை நிறைவேற்றுகையில் குத்தகை பெற்றவர் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டால், அவர் - குறித்த ஒரு காரியம் செய்துமுடிக்கப்படுவது சம்பந்தமாகக்கூட வியாஜ்ஜியம் தொடரமுடியாது. ஏனென்றால், உடன்படிக்கை ரெஜிஸ்டர் செய்யப்பட்டிராதபட்சத்தில், அவர் அதை ருஜுப்படுத்தமுடியாது (க. வீ. நோ. 26-ம் வால்யும் 329-வது பக்கத்தைப் பார்க்கவும்). இப்படிப்பட்ட நிலைமையில், குத்தகை விட்டவர் சுவாதீனம் அடைந்திருக்கும் குத்தகை பெற்றவரை ஹத்து மீறி நடந்தவராக பாவித்து, அவரை மோசஞ்செய்வது சாத்தியமாகிறது. குத்தகை பெற்று அந்தப்படி சுவாதீனம் அடைந்திருப்பவருக்குப் பரிகாரம் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய நிலைமையில் கோர்ட்டார் இருக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆகவே, அப்படிப்பட்ட விஷயத்திலே உடன்படிக்கை அடங்கியுள்ள எழுத்துமூலமான தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யாதிருந்தபோதிலுங்கூட, அதைக் கோர்ட்டில் ருஜு செய்யலாமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். பொய்ச்சாட்சியம் கொடுக்காமல் தடுக்கும்பொருட்டு, உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவது சம்பந்தமான கொள்கையைப் பிரயோகிக்க எத்தனப்படும்போது, உடன்படிக்கையானது சகல விஷயங்களிலும் எழுத்துமூலமாயிருப்பது விரும்பத்தக்கதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஸிவில் ஜஸ்டிஸ் கம்மிட்டியாரின் ரிபோர்ட் 35-ம் அத்தியாயத்தில் வெளியிடப்பட்டிருக்கும் முக்கியமான அபிப்பிராயத்தை நாங்கள் கவனிக்காமலில்லை. ரெஜிஸ்டர் செய்வது சம்பந்தமான சட்டத்தைக் கண்டிதமாய்ப் பிரயோகிக்கவேண்டுமென்றும், உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவது சம்பந்தமான கோட்பாட்டைத் தள்ளிவிடவேண்டுமென்றும் அந்தக் கம்மிட்டியார் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்தக் கம்மிட்டியார் இதுவிஷயமாய்க் குறிப்பிட்டிருக்கும் முக்கியமான ஆட்சேபனைகள் எவையென்றால்:—

(1) ஷை கோட்பாட்டை அங்கீகரிப்பது ரெஜிஸ்டர் செய்வது அவசியமென்பதற்குப் பொருத்தமாயில்லை. உடன்படிக்கையைச்

சிறிதுமட்டில் நிறைவேற்றுவதனால் பாத்தியதை ஏற்படமாட்டா தாகையால், ரெஜிஸ்டர் செய்யவேண்டிய அவசியம் இருந்துகொண்டுதானிருக்குமென்று நாங்கள் காட்டியிருக்கிறோம்.

(2) வாய்மொழியான உடன்படிக்கைகளை ருஜூ செய்யும்படி விட்டால் பொய்ச்சாட்சியம் ஏராளமாய்க் கொண்டுவரப்படும். இந்த ஆட்சேபனைக்குச் சமாதானம் சொல்லும்பொருட்டு, உடன்படிக்கை எழுத்துமூலமா யிருக்கவேண்டுமென்று நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம்.

(3) ஒவ்வொரு விஷயத்திலும் ரெஜிஸ்டர் செய்வது அவசியமென்று ஏற்படுத்திவிட்டால், ஜனங்களுக்கு அந்தப்படி செய்வது சாதாரணமாய்ப் போய்விடும். அப்போது, உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவது சம்பந்தமான கோட்பாட்டைப் பிரயோகிப்பதற்கு அவசியம் ஏற்படாது. தரும ரீதியாயுள்ள இந்த கோட்பாட்டைப் பிரயோகிப்பது அவசியமாயிராத நிலைமைக்குத் தேசம் இன்னும் வரவில்லையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

இது சம்பந்தமாய்ச் சில பாதுகாப்புகள் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறோம். அந்தப் பாதுகாப்புகளுடன் ஷை கோட்பாட்டைச் சட்ட மூலமாக அங்கீகரிக்க வேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். வாஸ்தவத்திலே நாங்கள் செய்யும் பிரேரேபணையானது - இந்தியாவிலுள்ள கோர்ட்டார் நியாயவிசாரணை முறையில் செய்திருக்கும் தீர்மானங்கள் மூலமாய் ஏற்கனவே அங்கிகரித்திருப்பதை மீறிப்போகவில்லை. யதேச்சையாய்ச் செய்யும் ட்ரான்ஸ்பர்களுக்கு உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் ஷை கோட்பாடு பிரயோகப்படக் கூடாதென்று பூர்த்தியாய் ஆலோசனை செய்தே நாங்கள் விலக்கியிருக்கிறோம். ஏனென்றால், யதேச்சையாய் ட்ரான்ஸ்பர் செய்பவர்களுக்கு அனுகூலமாக தரும ரீதியான தாவாக்கள் ஏற்படமாட்டாவென்பது வெளிப்படை.

யாதொரு விவகார சம்பந்தமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவு இராதபட்சத்தில், அதில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு இன்ன கால அளவுக்குள் தரும ரீதியாய்ப் பரிகாரம் செய்து கொடுக்கலாமென்பது விஷயமாய் இந்தியாவிலுள்ள கோர்ட்டார் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். குறித்தபடி நிறைவேற்றுவது சம்பந்தமாக எந்தக் கால அளவுக்குள் வியாஜ்ஜியம் தொடரலாமோ அந்தக் கால அளவுக்குள் மேலேகண்டபடி பரிகாரம் செய்துகொடுக்கலாமென்பது ஒரு அபிப்பிராயம். அந்தக் காலஅளவு கழிந்துபோய்விட்ட பிறகுகூட மேலே கண்டபடி பரிகாரம் செய்துகொடுக்கலாமென்பது மற்றொரு அபிப்பிராயம். 1877-ம் வருஷத்து குறித்த பரிகார ஆக்டில் 30 A பிரிவைப் புதிதாய்ச் சேர்த்துக்கொண்டு முதல் அபிப்பிராயத்தை அமுலுக்குக் கொண்டுவர நாங்கள் உத்தேசிக்கிறோம். ஆனால், சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டின் காரணமாக ஏற்படும் தரும ரீதியான தாவாக்களை அனுசரித்துச் செய்துகொடுக்கவேண்டியிருக்கும் பரிகாரத்தைச் சகல விஷயங்களிலும் செய்துகொடுப்ப.

தற்கு அது பெரிதும் சாதகமாயில்லை. ஏனென்றால், கெடுவு காலம் கழிந்துபோய்விட்ட பிறகுகூட உடன்படிக்கை சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டால், கட்சிக்காரர்கள் கெடுவுகாலத்துக்குள் ஒருவருக்கொருவர் என்ன சம்பந்தமுடையவர்களா யிருந்தார்களோ அதே சம்பந்தமுடையவர்களாயிருக்கிறார்கள். மேலும், அந்தக் கால அளவுக்குள் தரும ரீதியாய் ஏற்பட்ட தாவாக்களும் அப்படியே இருக்கின்றன. வாஸ்தவத்திலே உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுகையில் சொத்து எவ்வளவுக்கெவ்வளவு நீண்ட காலம் சுவாதீனத்தில் வைத்துக்கொள்ளப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தருமரீதியான தாவாக்கள் அதிகமாயிருக்கும். ஆகவே, செய்துகொடுக்கும் பரிகாரம் பலிதமாகக்கூடியதா யிருக்கும்பொருட்டு, ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஒப்பந்தத்தைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுகையில் சொத்தை சுவாதீனத்தில் வைத்திருக்கும் சகல காலங்களிலும் நாங்கள் பிரேரேபித்திருக்கும் இதர திட்டங்களுக்கு உட்பட்டும் ஷை. பரிகாரம் கிடைக்கக்கூடியதா யிருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். குறித்தபடி நிறைவேற்றுவதற்கான கெடுவுகாலம் கழிந்துபோய்விட்ட பிறகுங்கூட பரிகாரம் கிடைக்கத்தக்கதாயிருந்ததென்று சென்னபட்டணம் 46-ம் வால்யும் 919-வது பக்கத்திலும் க. வி. கோ. 23-ம் வால்யும் 284-வது பக்கத்திலும் கண்ட வியாஜ்ஜியங்களில் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். பரிகாரம் உண்மையில் கிடைக்கத்தக்கதா யிருக்கும்பொருட்டு, அந்தப் பரிகாரமானது விவகாரத்தில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களைப் பொறுத்தமட்டில் அப்படிப்பட்ட கெடுவுகாலம் கழிந்துபோன பிறகுகூட கிடைக்கத்தக்கதா யிருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில், இதே விஷயத்தைக் குறித்துச் சொல்லும் புதிய பிரிவு ஒன்றைக் குறித்த பரிகார ஆக்டில் அமைத்துக்கொள்வது அவசியமாகும். ஆகவே, குறித்த பரிகார ஆக்டில் 2-ம் அத்தியாயத்தின் முடிவில் 30 A பிரிவைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் புதிய 53 A பிரிவின் தாற்பரியப்படியும் குறித்த பரிகார ஆக்டின் 30 A பிரிவின் தாற்பரியப்படியும் உடன்படிக்கை சிறிதுமட்டில் நிறைவேற்றப்பட்டதென்பதை ருஜுப்படுத்துவதற்காக, ரெஜிஸ்டர் செய்யப்படாத எந்த தஸ்தவேஜுகளைச் சட்டப்படி ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறதோ அந்த தஸ்தவேஜுகளை ஏற்றுக்கொள்வதற்காக நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு, ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 49-வது பிரிவைத் திருத்தவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டைச் சட்டமூலமாய் அங்கீகரிப்பது மிகவும் முக்கியமான விஷயமாயிருப்பதால், நாங்கள் செய்யும் பற்பல சிபாரிசுகளுக்குள்ள காரணங்களைப் பின்னும் விவரமாய் விளக்குவது விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம்:—

(1) வாய்மொழியாய்ச் செய்துகொள்ளும் உடன்படிக்கையின் விஷயத்தில் வெகுசாய்க் கொடுக்கப்படக்கூடிய பொய்ச் சாட்சியத்

தைக் கொடுக்காமல் தடுக்கும்பொருட்டு, உடன்படிக்கை எழுத்து மூலமா யிருக்கவேண்டுமென்று நாங்கள் நிபந்தனை ஏற்படுத்துகிறோம்.

(2) ஒப்பந்தத்தைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுகையில் சொத்து சுவாதீனம் செய்துகொள்ளப்பட்டால், அந்தப்படி செய்ததும் எழுத்துமூலமாயுள்ள ஆதரவும் சேர்ந்து, உடன்படிக்கை காரணமாக சுவாதீனம் செய்துகொள்ளப்பட்டதென்று சொல்வதற்குப் போதுமான ஆதாரமா யிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஏற்கனவே சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் யாதொரு நபரின் விஷயத்தில், வேறு குத்தகை அல்லது வாடகைத் தொகையைச் செலுத்துவது அல்லது பணம் செலவழிப்பதைப்போல் சிறிதுமட்டில் நிறைவேற்றும்பொருட்டுச் செய்யப்படும் பின்னும் ஏதாவது காரியம் செய்யவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். ஏனென்றால், முற்றிலும் உடன்படிக்கையை அனுசரித்தே சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லமுடியாமல் இருக்கலாம்.

(3) உடன்படிக்கை மூலமாய் ஏற்படும் சுதந்தரங்களைத் தவிர வேறே சுதந்தரங்களை ட்ரான்ஸ்பர் செய்தவர் ட்ரான்ஸ்பர் பெற்றவர்மேல் செலுத்தக்கூடாதென்று தடுப்பதில், நாங்கள்-ட்ரான்ஸ்பர் செய்தவர் ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஆகிய இவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஒப்பந்தமூலமாய் ஏற்படும் சுதந்தரங்கள் ட்ரான்ஸ்பர் சட்டப்படி பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அமுலுக்குக் கொண்டுவரப்படத்தக்கவைகளா யிருக்கவேண்டுமென்பதை ஸ்பஷ்டமாய்க் காட்ட விரும்புகிறோம். ட்ரான்ஸ்பர் பெற்றவர் ஒப்பந்தத்தைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுகையில் சுவாதீனம் பெற்றிருந்தால், ட்ரான்ஸ்பர் செய்தவர் அவரை வெளிப்படுத்துவது இந்த நிபந்தனையின் மூலமாக தடுக்கப்படும். மேலும், உடன்படிக்கையின்படி ட்ரான்ஸ்பர் பெற்றவர் வாடகை அல்லது குத்தகைத் தொகை கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறாரென்று வைத்துக்கொள்வோம். அந்த உடன்படிக்கையை அனுசரித்து ட்ரான்ஸ்பர் பெற்றவரின்மேல் ட்ரான்ஸ்பர் செய்தவர் வியாஜ்ஜியம் தொடருவதும் ஷை நிபந்தனையின்படி சாத்தியமாயிருக்கும். ட்ரான்ஸ்பர் செய்தவருக்கும் ட்ரான்ஸ்பர் பெற்றவருக்கும் பரஸ்பரமாய் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிராதது காரணமாக ஹக்கு எதுவும் போயிராவிட்டாலும், அந்த உடன்படிக்கைகள் இந்த நிபந்தனையின் காரணமாகச் செலாவணியாகத் தக்கவையாயிருக்கும். ட்ரான்ஸ்பர் பெற்றவர் விற்பனை செய்யக்கூடிய ஹக்கைப் பெறும்பொருட்டு ட்ரான்ஸ்பர் தஸ்தவேஜைச் சட்டப்படி எழுதி ரெஜிஸ்டர்செய்து ட்ரான்ஸ்பரைப் பூர்த்திசெய்வது இந்த நிபந்தனையின்படி அவசியமாகும். இந்தப்படி செய்தால், ரெஜிஸ்டர் செய்வது சம்பந்தமான சட்டத்தினின்றும தப்பித்துக்கொள்ள முடியாது.

(4) உடன்படிக்கையைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவது காரணமாக ஏற்படும் தரும ரீதியான தாவாக்களினால் கோடிஸ் பெறுமல் ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெறுகிறவருடைய உரிமை

களுக்குப் பாதகம் ஏற்படாதிருக்கும்பொருட்டு நாங்கள் பின்னும் ஒரு பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறோம். இதனால் மறுபடியும் உண்டாகும் பயன் என்னவென்றால், ட்ரான்ஸ்பரைச் சட்டப்படி பூர்த்திசெய்வது அவசியமாய் ஏற்படுவதேயாகும். ஏனென்றால், இந்தப்படி இராதபட்சத்திலே, நோடிஸ் பெறுமல் ஐவேஜுக்காக பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவர் அந்த பிற்பட்ட ட்ரான்ஸ்பரின்படி தமக்குள்ள உரிமைகளை வற்புறுத்தும் விஷயத்தில், முதலில் ட்ரான்ஸ்பர் பெற்றவருக்கு ஆபத்தான நிலைமை ஏற்படும். பிற்பட்டு ட்ரான்ஸ்பர் பெறுகிறவருடைய தாவாக்கள் - சாதாரணமாய் சுவாதீனம் பெறுவதில் ஏற்கனவே சுவாதீனம் பெற்றிருக்கும் நபரின் உரிமையைப்பற்றி நோடிஸ் பெறுவதும் அடங்கும் என்னும் கோட்பாட்டுக்கு உட்பட்டவைகளாகவே இருக்கும். ஆகவே, ட்ரான்ஸ்பர் செய்தவர் ட்ரான்ஸ்பர் பெற்று சுவாதீனம் அடைந்திருக்கும் நபரை இரண்டாவது ட்ரான்ஸ்பர் செய்வது மூலமாய் மோசம் செய்வது சுலபமாயிருக்காது. முதலில் ட்ரான்ஸ்பர் பெற்று சுவாதீனம் அடைந்திருப்பவருடைய பாத்தியதை எதுவாயிருந்தாலுஞ் சரி அதைப்பற்றி இரண்டாவது ட்ரான்ஸ்பர் பெறுகிறவருக்கு நோடிஸ் கொடுக்கப்படும். இரண்டாவது ட்ரான்ஸ்பர் பெறுகிறவருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் பாதுகாப்பு மோசமானதல்ல. ஏனென்றால், அவர் - இந்த ஆக்டின் திருத்தப்பட்ட 3-வது பிரிவின்படி, வாஸ்தவத்தில் ஸ்வாதீனம் அடைந்திருப்பவருடைய பாத்தியதையைப்பற்றி நோடிஸ் பெற்றிருப்பதாகக் கருதப்படுவாரேயொழிய, முன்னிட்டு ட்ரான்ஸ்பர்பெற்று ஊகிக்கக்கூடிய பாத்தியதை மாத்திரமே உடையவராயுள்ள நபரின் பாத்தியதையைப்பற்றி நோடிஸ் பெற்றிருப்பதாகக் கருதப்படமாட்டார். ஆகவே, முதலில் ட்ரான்ஸ்பர் பெற்று ஊகிக்கக்கூடிய பாத்தியதை உடையவராயுள்ள நபர் தம்முடைய ட்ரான்ஸ்பரை ரெஜிஸ்டர் செய்வதுமூலமாக சட்டப்பிரகாரம் பூர்த்திசெய்வித்துக்கொண்டு அதன் வழியாய்த் தடுக்க முடியாத பாத்தியதையை அடைவது இனியும் அவசியமாயிருந்து வரும்.

விற்பனைகள்.

தானங்களின் விஷயத்தில் தவிர, இந்த ஆக்டில் விவகரிக்கப்பட்டிருக்கும் மற்ற சகல ட்ரான்ஸ்பர்களையும், அவைகளில் சம்பந்தப்பட்டிருக்கும் அசையாப்பொருளின் மதிப்பு 100 ரூபாயாகவும் அதற்கு மேற்பட்டும் இருந்தால் மாத்திரமே ரெஜிஸ்டர் செய்த ஆதாரவுகள் மூலமாகச் செய்யவேண்டியிருக்கிறது. அந்த ஆக்ட் ஜாரி செய்யப்படும்போது (அப்போது வங்காளத்து சீவ் ஜஸ்டிஸாயிருந்த) ஸர் ரிச்சர்ட் கார்த் - அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட சகல விவகாரங்களின் விஷயத்திலும் ரெஜிஸ்டர்செய்வது கட்டாயமாயிருக்கவேண்டுமென்று உறுதியாய் அபிப்பிராயம் எழுதிவைத்தார். ரெஜிஸ்டர்செய்வது சம்பந்தமான சட்டத்தை இப்போதிருப்பதைக்காட்டிலும் இன்னும் கடினமாக்கவேண்டுமென்றும், அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஆதாரவும் கட்டாயமாய் ரெஜிஸ்டர்செய்யப்படத்தக்கதா யிருக்கவேண்டுமென்றும் ஸிவில் ஜஸ்டிஸ் கம்மிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டின் பகுதி 16. பிரிவு 54.

35-ம் அத்தியாயத்தில் (447-வது பக்கத்திலே) பலமாய் வாதித்திருக்கிறார்கள். இந்த முக்கியமான மாறுதலை இப்போது செய்யவேண்டும். சகல வகைகளையும் சேர்ந்த அசையாப்பொருளின் விஷயத்திலாவது அவைகளிலுள்ள யாதொரு சுதந்தரத்தின் விஷயத்திலாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவுமூலமாக மாத்திரமே விற்பனை செய்யலாமென்று நிபந்தனை ஏற்படுத்தி சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் 54-வது பிரிவைத் திருத்தவேண்டும்.

54-வது பிரிவில் கைக்குவரத்தக்க அசையாப்பொருளுக்கும் கைக்குவராத அசையாப்பொருளுக்கும், 100 ரூபாய்க்குக் குறைந்த மதிப்புடைய சொத்துக்கும் 100 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புடைய சொத்துக்கு வித்தியாசம் காட்டியிருக்கிறது. அந்தப்படி வித்தியாசப்படுத்துவது அனாவசியமாய்விடுகிறது. மேலும், 3-வது பாராவும் அவசியமல்ல. 2-வது பாராவையோ அது சகல வகைகளையும் சேர்ந்த அசையாப்பொருளுக்குப் பிரயோகப்படும்படி திருத்தவேண்டியிருக்கிறது.

சொத்தை ஒப்புவிப்பது மூலமாகவே விற்பனை செய்வதை ஒழித்துவிட்டிருந்தபோதிலும், 'ஒப்புவிப்பதென்றால்' இன்னதென விவரித்துச் சொல்லும் பாராவை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், பிற்பட்ட பிரிவுகளில் சொத்தை ஒப்புவிப்பதைக் குறித்துச் சொல்லியிருக்கிறது.

பகுதி 17. பிரிவு 55. விற்பனை செய்யப்படும் பொருளில் ஏதாகிலும் முக்கியாம்சமான குறைவு இருப்பதாக விற்பனை செய்பவருக்குத் தெரிந்திருந்தால், அந்த சொத்தை வாங்குகிறவருக்கு ஷை குறைவைத் தெரிவிக்க விற்பனை செய்பவர் கடமைப்பட்டிருக்கிறாரென்று 55-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட பகுதியின் (a) அடையாளமிட்ட உட்பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. 'அந்தப் பொருளிலுள்ள முக்கியமான குறைவை' என்னும் சொற்றொடரில் விற்பனை செய்பவருடைய பாத்தியதையிலுள்ள யாதொரு குறைவும் அடங்குவதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது (இ. லா. ரி. பம்பாய் 20-ம் வால்யூம் 522-ம் பக்கம்). 'விற்பவருக்கு அதிலுள்ள பாத்தியதையிலாவது' என்னும் வார்த்தைகளை (1) குறிப்பிட்ட உட்பகுதியில் அமைத்துக்கொண்டு ஷை தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர நாங்கள் உத்தேசிக்கிறோம்.

விற்பனை செய்தவருக்குக் கிரயத் தொகையின் விஷயத்தில் உள்ள ஹக்கைக் கிரயத்துக்கு வாங்கினவருடைய சுவாதீனத்திலிருக்கும் சொத்தின்மேல் செலுத்தக்கூடுமென்று அதே பிரிவைச் சேர்ந்த 4-வது பகுதியின் (b) அடையாளமிட்ட உட்பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. இப்போதிருக்கிறபடி அந்த நிபந்தனை போதுமானதாயில்லை. ஏனென்றால், கிரயத்துக்கு வாங்கினவர் பொருளை வேறொருவரிடம் கொடுத்துவிட்டு, சுலபமாய் ஷை ஹக்கு அற்றுப்போகும்படிச் செய்யலாம். ஆகவே, கிரயத்துக்கு வாங்கினவர் வசத்தில் மாத்திரமே யல்லாமல், அவர் மூலமாய் பாத்தியதை கொண்டாடும் சகல நபர்களும் விற்பனையைப்பற்றி நோடிஸ் பெற்றிருந்தால் அவர்கள் வசத்திலுங்கூட இருக்கும் பொருளின்மேல் ஷை ஹக்கைச் செலுத்தலாமென்று நிபந்தனை ஏற்படுத்த உத்தே

சித்திருக்கிறது. மேலும், செலுத்தப்பட்டிராத கிரயத் தொகையின்மேல் வட்டி எந்த தேதியிலிருந்து செலுத்தப்படவேண்டுமென்பது விஷயமாய் இந்தப் பகுதியில் ஒன்றும் சொல்லப்படவில்லை. கிரயத்துக்கு வாங்கினவர் எந்த தேதியிலிருந்து சொத்தின் சுவாதீனம் அடைகிருரோ அந்தத் தேதியிலிருந்து வட்டி செலுத்தப்படுவது நியாயமெனத் தோற்றுகிறது.

அதே பிரிவைச் சேர்ந்த 6-வது பகுதியின் (b) அடையாளமிட்ட உட்பகுதியில் கிரயத்துக்கு வாங்குகிறவரின் ஹக்கைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. மேலும், விற்பனை செய்தவர்மேலும் தொகை செலுத்தப்பட்டதைப்பற்றி நோடிஸ் பெற்று அவர் மூலமாய் பாத்தியதை கொண்டாடும் இதர நபர்கள்மேலும் ஷெ ஹக்கைச் செலுத்தலாமென்று அந்த உட்பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. அல்லாமலும், கிரயத்தொகை செலுத்தப்பட்டதாக விற்பனை செய்தவர்மூலமாய் பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபருக்கு நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தால் மாத்திரமே, கிரயத்துக்கு வாங்கினவருக்குள்ள ஹக்கை அவர்மேல் செலுத்தலாமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. இதனுல், ட்ரான்ஸ்பர் பெற்றவர்களும் விற்பனை செய்தவருடைய சட்டசம்மதமான பிரதிநிதிகளும் கிரயத்தொகை செலுத்தப்பட்டதைப்பற்றி தங்களுக்கு நோடிஸ் கிடைக்கவில்லையென்று வாதித்து, விற்பனை செய்தவர் பெற்றுக்கொண்ட தொகை விஷயமாயுள்ள யாதொரு பொறுப்பினின்றும் தப்பித்துக்கொள்வது சாத்தியமாயிருக்கிறது. விற்பனையைப்பற்றி நோடிஸ் பெற்றிருக்கும் மூன்ரும் நபர்களின்மேல் விற்பனை செய்தவருக்குள்ள ஹக்கை வரையறுப்பதற்குள்ள காரணங்கள் - பிரதமத்தில் விற்பனை செய்தவர்மூலமாய் பாத்தியதை கொண்டாடும் நபர்கள்மேல் கிரயத்துக்கு வாங்கினவருக்குள்ள ஹக்கின் விஷயத்தில் பிரயோகப்படுவதில்லை. ஆகவே, 6-வது பகுதியின் (b) குறிப்பிட்ட உட்பகுதியிலுள்ள "பணம் செலுத்தப்பட்டதைக் குறித்து நோடிஸ் பெற்றிருந்து" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

56-வது பிரிவானது "வரிசைக்கிரமப்படுத்துவது" என்னும் கோட்பாட்டை நிறைவேற்றுவதற்காக ஏற்பட்டிருப்பதாய்ப் பொருள்படுகிறது. யாதொரு விற்பனையின் விஷயத்தில், வரிசைக்கிரமப்படுத்துவதற்கான உரிமையானது "விற்பனை செய்பவருக்கு விரோதமாய்" கொடுக்கப்படுகிறது. அப்பிரகாரமே, கிரயத்துக்கு வாங்குகிறவருக்கு முன்னிட்ட கொதுவைதாரருக்கு விரோதமாக அப்படிப்பட்ட உரிமை எதுவும் இல்லையென்று சென்னபட்டணம், அலஹாபாத் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிருர்கள் (சென்னபட்டணம் 31-ம் வால்யும் 419-வது பக்கம், அலஹாபாத் 17-ம் வால்யும் 434-வது பக்கம்). பம்பாய் லா. ரி. 13-ம் வால்யும் 678-வது பக்கத்தில், பம்பாய் ஹைகோர்ட்டாரும் அதே கொள்கை உடையவர்களாய், 56-வது பிரிவு விற்பனை செய்பவருக்கும் அவரிடமிருந்து கிரயத்துக்கு வாங்குபவருக்கும் பிரயோகப்படுமேயொழிய, விற்பனை செய்பவரின் கொதுவைதாரருக்கும் கிரயத்துக்கு வாங்குபவருக்கும் பிரயோகப்படமாட்டாதென்று அபிப்பிராயம் கொண்டார்கள். 55-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட் பகுதி 18. பிரிவு 56.

பிரிவிற்கண்ட (g) அடையாளமிட்ட பகுதியின்படி, பிரஸ்தாப விஷயத்துக்கு விரோதமாக ஒப்பந்தம் எதுவும் இராவிட்டால், விற்பனைத் தேதியில் ஏற்பட்டுள்ள சகல சிக்குச்சிலுகுகளையும் தீர்த்துவிடுவது விற்பனை செய்பவரின் கடமையாகும். அனுஷ்டானத்திலே, கிரயத்துக்கு வாங்குகிறவருக்கு 56-வது பிரிவினால் பரிகாரம் எதுவும் ஏற்படுகிறதில்லை.

பிரஸ்தாப பிரிவானது - "இரண்டு சொத்துக்கள் பொதுவான பொறுப்புக்குட்பட்டதாயிருந்து" என்னும் வார்த்தைகளில் ஆரம்பிக்கிறது. ஆகவே, அந்தப் பிரிவில் இரண்டுக்கு மேற்பட்ட சொத்துக்கள் பொதுவான பொறுப்புக்குட்பட்டிருந்து அவைகளில் சில சொத்துக்களாகிலும் ஒரு சொத்தாகிலும் பிற்பட்டு விற்பனை செய்யப்படுகிற விஷயத்துக்குப் பிரயோகப்படும்படி நிபந்தனை கண்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட விஷயங்களுக்காக நிபந்தனை ஏற்படுத்தும் பொருட்டு, இந்தப் பிரிவைத் திருத்தி ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவதைக் குறித்துச் சொல்லியிருக்கும் 81-வது பிரிவைப்போல் இருக்கும்படிச் செய்ய உத்தேசிக்கிறோம்.

பகுதி 19. பிரிவு 58 (a).

2-வது பாராவிலுள்ள "ஏதாவது ஆதரவு எழுதிகொடுக்கப்பட்டால்" என்னும் வார்த்தைகள் இப்போது மிகையாயிருக்கின்றன. ஆகவே, அவைகளை விட்டுவிடவேண்டும்.

58-வது பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட உட்பிரிவில் அவதிக்கிரயக் கொதுவை இப்படிப்பட்டதென்று சொல்லியிருக்கிறது. அனேக விஷயங்களில் அப்படிப்பட்ட கொதுவைகளை, மீண்டும் கிரயத்துக்கு வாங்குவதாக ஷரத்து ஏற்படுத்திச் செய்யும் விற்பனைகளிலிருந்து வித்தியாசப்படுத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. 58-வது பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியினால் ஏற்படுகிறபடி, இவ்விரண்டு வகை விவகாரங்களுக்குமுள்ள வாஸ்தவமான வித்தியாசம் என்னவென்றால், அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்தில் விற்பனையானது வெளிக்கு மாத்திரம் விற்பனையாகத் தோன்றுகிறது; அறுதியான விற்பனையின் விஷயத்திலே அது வாஸ்தவமான விற்பனையாயிருக்கிறது. ஆயினும், விவகாரமானது வெளித்தோற்றமானதா வாஸ்தவமானதா என்பதை சம்பந்தப்பட்ட நபர்களின் உத்தேசத்தைக் கண்டறிவதனால்தான் நிச்சயிக்கமுடியும். சொத்திலிருந்து கிடைக்கும் ஆதாயத்துக்குக் கணக்கு சொல்லும் பொறுப்பிலிருந்தும் கொதுவைதாரருக்கு ஏற்பட்டிருக்கும் இதர பொறுப்புகளிலிருந்தும் தப்பித்துக்கொள்வதோடுகூட, விவசாயிகளின் நன்மைக்காகச் செய்யப்பட்டுள்ள சில பிரதேச சட்டங்களில் கண்ட நிபந்தனைகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ளும்பொருட்டும், சடன் கொடுத்தவர்கள் கழுனைவைப் பொறுத்தமட்டில் அறுதியான விற்பனையாயிருக்கும்படியான கொதுவையை ஏற்பாடு செய்துகொள்கிறார்கள். (இ. லா. ரி., அலஹாபாத் 22-ம் வால்யும் 149-வது பக்கத்தில் கண்ட) பால்கிஷென் தாஸுக்கும் லெக்கேக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ப்ரிவி கௌன்ஸிலார் தீர்மானம் செய்ததிலிருந்து, கட்சிக்காரர்களின் உத்தேசத்தைக் கண்டுபிடிக்க எவ்வித வெளிச்சாட்சியத்தையும் ஏற்றுக்கொள்ள கோர்ட்டாருக்கு அனுமதி கிடையாதென்பது ஸ்திரமாய்

ஏற்பட்ட விதியாக இருந்துவருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட உத்தேசத்தைப் பிரஸ்தாப விவகாரத்தை நிறைவேற்றுவதாகப் பொருள்படுகிற தஸ்தவேஜிலிருந்தே கண்டறியவேண்டும். இப்படிப்பட்ட விவகாரங்களினால் வியாஜ்ஜியங்கள் விசேஷமாய் அதிகரிப்பதற்கு இடம் உண்டாயிருக்கிறது. மேலும், யாதொரு விவகாரமானது கொதுவையா அல்லது அறுதியான விற்பனையா என்று நிச்சயிக்கும் காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வெவ்வேறு விதமான பிரமாணங்களையெல்லாம் கோர்ட்டார் எடுத்துக்கூறி அவைகளைப்பற்றி ஆலோசனை செய்வது கட்டாயமாயிருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் தடுக்கும்பொருட்டு, சட்டவாயிலாக பிரமாணம் ஒன்றை ஏற்படுத்தி அதைக்கொண்டு உத்தேசத்தைக் கண்டறிவது விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆகவே, அவதிக்கிரயம் செய்வதற்குப் பிரயோகப்படுவதாகவோ அவதிக்கிரயம் செய்வதாய்ப் பொருள்படுவதாகவோவுள்ள தஸ்தவேஜில் அது சம்பந்தமான ஷரத்து சேர்க்கப்பட்டிருந்தாலொழிய, எந்த விவகாரத்தையும் அவதிக்கிரயக் கொதுவையாகக் கருதக்கூடாதென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

சுவாதீனம் ஒப்புவிக்கப்படாமலிருக்கும் பெந்தக போக்கியத்தின் மேல் தொடரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில், சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 68-வது பிரிவின்படி கொதுவைப்பணம் பாக்கியாய் ஏற்படவில்லை யென்றும், விற்பனை செய்வதற்காக டிக்ரி பெற கொதுவைதாரருக்கு 67-வது பிரிவின்படி பாத்தியதையுண்டென்றும் சென்னை ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். சொத்து ஒப்பிக்கப்படாத காரணத்தினால் பிரஸ்தாப விவகாரம் பெந்தக போக்கியமாய் ஏற்படவில்லை யென்னும் காரணத்தைக்கொண்டு, பெந்தக போக்கியதாரருக்கு விற்பனைசெய்ய பாத்தியதையில்லை யென்று பின்னே சொல்லப்பட்ட பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனை பிரயோகப்படவில்லையென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள் (இ.லா.ரி. சென்னை 41-ம் வால்யும் 259-வது பக்கம்). அந்த விவகாரம் பெந்தக போக்கியமாகவேயன்றி வேறே எவ்வித கொதுவையாகவும் இராததை ஆதாரமாகக் கொண்டு, கொதுவைதாரர் 68-வது பிரிவின்படி கொதுவைப்பணத்துக்காக மாத்திரம் வியாஜ்ஜியம் தொடரலாமென்னும் விஷயத்தை ஷை வியாஜ்ஜியத்தில் ஹைகோர்ட்டார் கவனிக்காமற்போய்விட்டார்களென்றும், அதே விவகாரத்தை 68-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளைப் பிரயோகிக்கும் காரியத்துக்காக பெந்தக போக்கியமாகவும் 67-வது பிரிவைப் பிரயோகிப்பதற்காக பெந்தக போக்கியமாயிராததாகவும் பாவிக்கமுடியாதென்றும் எங்களுக்குத் தோற்றுகிறது. சொத்தை சுவாதீனம்செய்யப் பெறாதிருக்கும் பெந்தக போக்கியதாரருக்குள்ள ஒரே பரிகாரம் சொத்தின் சுவாதீனத்துக்காக வியாஜ்ஜியம் தொடருவதேயாயாகும். மேலும், சொத்து சுவாதீனப்படுத்தப்படவில்லை யென்னும் காரணத்தினாலேயே அந்த விவகாரத்தின் தன்மை மாறிவிடாது (வடமேற்கு மாகாணம் 7-ம் வால்யும் 56-வது பக்கம்; வங்காளம் லா.ரி., 7-ம் வால்யும் 14-வது பக்கம்; இ.லா.ரி. கல்கத்தா 10-ம் வால்யும் 66-வது பக்கம்; இ.அ., 4-ம் வால்யும் 15-வது பக்கம், அலஹா

பகுதி 19—தொடர்ச்சி. பிரிவு 58 (d).

பாத் 31-ம் வால்யும் 318-வது பக்கம்). மேலே எடுத்துக்கூறப் பட்ட சென்னையில் நடந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட அசம்பாவிதமான முடிவு செய்யப்படாதபடி தடுக்கும்பொருட்டு பிரஸ்தாப பிரிவைத் திருத்துவது அவசியமென்று நாங்கள் எண்ணுகிறோம். அப்பிரகாரமே, "கொதுவை வைக்கிறவன் கொதுவைவைத்துக் கொள்ளுகிறவனுக்குக் கொதுவைச் சொத்தை ஸ்வாதீனம்செய்து" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது ஸ்வாதீனம் செய்வதாக வெளிப்படையாகவாகிலும் அந்தப்படி அனுமானிக்கும்படியாகவாகிலும் தாம் கட்டுப்பட்டு" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

பெந்தக போக்கியம் என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தமானது சகல வகைகளையும் சேர்ந்த பெந்தக போக்கியங்களும் அடங்கும்படியாக பூர்த்தியானதாயில்லை. கொதுவைப் பணம் செலுத்தப்படும் பொருட்டு, கொதுவை வைக்கப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியில் ஒரு பாகத்தை மாத்திரமே உபயோகித்துக்கொள்ள கொதுவைதாரருக்கு பாத்தியதை ஏற்பட்டிருக்கும் யாதொரு விஷயத்துக்காக ஷை அர்த்தத்தில் நிபந்தனை கண்டிருக்கவில்லை. அப்பிரகாரமே பிரஸ்தாப பிரிவை மாற்ற நாங்கள் உத்தேசிக்கிறோம்.

சில வகைகளைச் சேர்ந்த அல்லது மாதிரியான குறிக்கப்படாத கொதுவைகளைப்பற்றி மாத்திரமே 98-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. மேலும், அது அப்படிப்பட்ட சகல கொதுவைகளுக்கும் பிரயோகப்படுவதாயில்லை. ஆகவே, குறிக்கப்படாத கொதுவைகள் என்பதில், 58-வது பிரிவைச் சேர்ந்த (b) முதல் (d) வரையிலுள்ள பகுதிகளில் அர்த்தம் சொல்லியிருக்கும் கொதுவைகளைத் தவிர மற்ற சகல கொதுவைகளும் அடங்கும்படியாக அதற்கு அர்த்தம் உரைப்பது நன்றாயிருக்குமென்றும், அந்த அர்த்தத்தை இந்தப் பிரிவில் ஒரு தனிப் பகுதியாக அமைத்துக்கொள்ளவேண்டுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம். குறிக்கப்படாத கொதுவைகளுக்கு உட்பட்டிருக்கும் கட்சிக்காரர்களுக்குள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் பற்றி 98-வது பிரிவில் குறிப்பிடவேண்டும்.

பகுதி 20. பிரிவு 59. 54-வது பிரிவுக்குச் சம்பந்தப்பட்ட குறிப்பில் கண்டிருக்கும் காரணங்களினால், 100 ரூபாய்க்குக் குறைந்த மதிப்புள்ள அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட கொதுவைகளுக்கும் 100 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் மதிப்புள்ள அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட கொதுவைகளுக்குமுள்ள வித்தியாசத்தை ஒழித்துவிட்டிருக்கிறது. சகல கொதுவைப்பத்திரங்களும் அவைகளில் சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவாயிருந்தபோதிலுஞ்சரி கட்டாயம் ரெஜிஸ்டர் செய்யப்படத்தக்கவைகளாயிருக்கவேண்டும்.

பகுதி 21. பிரிவு 59 A. 'கொதுவை வைக்கிறவர்', 'கொதுவைவைத்துக் கொள்ளுகிறவர்' என்னும் வார்த்தைகள் இந்த அத்தியாயத்தில் வெவ்வேறு பிரிவுகளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறபடி, அவைகளில் அவர்கள் மூலமாய் பாத்தியதை அடையும் சகல நபர்கள் என்பதும் அடங்குமா என்பது விஷயமாய்ச் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. (இ.அ.,

39-ம் வால்யூம் 7-வது பக்கத்தையும், அலஹாபாத் 21-ம் வால்யூம் 223-வது பக்கத்தையும் பார்க்கவும்.) இதை ஸ்பஷ்டமாக்கும்பொருட்டு, 59A பிரிவைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பிரேரேபிக்கிறோம்.

60-வது பிரிவில் உள்ள "செலுத்தப்படத்தக்கதான" என்னும் வார்த்தை காரணமாக ஒரு காலத்தில் வெவ்வேறு அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. யாதொரு கொதுவைமூலமாகக் கிடைத்த கடன் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு மாத்திரமே ஒரு தினம் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்து வேறே எதுவும் குறிப்பிடப்படாமலிருந்தால், அந்த தினமானது கடன் வாங்கினவரின் சௌகரியத்துக்காக நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்றும், கொதுவை வைத்தவருக்கு இஷ்டமிருந்தால் ஷை தேதிக்கு முற்பட்ட ஒரு தேதியில் கடனைக் கொடுத்துவிடலாமென்றும் சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. (இ.லா.ரி., அலஹாபாத் 10-ம் வால்யூம் 602-வது பக்கம்.) இதர வியாஜ்ஜியங்களில் இதற்கு மாறான அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. மேலும், மீட்டுக்கொள்வதற்கும் மீட்கும் சுதந்தரம் அற்றுப்போகும்படிச் செய்வதற்குமுள்ள உரிமைகள் சமமாய் வியாபிக்கக்கூடியவையென்னும் பொதுக் கோட்பாடு கண்டிதமாய் அனுசரிக்கப்பட்டுவந்தது (இ. லா. ரி., பம்பாய் 5-ம் வால்யூம் 22-வது பக்கம், அலஹாபாத் 29-ம் வால்யூம் 471-வது பக்கம்). கடைசியாய்ச் சொல்லப்பட்ட வியாஜ்ஜியங்களிலே, கொதுவைவைத்தவர் ". . . . . வருஷத்துக்குள்" பணம் செலுத்தவேண்டுமென்று பத்திரத்தில் நிபந்தனை கண்டிருந்தது. அந்த வியாஜ்ஜியங்களில் ஷை கால அளவு கழிந்து போவதற்குமுன் சொத்தை மீட்டுக்கொள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் விவகாரம் முதிர்ச்சி அடைவதற்குமுன் கொண்டுவரப்பட்டதாகக் கொள்ளப்பட்டது. கொதுவை வைத்தவர் குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள் கடனைத் தீர்த்துவிட்டுச் சொத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாமென்று சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் வெளிப்படையாய் ஷரத்து ஏற்படுத்திக்கொள்வதைத் தடுப்பதற்குச் சட்டத்தில் எவ்வித நிபந்தனையும் இல்லை. ஆனால், கொதுவைப் பணம் பாக்கியாய் ஏற்படுவதற்குமுன் மீட்கும் சுதந்தரம் அற்றுப்போகும்படிச் செய்ய கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை யில்லையென்பது மூலாதாரமான சித்தாந்தமாகும். அந்த சித்தாந்தத்தை அனுசரித்து, கொதுவைப் பணம் பாக்கியாய் ஏற்படுவதற்குமுன் சொத்தை மீட்டுக்கொள்ள கொதுவை வைத்தவருக்கும் இடம் கொடுக்கக்கூடாதென்று கொள்வது நியாயமாகத் தோற்றுகிறது. கொதுவை வைத்துக்கொண்டவர் மீட்டுக்கொள்ளும் கால அளவு விஷயமாய்க் கொதுவைப் பத்திரத்தில் கண்டிருக்கும் ஷரத்தை நம்பி இதர விவகாரங்களில் பிரவேசித்திருக்கக்கூடும். மீட்டுக்கொள்ளுவதற்காகவோ மீட்கும் சுதந்தரம் அற்றுப்போகும்படிச் செய்வதற்காகவோ ஏற்படுத்தப்பட்டுள்ள கால அளவு கழிந்து போவதற்குமுன் கொதுவை மீட்கப்பட்டால், ஷை விவகாரங்களுக்குப் பாதகம் ஏற்படும். இ. லா. ரி., அலஹாபாத் 36-ம் வால்யூம் 195-வது பக்கத்தில் கண்டிருக்கும் பக்தவார் பீகம் ஹொஸெய்னி

பகுதி 22.
பிரிவு 60.

காணம் என்னும் வியாஜ்ஜியத்தில், கொதுவைப் பத்திரத்தில் கண்ட கால அளவுக்குள் சொத்தை மீட்டுக்கொள்ள விடக்கூடாதென்று இ. லா. ரி., அலஹாபாத் 29-ம் வால்யும் 471-வது பக்கத்தில் கொள்ளப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தை ப்ரிவி கௌன்ஸிலார் அங்கீகரித்திருக்கிறார்கள். இதுவிஷயமாய் ஏற்படக்கூடிய யாதொரு சந்தேகத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு, முதல் பாராவில் 'செலுத்தப்படத்தக்கதான' என்பதற்குப் பர்த்தியாக 'பாக்கியாய் ஏற்பட்ட' என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கொதுவை மீட்டுக்கொள்ளப்பட்டால், கொதுவை வைத்துக்கொண்டவர் தம் சுவாதீனத்திலுள்ள கொதுவைப் பத்திரத்தை மாத்திரமேயல்லாமல் கொதுவைச் சொத்துக்குச் சம்பந்தப்பட்டவையாய்த் தம் சுவாதீனத்திலுள்ள சகல தஸ்தவேஜுகளையும் ஒப்புவிக்கக் கடமைப்பட்டிருக்கிறாரென்னும் விஷயத்தை ஸ்பஷ்டமாய்க் காட்ட வேண்டும். இனிமேல் கொதுவைகளெல்லாம் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவுகள் மூலமாய் ஏற்படுத்தப்படவேண்டுமென்று பிரேரேபித்திருக்கிறபடியால், "ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவு மூலமாய்க் கொதுவை ஏற்பட்டிருக்குமாகில்" என்று நகவளைவுக் குறிகளுக்குள் இருக்கும் வார்த்தைகள் அனாவசியமாய்விட்டன. ஆகவே, அவைகளை விட்டுவிடவேண்டும்.

பிரஸ்தாப பிரிவின் கடைசி பாராவானது- 'யாதொரு கொதுவையானது பிரிக்கமுடியாதது அல்லது பூர்ணமானதாகும்' என்று சொல்லப்படும் கோட்பாட்டுக்குச் சம்பந்தப்படுகிறது. பூரணமானதாகவாவது பிரிக்க முடியாததாகவாவது இருப்பதனால் பொதுவாய்க் கொதுவை வைத்துக்கொண்டவர் நன்மையடையக்கூடுமென்றாலும், கொதுவை வைத்துக்கொண்டவரைப் பொறுத்தமட்டில் மாத்திரம் அம்மாதிரியில்லை. கொதுவைவைத்தவர் விஷயத்திலும் கூட அம்மாதிரியே இருக்கிறது. விசேஷ ஏற்பாடு ஏதாகிலும் செய்யப்பட்டிருந்தாலொழிய, கொதுவை வைத்தவராகிலும் கொதுவை வைத்துக்கொண்டவராகிலும் அவர்களில் எவர்மூலமாகவாயினும் பாத்தியதை கொண்டாடும் எந்த நபராகிலும் பிரிக்கமுடியாததாகுமென்னும் கோட்பாட்டுக்குப் பொருத்தமாகவன்றி மற்றப்படி பரிகாரம் பெறக்கூடாது. பம்பாய் லா. ரி., 27-ம் வால்யும் 1449-வது பக்கத்திலுள்ள தீர்மானத்தினால் விளைந்த பலனை ஒழிக்கும்பொருட்டு ஷை பிரிவின் கடைசி பாராவில் 'அடைந்திருந்தாலொழிய' என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக 'அடைந்திருந்தால் மாத்திரமேயன்றி மற்றப்படி' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்வதைத் தவிர அந்தப் பாராவை மாற்றுவது அவசியமென்று நாங்கள் எண்ணவில்லை. விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி செய்யப்பட்டிராவிட்டாலுஞ்சரி, கொதுவை வைத்துக்கொண்டவருக்குக் கொதுவைச் சொத்தில் ஒரு பங்கு கிடைக்கும் விஷயத்தில் மாத்திரமே கொதுவையின் பூரணத்தன்மையை மாற்றவிடலாம்.

பகுதி 23. கொதுவைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் கோட்பாட்டை 61-வது
பிரிவு 61. பிரிவில் ஒழித்துவிட்டிருக்கிறது. (1925-ம் வருஷத்து சொத்தைக்

குறித்த ஆக்ட் 93-வது பிரிவுக்குச் சரியான) 1881-ம் வருஷத்து ஒப் படை செய்வதற்கான ஆக்ட் 17-வது பிரிவை ஆதாரமாகக் கொண்டு இந்தப் பிரிவு எழுதப்பட்டது. அந்த சாஸனம் ஏற்படுத்தப் படுவதற்குமுன் இங்கிலாந்திலும் 1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட் ஜாரிசெய்யப்படுவதற்குமுன் இந்த தேசத்திலும், கொதுவை வைத் துக்கொண்ட யாதொரு நபர் தம் வசத்திலுள்ள சகல ஈடுகளையும் ஒன்றாய்ச் சேர்த்து, கொதுவை வைத்தவரை அவைகளையெல்லாம் மீட்டுக்கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தவோ மற்றவைகளை மீட் டுக்கொள்ளாமல் அவைகளில் ஒன்றைமாத்திரம் மீட்டுக்கொள்ளா மல் தடுக்கவோ அவருக்கு அனுமதி இருந்துவந்தது. [கொதுவை யைப்பற்றி கோஸ் எழுதிய புத்தகம் 5-ம் பதிப்பு I-ம் வால்யூம் 429-வது பக்கம், பம்பாய் H.C.R (A.C.J.) 6-ம் வால்யூம், 90-வது பக்கம்.] இது அதருமமாயிருந்ததனால், பிரஸ்தாப ஆக்ட் 61-வது பிரிவினால் மாற்றப்பட்டது. ஆனால் அந்தப் பிரிவுகூட சகல விஷ யங்களுக்கும் பிரயோகப்படும்படி பூர்த்தியானதாயில்லை. ஆகவே, கொதுவை வைத்தவர் கொதுவை வைத்துக்கொண்ட ஓரே நபருக் குப் பாக்கியாய் ஏற்பட்டிருக்கும் சகல கடன்களையாவது அவை களில் யாதொன்றையாவது பலவற்றையாவது ஏககாலத்தில் மீட் டுக்கொள்ளும்படி விடவேண்டுமென்று பிரேரேபித்திருக்கிறது. ஓரே சொத்தின் பாகங்கள் தனித்தனியாய்க் கொதுவை வைக்கப்பட் டிருக்கும் விஷயத்திலும் அதே கோட்பாடு பிரயோகப்படவேண்டும். அப்பிரகாரமே, "சொத்தைக்" குறிப்பிடும் சகல வார்த்தைகளை யும் விட்டுவிட்டு, "இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கொதுவைகள்" என்னும் வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருப் பதுமல்லாமல் திருஷ்டாந்தமும் விட்டுவிடப்பட்டிருக்கிறது.

பெந்தக போக்கியத்துக்குச் சம்பந்தப்படுகிற 62-வது பிரிவை 58-வது பிரிவைச் சேர்ந்த (d) அடையாளமிட்ட பகுதியைத் திருத்தி யதுபோலவே திருத்தவேண்டியிருக்கிறது. பகுதி 24. பிரிவு 62.

இந்தப் பிரிவின் (b) குறிப்பிட்ட பகுதியானது - கொதுவைச் சொத்திலிருந்து கிடைக்கும் வாடகைத் தொகைகளிலிருந்தும் ஆதா யத்திலிருந்தும், கொதுவை வைத்துக்கொண்டவர் அசலுக்காகத் தமக்குச் சேரவேண்டிய வட்டியைமாத்திரம் வசூலித்துக்கொள்ள பாத்தியதை பெற்றிருக்கும் விஷயத்துக்குமாத்திரமே பிரயோகப்படு கிறது. கொதுவைப்பணத்தில் ஒரு பாகத்தைச் செலுத்தும்பொரு ட்டு, அதாவது, வட்டியில் ஒரு பாகத்தையாகிலும் அசலில் ஒரு பாகத்தையாகிலும், வட்டி, அசல் ஆகிய இவ்விரண்டிலும் ஒரு பாகத்தையாகிலும் செலுத்தும்பொருட்டு வாடகைகளையும் ஆதா யங்களையும் உபயோகித்துக்கொள்ளவேண்டியிருக்கிற விஷயங்க ளுக்கும் கூடி பகுதி பிரயோகப்படும்படிச் செய்யவேண்டும். இந்த மாறுதலைச் செய்வதற்காக "அசல் தொகையை" என்னும் வார்த் தைகளை, "கொதுவைப் பணத்தில் நிலுவையாயுள்ள தொகையை" என்று மாற்றவேண்டும்.

63-வது பிரிவானது கொதுவைச் சொத்துடன் ஏதாவது சேரும் விஷயங்களுக்குச் சம்பந்தப்படுகிறது. மேலும், அப்படிப்பட்ட பகுதி 25. பிரிவு 63.

சேர்மானங்கள் சில சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டிருந்து கொதுவை வைத்தவருக்கு ஒப்புவிக்கப்படும்பட்சத்தில், கொதுவை வைத்தவர் அந்த சேர்மானங்களுக்காகப் பிடித்த செலவுத் தொகையைக் கொடுத்துவிடவேண்டுமென்று அந்தப் பிரிவின் இரண்டாவது பாராவில் நிபந்தனை கண்டிருக்கிறது. கொதுவை வைத்தவரால் கொடுக்கப்படத்தக்க சரியான செலவுத் தொகையை 'அதே வட்டி வீதத்துடன்' அசல் பணத்துடன் சேர்க்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. பிரஸ்தாப பிரிவில் வட்டி வீதம் எதைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படவில்லை. வட்டி வீதத்தைப்பற்றி கொதுவைப் பத்திரத்தில் ஒன்றும் சொல்லப்பட்டிராத விஷயத்தில்கூட கஷ்டம் ஏற்படக்கூடும். 'அதே வீத வட்டி சகிதமாய்' என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

"அசலுக்குச் செலுத்தப்படத்தக்க வீதப்படியும், கொதுவைப் பத்திரத்தில் அப்படிப்பட்ட வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீதப்படியும் வட்டி சகிதமாய்."

பகுதி 26, பிரிவு 63 A. 63-வது பிரிவானது சேர்மானங்களுக்கு மாத்திரமே பிரயோகப்படுகிறது. கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைச் சொத்து விஷயமாய் அபிவிருத்தி வேலைகள் செய்ய அனுமதி கொடுப்பதாக ஆக்டில் வெளிப்படையான நிபந்தனை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட வெளிப்படையான நிபந்தனை இராததனால், செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் செலவைக் கொடுக்கும்படி கேட்கவாவது அவைகளுக்காக யாதொரு பிரதிபலன் பெறவாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை இல்லையென்று சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது (இ. வா. ரி., சென்னபட்டணம் 19-ம் வால்யூம் 327-வது பக்கம்; அலஹாபாத் 37-ம் வால்யூம் 81-வது பக்கம்). ஆனால், Ch. D. 21-ம் வால்யூம் 469-வது பக்கத்தில் கண்ட ஷெப்பர்டுக்கும் ஜோன்ஸுக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலும், Beav. 6-ம் வால்யூம் 246-வது பக்கத்தில் கண்ட ஸாண்டனுக்கும் ஹூபருக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலும், A. C. 150-வது பக்கத்தில் கண்ட (1894-ம் வருஷத்தில்) ஹெண்டர்ஸனுக்கும் ஆஸ்ட்வுட்டுக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலும் இங்கிலாந்தில் செய்யப்பட்ட தீர்மானங்களைப் பின்பற்றிச் சில கோர்ட்டார் - செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள் நியாயமானவைகளாயிருந்தால், அவைகளுக்காகப் பிடித்த செலவு கொதுவை வைத்துக்கொண்டவருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் (இ. வா. ரி., பம்பாய், 43-ம் வால்யூம் 69-வது பக்கம்; பம்பாய், 45-ம் வால்யூம் 1301-வது பக்கம்). கொதுவையைப்பற்றி பிஷர் எழுதிய புத்தகத்தில் (6-ம் பதிப்பு 1782-வது பிரிவில்) சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடிக்குள்ள இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சட்டத்தின் பிரகாரம், "செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளானவை சொத்தின் சுபாவத்தையும் மதிப்பையும் நோக்கும்போது எப்போதும் நியாயமானவையா யிருக்கவேண்டும்: ஏனென்றால், அந்தப்படி இராதபட்சத்தில், மீட்கும் உரிமையைப் பெரிதும் தடுக்க கொதுவை

வைத்துக்கொண்டவருக்கு ஆதாரம் ஏற்படும். ஆனால், சொத்தை நல்ல ஸ்திதியிலும் வேலை செய்யும் நிலைமையிலும் வைத்துவைப்பதற்கும் பாத்தியதையைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் எவ்வளவு செலவு பிடிக்குமோ அதற்கு அதிகமான செலவில் அபிவிருத்தி வேலைகள் செய்ய நியாயமில்லை." இது சம்பந்தமான இங்கிலாந்து தேசத்து வியாஜ்ஜியங்கள்கூட கொதுவையைப்பற்றி கூட் எழுதிய புத்தகத்திலும் விமரிசை செய்யப்பட்டிருக்கின்றன. பழைய பிரமாணங்களைக் காட்டிலும் பின்னிட்ட தீர்மானங்கள் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அதிக அனுகூலமாயிருப்பதாக ஷை புத்தகத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. கொதுவையைப்பற்றி கூட் எழுதிய புத்தகத்தின் 8-ம் பதிப்பில் (1232-வது பக்கத்தில்) பிரஸ்தாப சட்டம் இன்னதென்று அடியிற்கண்டபடி விளக்கப்பட்டிருக்கிறது :—

"கொதுவை வைத்தவருடைய அனுமதி பெறப்பட்டிருந்தாவன்றி மற்றப்படி, அத்தியாவசியமாயிராத முக்கியமான மராமத்துகளுக்காகவாவது, அபிவிருத்தி வேலைகளினால் சொத்தின் மதிப்பு அதிகமாயிருந்தாலொழிய அந்த அபிவிருத்தி வேலைகளுக்காகவாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் செலவுத் தொகை கொடுக்கப்படமாட்டாது . . . . . வாஸ்தவத்திலே, இன்னும் பழைய சில வியாஜ்ஜியங்களின்படி, முக்கியமான அபிவிருத்தி வேலைகள் கொதுவை வைத்தவருடைய சம்மதத்தைப் பெற்றுவது நோடிஸ் பெற்ற பிறகு அவர் ஒப்புக்கொண்டதன் மேலாவது செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அந்த வேலைகள் கூட ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிடப்பட்டிருக்கின்றன. அப்படிப் பட்ட சம்மதமில்லாமலாவது அந்தப்படி ஒப்புக்கொள்ளப்படாமலாவது கொதுவை வைத்துக்கொண்டவர் அபிவிருத்தி வேலைகள் செய்யும்பட்சத்தில் அது அவருக்கு அனுகூலமாயிருக்குமென்று சொல்ல முடியாது. ஆனால், பிற்பட்ட தீர்மானங்களின் போக்கை நோக்கும் போது, இது விஷயத்தில் அவை கொதுவை வைத்துக்கொண்டவருக்கு மிகவும் அனுகூலமாயிருப்பதாகத் தோற்றுகிறது. மேலும், கொதுவை வைத்துக்கொண்ட யாதொரு நபர் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பணம் செலவழித்திருந்தால், அவர் செலவழித்திருக்கும் பணத்தின் காரணமாக சொத்தின் மதிப்பு அதிகமாயிருக்கிறதாவென்று விசாரணை செய்யப்பெறவும், செலவழிக்கப்பட்ட தொகையின் காரணமாக மதிப்பு அதிகரித்திருப்பதாக ருஜுவாகிற அளவுக்கு அந்தத் தொகையைப் பெறவும் ஷை கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பிரத்தியட்சமாய் பாத்தியதை உண்டென்று விதிக்கப்பட்டிருக்கிறது."

கொதுவையைப்பற்றி பிஷர் எழுதியுள்ள புத்தகத்தில் சுருக்கமாய்க் கூறப்பட்டிருக்கும் கொள்கையை இந்தியாவில் அனுசரிப்பதே உத்தமமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால், இன்ன அபிவிருத்தி வேலைகள் நியாயமானவையென்றும் இன்ன வேலைகள் நியாயமானவையல்லவென்றும் ஒவ்வொரு விஷயத்திலும் கோர்ட்டார் தீர்மானம் செய்யும்படி விடுவது விரும்பத்தக்கதல்லவென்று நாங்கள் எண்ணுகிறோம். அப்பிரகாரமே, ஒரே மாதிரியானதும்

நிஷ்களிஷையானதுமான ஒரு விதி ஏற்படுத்த நாங்கள் உத்தேசித்திருக்கிறோம். அந்த விதி என்னவென்றால், சொத்தை அழிந்துபோகாதபடியாவது சீர்கெட்டுப்போகாதபடியாவது பாதுகாப்பதற்காக எவையேனும் அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டாலன்றி மற்றப்படியாகிலும், ஈடு போதாததாய் விடாதிருக்கும்படிச் செய்வதற்காக அந்த வேலைகள் அவசியமாயிருந்தாலன்றி மற்றப்படியாகிலும், யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தர் அல்லது பொதுவான அதிகாரசபையார் செய்த உத்தரவை அனுசரித்து அவை செய்யப்பட்டாலன்றி மற்றப்படியாகிலும், அந்த அபிவிருத்தி வேலைகளுக்காகத் தொகை பெற கொதுவை வைத்துக்கொண்டவர் எவருக்கும் பாத்தியதை கிடையாதென்பதே. ஆகவே, அபிவிருத்தி வேலைகளைப்பற்றிச் சொல்லும் 63A பிரிவைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம். (ப்ரைவேட்) சொந்தத்தில் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான உரிமைக்குப் பாதகம் ஏற்படாதபடி நாங்கள் இந்த மசோதா ஆக்ட் முழுவதும் பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறோம்.

பகுதிகள் 27, 28, 35. பிரிவுகள் 64, 65, 71. இந்தப் பிரிவுகளில் 'சில வருஷகாலத்திற்கு' என்னும் வார்த்தைகள் அனுவசியமாகும். ஆகவே அவைகளை விட்டுவிடவேண்டும்.

பகுதி 28. பிரிவு 65. கொதுவை வைத்தவர் உடன்படிக்கை செய்துகொண்டதாக ஊகிக்கப்படும் விஷயங்களைப்பற்றி இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறது. மேலும், குத்தகையின்மேல் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் சொத்தின் விஷயத்தில், ஸர்க்கார் முதலிய ஸ்தாபனங்களுக்குச் சேரவேண்டிய வரி முதலிய செலவுகளைச் செய்வதையும் பின்னிட்டு வாடகை அல்லது குத்தகை செலுத்துவதையும் குறித்த உடன்படிக்கைகள் பெந்தக போக்கியத்தின் விஷயத்தில் பிரயோகப்படமாட்டாவென்று கடைசி பாராவுக்கு முந்திய பாராவில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த நிபந்தனை தெளிவாயில்லை. கொதுவைக்கு ஈடாய் வைக்கப்பட்டுள்ள சொத்தைப் பாதுகாக்க கொதுவை வைத்தவர் கடமைப்பட்டிருப்பது காரணமாக, இந்தப் பிரிவில் குறிப்பிட்டிருக்கும் உடன்படிக்கைகள் அவரைக் கட்டுப்படுத்தக்கூடியவைகளாகும். பெந்தக போக்கியத்தின் விஷயத்தில், கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சொத்து சுவாதீனப்படுத்தப்படாதபோது, கொதுவை வைத்தவர் ஷை வரி முதலிய பொதுச் செலவுகளையும் பிற்பட்ட வாடகை' அல்லது குத்தகைத் தொகைகளையும் செலுத்த ஏன் கடமைப்பட்டவராயிருக்கக்கூடாதென்பதற்குப் போதுமான காரணம் இருப்பதாகத் தோற்றவில்லை. 1879-ம் ஹூத்து 4-வது மசோதா ஆக்டில்தான் இந்தப் பாராவில் இப்போது அடங்கியுள்ள நிபந்தனை முதலில் சேர்த்துக்கொள்ளப்பட்டதென்றும், அப்போது "கொதுவை வைத்துக்கொண்டவன் கொதுவைச் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளாதிருக்கிறவரையில்" என்னும் வார்த்தைகள் (c), (d) குறிப்பிட்ட பகுதிகளில் இல்லையென்றும் பிரஸ்தாப ஆக்டுக்குச் சம்பந்தப்பட்டுள்ள தஸ்தவேஜுகளிலிருந்து தெரியவருகிறது. பெந்தக போக்கியத்தின் விஷயத்திலே, கொதுவை வைத்தவர் கொதுவைச் சொத்தைக் கொதுவை வைத்துக்கொண்டவு

ருக்கு சுவாதீனப்படுத்தியிராவிட்டால், எந்த சொத்தை ஈடுகாட்டி தாம் கடன் வாங்கிக்கொண்டாரோ அந்த சொத்தைப் பாதுகாப்பது வேறே யாதொரு கொதுவையின் விஷயத்தில் எப்படி அவருடைய கடமையாகுமோ அப்படியே இந்த விஷயத்திலும் அவருடைய கடமையாகும். "கொதுவை வைத்துக்கொண்டவன் கொதுவைச் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளாதிருக்கிறவரையில்" என்னும் வார்த்தைகள் முடிவான மசோதா ஆக்டின் 65-வது பிரிவைச் சேர்ந்த (c), (d) குறிப்பிட்ட உட்பகுதிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆனால், அஜாக்கிரதை காரணமாக இந்த பாரா விட்டுவிடப்படவில்லையென்று தெரியவருகிறது.

இந்த ஆக்டில் வெளிப்படையான நிபந்தனை இராததனால், கொதுவை வைத்துவிட்டு சொத்தைத் தம்முடைய சுவாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கும் யாதொரு நபர் கொதுவை செலாவணியாய்க்கொண்டிருக்கையில் கொதுவைச் சொத்தை குத்தகை அல்லது வாடகைக்கு விடுவதற்கு அதிகாரமிருக்கிறதாவென்றும், அப்படிப் பட்ட குத்தகை அல்லது வாடகை கொதுவை வைத்துக்கொண்டவரைப் பிணைப்படுத்துமா என்றும் சில சமயங்களில் பிரசினை ஏற்படுகிறது. இங்கிலாந்திலே ஒப்படை செய்வதைக்குறித்த 1881-ம் ௵த்து ஆக்ட் ஜாரி செய்யப்படுவதற்குமுன், கொதுவை வைத்தவர் கொதுவை வைத்துக்கொண்டவரைப் பிணைப்படுத்தும்படி சொத்தைக் குத்தகை அல்லது வாடகைக்கு விடமுடியாது [Smith L. C. 12-ம் பதிப்பு 1-ம் வால்யும் 577-வது பக்கத்தில் கண்ட கீச்சுக்கும் ஹாலுக்கும் நடந்த வியாஜ்ஜியம்; சா. டி. 25-ம் வால்யும் 678-வது பக்கத்தில் கண்ட கார்பெட்டுக்கும் ப்ளௌடனுக்கும் நடந்த வியாஜ்ஜியம்; K. B. 1-ம் வால்யும் 125-வது பக்கத்தில் கண்ட (1906-ம் ௵த்தில்) ராபின்ஸனுக்கும் வொய்ட்டுக்கும் நடந்த வியாஜ்ஜியம்]. பம்பாயில் இங்க்லிஷ் மாதிரியான ஒரு கொதுவையின் விஷயத்தில் ஷை அபிப்பிராயத்தைப் பின்பற்றி தீர்ப்பு சொல்லப்பட்டது (இ.லா.ரி., பம்பாய் 30-ம் வால்யும் 250-வது பக்கம்). அதில் அடியிற்கண்டபடி குறிப்பிடப்பட்டது:— | பகுதி 29. பிரேரேபித்திருக்கும் புதிய 65A பிரிவு.

"கொதுவை வைத்துவிட்டு சொத்தைத் தம் சுவாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கும் யாதொரு நபர் கொதுவை வைத்துக்கொண்டவருடைய சம்மதமில்லாமல் அந்த சொத்தை குத்தகை அல்லது வாடகைக்கு விட்டால், குத்தகை அல்லது வாடகைக்குப் பெறுகிறவருக்கு ஏற்படும் பாத்தியதையானது நிச்சயமற்றதாகிறது. ஏனென்றால், குத்தகை அல்லது வாடகையானது அவரும் குத்தகை அல்லது வாடகைக்குவிட்ட கொதுவை வைத்தவரும் சம்பந்தப்பட்டமட்டில் சரியானதாயிருந்தபோதிலும், கொதுவை வைத்துக்கொண்டவருக்குள்ள மேலான பாத்தியதையை அவர்களிருவருக்கும் விரோதமாக வற்புறுத்தலாம்."

சாதாரணமாய், கொதுவை வைத்தவர் கொதுவை வைத்துக்கொண்டவருடைய சம்மதமில்லாமலே, சொத்தைக் கொதுவை வைத்துக்கொண்டவரைப் பிணைப்படுத்தக்கூடியபடி குத்தகை அல்லது வாடகைக்கு விடக்கூடாதென்று அலஹாபாத்தில் அபிப்பிரா

யம் கொள்ளப்பட்டது. அவர் தம்மைப் பிணைப்படுத்தக்கூடியபடி குத்தகை அல்லது வாடகைக்கு விடலாம். மேலும், குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் சொத்தை சுவாதீனத்தில் வைத்திருப்பது விஷயமாய்க் கொதுவை வைத்துக்கொண்டவர் பிரவேசிக்காதிருக்கிறவரையில், ஷெடி குத்தகை அல்லது வாடகைக்கு எடுத்துக்கொண்டவர் குத்தகை அல்லது வாடகை மூலமாய் ஏற்படும் நன்மைகளை அனுபவித்துவரலாம். ஆனால், சாதாரணமாய் கொதுவை வைத்தவர் கொதுவை வைத்துக்கொண்டவருடைய சம்மதமில்லாமல் கொதுவை வைத்துக்கொண்டவரைப் பிணைப்படுத்தும்படி குத்தகை அல்லது வாடகைக்கு விடக்கூடாது (அ. லா. ஜ., 2-ம் வால்யும் 294-வது பக்கம்). இந்த அபிப்பிராயம் கல்கத்தாவில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. க. லா. ஜ., 40-ம் வால்யும் 500-வது பக்கத்திலே, கொதுவையைப்பற்றி கோஸ் எழுதியிருக்கும் புத்தகத்தில் (I-ம் வால்யும் 283-வது பக்கத்தில்) கண்டிருக்கும் குறிப்புகளை அனுசரித்து, பின்வருமாறு அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. கொதுவை வைக்கிறவர் மாமூலுக்குப் பொருத்தமாயிருக்கிறபடியும் சாதாரண நிர்வாக தோரணையிலும் குத்தகை அல்லது வாடகைக்கு விடலாமென்றும், அந்தப்படி உண்டாக்கப்பட்ட காணியாட்சியானது கொதுவை வைத்துக்கொண்டவரைப் பிணைப்படுத்துமென்றும் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. கொதுவைச் சொத்தை குறித்த கால அளவுகளுக்குக் குத்தகை அல்லது வாடகைக்கு விட ஒப்படை செய்வதைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்டில் வெளிப்படையாய் கொதுவை வைத்தவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது (ஒப்படை செய்வதைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்ட் 18-வது பிரிவும் சொத்தைக்குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 99-வது பிரிவும்). கொதுவைப் பத்திரத்தில் வெளிப்படையாய்க் கண்டிருக்கும் இட்டங்களுக்குட்பட்டு, கொதுவைச் சொத்தை குத்தகை அல்லது வாடகைக்குவிட கொதுவை வைத்தவருக்கு பாத்தியதை உண்டென்று சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமென்பது எங்களுடைய அபிப்பிராயம். ஆயினும், கொதுவை வைத்துக்கொண்டவருடைய உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டு, சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். அந்த நிர்ப்பந்தங்களும் அனேகமாய் சொத்தைக்குறித்த 1925-ம் வருஷத்து ஆக்டின் 99-வது பிரிவிலிருந்து எடுத்து, இந்த தேசத்திலிருக்கும் நிலைமைகளுக்குத் தகுந்தபடி மாற்றப்பட்டிருக்கின்றன.

பகுதி 30. பிரிவு 67. 60-வது பிரிவின்கீழ் கண்ட குறிப்புகளில் சொல்லியிருக்கும் காரணங்களை உத்தேசித்து, 'செலுத்தப்படத்தக்கதான' என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக 'பாக்கியாய் ஏற்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இப்போதைய சட்டத்தின்படி, அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்திலும் இங்கிலிஷ் மாதிரியான கொதுவையின் விஷயத்திலுமேயன்றி, குறிக்கப்படாத கொதுவைகள் சம்பந்தமான ஷரத்துகளின்படி மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்ய கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை இருந்தால் அந்தக்

கொதுவைகளின் விஷயத்திலுங்கூட கொதுவை வைத்துக்கொண்டவர் - மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதுமூலமாய்ப் பரிகாரம் பெறலாம். மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டால், அந்தப்படி அற்றுப்போகும்படிச் செய்வதற்குப் பர்த்தியாக விற்பனை செய்யும்படி கட்டளையிட ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 34-ம் அதிகாரத்தில் கண்ட 4-வது விதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உபவிதியின்படி இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யுக்தானுசாரமாய் நடந்துகொள்ள அந்த விதியினுல் கோர்ட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரமானது வெவ்வேறு விதமாய்ச் செலுத்தப்பட்டிருக்கிறது. மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்ய அனுமதி கொடுக்க சில கோர்ட்டார் மறுத்திருக்கிருர்கள். மற்ற கோர்ட்டார்களோ அந்தப்படி செய்ய அனுமதி கொடுத்திருக்கிருர்கள். மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான டிக்ரிகள் மற்ற இடங்களைக் காட்டிலும் அலஹாபாத்தில் அடிக்கடி பிறப்பிக்கப்படுவதாக நாங்கள் கேள்விப்படுகிருேம். ஊக்கு சாஸனங்களைக் கொடுத்து நீதிமுறையாய் வைக்கப்படும் எக்விடபில் மார்ட்கெஜ் என்னும் கொதுவைகளின் விஷயத்திலும் வெவ்வேறு கோர்ட்டுகளில் வெவ்வேறு முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட விஷயங்களில் கல்கத்தாவிலும் அலஹாபாத்திலும், கோர்ட்டார் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்ய அனுமதி கொடுக்க ஒரே மாதிரியாய் மறுத்திருக்கிருர்கள் (கல்கத்தா, 24-ம் வால்யும் 348-வது பக்கம்; அலஹாபாத், 14-ம் வால்யும் 238-வது பக்கம்). பம்பாயிலோ, சில சமயங்களில் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான டிக்ரிகள் பிறப்பிக்கப்படுகின்றன (பம்பாய், 14-ம் வால்யும் 269-வது பக்கம்).

காலஞ்சென்ற ஸர் ராஷ் பிஹாரி கோஸ் தாம் எழுதிய கொதுவையைக் குறித்த சட்டம் என்னும் புத்தகம், 5-ம் பதிப்பின் 32-வது பக்கத்தில் ஷை பிரசினையைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிருர். அங்கே அவர் சொல்லியிருப்பதாவது :—

"ஆனுல், முன் நடந்ததைவிட இப்போது விற்பனைகள் அடிக்கடி செய்யப்பட்டு வந்தபோதிலும், இங்கிலாந்து தேசத்தில் கொதுவை வைத்துக்கொண்டவர்களுடைய உரிமைகளின் பலனை அடைவதற்கு மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதே இன்னும் அனுசரித்துவரும் சாதாரண முறையாயிருக்கிறது. ஆயினும், சிக்கலான வியாஜ்ஜியங்களில் கட்சிக்காரர்களின் சுதந்தரங்களை விற்பனை செய்வதற்கான டிக்ரியின்மூலமாய் மாத்திரமே போதுமானமட்டில் பாதுகாக்கக்கூடுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்ருல், மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதானது தொந்தரவான நடவடிக்கைமுறையா யிருப்பதுமாத்திரமேயல்லாமல் தாமதமாய் நடக்கக்கூடிய நடவடிக்கை முறையாகவும் இருக்கிறது. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வந்தபோது, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் முறையை அடியோடு ஒழித்துவிட்டு,

ஈட்டுச் சொத்தை விற்பனை செய்து தாம் கொடுத்திருக்கும் பணத்தை வசூலிக்கும் சுதந்தரத்தை மாத்திரமே கொதுவை வைத்துக்கொண்டவருக்குக் கொடுக்கவேண்டுமென்று இந்த தேசத்தில் பிரேரேபிக்கப்பட்டது. ஆனால், சட்டத்தில் அப்படிப்பட்ட மாறுதலைச் செய்வது காரணமாக நடவடிக்கை முறை ஒருமட்டில் சுலபமாக்கப்பட்ட போதிலும் அதனால் எவ்வளவு தொந்தரவு உண்டாகிறதென்பதைக் கவனிக்கும்போது அந்தப்படி மாற்றுவதற்கு நியாயமில்லையென்று கவர்னர் ஜெனரல் அவர்களுடைய ஆலோசனை சபையில் அப்போதி இருந்த சட்ட இலாகா மெம்பர் அபிப்பிராயப்பட்டார். ஆயினும், அப்படிப்பட்ட சட்டத்தினால் ஏதோ கொஞ்சம் தொந்தரவு ஏற்படக்கூடியதாயிருந்தபோதிலும், அதன்மூலமாய் ஏற்படும் சிறப்பையும் சுலபத்தையும் நோக்கும்போது அந்த மாறுதலைச் செய்வது அவ்வளவு நஷ்டகரமாயிருந்திருக்குமா என்னும் விஷயத்தைப்பற்றி நான் சந்தேகிக்கத் துணிகிறேன். எப்படியிருந்தபோதிலும், ஜனங்களுக்கு அந்தப்படி செய்வதனால் ஏற்படும் லாபமானது - இதனால் உண்டாகக்கூடிய யாதொரு தொந்தரவுக்குப் போதுமான பிரதிபலனாக இருந்திருக்கும். இங்கிலிஷ் மாதிரியான கொதுவையின்படி, கடன் கிரமமாய்ச் செலுத்தப்படுவதன்மேல் சொத்துவ பாத்தியதையைத் திருப்பி ட்ரான்ஸ்பர் செய்துவிடவேண்டுமென்னும் திட்டத்துக்குட்பட்டு அந்த சொத்துவபாத்தியதை ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறது. மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக கொதுவை வைத்துக்கொண்டவருக்குள்ள பாத்தியதையானது ஷை இங்கிலிஷ் மாதிரியான கொதுவைமுறையிலிருந்து இங்கிலாந்தில் தானாக ஏற்பட்டதென்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். வெகுசாய், ப்ரொபெஸர் ஹாலண்ட் எடுத்துக்காட்டுகிறபடி, இது உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக ஜாமீன் கொடுக்கும் மிகவும் நாகரீகமற்ற முறையாயிருக்கலாம். அமெரிக்காவிலுள்ள நாடுகள் பலவற்றிலுமேயன்றி ஐர்லாந்திலும்கூட விற்பனை செய்வதே கொதுவையின் விஷயமாய் அடையக்கூடிய மிகச் சிறந்த பரிகாரமென்று எண்ணப்படுகிறது. ரோமன் லா என்னும் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு தங்களுடைய தர்ம சாஸ்திரத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தேசங்களில்கூட ஷை பழக்கத்தையே அனுசரித்துவருகிறார்கள். ஆயினும், இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சட்டத்தில் அதைவிட தொந்தரவாயுள்ள நடவடிக்கைமுறை இன்றளவும் ஆசாரத்தில் இருந்துவருகிறது. ஆனால், மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான முறையை அனுசரிக்கும்பட்சத்தில், மீட்பதற்காக ஒன்றின்பின் ஒன்றாய் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியிருக்கும் கால அளவுகளையும், விவகாரத்தை மீண்டும் தொடங்குவதற்கு இடம் ஏற்படுவதையும், சிக்கலான விஷயங்களில் பரிகாரம் வெளிப்படையாக போதுமானதாயிராததையும் நோக்கும்போது, இந்த முறை இங்கிலாந்திலுங்கூட கட்டாயம் ஒழிந்துபோகக்கூடியதாயிருக்கிறதென்று உறுதியாய்க் கூறலாம். இந்தப்படி கூறுவதற்கு அதிக துணிவு வேண்டியதில்லை."

கொதுவை விஷயத்தில் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதைப்பற்றி வில்ட்ஸி என்பவர் எழுதிய புத்தகம் (இது

அமெரிக்கா தேசத்தில் வெளியான நூலாகும்), 3-ம் பதிப்பு 1-ம் வால்யும் 5-வது பக்கத்தில், அடியிற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிறது :—

"கண்டிதமாய் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் முறை அல்லது விற்பனை செய்யாமலே மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் முறையானது ஒரு காலத்தில் இங்கிலாந்திலே விசேஷமாய் உபயோகிக்கப்பட்டு வந்தது. விற்பனை செய்வதற்காக டிக்ரி பெறுவதற்குப் பர்த்தியாய் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அறுதியான பாத்தியதை பூர்த்தியாய் ஏற்படும்படிச் செய்வதே அதன் நோக்கமாயிருந்தது; அனேக நாடுகளிலுள்ள கோர்ட்டுகள் இந்த முறையை அங்கீகரிக்கின்றன. ஆனால், மீட்கும் விஷயத்தில் சொந்தக்காரருக்கு தரும ரீதியாயுள்ள சுதந்தரங்களைப் பொறுத்தமட்டில் அது கடினமாயிருப்பது காரணமாக, சில விசேஷ சந்தர்ப்பங்களில் மாத்திரமே அதை உபயோகிக்க அனுமதி கொடுக்கின்றன."

ஆகவே, அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்திலாவது, குறிக்கப்படாத யாதொரு கொதுவைக்குச் சம்பந்தப்பட்ட பத்திரத்தில் வெளிப்படையாய்க் கண்டிருக்கும் ஷரத்துகளின்படி, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யலாமென்று இருதிறத்தாரும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும்பட்சத்திலே, அந்தக் கொதுவையின் விஷயத்திலாவது மாத்திரமே மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் பரிகாரம் கிடைக்கும்படிச் செய்வதும், மற்ற சகல விஷயங்களிலும் அதற்கு அனுமதி கொடுக்காதிருப்பதும் விரும்பத்தக்கதாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

61-வது பிரிவைக்குறித்துச் சொல்லும்போது, பல ஈடுகளை ஒன்றாய்ச் சேர்க்கும் கோட்பாட்டை அமுலுக்குக் கொண்டுவந்து கொதுவை வைத்தவருக்கு அதன் மூலமாய்ப் பிரதிகூலம் உண்டாக்குவது நியாயமாகாதென்று நாங்கள் எடுத்துக்காட்டினோம். ஆயினும், கொதுவை வைத்துக்கொண்டவர் ஒரே சொத்தையாவது வெவ்வேறு சொத்துக்களையாவது பல தடவைகளில் கொதுவை வைத்துக்கொண்டிருந்து, ஒரு கொதுவைத் தொகையைச் செலுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தி மற்ற கொதுவைகளை அப்படியே வைத்திருந்தால், கொதுவை வைத்தவருக்கு அது பிரதிகூலமாயிருக்கும். பல கொதுவைகள் ஏற்பட்டிருந்து, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வது ஒன்றே அவைகளின் விஷயத்தில் கிடைக்கக்கூடிய பரிகாரமாயிருந்தால், கொதுவை வைத்தவர் ஒரு கடனைத் திருப்தி செய்வதற்காக சொத்து முழுவதையும் இழந்துவிடலாம். அந்தக் கடன் தொகையோ சொத்தின் வாஸ்தவமான மதிப்பைக் காட்டிலும் குறைவாய் இருக்கக்கூடும். மேலும், இதர கொதுவைகளின்படி சேரவேண்டிய கடன்களுக்காக நபர் சம்பந்தமான டிக்ரி அவர்மேல் பிறப்பிக்கப்படுவதற்கும் அவர் உள்ளாவார். ஆகவே, ஷை முறையின் காரணமாக அவருக்கு விசேஷ கஷ்டம் நேரிடும். விற்பனை செய்வதே பரிகாரமாயுள்ள கொதுவைகளின் விஷயத்தில்கூட, சொத்தை மற்றொரு கொதுவைக்குட்பட்டு விற்பனை செய்யும்பட்சத்தில் அதற்கு நியாயமாயும் சரியாயுமுள்ள விலை

பகுதி 31, பிரிவு 67 A.

கிடைக்காது. ஆகவே, க.வீ.நோ., 25-ம் வால்யும் 129-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் கலகத்தா ஹைகோர்ட்டார் பின்னே சொல்லியபடி செய்யவேண்டியதாய் ஏற்பட்டது. ஒரே சொத்தின் விஷயத்தில் இரண்டு பிரத்தியேக கொதுவைகளைப் பெற்றிருப்பவர், அவைகளில் ஒவ்வொன்றையும் விற்பனை செய்வதற்காக தனித்தனியான வியாஜ்ஜியத்தில் டிக்ரி பெறலாம் என்பதற்கு விரோதமாக கான்ட்ராக்ட் எதுவும் ஏற்பட்டிராதபட்சத்திலே, அந்தப்படி டிக்ரி பெறுவதனின்றும் அவரைத் தடுப்பதற்கில்லையென்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபோதிலும், அந்த சொத்தை அவர் திரும்பித்திரும்பி இரண்டு தடவை விற்பனை செய்யவாவது அவைகளில் எந்த டிக்ரியின்படியாவது அதை மற்றொரு டிக்ரிக்கு உட்பட்டு விற்பனை செய்யவாவது கூடாதென்று ஒரு நிபந்தனையை அவர்கள் டிக்ரியில் சேர்க்கவேண்டியதாயிருந்தது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே, முதல் கொதுவை சம்பந்தமாய்ப் பெற்ற டிக்ரியை நிறைவேற்றவாகிலுஞ்சரி இரண்டாவது கொதுவை சம்பந்தமாய்ப் பெற்ற டிக்ரியை நிறைவேற்றவாகிலுஞ்சரி பிரஸ்தாப சொத்தை அவ்விரண்டு பொறுப்புகளுக்கும் சம்பந்தமில்லாமல் விற்பனை செய்வதும், விற்பனைத் தொகையிலிருந்து இடைச் சம்பவமான காரியங்களுக்காகப் பிடித்த செலவைக் கழித்த பிறகு நிற்கும் தொகையை முதல் கொதுவையின்மேலும் இரண்டாவது கொதுவையின்மேலும் கொடுக்கவேண்டிய பாக்கிகளை ஒன்றின்பின் ஒன்றாக செலுத்துவதற்காக உபயோகிப்பதும், அந்தப்படி செய்த பிறகு மிகுதியாய் நிற்கும் தொகை ஏதாகிலும் இருந்தால் அதை மீட்கும் பாத்தியதை உடையவருக்குச் சேரும்படிச் செய்வதும் சரியான முறையாகுமென்று ஹைகோர்ட்டார் அந்த வியாஜ்ஜியத்தில் அபிப்பிராயம் கொண்டார்கள். இந்த முறை தருமமானதாயிருந்தபோதிலும், இந்த ஆக்டிலாவது ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 34-ம் அதிகாரத்திலாவது கண்ட எந்த நிபந்தனையும் இந்தப்படி செய்வதற்கு இடம் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட கஷ்டங்கள் நேரிடாமல் தடுப்பதற்காக, 67 A என்று இலக்கமிட்டு புதிய பிரிவு ஒன்றைச் சேர்க்க நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 32, பிரிவு 68. கொதுவைச் சொத்தின்மேல் கொதுவை வைத்தவருக்குள்ள சுதந்தரத்தைப்பற்றி 67-வது பிரிவிலும் 67 A பிரிவிலும் சொல்லியிருக்கிறது. 68-வது பிரிவிலோ, அவர் கொதுவை வைத்தவரிடமிருந்து நேராய்க் கொதுவைப் பணத்தை வசூலிப்பதற்குள்ள சுதந்தரத்தைப்பற்றி சொல்லியிருக்கிறது. இன்ன சந்தர்ப்பங்களில் அந்த சுதந்தரம் ஏற்படுகிறது அல்லது வியாஜ்ஜியமூலம் உண்டாகிறதென்று 68-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கிறது; அந்த சந்தர்ப்பங்கள் எவையென்றால் :—

(i) கொதுவை வைத்தவர் கடனைத் திருப்பிச் செலுத்தத் தாம் நேராய்ப் பிணைப்பட்டிருப்பது ;

(ii) கொதுவை வைத்தவராவது கொதுவை வைத்துக்கொண்டவராவது யாதொரு அக்கிரமமான காரியம் செய்வதனால் அல்லது யாதொரு காரியத்தைச் செய்யத் தவறிப்போவதனாலல்லாமல் வேறே யாதொரு காரணத்தினால் கொதுவை ஈடு முற்றிலுமாகிலும் சிறிது மட்டிலாகிலும் அழிந்துபோவது அல்லது போதாததாய்விடுவது ;

(iii) கொதுவை வைத்தவர் அக்கிரமமான காரியம் செய்வதனுலாவது யாதொரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடுவதனுலாவது அதன் பயனுகவாவது கொதுவை வைத்துக்கொண்டவர் தம் ஈட்டை இழந்துவிடுவது;

(iv) கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைச் சொத்தின் சுவாதீனம் அடைய பாத்தியதை உடையவராயிருந்து கொதுவை வைத்தவர் அதை சுவாதீனப்படுத்தத் தவறிப்போவது, அல்லது தொந்தரவு ஒன்றும் இல்லாமல் அவர் சுவாதீனப்படுத்திக் கொள்ளும்படிச் செய்யத் தவறிப்போவது.

(i), (iii), (iv) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி இப்போதைய பிரிவின் (a) முதல் (c) வரையிலுள்ள பகுதிகளில் சொல்லியிருக்கிறது. (ii) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி கடைசி பாராவில் சொல்லியிருக்கிறது:

ஆனுல், இப்போதிருக்கிறபடி 68-வது பிரிவில் கொதுவைப் பணத்துக்காக கொதுவை வைத்துக்கொண்டவர் இன்ன சந்தர்ப்பங்களில் வியாஜ்ஜியம் தொடரலாமென்று மாத்திரமே சொல்லியிருக்கவில்லை. இன்ன நபர்களின்மேல் வியாஜஜியம் தொடரலாம் என்று கூட அதில் சொல்லியிருக்கிறது. "கொதுவைப் பணத்துக்காக அடியிற்கண்ட விஷயங்களில் கொதுவை வைத்தவர்மேல் வியாஜ்ஜியம் தொடர கொதுவை வைத்துக்கொண்டவருக்கு பாத்தியதை உண்டு" என்னும் வார்த்தைகளில் இந்தப் பிரிவு ஆரம்பிக்கிறது. "கொதுவை வைத்தவர்" என்னும் வார்த்தைகளை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறேம். "கொதுவை வைத்தவர்" என்னும் வார்த்தைகளில் நேராய்க் கொதுவை வைத்தவர் என்பது அடங்குமா அல்லது அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதிகள் அல்லது அவரிடமிருந்து ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்கள் என்பதும் அடங்குமா என்பது விஷயமாய்ச் சந்தேகம் ஷை வார்த்தைகளின் மூலமாக ஏற்பட்டிருப்பதே அவைகளை விட்டுவிடுவதற்குக் காரணமாகும் (சென்னை லா. ஜே. 27-ம் வால்யும் 494-வது பக்கத்தையும் இ. அ. 39-ம் வால்யும் 7-வது பக்கத்தையும் பார்க்கவும்.) (i) குறிப்பிட்ட பகுதியானது கொதுவை வைத்தவர் தொகையைத் திருப்பிச் செலுத்தப் பிணைப்படும் விஷயமாதலால் அந்த விஷயத்திலே, கொதுவை வைத்தவரின் சட்டசம்மதமான பிரதிநிதிகள் அல்லது அவரிடமிருந்து ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்களுக்குள்ள பொறுப்புகள் விஷயமாய்ப் பிரசினை எதுவும் ஏற்படமாட்டாது; அந்தப் பகுதியில் உபயோகித்திருக்கும் "தாம்" என்னும் வார்த்தையானது அந்த விஷயத்தில் கொதுவைப் பணத்துக்காக கொதுவை வைத்தவர் மேலன்றி வேறே எவர்மேலும் வியாஜ்ஜியம் தொடர முடியாதென்பதை ஸ்பஷ்டமாய்க் குறிப்பிடுகிறது. (ii), (iii), (iv) குறிப்பிட்ட பகுதிகளின் விஷயத்திலே, சில விஷயங்களில் கொதுவை வைத்தவரின் சட்டசம்மதமான பிரதிநிதியாவது அவரிடமிருந்து ட்ரான்ஸ்பர் பெற்றவராவது வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு உள்ளாயிருக்கலாம், மற்றவர்கள் அந்தப்படி உள்ளாயிராமற்போகலாம்.

இன்னின்ன சந்தர்ப்பங்களில் சட்டசம்மதமான பிரதிநிதிகளுக்கும் ட்ரான்ஸ்பர் பெற்றவர்களுக்கும் அவர்களைப் பொறுத்தமட்டில் பொறுப்புகள் ஏற்படுகின்றனவென்றும் அவர்களுடைய பொறுப்பு இவ்வளவென்றும் நிர்ணயிக்க நாங்கள் முயன்றால், இந்தப் பிரிவு மிகவும் தொந்தரவுக்கிடமானதாய்விடும். ஆகவே, ஒவ்வொரு விஷயத்திலும் ஏற்படும் பிரசினையைப் பொதுச் சட்டத்தைக் கொண்டு தீர்மானிக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறபடியால், இந்த விஷயங்களை அப்படியே விட்டுவிடுவது விரும்பத்தக்கதாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்பட்டோம்.

கொதுவை வைத்தவர் தம்மாலாவது "வேறே யாதொரு நபராலாவது" சங்கடம் உண்டாகாமல் சொத்தைக் கொதுவை வைத்துக் கொண்டவருக்கு ஒப்பிக்கவாகிலும் அந்த சொத்தின் சுவாதீனம் அவருக்குக் கிடைக்கும்படிச் செய்யவாகிலும் தவறிப்போனால், கொதுவை வைத்தவர் நேராய் உத்தரவாதியாவாரென்று இப்போதைய பிரிவின் (c) குறிப்பிட்ட பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. "வேறே யாதொரு நபர்" என்னும் வார்த்தைகள் மிகவும் விரிவான அர்த்தம் உடையவைகளாயிருக்கின்றன. அவைகளில் அக்கிரமமாய்ப் பிரவேசிக்கிற ஒருவன் என்பதுகூட அடங்கலாம். கொதுவை வைத்துக்கொண்டவர் சுவாதீனம் பெற்றிருப்பதற்கு அக்கிரமமாய்ப் பிரவேசிக்கிற ஒருவனாலாவது கொதுவை வைத்தவர் சேர்ந்து கூட்டாய் வஞ்சக யோசனை செய்திராத ஒருவனாலாவது சங்கடம் உண்டாக்கப்பட்டால், அதன் காரணமாய் கொதுவைப் பணத்துக்காக கொதுவை வைத்தவர்மேல் வியாஜ்ஜியம் தொடர்வதற்கு கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சுதந்தரம் ஏற்படக்கூடாது. "வேறே யாதொரு நபராலாவது" என்னும் வார்த்தைகள் கொதுவை வைத்தவருக்குள்ள ஹக்கைக் காட்டிலும் மேலான ஹக்கின்படி பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபர் என்று பொருள்படுவதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., சென்னபட்டணம் 15-ம் வால்யும் 304-வது பக்கம்; அலஹாபாத் 19-ம் வால்யும் 191-வது பக்கம்; சென்னபட்டணம் 42-ம் வால்யும் 578-வது பக்கம்). மேலேகண்ட (iv) குறிப்பிட்ட பகுதியில் "வேறே யாதொரு நபராலாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "கொதுவை வைத்தவருக்குள்ள ஹக்கைக் காட்டிலும் மேலான ஹக்கின்படி பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபராலாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம்.

நபர்மேல் நடவடிக்கை நடத்திப் பெற்றுக்கொள்ளும்படி இந்தப் பிரிவில் நிர்ணயித்திருக்கும் பரிகாரம் அதிகப்படியானதாகும். தமக்குள்ள இதர பரிகாரங்களைத் தேடும்போதேயன்றி கொதுவைச் சொத்தின்மேலாவது ஈட்டின்மேலாவது நடவடிக்கை நடத்துவதற்கு முன்புகூட நபர்மேல் நடவடிக்கை நடத்திப் பெறக்கூடிய ஷை பரிகாரம் பெற கொதுவை வைத்துக்கொண்டவர் முயற்சிசெய்யலாமென்று கொள்ளப்பட்டிருக்கிறது (சென்னபட்டணம் 17-ம் வால்யும் 469-வது பக்கம்). கொதுவை என்பதில் கடன் கொடுப்பதென்பதும் பிரத்தியட்சமாய் அடங்கியிருந்தபோதிலும் (இ. லா. ரி., கல்கத்தா 44-ம் வால்யும் 400-வது பக்கம்), முக்கியாம்சத்தில் அது ஒரு ஈடேயாகும்.

வாஸ்தவமாய் அனுஷ்டானத்தில், ஒரே சமயத்தில் ஷ இருவகைப் பரிகாரமும் தேடுவதென்னும் முறை காரணமாக விசேஷ அநியாயத்துக்கு இடமுண்டாயிற்று. கொதுவை வைத்துக்கொண்டவர் ஆளைப் பிடித்துச் சிறைப்படுத்துவதாக பயங்காட்டி அதிக வட்டியோ வேறே யாதொரு அக்கிரமமான அனுகூலமோ அடையும் நோக்கத்துடன், சொத்தின்மேல் நடவடிக்கை நடத்தாமல் சொக்க டிக்ரி பெறலாம். ஆகவே, (i), (ii) குறிப்பிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் விஷயங்களில் நபர் மூலமாய்க் கிடைக்கும் பரிகாரத்தைப் பெற கொதுவை வைத்தவர்மேல் நடவடிக்கை நடத்த முயற்சி செய்வதற்கு முன் கொதுவைச் சொத்து மூலமாய்க் கிடைக்கக்கூடிய சகல பரிகாரங்களையும் தேடி முடித்துவிடவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். மேலேகண்ட (iii), (iv) குறிப்பிட்ட பகுதிகளின்கீழ் வரும் விஷயங்களில், கொதுவை வைத்துக்கொண்டவருக்குள்ள சுதந்தரங்கள் சம்பந்தப்பட்டமட்டில் அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது அவசியமல்ல. கொதுவை சம்பந்தமான யாதொரு வியாஜ்ஜியத்திலே, கொதுவைச் சொத்து விற்பனை செய்யப்பட்டு, விற்பனையிலிருந்து கிடைத்த பணம் கொதுவைக் கடன் முழுவதையும் செலுத்துவதற்குப் போதுமானதாயில்லையென்று தெரியவருகிறவரையில், கொதுவை வைத்தவர்மேல் டிக்ரியை நிறைவேற்ற கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை கிடையாதென்று ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 34-ம் அதிகாரத்தில் கண்ட 6-வது விதியில் சொல்லியிருக்கிறது. இப்போது ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஷ நிபந்தனை அந்த விதிக்குப் பொருத்தமற்றதாயிராது.

மேலும், மேலேகண்ட (i), (ii) குறிப்பிட்ட பகுதிகளின்கீழ் வரும் விஷயங்களில், கொதுவை வைத்துக்கொண்டவர் நபர் மூலமாய்க் கிடைக்கும் பரிகாரத்தைத் தேட கவலை கொண்டவராயிருக்கும்பட்சத்தில், தமக்கு இஷ்டமிருந்தால் ஈட்டை விட்டுவிடலாம் அல்லது அதுவிஷயத்திலுள்ள உரிமையை விட்டுவிடலாமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், ஈட்டின் ஒரு பாகத்தின் மேலுள்ள உரிமையை மாத்திரம் விட்டுவிட்டு மீதியிருக்கும் பாகத்தின்மேல் பொறுப்பை அதிகப்படுத்த கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அனுமதி கொடுக்கக்கூடாது (இ. லா. ரி., கல்கத்தா 50-ம் வால்யும் 718-வது பக்கம்). ஈட்டின் விஷயமாயுள்ள உரிமையைப் பூர்த்தியாய் விட்டுவிடும்படி பார்த்துக்கொள்ளும் பொருட்டு, ரெஜிஸ்டர் செய்த ஆதாரவு மூலமாய் அந்தப்படி செய்யவேண்டுமென்று பிரேரேபித்திருக்கிறது.

மேலேகண்ட (i) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் விஷயத்திலே, நபர் சம்பந்தமான டிக்ரி பெறுவதற்காக வியாஜ்ஜியம் தொடருவதற்கு வியாஜ்ஜியமூலமானது தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியன்று ஏற்படும். மற்ற விஷயங்களிலே வியாஜ்ஜிய மூலமானது பின்னும் சீக்கிரமாய் ஏற்படும். மேலும், கொதுவை வைத்துக்கொண்டவர் சரியான தேதி வருகிறவரையில் நிதானிக்கவேண்டியதில்லை (இ. லா. ரி., கல்கத்தா 25-ம் வால்யும் 450-வது பக்கம்; சென்னபட்டணம் 15-ம் வால்யும் 174-வது பக்கம்; அலஹாபாத் 16-ம் வால்யும் 318-வது

பக்கம் ; பம்பாய் 26-ம் வால்யும் 241-வது பக்கம்). நபர் மூலமாய்ப் பெறும் பரிகாரத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்குள்ள கெடுவு காலமானது - தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாயிருந்தால் ஆறு வருஷமாகும் (கால நிர்ணயச் சட்டம் 116-வது அல்லது 120-வது பிரிவு ; கல்கத்தா 12-ம் வால்யும் 389-வது பக்கம் ; இ. அ., 12-ம் வால்யும் 12-வது பக்கம் ; அலஹாபாத் 34-ம் வால்யும் 246-வது பக்கம்). சொத்து மூலமாய்க் கிடைக்கும் பரிகாரங்களின் விஷயத்தில் பின்னும் நீண்ட கால அளவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, நபர் மூலமாய்க் கிடைக்கும் பரிகாரத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான வியாஜ்ஜியத்தைக் கொதுவை சம்பந்தமான வியாஜ்ஜியத்தைக்காட்டிலும் முன்னதாகத் தொடரவேண்டியிருக்கிறது. கெடுவுகால சம்பந்தமான நிபந்தனையினால் அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்துக்குத் தடை ஏற்படாதிருக்கும்பொருட்டாவது தொடரப்படாமலிருந்தது காரணமாக அது தள்ளிவிடப்படாதிருக்கும்பொருட்டாவது, கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைச் சொத்திலிருந்து தாம் பெறக்கூடிய சகல பரிகாரங்களையும் பெற முயற்சி செய்தாய்விடுகிற வரையிலாவது ஷை வியாஜ்ஜியத்தை நிறுத்திவைக்கவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

68-வது விதியைத் திருத்துவதனால் ஸிவில் ப்ரொஸீஜர் கோர்ட் 34-ம் அதிகாரத்தின் 6-வது விதியைத் திருத்துவதற்கு அவசியம் ஏற்படவில்லை. அந்த விதியானது கொதுவை சம்பந்தமான விதிக்குப் பிரயோகப்படுகிறது. மேலும், அது - பணம் செலுத்தும்படி மாத்திரமே டிக்ரி பிறப்பிக்கப்படக்கூடியதாயிருக்கும் இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு வியாஜ்ஜியத்துக்குப் பிரயோகப்படாது (இ. லா. ரி., சென்னை 29-ம் வால்யும் 362-வது பக்கம்).

அப்பிரகாரமே 34-ம் அதிகாரத்தின் 14-வது விதியைத் திருத்துவதும் அவசியமல்ல. கொதுவைச் சொத்து விஷயத்தில் தாம் அடையக்கூடிய சகல பரிகாரங்களையும் அடைய கொதுவை வைத்துக்கொண்டவர் பிரயத்தனம் செய்யவேண்டியிருக்கிற விஷயங்களில், கொதுவை வைத்தவர்மேல் நபர் சம்பந்தமான டிக்ரி பெறுவதற்குத் தமக்குள்ள உரிமையைச் செலுத்த அவருக்கு அனுமதி கொடுப்பதற்கு முன் சொத்து விற்பனை செய்யப்படும் ; மேலும், அப்போது 14-வது விதியில் கண்ட நிபந்தனைகள் செலாவணியாகமாட்டா. இதர விஷயங்களில் கொதுவைச் சொத்தின்மேல் அவர் முதலில் நடவடிக்கை நடத்தவேண்டியிராவிட்டால் அந்த விஷயங்களுக்கு மாத்திரமே ஷை விதி பிரயோகப்படும்.

கொதுவைப் பணத்தைத் தவணைத்தொகைகளாகச் செலுத்த ஒப்புக்கொண்டிருக்கும் விஷயங்களிலாவது வட்டியை நிஷ்கரிஷையான கால அளவுக்கொருமுறை செலுத்தவேண்டியிருக்கும் விஷயங்களிலாவது, பாக்கியாயிருக்கும் தொகைக்காக கொதுவைச்சொத்தில் போதுமான பாகத்தை விற்பனைக்குக் கொண்டுவரலாமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களுக்குக் கொதுவைப் பத்திரத்தில் வெளிப்படையாய்க் கண்டிருக்கும் ஷரத்துகள் பிரயோகப்படும் (இ. லா. ரி., பம்பாய் 35-ம் வால்யும் 327-வது பக்

கம் ; சென்னபட்டணம் 42-ம் வால்யும் 813-வது பக்கம்) ; மேலும், 68-வது பிரிவினால் அவைகளுக்குப் பாதகம் உண்டாகமாட்டாது.

பகுதிகள் 33, 34. 69-வது பிரிவும் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் 69A பிரிவும்.

69-வது பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியிலும் அதன் கடைசி பாராவிலும் இங்கிலிஷ் மாதிரியான கொதுவைகளைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. ஆயினும், (a) குறிப்பிட்ட பகுதியானது- விற்பனை செய்ய வெளிப்படையாய் அதிகாரம் கொடுத்திருக்கும் ஒரு இங்கிலிஷ் மாதிரியான கொதுவைக்குச் சம்பந்தப்படுகிறது. கடைசி பாராவிலோ அப்படிப்பட்ட அதிகாரம் எதுவும் கொடுத்திராத கொதுவையைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. (a) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் இங்கிலிஷ் மாதிரியான கொதுவைகளின் விஷயத்தில், விற்பனை செய்வதற்கான அதிகாரத்தை ஷை பிரிவின் 2 முதல் 4 வரையிலுள்ள பாராக்களில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை முறைப்படி செலுத்தவேண்டியிருக்கிறது. கடைசி பாராவில் குறிப்பிட்டிருக்கும் கொதுவைகளின் விஷயத்திலோ, (1866-ம் ஹூ௵த்து 28-வது ஆக்டாகிய) ட்ரஸ்டிகள்-கொதுவை வைத்துக்கொண்டவர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களைக் குறித்த ஆக்ட் 6 முதல் 11 வரையிலுள்ள பிரிவுகளில் அடங்கியுள்ள விதிகள் பிரயோகப்படுகின்றன. 69-வது பிரிவில் விதித்திருக்கும் நடவடிக்கைமுறைக்கும் 1866-ம் ஹூ௵த்து 28-வது ஆக்டில் நிர்ணயித்திருக்கும் நடவடிக்கைமுறைக்கும் பல அம்சங்களில் வித்தியாசம் இருக்கிறது. 1866-ம் ஹூ௵த்து 28-வது ஆக்டானது-(விக்டோரியா மஹாராணி அவர்களுடைய ஆளுகையின் 23-வது, 24-வது ஹூ௵த்து ஸ்டாட்யூட் 145-ம் அத்தியாயத்தில் கண்ட) லார்ட் க்ரான்வொர்த்தின் ஆக்டை அனுசரித்து எழுதப்பட்டது. பின்னை சொல்லிய ஆக்ட் - (விக்டோரியா மஹாராணி அவர்களுடைய ஆளுகையின் 41-வது, 42-வது ஹூ௵த்து ஸ்டாட்யூட் 41-ம் அத்தியாயத்தில் கண்ட) ஒப்படை செய்வதைக் குறித்த 1881-ம் ஹூ௵த்து ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது. பின்னை சொல்லப்பட்ட சாஸனத்தின் 19 முதல் 22 வரையிலுள்ள பிரிவுகள் கொதுவை வைத்துக்கொண்டவர் விற்பனை செய்வதற்குள்ள அதிகாரத்தைச் செலுத்துவதற்குச் சம்பந்தப்படுகின்றன. மேலும், அந்தப் பிரிவுகளை (5-வது ஜார்ஜ் மஹாராஜா அவர்களுடைய ஆளுகையின் 15-வது 16-வது ஹூ௵த்து ஸ்டாட்யூட் 20-ம் அத்தியாயத்தில் கண்ட) சொத்தைக் குறித்த 1925-ம் ஹூ௵த்து ஆக்ட் 101 முதல் 108 வரையிலுள்ள பிரிவுகளில் மீண்டும் எடுத்தெழுதியிருக்கிறது. லார்ட் க்ரான்வொர்த்தின் ஆக்டில் கண்ட நிபந்தனைகள் - கொதுவையைப்பற்றி பிஷர் எழுதியிருக்கும் புத்தகத்தில் (6-ம் பதிப்பு 975-வது பாராவில்) எடுத்துக்காட்டியுள்ளபடி அடியிற்கண்ட குறைகளுக்கு உட்பட்டவைகளாகும் :—

". . . . . கொதுவைக்கு வட்டியானது அரை வருஷத்துக்கொருதரம் செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், ரத்து செய்யப்பட்டிருக்கும் சட்டவாயிலான அதிகாரத்தை ஈட்டின் தேதியிலிருந்து குறைந்தது பதினெட்டு மாதமாவது கழிகிறவரையில் செலுத்தமுடியாதென்று தோற்றுகிறது. ஆறுமாத வட்டி செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கவேண்டும் ; ஆறுமாத நோடிஸ் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் ; மேலும், வட்டியானது வாஸ்தவத்தில் ஆறு

மாதம் செலுத்தப்படாமல் பாக்கியாவதற்குமுன் நோடிஸ் கொடுக்கலாமென்று நிபந்தனை ஏற்பட்டிராததனால், அப்படிப்பட்ட நோடிஸை அனுசரித்து ஷை அதிகாரத்தைச் செலுத்துவது அனுகூலமாயிருக்குமென்று எண்ணமுடியாது.

அல்லாமலும், அதிகாரத்தைச் செலுத்துவதற்கு அனுமதி கொடுப்பதற்காக வியாஜ்ஜியம் ஏற்பட்டிராத விஷயத்திலும் நோடிஸ் கொடுக்கப்பட்டிராத விஷயத்திலும் மாத்திரமே கிரயத்துக்கு வாங்குகிறவரின் பாத்தியதை பாதுகாக்கப்படுகிறது. அதிகாரம் ஏற்பட்ட பிறகு அதைத் தகாத வழியில் செலுத்துவதைக்குறித்து ஆக்டில் ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலும், அது -நோடிஸ் கொடுக்கப்பட்டிராவிட்டாலொழிய ஒழுங்கற்றதாகும். நோடிஸ் கொடுக்கப்படாததாகிலும் வேறே ஒழுங்கீனங்களாகிலும் கிரயத்துக்கு வாங்குகிறவருக்குத் தெரிந்திருக்கிற விஷயத்தில் ஷை ஆக்டினால் அவருக்குப் பாதுகாப்பு ஏற்படுவதில்லை. பிரஸ்தாப அதிகாரத்தைச் செலுத்த அனுமதி கொடுக்கப்பட்டிராவிட்டால் மாத்திரமே, நஷ்டமடைந்த நபருக்கு நஷ்டபரிகாரம் பெற வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அனுமதி கொடுக்கப்பட்டிருந்து நோடிஸ் கொடுக்கப்படாததன் காரணமாகவோ மற்றப்படியோ அது தகாதபடி செலுத்தப்பட்டிருக்கும்பட்சத்தில் பரிகாரமே கிடையாது."

இந்தக் குறைகள் இந்துதேசத்து ஆக்டிலும் இருக்கின்றன (1866-ம் வருஷத்து 28-வது ஆக்ட் 6 முதல் 9 வரையிலுள்ள பிரிவுகளைப் பார்க்கவும்). இங்கிலாந்தில் வழங்கும் சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 101 முதல் 108 வரையிலுள்ள பிரிவுகளுக்குச் சரியான ஒப்படை செய்வதைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்ட் 19 முதல் 21 வரையிலுள்ள பிரிவுகளினால் ஷை குறைகள் இங்கிலாந்தில் நிவர்த்திசெய்யப்பட்டன. 69-வது பிரிவில் கண்ட 2 முதல் 4 வரையிலுள்ள பாராக்களும் ஒப்படை செய்வதைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்டின் ஷை பிரிவுகளை அனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. 1866-ம் வருஷத்து 28-வது ஆக்டில் கண்ட நடவடிக்கைமுறை பழையதாய்விட்டதுடன், பிரத்தியட்சமாய்க் குறையுள்ளதாகவும் இருக்கிறது. மேலும், இங்கிலாந்து தேசத்து எந்த சாஸனத்தை ஆதாரமாகக்கொண்டு அது எழுதப்பட்டதோ அந்த சாஸனத்தை ரத்துசெய்து வெகு காலமாகிறது. ஆகவே, ஷை நடவடிக்கைமுறையைத் திருத்தவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

இங்கிலிஷ் மாதிரியான கொதுவைகளில் விற்பனை செய்வதற்கான அதிகாரம் வெளிப்படையாய் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும், இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தில் இப்போதுள்ள நிபந்தனைகளை அனுசரித்து எழுதப்பட்டிருக்கும் 69-வது பிரிவைச் சேர்ந்த 2 முதல் 4 வரையிலுள்ள பாராக்களில் கண்ட நிபந்தனைகள் அப்படிப்பட்ட சகல கொதுவைகளுக்கும் பிரயோகப்படவேண்டும். ஆகவே, 69-வது பிரிவை (a) குறிப்பிட்ட பகுதி சகிதமாக மாற்றி எழுதவேண்டுமென்றும், ரிஸீவரை நியமிப்பது சம்பந்தமாய் அந்தப் பிரிவின் கடைசி பாராவில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகள் வேறே ஒரு பிரிவில் சொல்லப்படவேண்டுமென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

ட்ரஸ்டிகள், கொதுவை வைத்துக்கொண்டவர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களைக் குறித்த 1866-ம் வருஷத்து ஆக்டில் கொதுவைகளைப்பற்றி மாத்திரமல்லாமல், ட்ரஸ்டுகள் குத்தகைகள் அல்லது வாடகைகளைப்போன்ற இதர விஷயங்களைப்பற்றியும் சொல்லியிருப்பதால், அதை ரத்துசெய்யக்கூடாது. ஆயினும், அந்த ஆக்டானது இனிமேல் கொதுவைகளுக்குப் பிரயோகப்பட மாட்டாதென்பதை ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு, "ட்ரஸ்டிகள், கொதுவை வைத்துக்கொள்பவர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களைக் குறித்த 1866-ம் வருஷத்து ஆக்டில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே" என்னும் வார்த்தைகளை 69-வது பிரிவின் ஆரம்பத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

69-வது பிரிவின்படி விற்பனை செய்யும் அதிகாரத்தைச் செலுத்த கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதையுள்ள சகல விஷயங்களிலும் ரிஸீவரை நியமிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகவே, இங்கிலாந்து தேசத்தில் வழங்கும் சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 101 (iii)-வது பிரிவு 109-வது பிரிவு ஆகிய இவைகளைப்போல் (69-A பிரிவென்னும்) ஒரு புதிய பிரிவைச் சேர்த்து, ரிஸீவரை நியமிப்பதற்காகவும் அப்படிப்பட்ட ரிஸீவரின் உரிமைகள் பொறுப்புகள் ஆகிய இவைகளைக் குறித்தும் அப்படிப்பட்ட ரிஸீவர் நியமிக்கப்பட்டால் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்தும் அந்தப் பிரிவில் நிபந்தனை காணவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். அந்தப்படி செய்வதுடன், அடியிற்கண்ட விஷயங்களுக்காக பிரத்தியேகமாய் நிபந்தனை ஏற்படுத்துவதும் விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம்:—

(a) கொதுவைப் பத்திரத்தில் கண்ட ஷரத்துகளில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலொழிய, ரிஸீவரைக் கொதுவை வைத்தவர் கொதுவை வைத்துக்கொண்டவர் ஆகிய இருவர்களின் சம்மதத்துடன் நியமிக்கவேண்டும்;

(b) ரிஸீவராக நியமிக்கப்படவேண்டிய நபரைக்குறித்துக் கட்சிக்காரர்கள் ஒத்துவராதபட்சத்தில், சுருக்கவகையான ஒரு நடவடிக்கைமூலமாய் அவர்கள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளக்கூடியவர்களா யிருக்கவேண்டும்.

மேலும், கொதுவைச் சொத்தை நிர்வாகம் செய்வதற்காவது பரிபாலனம் செய்வதற்காவது சம்பந்தப்பட்ட விஷயங்களில் கோர்ட்டாரின் அபிப்பிராயத்துக்காகவோ ஆலோசனைக்காகவோ கட்டளைகளுக்காகவோ அவர்களுக்குச் சுருக்கவகையான நடவடிக்கைமூலமாய்க் கட்சிக்காரர்களாகிலும் ரிஸீவராகிலும் விண்ணப்பம் செய்துகொள்வது சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதற்காக 1882-ம் வருஷத்திய இந்துதேசத்து ட்ரஸ்டுகளாக்ட் 34-வது பிரிவை அனுசரித்துப் பிரஸ்தாப பிரிவில் நிபந்தனை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பகுதி 36. பிரிவு 72. சுவாதீன அடமானதாரருக்கு மாத்திரமே இந்தப் பிரிவைப் பிரயோகப்படும்படிச் செய்வது தருமமல்ல. சொத்தை நிர்வாகம் செய்வதற்கும் வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் ஆதாயங்களையும் வசூல் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட (a) குறிப்பிட்ட பகுதியில் கண்டிருக்கும் நிபந்தனையைத் தவிர, இந்தப் பிரிவானது பொதுவாய்ச் சகல கொதுவைதாரர்களுக்கும் பிரயோகப்படலாம். கொதுவை வைத்துக்கொண்டவர் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தாலுஞ்சரி வைத்துக்கொண்டிராவிட்டாலுஞ்சரி, (b), (c), (d), (e) குறிப்பிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் காரியங்களுக்காகப் பணம் செலவழிக்கக் கடமைப்பட்டவராவார். ஆனால், (b), (c) குறிப்பிட்ட பகுதிகளின் விஷயத்தில், கொதுவை வைத்தவர் தவறிப்போனலொழிய அவர் அந்த அதிகாரத்தைச் செலுத்தக்கூடாதென்னும் விலக்குக்கு உட்பட்டு மேலேகண்டபடி பணம் செலவழிக்கவேண்டும். சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிராத கொதுவை வைத்துக்கொண்டவர் சொத்தைப் பறிமுதலாகாதபடியாவது விற்பனை செய்யாதபடியாவது பாதுகாப்பதற்காகப் பணம் செலவழிக்கும்பட்சத்தில், செலவழித்த பணத்தை மீண்டும் பெற அவருக்குப் பாத்தியதை உண்டென்று அபிப்ராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ. லா. ரி., கல்கத்தா 30-ம் வால்யும் 794-வது பக்கம்). சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிராத கொதுவை வைத்துக்கொண்டவர் தம்முடைய ஈட்டின் சம்பந்தமாகத் தாம் நியாயமாய்க் கொடுத்த தொகைகளைக் கொதுவைச் சொத்தினின்றும் வசூலிக்க பாத்தியதை இல்லையென்று 72-வது பிரிவினல் ஏற்படவில்லையென சமீப காலத்தில் பம்பாயில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது (பம்பாய் லா. ரி., 25-ம் வால்யும், 843-வது பக்கம்). கொதுவை வைத்துக்கொண்டவர் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தாலுஞ்சரி வைத்துக்கொண்டிராவிட்டாலுஞ்சரி, தமது ஈட்டைப் பாதுகாப்பதற்காகப் பணம் செலவழிப்பது தம்முடைய நன்மையை உத்தேசித்ததாகும். ஆகவே, அந்தப்படி செய்ய அவர் உரிமையுடையவரா யிருக்கவேண்டும். ஆகையால், கொதுவை வைத்துக்கொண்டவர் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிராவிட்டாலும், அவர் (b), (c), (d), (e) குறிப்பிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் காரியங்களுக்காக அவசியமாயிருக்கக்கூடிய பணம் செலவழிக்க பாத்தியதையுடையவரா யிருக்கவேண்டுமென்றும், ஆனல் (b), (c) குறிப்பிட்ட பகுதிகளின் விஷயத்தில், அவர் கொதுவை வைத்தவர் தவறிப்போகிறவரையில் அந்தப்படி செய்ய பாத்தியதை உடையவராயிருக்கக்கூடாதென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம்.

இந்தப் பிரிவின் முதல் பாராவிலுள்ள "கொதுவையிலிருந்துகொண்டிருக்கையில்" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவும் நாங்கள் உத்தேசிக்கிறோம். பிரதமத்திலிருந்த பிரிவானது சுவாதீன அடமானதாரருக்கே பிரயோகப்படுவதாயிருந்ததால், ஷை வார்த்தைகள் அந்தப் பிரிவில் இருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. மேலும், ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் கண்ட நிபந்தனைகளின்படி விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுவதற்காவது மீட்கும் பாத்தியதை அற்

றுப்போகும்படிச் செய்யப்படுவதற்காவது முன்பாக எந்தக் காலத்திலாகிலும் சொத்தை மீட்டுக்கொள்ள கொதுவை வைத்தவருக்குப் பாத்தியதை ஏற்படும்படியாக ஷை கோட் 34-ம் அதிகாரத்தைத் திருத்த நாங்கள் உத்தேசிக்கிறபடியால், சந்தர்ப்பம் ஏற்படுகிறபட்சத்திலே, விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுகிறவரையிலாயினும் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுகிறவரையிலாயினும் இந்தக் காரியங்களுக்காக அவசியமாயிருக்கக்கூடிய பணத்தைச் செலவழிக்க கொதுவை வைத்துக்கொண்டவர் பாத்தியதையுடையவராயிருக்கும்பொருட்டு ஷை வார்த்தைகளை விட்டுவிடவேண்டியிருக்கிறது.

72-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியை விட்டுவிடுவதனால், சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொதுவை வைத்துக்கொண்டவர் அந்த சொத்தை நிர்வாகம் செய்வதற்காகவோ வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் ஆதாயங்களையும் வசூலிப்பதற்காகவோ பணம் செலவழிக்க அவருக்குள்ள உரிமையை எடுத்துவிட நாங்கள் உத்தேசிக்கவில்லை. 76-வது பிரிவானது சுவாதீன அடமானதாரருக்குச் சம்பந்தப்படுகிறபடியால், ஷை உரிமை அங்கீகரிக்கப்படுவதற்காக அந்தப் பிரிவில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

72-வது பிரிவின் கடைசி பாராவுக்கு முந்திய பாராவில் இன்ஷூரன்ஸுக்காக மேல்வாசிப்பணமாய்ச் செலுத்தப்பட்ட தொகையானது கொதுவைப் பணத்தின்மேல் பொறுப்பாயிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இரண்டாவது பாராவிலோ, (a) முதல் (e) வரையிலுள்ள பகுதிகளில் சொல்லியிருக்கும் தொகைகளை அசல் பணத்துடன் சேர்க்கவேண்டுமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. இன்ஷூரன்ஸுக்காகச் செலுத்தும் மேல்வாசித் தொகைகளையும் இதர செலவுகள் கட்டணங்கள் ஆகிய இவைகளையும் எவ்வகையிலாகிலும் வித்தியாசப்படுத்தும் உத்தேசம் வாஸ்தவத்தில் இருக்கிறதாவென்று ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை. இன்ஷூரன்ஸுக்காகச் செலுத்தும் தொகைகளை அவசியமான செலவுகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் செலவழிக்கப்படும் தொகைகளைப் போலவே பாவிக்கவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட தொகைகள் அசல் பணத்துடன் சேர்க்கப்படவேண்டியதுமல்லாமல், அவைகளுக்கு அதே வீதப்படி வட்டியும் கொடுக்கப்படவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

தீர்வை பாக்கிக்காகவாவது குத்தகை அல்லது வாடகைத் தொகை பாக்கிக்காகவாவது கொதுவைச் சொத்து விற்பனை செய்யப்படும் விஷயத்தைக்குறித்து மாத்திரமே இப்போதைய பிரிவில் சொல்லியிருக்கிறது. கொதுவைச் சொத்தானது 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக் கொள்வதைக்குறித்த ஆக்டின்படி நிர்ப்பந்தமாய் எடுத்துக்கொள்ளப்பட்டால், அப்படிப்பட்ட விஷயத்துக்குப் பிரஸ்தாப பிரிவுக்கு அடிப்படையாயுள்ள கோட்பாடு பிரயோகப்படுமா என்னும் பிரசினையைப் பற்றி செய்யப்பட்ட தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. இ.லா.ரி., அலஹாபாத் 16-ம் வால்யும் 78-வது பக்கத்தில், கொதுவைச் சொத்தை நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டின்படி பகுதி 37. பிரிவு 73.

எடுத்துக்கொண்டதற்காகத் தீர்மானிக்கப்பட்ட பிரதிபலன் தொகையின்மேல் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு யாதொரு பொறுப்பும் கிடையாதென்றும், கொதுவை வைத்துக்கொண்டவர் நிலம் எடுத்துக்கொள்வது சம்பந்தமான நடவடிக்கை நடந்தபோது பங்கு கொடுக்கும்படி தாவா செய்திருக்கவேண்டுமென்றும் அலஹாபாத் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். இ.லா.ரி., சென்னபட்டணம் 6-ம் வால்யும் 344-வது பக்கத்தில் இதற்கு மாறுன அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. மேலும், அலஹாபாத் தீர்மானம் கல்கத்தாவிலும் பாட்ணுவிலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை (க.வீ.நோ., 13-ம் வால்யும் 350-வது பக்கம், பாட்ணு லா.ஜ., 5-ம் வால்யும் 650-வது பக்கம்). யாதொரு சொத்தை நிர்ப்பந்தமாய் எடுத்துக்கொள்வது 68-வது பிரிவின் தாற்பரியப்படி அது அழிந்துபோவதற்குச் சமானமாகமாட்டாதென்றும், எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்து பணமாய் மாற்றப்படுகிறதென்றும் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., சென்னபட்டணம் 13-ம் வால்யும் 321-வது பக்கம்). 73-வது பிரிவுக்கு அடிப்படையாயுள்ள 'மாற்றுவது' என்னும் பொதுக் கோட்பாட்டின் பிரகாரம், பிரதிபலனைத் தீர்ப்பு செய்யப்படும் தொகையில் பிரஸ்தாப நிலம் எந்தப் பொறுப்புக்கு உட்பட்டிருக்கிறதோ அந்தப் பொறுப்பும் அடங்கியிருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில், பார்லமெண்டாரால் செய்யப்பட்ட ஆக்டுகளின்படி, உதாரணமாக லாண்ட் க்ளாஸெஸ் கன்ஸாலிடேஷன் ஆக்ட் 69-வது பிரிவின்படி, ஏற்பட்ட அதிகாரங்களினுல் நிர்ப்பந்தமாய் மாற்றப்பட்ட அசையாப் பொருளிலிருந்து கிடைக்கும் தொகை கோர்ட்டில் செலுத்தப்படுகிறது. அந்தப் பணமானது - அதில் பற்றுள்ள நபர்கள் அதை மறுபடியும் நிலத்தின்மேல் போடுவதற்குள்ள உரிமைகளுக்குட்பட்டு சாதாரணமாய்க் கோர்ட்டிலேயே இருந்துவருகிறது. மேலும், அதற்கு அசையாப் பொருளின் தன்மை இருப்பதாக எண்ணப்படுகிறது. (Sm. and G. 1-ம் வால்யும் 32-வது பக்கத்திலும், W. & T.L.C. 8-ம் பதிப்பு 1-ம் வால்யும் 393-வது பக்கத்திலும் கண்டிருக்கும் ஸ்டுவேர்ட் வியாஜ்ஜியம்). பெரும்பான்மையான ஹைகோர்ட்டுகளால் கொள்ளப்பட்ட அபிப்பிராயமானது மேலே எடுத்துரைத்த பொதுக் கோட்பாட்டை ஒத்திருக்கிறது. ஆகவே, 73-வது பிரிவுடன் (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்த்து மேற்படி கோட்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசிக்கிறோம்.

கொதுவை வைத்துக்கொண்டவருக்கு விற்பனை மூலமாய்க் கிடைத்த பணத்தில் மிகுதியாயுள்ள தொகையின்மேல்தான் பொறுப்பு இருக்கிறதென்று 73-வது பிரிவில் இப்போது நிபந்தனை கண்டிருக்கிறது. "பொறுப்பு" என்னும் வார்த்தையை உபயோகித்திருப்பது பொருத்தமாயில்லையென்று எங்களுக்குத் தோற்றுகிறது; ஏனென்றால், 100-வது பிரிவின்படிக்கான யாதொரு பொறுப்பானது அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்படுவதுமல்லாமல், ஒற்றியைப்போலவே அமுலுக்கும் கொண்டுவரப்படுகிறது. ஒற்றியை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக நடத்தும் நடவடிக்கைமுறையானது யாதொரு நிதியின்மேலுள்ள தாவாவை அமுலுக்குக் கொண்டுவருவதற்குப் பிரயோகப்படமாட்டாதென்பது வெளிப்படை. அந்த வார்த்தையை உபயோகிப்பதனுல், கொதுவை வைத்துக்கொண்டவ

ருக்குக் கிடைக்கும் பரிகாரமும் நிச்சயமற்றதாயிருக்கிறது. ஆகவே, அதை உபயோகிக்காமல் தடுத்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி மிகுதித் தொகையிலிருந்தாவது கொதுவை வைத்தவருக்குக் கொடுக்கப் படக்கூடிய பிரதிபலன் தொகையிலிருந்தாவது தொகை கொடுக்கும் படி தாவா செய்ய கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை உண்டென்று நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். யாதொரு பொறுப்பின் விஷயத்தில் எப்படியோ அப்படியே முன்னிட்ட பாத்தியதைகளின் விஷயத்திலும் திருத்தப் பட்ட பிரிவில் நாங்கள் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம். கொதுவை வைக்கப்பட்ட ஈடானது பணமாய் மாற்றப்பட்டால், முக்கியமாய்க் கொதுவையை அமுலுக்குக் கொண்டுவர இனி வியாஜ்ஜியம் தொடருவது கொதுவை வைத்துக்கொண்டவருக்கு கூடாமையாயிருக்கும்போது பணம் கிரமமாய்ச் சேரவேண்டிய தேதிவரையில் அவர் ஏன் காத்துக்கொண்டிருக்கவேண்டுமென்பதற்குக் காரணம் எங்களுக்குப் புலப்படவில்லை.

"ஒரு கடன்காரருக்குப் பதிலாக மற்றொரு கடன்காரர் பர்த்தி செய்யப்படுவது" என்னும் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு இந்தப் பிரிவுகள் எழுதப்பட்டிருக்கின்றன. புதிதாய்ச் சேர்க்க உத்தேசித்திருக்கும் 92-வது, 94-வது பிரிவுகளைப்பற்றிய குறிப்புகளில் சொல்லியிருக்கும் காரணங்களுக்காக இந்தப் பிரிவுகளை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம். **பகுதி 38. பிரிவுகள் 74, 75.**

சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொதுவை வைத்துக்கொண்டவர் ஸர்க்கார் தீர்வையையும் பொதுவான இதர செலவுகளையும் குத்தகை அல்லது வாடகை பாக்கியையும் செலுத்துவதற்கு உட்பட்டவராவாரென்று 76-வது பிரிவைச்சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. கொதுவைச் சொத்து குத்தகை அல்லது வாடகையின்மேல் கைப்பற்றில் வைத்திருக்கும் சொத்தாயிருந்தால், குத்தகை அல்லது வாடகைக் கால அளவில் பாக்கியாய் ஏற்படக்கூடிய யாதொரு குத்தகை அல்லது வாடகைத் தொகையையும் செலுத்துவது அவருடைய கடமையாகும். ஆகவே, (c) குறிப்பிட்ட பகுதியில் "பொதுத் தன்மையானயான மற்ற சகல செலவுகளையும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "சகல குத்தகை அல்லது வாடகைத் தொகையையும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம். **பகுதி 39. பிரிவு 76.**

இந்தப் பிரிவின் (b), (d) குறிப்பிட்ட பகுதிகளில் "குத்தகை அல்லது வாடகைப் பணத்தையும் லாபத்தையும்" என்னும் வார்த்தைகளும், (c) குறிப்பிட்ட பகுதியில் "வரும்படி" என்னும் வார்த்தையும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. (h), (i) அடையாளமிட்ட பகுதிகளிலும் 77-வது பிரிவிலும் "வரப்பற்றுவது", "வரப்பற்றின தொகை", "வரவு" என்னும் வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வார்த்தைகள் எந்த சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த சந்தர்ப்பங்களில் அவை பொருத்தமாயிருந்திருந்தபோதிலும், அவை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றனவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஸர்க்கார் தீர்வையும் பொதுச் செலவுகளும் குத்தகை அல்லது வாடகைத்

தொகையும் அசையாப் பொருளின்மேலுள்ள எல்லாப் பொறுப்பு களிலும் முதலில் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புகளாகும். அவைகளைச் செலுத்தத் தவறிப்போகும் பட்சத்தில், சொத்தானது விற்பனை செய்யப்படுவதற்கு உட்பட்டுவிடுகிறது. சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொதுவை வைத்துக் கொண்டவர் உட்பட சொத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் யாதொரு நபரின் பொறுப்பானது அந்த சொத்திலிருந்து கிடைக் கும் வரும்படியை அனுபவிக்க அவருக்குள்ள உரிமைக்குச் சமமாயி ருக்கிறது. ஆகவே, இதற்கு மாறான ஒப்பந்தம் ஏற்பட்டிராவிட் டால், சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொது வை வைத்துக்கொண்டவருக்கு அந்த சொத்திலிருந்து என்ன வரும் படி கிடைத்தபோதிலும் அதிலிருந்து மேற்படி பாக்கித் தொகைகளைச் செலுத்துவது அவருடைய முதல் கடமையாகுமென்று (c) குறிப்பி ட்ட பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தப் பொறுப்புகள் நிறைவேற்றப்படுகிறவரையில் யாதொரு தொகையைக் கழித்துக் கொள்வதற்கு அவர் பாத்தியதை கொண்டாடக்கூடாது. ஆயினும், (d) குறிப்பிட்ட பகுதியில் "வாடகை அல்லது குத்தகைத் தொகை யும் லாபமும்" என்னும் சொற்றொடரானது - சொத்திலிருந்து வாஸ்தவத்தில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட தொகைகளிலிருந்து செ லுத்தவேண்டியதாய் (c) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் தொகைகளையும் அசல் பணத்துக்கு வட்டியையும் கழித்துக்கொண்ட பிறகு நிற்கும் தொகையிலிருந்து சொத்துக்கு அவசியமாயுள்ள மா மத்துகளைச் செய்ய கொதுவை வைத்துக்கொண்டவர் உட்பட்டவ ராவாரென்பதைக் குறிப்பிடுவதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கி றது. மாமத்துகளுக்காக அவர் தம் சொந்த பணத்தைச் செலவழிக்க கடமைப்பட்டவரல்ல (இ. லா. ரி., சென்னபட்டணம் 15-ம் வால்யும் 290-வது பக்கம்). (g) அடையாளமிட்ட பகுதியின்படி அவர் வைத் துவரக் கடமைப்பட்டிருக்கும் கணக்கை இன்ன விதமாய் எடுக்க வேண்டுமென்று (h) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிட்டிருக் கிறது. (g) அடையாளமிட்ட பகுதியின்படி, அவர் - "வரப்பற் றிக்கொண்ட சகல தொகைகளுக்கும்" ஸ்பஷ்டமாயும் பூர்த்தியா யும் சரியாயும் உள்ள கணக்கு ஒன்றை வைக்கவேண்டியவராவார். கொதுவை வைத்துக்கொண்டவரால் வரப்பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகளிலிருந்து (h) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் செலவுத் தொகைகளைக் கழித்துக்கொண்ட பிறகு மிகுந்திருக்கும் தொகையைக் கொதுவைப் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற் காக எப்படி பற்றெழுதவேண்டுமென்பதைக் குறித்து அந்தப் பகு தியில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் "வரப்பற்று வது" என்னும் வார்த்தை சரியாய் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வரப்பற்றிக்கொள்ளப்பட்ட தொகையானது வாஸ்தவத்தில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட மொத்த தொகையாயிருக்கவேண்டுமெ ன்றும் இதிலிருந்து தெரியவருகிறது. (i) குறிப்பிட்ட பகுதியில் "மொத்த வரும்படி" என்னும் வார்த்தைகள் உபயோகிக்கப்பட் டிருக்கின்றன. சொத்தை நிர்வாகம் செய்வதற்காவது வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் லாபத்தையும் வசூலிப்பதற் காவது செய்யப்பட்ட செலவுகளைக் கழிப்பதற்காக (h) அடையாள

மிட்ட பகுதியில் நிபந்தனை எதுவும் ஏற்படுத்தப்படவில்லையென்பதை நோக்கும்போது, ஷை சொற்றொடரை உபயோகித்தது முற்றிலும் தகுதியாயிருந்தது. இந்த நிபந்தனையை இப்போது (h) அடையாளமிட்ட பகுதியில் ஏற்படுத்தியிருக்கிறபடியால், (i) அடையாளமிட்ட பகுதியில் "மொத்த" என்னும் வார்த்தையை வைத்திருப்பது அனுவசியமாகும். அப்பிரகாரமே அதை விட்டு விட்டிருக்கிறது.

(h) அடையாளமிட்ட பகுதியில் "வட்டியினிமித்தம்" என்னும் வார்த்தைகளுக்குமுன் உள்ள "கொதுவைப் பணத்துக்கு" என்னும் வார்த்தைகளின் அர்த்தம் சந்தேகத்துக்கு இடம் கொடுக்கிறது. 58-வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி, "கொதுவைப் பணம்" என்னும் வார்த்தைகளில் அசலும் வட்டியும் ஆகிய இவ்விரண்டும் அடங்குகின்றன. கொதுவைப் பத்திரத்தில் சாதாரண வட்டிமாத்திரமே செலுத்த நிபந்தனைகண்டிருக்கும்போது, இந்தப் பகுதியிலுள்ள "கொதுவைப் பணம்" என்பது வட்டிக்கு வட்டியைக் குறிப்பிடக்கூடும். "கொதுவைப் பணத்துக்கு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம். குறித்த ஒரு கொதுவைப் பத்திரத்தில் கண்ட ஷரத்துகளின்படி வட்டியானது சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாதாரண வட்டியாகவோ வட்டிக்கு வட்டியாகவோ கணக்கிடப்படுமென்பதை உணர்த்துவதற்கு "வட்டி" என்னும் வார்த்தை ஒன்றே போதுமானது.

72-வது பிரிவில், கொதுவைச் சொத்தை நிர்வாகம் செய்வதற்காகவும் வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் லாபத்தையும் வசூலிப்பதற்காகவும் கொதுவை வைத்துக்கொண்டவருக்குள்ள உரிமையைப்பற்றிச் சொல்லும் (a) குறிப்பிட்ட பகுதியை விட்டுவிடவேண்டுமென்று நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். முக்கியமாய் ஷை பிரிவில் சொல்லியிருக்கும் காரியங்களுக்காகச் செலவிடப்படும் பணத்தை அசலுடன் சேர்க்கவேண்டியிருப்பதால், அந்தப் பிரிவில் ஷை பகுதியைச் சேர்த்திருப்பது தகாதென்பது எங்கள் அபிப்பிராயம். சொத்தை நிர்வாகம் செய்வதற்கோ வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் லாபத்தையும் வசூலிப்பதற்கோ செலவிட்ட பணத்தை அசலுடன் சேரும் பணமாக பாவிக்கக்கூடாதென்று நாங்கள் எண்ணுகிறோம். 76-வது பிரிவைச் சேர்ந்த (c), (d) குறிப்பிட்ட பகுதிகளில் செலுத்தப்படவேண்டியவைகளாகச் சொல்லியிருக்கும் தொகைகளின் விஷயத்தில் எப்படியோ அப்படியே நிர்வாகம் செய்வதற்காகவோ வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் லாபத்தையும் வசூலிப்பதற்காகவோ செலவிடப்பட்ட பணத்தைச் செலவாக பாவிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம் (கொதுவையைப்பற்றி கோஸ் என்பவர் எழுதியுள்ள புத்தகம் 4-ம் பதிப்பு 2-ம் வால்யும் 805-வது பக்கத்தைப் பார்க்கவும்). இங்கிலாந்தில் அப்படிப்பட்ட செலவுகள் "நியாயமாய் விட்டுக் கொடுக்கும் தொகைகளாக" பாவிக்கப்படுகின்றன (டிக்ரிகளைப் பற்றி ஸேடன் என்பவர் எழுதியுள்ள புத்தகம், 3-ம் வால்யும் 1976-வது பக்கத்தைப் பார்க்கவும்). ஆகவே, நிர்வாகம் செய்வதற்காகவும் வாடகை அல்லது குத்தகைத் தொகைகளையும் லாபத்தையும் வசூலிப்பதற்காகவும் பிடிக்கும் செலவுகளை, 76-வது பிரிவைச் சேர்ந்த

(h) அடையாளமிட்ட பகுதியில் செலவுத் தொகைகளாகக் கண்டிருக்கும் இதர தொகைகளுடன்கூட சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொதுவை வைத்துக்கொண்டவர் வரப்பற்றியிருக்கும் பணத்திலிருந்து கழிக்கவேண்டுமென்று ஷை பகுதியில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். அந்தப்படி செய்வதனால், சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அப்படிப்பட்ட செலவுகளைச் செய்வதற்குள்ள உரிமையும் செலாவணியாகும்படி நாங்கள் செய்கிறோம். (h) குறிப்பிட்ட பகுதியின்படி கணக்கு எடுக்கும்போது, வரவு வந்திருக்கும் தொகையிலிருந்து செலவுகளைக் கழிக்கையில் தான் அவருக்கு அப்படிப்பட்ட பணத்தை வசூலிப்பதற்குள்ள பாத்தியதை ஏற்படுகிறது.

பாக்கியாயிருக்கும் தொகையைக் கொதுவை வைத்தவர் செலுத்தக் காட்டின பிறகாவது கட்டின பிறகாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குக் கிடைத்திருக்கும் வரவுத் தொகைகளுக்காகிலும் மொத்த வரும்படிக்காகிலும் அவர் கணக்கு சொல்லவேண்டுமென்று (i) அடையாளமிட்ட பகுதியில் நிபந்தனை ஏற்படுத்தியிருந்தபோதிலும், இ. லா. ரி., சென்னபட்டணம் 47-ம் வால்யூம் 7-வது பக்கத்தில் கண்ட வியாஜ்ஜியத்திலே அடியிற்கண்டபடி அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயம் என்னவென்றால், மேலே கண்டபடி காட்டப்பட்ட பிறகு அல்லது கட்டப்பட்ட பிறகுங்கூட, கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைச் சொத்தின் விஷயத்தில் கிரமமாய்ச் செலவழித்திருக்கக்கூடிய யாதொரு தொகையை அவர் கழித்துக்கொள்ளலாமென்பதே. இந்தக் கொள்கை சரியானதல்லவென்பது எங்களுடைய அபிப்பிராயம். கொதுவை விஷயமாய் பாக்கியாயுள்ள தொகையைக் கிரமமாய்ச் செலுத்தக் காட்டின பிறகாகிலும் கோர்ட்டில் கட்டின பிறகாகிலும், கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவைப் பணத்துடன் எந்தத் தொகையையும் சேர்ப்பதற்கு இடம் இருக்கக்கூடாது. ஆகவே, கொதுவை விஷயமாய் பாக்கியாயுள்ள தொகையைச் செலுத்தக் காட்டின அல்லது கட்டின தேதிக்குப் பிறகு செய்யப்படும் எந்தசெலவுகளின்பொருட்டும் வரவிலிருந்து யாதொரு தொகையைக் கழித்துக்கொள்ள கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பாத்தியதை கிடையாதென்று (i) அடையாளமிட்ட பகுதியில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பிரிவு 79.—(H. L. C. 9-ம் வால்யூம் 514-வது பக்கத்தில் கண்ட) ஹாப்கின்ஸனுக்கும் ரோல்ட்டுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் லார்ட் க்ரான்வொர்த் அபிப்பிராய பேதப்பட்டுக் கொடுத்த தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு 79-வது பிரிவு எழுதப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வில்லங்கம் இருப்பதாக நோடீஸ் பெற்ற பிறகு முதலில் கொதுவை வைத்துக்கொண்டவர் கொடுக்கும் எந்தக் கடன் தொகைகளின் விஷயத்திலும் அவருக்குள்ள சுதந்தரத்தை நிறுத்திவைக்கவேண்டுமென்று ஷை வியாஜ்ஜியத்திலே ஜட்ஜுகளில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்பட்டார்கள். ஷை பெரும்பான்மையோர் செய்த தீர்ப்புக்கு ஆதாரமாயுள்ள கோட்பாடு என்னவென்றால், முதலில் கொதுவை வைத்துக்கொண்டவர் இஷ்டப்பட்டால் பின்

னும் ஏதேனும் கடன் கொடுக்கலாம் அல்லது கொடுக்க மறுக்கலாமென்பதும், அவர் அந்தப்படி கொடுக்க உடன்பட்டிருந்தபோதிலும் அந்த உடன்படிக்கையைக் குறித்த பிரகாரம் நிறைவேற்றும்படிச் செய்யமுடியாதென்பதுமேயாம் [(1892) சா. 1-ம் வால்யும் 271-வது பக்கம் ; பம்பாய் 12-ம் வால்யும் 242-வது பக்கம்]. ஆகவே, பிற்பட்ட வில்லங்கதாரருடைய உரிமைகளை பாதிக்கும்பொருட்டு முதலில் கொடுத்த தொகையுடன்கூட பின்னும் யதேச்சையாய் யாதொரு தொகையைக் கொடுக்க முதலில் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு இடம் கொடுக்கக்கூடாது. ஏனென்றால், ஷை வில்லங்கதாரர் வில்லங்கம் ஏற்பட்ட காலத்தில் இருந்த அந்த சொத்தின்மேல் தமக்கு ஈடாக ஒரு பொறுப்பை அடைகிறார். ஆனால், லார்ட் க்ரான்வொர்த் எடுத்துக்காட்டியபடி, கொதுவைகள் வெறும் ஒப்பந்தங்களேயாகும். எனவே, அவைகளின்படி கட்சிக்காரர்களின் உரிமைகள் இன்னவையென்று ஒருமுறை வரையறுத்துத் தெரிந்துகொள்ளப்பட்டால், அவைகளில் இன்னவை முற்பட்டவையென்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக யாதொரு விதி ஏற்படுத்துவது அநியாயமென்று சொல்லமுடியாது. ஷை ஜட்ஜ் அடியிற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிறார்: "இனிமேல் ஏற்படக்கூடிய கடன்களும் இப்போதுள்ள கடன்களும் அடங்கும்படியாக முந்திய கொதுவை ஒன்றிருக்கிறதென்று நோடிஸ் பெற்றும் இரண்டாம் கொதுவையின்மேல் யாதொரு நபர் பணம் கொடுக்கும்பட்சத்தில், அவருடைய சுதந்தரமானது நிறுத்திவைக்கப்பட்டு, முந்திய ஈட்டில் அடங்கும் அல்லது அடங்கக்கூடிய முழுஅளவுக்கும் முதலில் கொதுவை வைத்துக்கொண்டவருடைய சுதந்தரம் பாராட்டப்படும் என்னும் சட்டத்தை ஒருமுறை ஏற்படுத்தி அதைத் தெரிந்துகொண்டிருக்கும்பட்சத்தில், அவர் முறையிட்டுக்கொள்வதற்கு எவ்வித நியாயமும் இல்லை."

1870-ம் ௵ மேமீ 20உயுள்ள தங்களுடைய ரிபோர்ட்டில், லா கம்மிஷனர்கள் ஹாப்கின்ஸனுக்கும் ரோல்ட்டுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் லார்ட் க்ரான்வொர்த் மற்ற ஜட்ஜிகளுடன் வித்தியாசப்பட்டுத் தெரிவித்த அபிப்பிராயமானது ஜட்ஜுகளில் பெரும்பான்மையோர் வெளியிட்ட அபிப்பிராயத்தைக்காட்டிலும் அதிக நியாயமானதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும், ஷை பெரும்பான்மையோரின் அபிப்பிராயமே இங்கிலாந்தில் அனுசரிக்கப்பட்டுவந்தது [(1898) சா. 1-ம் வால்யும் 488-வது பக்கத்தில் கண்ட வெஸ்டுக்கும் வில்லியம்ஸுக்கும் நடந்த வியாஜ்ஜியம் ; C. A. (1899) சா. 1-ம் வால்யும் 132-வது பக்கம்]. ஆனால், அடியிற்கண்ட விஷயங்களிலே, முநதி கொதுவை வைத்துக்கொண்டவர் தாம் முதலில் கொடுத்திருக்கும் தொகையுடன்கூட பின்னும் தொகைகளைச் சேர்த்து, தம்முடைய சுதந்தரத்தைப் பிந்திய வில்லங்கங்களினால் ஏற்படும் சுதந்தரத்தைக்காட்டிலும் முற்பட்டதெனக் கொள்ளலாமென்று 1924-ம் ௵த்தில் சொத்து சம்பந்தமான சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது :—

(i) மேலேகண்டபடி கொள்ளவேண்டுமென்று பிற்பட்டு கொதுவை வைத்துக்கொள்ளுகிறவர்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு பின்னும் தொகைகள் கொடுக்கப்பட்டால் ;

(ii) பிற்பட்ட கொதுவைகள் இருப்பதாக நோடிஸ் பெறுமல் கேடி தொகைகள் கொடுக்கப்பட்டால்;

(iii) முந்திய கொதுவையில் உடன்படிக்கை மூலமாய் ஏற்பட்ட ஒரு கடமையை அனுசரித்து அந்தத் தொகைகள் கொடுக்கப்பட்டால்; பிற்பட்ட கொதுவைகள் இருப்பதாக முந்தி கொதுவை வைத்துக்கொண்டவர் அந்தக் காலத்தில் நோடிஸ் பெற்றிருந்தாலுஞ்சரி பெற்றிராவிட்டாலுஞ்சரி பாதகமில்லை.

சொத்தைக் குறித்த 1925-ம் வருஷத்து ஆக்ட் 94-வது பிரிவில் இந்த நிபந்தனைகள் மீண்டும் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பிரிவைத் திருத்தவேண்டியதில்லையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பகுதி 40. பிரிவு 80. "வெவ்வேறு காலங்களில் கொடுக்கப்பட்ட ஈடுகளை ஒன்றுய்ச் சேர்ப்பதில்" அடங்கியுள்ள கோட்பாடானது ஒரு கடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரைப் பார்த்திசெய்வதற்குச் சம்பந்தப்பட்டிருப்பதால், அந்தப்படி பார்த்திசெய்வதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுக்குப் பிறகு 80-வது பிரிவை அமைக்கும்பொருட்டு அதற்கு 93-வது பிரிவு என்று இலக்கமிட உத்தேசிக்கிறோம்.

பகுதி 41. பிரிவு 81. ஈடுகளை வரிசைக் கிரமப்படுத்துவதைக்குறித்து 81-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. கொதுவையைப்பற்றி பிஷர் என்பவர் எழுதிய புத்தகத்தில் (6-ம் பதிப்பு 694-ம் பக்கத்திலுள்ள 1356-வது பகுதியில்) உள்ள அடியிற்கண்ட வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு கேடி பிரிவு எழுதப்பட்டதென்று 1882-ம் வருஷத்து 4-வது ஆக்டுக்கு அடிப்படையாயுள்ள நடவடிக்கைக்குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது:—

"இரண்டு பூஸ்திதிகளின் சொந்தக்காரர் அவைகளிரண்டையும் ஒரு நபருக்குக் கொதுவை வைத்திருந்து, பிறகு நோடீஸ்கொடுக்காமலே அவைகளில் ஒன்றை மற்றொருவருக்குக் கொதுவை வைத்தால், முதலில் கொதுவை வைத்துக்கொண்டவருடைய கடன் எவ்வளவு உண்டோ அதை இரண்டாவது நபருக்குச் கொதுவை வைக்கப்பட்டிராத பூஸ்திதியிலிருந்து கொடுத்துத் தீர்க்கவேண்டுமென்று இரண்டாவது கொதுவை வைத்துக்கொண்டவர் ஈடுகளை வரிசைக் கிரமப்படுத்துவதென்னும் கோட்பாட்டின்படி நிர்ப்பந்தம் செய்யலாம். ஆனால், அந்தப்படி செய்கையில் முதலில் கொதுவை வைத்துக்கொண்டவருடைய உரிமைகளுக்குப் பாதகம் உண்டாக்கக்கூடாது."

56-வது பிரிவைப்போலவே இந்தப் பிரிவிலும் "இரண்டு சொத்துக்கள் மாத்திரமே" இருக்கும்போது ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவதற்காக நிபந்தனை கண்டிருக்கிறது. மேலும், இரண்டாவது கொதுவை வைத்துக்கொண்டவர் ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்த உத்தேசிக்கிற விஷயத்துக்குமாத்திரமே அது பிரயோகப்படுகிறது. இரண்டுக்கு மேற்பட்ட சொத்துக்கள் இருக்கும் விஷயத்துக்காவது, சொத்தானது இரண்டு தடவைக்கு மேற்பட்டுக் கொதுவை வைக்கப்பட்டிருந்து இரண்டாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குப்

பிற்பட்டு கொதுவை வைத்துக்கொண்டவர் முந்திய ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்தக் கோரினால் அந்த விஷயத்துக்காவது ஷை பிரிவில் நிபந்தனை கண்டிருக்கவில்லை. அந்தப் பிரிவானது இரண்டுக்கு மேற்பட்ட சொத்துக்கள் இருக்கும் விஷயங்களுக்கும் பொதுவாய் பிற்பட்ட சகல கொதுவைதாரர்களுக்கும் பிரயோகப்படவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்தி, அதன் வியாபகத்தை விஸ்தரிக்க நாங்கள் உத்தேசிக்கிறோம்.

மேலும், பிற்பட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர் ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவதற்குப் பாத்தியதையுடையவராயிருப்பதற்கு, முந்திய கொதுவையைப்பற்றி அவர் நோடிஸ் பெறவில்லையென்று ஷை பிரிவின்படி எண்பிக்கவேண்டியிருக்கிறது (இ. லா. ரி., கல்கத்தா 23-ம் வால்யும் 790-வது பக்கம்) (Atk. 2-ம் வால்யும் 446-வது பக்கத்தில் கண்ட) லானாய்க்கும் ஆதொல் பிரபுவுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் லார்ட் ஹார்ட்விக் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டு இந்த திட்டம் விதிக்கப்பட்டதாகத் தோற்றுகிறது. இங்கிலாந்து தேசத்தில் பிற்பட்டுச் செய்யப்பட்ட தீர்மானங்களில் இந்த திட்டம் அனாவசியமென்று கொள்ளப்பட்டது. (Beav. 20-ம் வால்யும் 614-வது பக்கத்தில் கண்ட) கிப்ஸனுக்கும் ஸீக்ரினுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவது சம்பந்தமான விதிக்கும் முந்திய கொதுவையைப்பற்றி பிற்பட்டு கொதுவை வைத்துக்கொண்டவர் நோடிஸ் பெற்றாரா இல்லையா என்னும் பிரசினைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று லார்ட் ராமிலி சொல்லியிருக்கிறார். [சா. 2-ம் வால்யும் 54-வது, 73-வது பக்கங்களில் கண்ட (1893-ம் வருஷத்தில்) ப்ளின்டுக்கும் ஹோவார்டுக்கும் நடந்த வியாஜ்ஜியக் குறிப்புகளையும் பார்க்கவும்.] இந்தியாவில்கூட சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் பிரயோகப்படாத விஷயங்களிலே, பிற்பட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர் முந்திய கொதுவையைப்பற்றி நோடிஸ் பெற்றிருந்தாலுங்கூட அவர் ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்தலாமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டது (இ. லா. ரி., பம்பாய் 18-ம் வால்யும் 160-வது பக்கம்; பம்பாய் 22-ம் வால்யும் 304-வது பக்கம்). (W. & T. L. C. 1-ம் வால்யும் 38-வது பக்கத்தில் கண்ட) ஆல்ட்ரிச்சுக்கும் கூபருக்கும் நடந்த முக்கியமான வியாஜ்ஜியத்தில் சொல்லியிருக்கிறபடி, ஈடுகளை "வரிசைக்கிரமப்படுத்துவதி"லுள்ள கோட்பாடு என்னவென்றால், கடன் கொடுத்த ஒருவர் கடன் கொடுத்த மற்றொருவருக்கு ஏமாற்றம் உண்டாகும்படிச் செய்வது அவருடைய இஷ்டத்தைப் பொறுத்ததாயிருக்கக்கூடாதென்பதும், முதலில் கடன் கொடுத்தவர் தமக்குமாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கும் ஈட்டினின்றும் பெறக்கூடிய சகல பரிகாரத்தையும் பெறுகிற வரையில் அவர் பிற்பட்டுக் கடன் கொடுத்தவருடைய ஈட்டின்மேல் போவது நியாயமா என்னும் பிரசினை ஏற்பட்டு அந்தப்படி போவதற்கு நிர்ப்பந்தம் ஏற்படுகிறதென்பதுமே. எனவே, ஷை கோட்பாட்டைச் சரியாய்ப் பிரயோகப்படுத்தும்பட்சத்தில், பிற்பட்ட வில்லங்கதாரர் முந்திய கொதுவையைப்பற்றி நோடிஸ் பெற்றாரா இல்லையா என்னும் பிரசினை அவ்வளவு முக்கியமானதல்ல. மேலும், "முதல் கொதுவைக்காரனுடைய சுதந்தரத்திற்குப் பாதகம் உண்டா

கும்படிக்கல்ல" என்னும் வார்த்தைகள் முந்தி கொதுவை வைத்துக் கொண்டவருக்கு எவ்வித அநியாயமும் ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமானவையாகும். ஆகவே, "முந்திய கொதுவையைக்குறித்து நோடிஸ் பெற்றிராத" என்னும் வார்த்தைகளை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம்.

"ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவது" என்னும் கோட்பாட்டைப் பிரயோகிக்கும்பொருட்டு இரண்டு நிதிகள் அல்லது ஈடுகள் இருக்கவேண்டுமென்றும், அவ்விரண்டும் பிரதமத்தில் ஒரே சொந்தக்காரருடைய சொத்தாயிருக்கவேண்டுமென்றும், கடன்கள் ஒரே நபருடைய கடன்களாயிருக்கவேண்டுமென்றும் நன்றாய் ஸ்தாபிதமாயிருக்கிறது [Ves. 17-ம் வால்யும் 520-வது பக்கத்தில் கண்ட (1811-ம் வருஷத்தில்) எக்ஸ்பார்ட்டியாய் நடந்த கெண்டால் என்பவரின் வியாஜ்ஜியம்; W & T. L. C. 1-ம் வால்யும் 46-வது பக்கம், ஹால்ஸ்பரி என்பவர் எழுதிய இங்கிலாந்துதேசத்துச் சட்டங்கள் என்னும் புத்தகம் 21-ம் வால்யும் 304-வது பக்கம்]. ஏற்கனவே கொதுவை வைக்கப்பட்டிருக்கும் சொத்தின் ஒரு பாகம் மாத்திரமே பிற்பட்டு விற்பனை செய்யப்பட்டோ அல்லது கொதுவை வைக்கப்பட்டோவுள்ள யாதொரு விஷயத்துக்கு இங்கிலாந்திலாகிலும் இந்த தேசத்திலாகிலும் ஷை கோட்பாடு பிரயோகிக்கப்படவில்லை. முந்தி கொதுவை வைத்துக்கொண்டவர் தம்முடைய பணத்தை வரப்பற்றிக்கொள்வதற்காக கொதுவைச் சொத்தின் ஒரு பாகத்தின்மேல் நடவடிக்கை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அவரும் கொதுவை வைத்தவரும் பிரதிகூலமாய் பாதிக்கப்படக்கூடும். மேலும், சொத்தைப் பாகம் பாகமாக விற்பனை செய்யும்பட்சத்தில் சரியான விலையும் வராமற்போகும். ஆகவே, அப்படிப்பட்ட விஷயத்துக்கும் பிரயோகப்படும்படி ஈடுகளை வரிசைக்கிரமப்படுத்துவதென்னும் கோட்பாட்டை வியாபிக்கும்படிச் செய்வது யுக்தமாயிருக்குமென்று நாங்கள் எண்ணவில்லை.

இந்தப் பிரிவின் கடைசி பாகத்திலுள்ள "ஐவேஜுக்கு" என்னும் வார்த்தைக்குமுன் இருக்கும் "பெறுமானமுள்ள" என்னும் வார்த்தையை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம். ஏனென்றால், தகுந்த ஐவேஜு என்பதற்கும் பெறுமானமுள்ள ஐவேஜு என்பதற்கும் வித்தியாசம் எதுவும் இருப்பதாக இந்துதேசத்துச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை (போலாக்கும் முல்லாவும் பதிப்பித்த கான்ட்ராக்ட் ஆக்ட் 34-வது பக்கத்தில் கண்ட இந்துதேசத்துக் கான்ட்ராக்ட் ஆக்ட் 25-வது பிரிவைப் **பார்க்கவும்**.)

பகுதி 42. பிரிவு 82. பல சொத்துக்கள் கொதுவை வைக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் கொதுவைக்கடனுக்குப் பணம் செலுத்தும் விஷயத்தில் இன்ன விதியை அனுசரிக்கவேண்டுமென்று இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறது. கொதுவைக் கடனுக்குப் பணம் செலுத்துவது சம்பந்தமான கோட்பாடு, பல சொத்துக்கள் கொதுவை வைக்கப்பட்டிருக்கும் யாதொரு விஷயத்துக்கு மாத்திரமேயல்லாமல், கொதுவைச் சொத்து பிற்பட்டு ஸ்பஷ்டமாய்த் தனித்தனியான பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்து கூட்டுப் பங்குக்காரர்களின் பொறுப்பு ஸ்பஷ்டமாய்த் தனித்தனியாகவன்றி கூட்டாயிராத விஷயத்துக்கும் பிரயோ

க்கப்படவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இ. லா. ரி., சென்னபட்டணம் 26-ம் வால்யூம் 686-வது பக்கத்தில் இந்த பிரசினை கிளப்பப்பட்டது. ஆனால் அது தீர்மானிக்கப்படவில்லை. கொதுவை வைத்த பிறகு கொதுவை வைத்தவர் இறந்துபோவதனாலாவது பிரஸ்தாப சொத்திலுள்ள பங்குகளைக் கொதுவை வைத்தவர் விற்பனை செய்வதனாலாவது பாத்தியதையானது பிரிக்கப்பட்டுப் போகும் விஷயத்தில் கொதுவைக் கடனுக்குப் பணம் செலுத்துவது சம்பந்தமான விதி பிரயோகப்படுகிறதென்று சில விஷயங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (அலஹாபாத் 1-ம் வால்யூம் 455-வது பக்கம்; பம்பாய் 20-ம் வால்யூம் 615-வது பக்கம்; கல்கத்தா லா. ஜ. 21-ம் வால்யூம் 104-வது பக்கம்; அலஹாபாத் 43-ம் வால்யூம் 589-வது பக்கம்). இந்த விஷயத்தை ஸ்பஷ்டமாக்குவதற்காக ஷை பிரிவைத் திருத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

மேலும், கடனுக்குப் பணம் செலுத்தும் காரியத்துக்காக பிரதம கொதுவையின் தேதியிலாவது பிற்பட்டு ட்ரான்ஸ்டர் செய்த தேதியிலாவது இருந்தபடி வெவ்வேறு சொத்துக்களின் விலைமதிப்பையோ ஒரே சொத்தின் பாகங்களின் விலைமதிப்பையோ கணக்கிடவேண்டுமா என்பது விஷயமாய்ச் சிறிது அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. கிரயத்துக்கு வாங்கினவர் என்ன விலை கொடுத்திருந்தபோதிலும் அதைக் கவனிக்காமலே, கொதுவைத் தேதியில் இருந்த விலையை மதிப்பிடவேண்டுமென்று சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (க. வீ. நோ. 12-ம் வால்யூம் 107-வது, 745-வது பக்கங்கள்; அலஹாபாத் 27-ம் வால்யூம் 549-வது பக்கம்). ஆயினும், பம்பாயில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்திலே, விற்பனைத் தேதியில் இருந்த விலைமதிப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது (இ. லா. ரி., பம்பாய் 26-ம் வால்யூம் 88-வது பக்கம்). பிரதம கொதுவையின் தேதியில் இருந்த விலைமதிப்பையே சொத்தின் விலைமதிப்பாய் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். இந்த விதி ஜுடிஷல் கம்மிட்டியாரின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. இடைக்காலத்தில் கிடைத்த லாபத்துக்காகப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு டிக்ரிக்குச் செலுத்தவேண்டிய தொகையை நிஷ்கரிஷை செய்கையில், அவர்கள் டிக்ரியின் தேதியில் ஏற்பட்டிருந்த பொறுப்பை நிஷ்கரிஷை செய்தார்கள் (லா.ரி., இ.அ. 31-ம் வால்யூம் 94-வது பக்கம்).

81-வது பிரிவில் இதே மாதிரி திருத்தம் செய்வதற்குள்ள காரணங்களை அனுசரித்து, இந்தப் பிரிவின் கடைசி பாராவில் "கொதுவைக்காரனுடைய" என்னும் வார்த்தைக்கு முன்னுள்ள "இரண்டாவது" என்னும் வார்த்தைக்குப் பார்த்தியாக "பிற்பட்ட" என்னும் வார்த்தை அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடன் தொகையைக் கோர்ட்டுக்கு வெளியே செலுத்தக்காட்டியாவது வியாஜ்ஜியமூலமாகவாவது கொதுவைச் சொத்தை மீட்டுக்கொள்வதற்குக் கொதுவை வைத்தவருக்குள்ள பரிகாரங்களுடன் கூட, அந்தப்படி மீட்டுக்கொளவதற்குச் சுருக்கவகையான நடவடிக்கைமுறையொன்றை இந்தப் பிரிவில் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பிரிவானது ரத்துசெய்யப்பட்ட வங்காளத்து 1798-ம் வருஷத்து பகுதி 43. பிரிவு 83.

1-வது ரெகுலேஷன், 1806-ம் வருஷத்து 17-வது ரெகுலேஷன் ஆகிய இவைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதாகும். இந்தப் பிரிவின் படி தொகை கட்டும்பட்சத்தில், சட்டப்பிரகாரம் செல்லத்தக்கபடி தொகை செலுத்தக்காட்டினுல் எவ்வித பிரயோசனம் உண்டோ அந்தப் பிரயோசனமெல்லாம் உண்டாகும். மேலும், கொதுவை வைத்துக்கொண்டவர் அந்தப்படி கட்டப்பட்ட பணத்தை வாங்கிக் கொள்ளும்பட்சத்தில், கொதுவையை விடுதலை செய்ததாய் ஏற்படும் (இ. வா. ரி., சென்னபட்டணம் 17-ம் வால்யும் 267-வது பக்கம்). இந்தப் பிரிவை அனுசரித்து கல்கத்தா, சென்னை, பம்பாய் ஹைகோர்ட்டுகளால் தயாரிக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், கொதுவை வைத்துக்கொண்டவர் பிரஸ்தாப பணத்தை வாங்கிக்கொள்ள அர்ஹராவதற்குமுன் அவருடைய சுவாதீனத்திலுள்ள சகல ஹக்கு பத்திரங்களையும், 60-வது பிரிவின்படி அவர் தாக்கல் செய்ய வேண்டியிருக்கும் திருப்பி ஒப்படைசெய்வதற்கான மசோதா ஆதரவு ஒன்றையும், கடன்தொகை சேர்ந்ததாக ஒப்புக்கொண்டு ரசீது ஒன்றையும் தாக்கல் செய்யும்படி அவரைக் கேட்கலாம். 60-வது பிரிவின் முதல் பாராவில் கண்டிருக்கும் நிபந்தனையைப் போன்ற ஒரு வெளிப்படையான நிபந்தனை இராததனுல் கூடி விதிகள் சட்டப்படி செல்லுமா என்பது விஷயமாய்ச் சந்தேகம் உண்டாயிருக்கிறது (ஷெப்பர்ட், ப்ரௌன் என்பவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கும சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட், 7-ம் பதிப்பு 352-வது பக்கத்தைப் **பார்க்கவும்**). பிரேரேபித்திருக்கும் திருத்தமானது இந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டதாகும்.

பகுதி 44. பிரிவு 84. தொகை செலுத்தக் காட்டப்பட்டபிறகாவது கட்டப்பட்டபிறகாவது வட்டிகொடுப்பது நின்றுபோவதைக்குறித்து 84-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. செலுத்தக்காட்டப்பட்ட தொகையைப் பெற்றுக்கொள்ள மறுத்தால், அது சாதாரணமாய்க் கட்டப்படுகிறபடியால், செலுத்துவதாக முன்னதாய்க் காட்டாமல் கட்டப்படும் தொகையைப்பற்றி ஸ்பஷ்டமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. பணம் கிரமமாய்க் கட்டப்பட்டதாக கொதுவை வைத்துக் கொண்டவர் நோடிஸ் பெற்றிருந்து, நியாயமான ஒரு கால அளவுக்குப் பிறகு அந்தப் பணத்தை அவர் வாங்க மறுத்தாலும், கொதுவை வைத்தவர் தொகையைக் கொடுக்க சித்தமாயும் இஷ்டமுள்ளவராயும் இருந்துவருகிறுர் என்று பாவிப்பதற்கு இடம் இருக்கிறதென்றும், கொதுவைவைத்தவர் கட்டின பணத்தை வாங்கிவிட்டாலுங்கூட வட்டி கணக்காகாதென்றும் இ. வா. ரி., சென்னபட்டணம் 49-ம் வால்யும் 619-வதுபக்கத்தில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. இந்தக் கொள்கை சரியானதல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். கொதுவை வைத்தவர் கட்டின பணத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு அந்தப்படி வாபஸ் பெற்றுக்கொண்ட பணத்திலிருந்து பிரயோசனம் அடையும்பட்சத்தில், கொதுவைக் கடனுக்கு வட்டி நின்றுபோவது நியாயமல்லவென்பது வெளிப்படை. கொதுவை வைத்தவர் முதலில் தொகையைச் செலுத்தக் காட்டாமல் அதைக் கட்டியிருந்து, அதையாகிலும் அதில் யாதொரு பாகத்தையாகிலும் பிற

பட்டு வாபஸ் பெற்றிருந்தால், அந்தப்படி வாபஸ் பெற்றுக்கொண்ட தேதிமுதல் அசல் பணத்துக்கு வட்டி செலுத்தப்படத்தக்கதாகு மென்று ஒரு விலக்குநிபந்தனையை ஷை பிரிவின் முதல் பாராவுடன் சேர்க்க உத்தேசிக்கிறோம்.

மேலும், கொதுவைப் பணத்தைச் செலுத்துவதற்கு முன்பாவது செலுத்தக்காட்டுவதற்கு முன்பாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்கு நியாயமான நோடிஸ் கொடுக்கவேண்டுமென்று கொதுவைப்பத்திரத்தில் கண்டிருக்கிறபட்சத்திலே, அந்தப்படி நோடிஸ் கொடுக்கப்படுகிறவரையில் இந்தப் பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டாவென்பதை 3-வது பாராவில் ஸ்பஷ்டமாய்க் காட்ட உத்தேசிக்கிறோம்.

கொதுவை வைத்தவருடன்கூட இன்னின்ன நபர்களுக்கும் மீட்டுக்கொள்ளும் பாத்தியதை உண்டென்று 91-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கிறது. (a), (b) அடையாளமிட்ட பகுதிகளைத் தகுந்தபடி ஒரு பகுதியாய்ச் சேர்த்துவிடக்கூடும். (d), (e) குறிப்பிட்ட பகுதிகள் மிகையாகும். ஆகவே, அவைகளை விட்டுவிடவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். பகுதி 45. பிரிவு 91.

யாதொரு சொத்தை ஜப்திசெய்வதனால், அந்த சொத்தின் விஷயத்தில் யாதொரு பொறுப்பு அல்லது கடனைப்போன்ற உரிமை எதுவும் ஏற்படமாட்டாது (இ. லா. ரி., கல்கத்தா 29-ம் வால்யும் 428-வது பக்கம்; சென்னபட்டணம் 32-ம் வால்யும் 429-வது பக்கம்). மேலும், கடன் கொடுத்திருந்து ஜப்திசெய்யும் யாதொரு நபருக்கு மீட்கும் சுதந்தரம் ஏன் இருக்கவேண்டுமென்பதற்கு நியாயம் எதுவும் இல்லை. ஆகவே, (f) குறிப்பிட்ட பகுதியை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம்.

இதற்கு முன்னே சொன்னபடி, இந்த ஆக்டின் 74-வது 75-வது பிரிவுகள் ஒரு கடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரைப் பார்த்திசெய்வது என்று சொல்லப்படும் கோட்பாட்டை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. கடனை ஒப்படைசெய்வதைப்போல் கட்சிக்காரர்களின் யாதொரு செய்கையினாலாவது, சட்டம் பிரயோகப்படுவதனாலாவது ஷை கோட்பாடு அமுலுக்கு வரக்கூடும். ஆனால், சங்கேதப்படி "ஒரு கடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரைப் பார்த்திசெய்வது" என்னும் சொற்றொடரானது சட்டம் பிரயோகப்படுவது காரணமாக சுதந்தரம் ஏற்படுகிற விஷயங்களுக்கு மாத்திரமே பொருந்துகிறது. ரோமன் லா என்னும் சட்டப்படி, யாதொரு கொதுவைப் பணத்தைச் செலுத்துவதற்காக எவராவது கொதுவை வைத்துக்கொண்டவருக்குப் பார்த்தியாய்த் தாம் இருக்கவேண்டுமென்னும் ஷரத்தின் பேரில் யாதொரு நபருக்குக் கடன் கொடுத்திருந்தால், அவர்-தம்முடைய பணத்தைக்கொண்டு விடுதலை செய்யப்பெற்ற ஈட்டிலிருந்து கிடைக்கும் பிரயோசனத்தை அடைய அர்ஹராயிருந்தார் (டோனட் என்பவர் எழுதிய ஸிவில் லா என்னும் புத்தகம் 1774-வது பிரிவைப் **பார்க்கவும்**; ஹன்டர் என்பவர் எழுதிய ரோமன் லா என்னும் புத்தகம் 441-வது, 443-வது பக்க பகுதி 46. புதிதாய்ச் சேர்த்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் 92-வது பிரிவு.

களையும் பார்க்கவும்). மேலும், இந்த சுதந்தரமானது ரோமன் லாவிலிருந்து உற்பத்தியான சகல நவீன முறைகளிலும் அங்கீக ரிக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்டு கொதுவை வைத்துக்கொண்டவர் முந்திய கொதுவைப்பணத்தைச் செலுத்திவிடுகிற யாதொரு விஷ யத்துக்கு மாத்திரமே 74-வது பிரிவு பிரயோகப்படுகிறது. இந்தப் பிரிவில் அடங்கியிருக்கும் விதியானது வாஸ்தவத்தில் 75-வது பிரி வில் அடங்கியிருக்கிறது. ஆனால், இவ்விரண்டு பிரிவுகளும் பிற் பட்டு கொதுவை வைத்துக்கொள்பவர் விஷயத்துக்குமாத்திரமே பிரயோகப்படுகின்றன. ஆயினும், ஒரு கடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரை பர்த்திசெய்வதென்னும் கோட்பாடானது-கொதுவை வைத்தவர் தம்முடைய சொந்த கடனைச் செலுத்திவிடுகிற விஷயத்தை, அல்லது யதேச்சையாய்ப் பணம் கொடுக்கிறவர் விஷ யத்தைத் தவிர மற்ற சகல விஷயங்களுக்கும் பொதுவாய்ப் பிரயோகப் படவேண்டும். க. லா. ஜ., 6-ம் வால்யும் 137-38-வது பக்கங்க ளில் கண்டிருக்கும் பிஸ்ஸேஸ்வர் ப்ரஸாதுக்கும் வாலா ஸர்ணும் ஸிங்குக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் அடியில் கண்டபடி எழுதி யிருக்கிறது :—

"ஒருகடன்காரருக்குப் பதிலாக வேறொரு கடன்காரரை பர்த் திசெய்வதென்னும் கோட்பாடு தருமத்தை அனுசரித்து நியாயம் செலுத்துவதென்னும் கோட்பாடாகும். ஷை விவகாரம் தருமத்தை அனுசரித்திருப்பதாகக் கொள்ளப்பட்டு, அதுகாரணமாக ஒரு ஒப் பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஊகிக்கக்கூடியதா யிருக்கிறவரையிலன்றி மற்றப்படி, வெளிப்படையாகவோ ஊகிக்கக்கூடியதாகவோவுள்ள ஷை ஒப்பந்தத்தினால் ஏற்படும் சம்பந்தத்தை இந்த விவகாரம் பொறுத்ததாயிராது. அது குறித்த ஒவ்வொரு விஷயத்துக்கும் சம் பந்தப்பட்ட சங்கதிகளையும், சந்தர்ப்பங்களையும் இயற்கை நீதி சம் பந்தமான கோட்பாடுகளையும் ஆதாரமாகக்கொண்டு ஏற்படுகிறது. ஆகவே, யதேச்சையாய்ப் பணம் கொடுக்கிறவராகவேயிராத யா தொரு நபர் யாதொரு கடனுக்காவது டிமாண்டுக்காவது தொ கை செலுத்தியிருந்து, அது தருமத்தை நோக்கும்போதாகிலும் நல்ல மனசாக்ஷியை நோக்கும்போதாகிலும் வேறொருவரால் செலுத் தப்பட்டிருக்கவேண்டியதா யிருக்கும்பட்சத்திலாவது, ஒருவரு டைய கடனானது வேறொருவருக்குச் சொந்தமாயுள்ள நிதியிலிருந்து செலுத்தப்படும்பட்சத்திலாவது, ஒருவர் தம்முடைய சொந்த பாதுகாப்பினிமித்தமாகிலும் தாம் எந்த வகுப்பாருக்குப் பிரதி நிதியாயிருக்கிறாரோ அவர்களுடைய பாதுகாப்பினிமித்தமாகிலும் பிரதமத்தில் வேறொருவர் செலுத்தவேண்டியிருக்கும் கடனைத் தாம் செலுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படும் பட்சத்திலாவது, பிரஸ்தாப உரிமை இல்லையென்று சொல்வது தருமத்துக்கும் நல்ல மனசாக்ஷிக்கும் விரோதமாயிருக்கும்போதாவது ஷை கோட்பாடு பொதுவாய்ப் பிரயோகிக்கப்படும். ஆயினும், இந்த கோட்பாட் டைப் பிரயோகிப்பதனால் தருமரீதியாய்ச் சமமான அல்லது மேலான தாவா உள்ளவர்களின் உரிமைகளுக்கு அநியாயம் ஏற்படக்கூடுமா னால், ஷை கோட்பாட்டைப் பிரயோகிப்பதற்கு ஒருபோதும் அனு மதி கொடுக்கப்படமாட்டாது."

கொதுவை வைத்தவரைத் தவிர கொதுவைச் சொத்திலாவது மீட்கும் சுதந்தரத்திலாவது பற்றுடைய சகல நபர்களும், அதாவது, மீட்கும் சுதந்தரம் உடையவர்களென்று 91-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் சகல நபர்களும் - கடன் கொடுத்தவர் ஒருவருக்கு அவருடைய தொகை செலுத்தப்பட்டிருந்தால் அவர் ஸ்தானத்தில் பர்த்திசெய்யப் பெறுவதற்குப் பாத்தியதை உடையவர்களாயிருக்க வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 74-வது, 75-வது பிரிவுகளை விட்டுவிடுவதும், பர்த்திசெய்யும் கோட்பாடு சம்பந்தமாய் இந்தப் புதிய 92-வது பிரிவில் நிபந்தனை ஏற்படுத்துவதும் சரியாகுமென்று நாங்கள் நினைக்கிறோம்.

ஜாமீனாய் நின்ற ஒருவர் கடன் கொடுத்தவருக்குப் பாக்கியாயுள்ள தொகையைச் செலுத்திவிட்டால், அவருக்குள்ள சுதந்தரங்களை அவருக்குப் பர்த்தியாய் மேற்படி ஜாமீன் கொடுத்தவர் அடைய பாத்தியதை யுடையவராவாரென்பது வெளிப்படை. (Ves. 14-ம் வால்யும் 162-வது பக்கத்தில் கண்ட) க்ரேதார்னுக்கும் ஸ்வின்பர்னுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஸர் ரோமில்லி செய்த வாதத்தை இங்கே உபயோகித்துக் கொள்வோம்; அதாவது:—"(கொடுக்கப்படத்தக்க) ஒவ்வொரு ஜாமீனைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தும் விஷயத்திலும் தொகை செலுத்தும்படிச் செய்வதற்கான சகல வழிவகைகள் மூலமாய் நிர்ப்பந்தப்படுத்தும் விஷயத்திலும் கடன் கொடுத்தவருக்குப் பிரதம கடன்காரரைப் பொறுத்தமட்டில் என்னென்ன பரிகாரங்கள் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு பரிகாரத்தையும் பெற ஜாமீன்தாரர் பாத்தியதை யுடையவராவார். மேலும், அவர் - கான்ட்ராக்டின் மூலமாகவே யல்லாமல் ஜாமீன் கொடுத்தவருக்குத் தெரியாமலே கொடுக்கப்பட்ட ஈடுகள் மூலமாகவும் கடன் கொடுத்தவரின் ஸ்தானத்தை வகிக்க பாத்தியதையுடையவராவார். மேற்படி ஈடுகளைத் தம் பெயருக்கு ட்ரான்ஸ்பர் செய்யவேண்டுமென்பதாக ஷரத்து இராதபோதிலும், அந்தப்படி ட்ரான்ஸ்பர் செய்யப் பெறுவதற்கான சுதந்தரம் அவருக்கு உண்டு. அந்த ஈடுகளையெல்லாம் கடன்காரரிடமிருந்து வாங்கிக் கொள்ளவும் அவருக்கு உரிமையுண்டு." இதே கோட்பாடு 1872-ம் ஹூ்த்திய இந்துதேசத்துக் கான்ட்ராக்ட் ஆக்ட் 140-வது, 141-வது பிரிவுகளில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கூட்டாய்க் கொதுவை வைத்தவராவது பல கூட்டுக் கடன்காரர்களில் ஒருவராவது தாம் தீர்த்திருக்கிற கடனில் மற்ற கூட்டுக் கடன்காரர்களுக்கு வீதாசாரப்படி ஏற்படும் பங்குகளை அவர்களிடமிருந்து கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஈடுகள் மூலமாய் வசூலிப்பது சாத்தியமாயிருக்கும்பொருட்டு, அந்த ஈடு தமக்குக் கொடுக்கப் பெறுவதற்குள்ள சுதந்தரமானது - யாதொரு ஜாமீன்தாரருக்காகிலும் கொதுவையை மீட்கும் பாத்தியதையைப் பெற்ற வேறொரு நபருக்காகிலும் உள்ள சுதந்தரம் தருமரீதியாய் எந்த அம்சத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறதோ அதே அம்சத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், ஒவ்வொரு கூட்டுக் கடன்காரரும் - கடனில் தாம் செலுத்தவேண்டிய பாகத்துக்குப்

பிரதான கடன்காரராகவே பாவிக்கப்படுவதுமல்லாமல், கூட்டுக் கடன்காரர்கள் கடனில் எவ்வளவு பாகத்தைச் செலுத்தவேண்டுமோ அதற்காக அவர்களுக்கு ஜாமீனாகவும் பாவிக்கப்படுகிறார் (கொதுவையைப் பற்றி கோஸ் எழுதியிருக்கும் புத்தகம், 5-ம் பதிப்பு 1-ம் வால்யும் 371-வது பக்கம்).

ஆயினும், யாதொரு கடனைச் செலுத்தும் ஒருவர் கொதுவை மூலமாய் ஏற்படும் பிரயோசனத்தை அடைய பாத்தியதை உடையவராயிருக்கிறாரென்று பொதுவாக ஒரு விதியை ஏற்படுத்த முடியாது. கொதுவை வைத்தவர் தாம் வாங்கின கடனைச் செலுத்த உள்ளானவராயிருந்தால், அவராவது கொதுவை வைத்த அந்த நபரிடமிருந்து மேற்படி பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ட்ரான்ஸ்பர் பெற்றவராவது பர்த்திசெய்யப்பெறும் சுதந்தரத்தின் விஷயமாய் பாத்தியதை கொண்டாடமுடியாது. மேலும், பிரஸ்தாப கோட்பாட்டை யதேச்சையாய்க் கடன் தீர்ப்பவருக்கு அனுகூலமாகப் பிரயோகிக்கவும் முடியாது (இ. லா. ரி., அலஹாபாத் 32-ம் வால்யும் 25-வது பக்கம்). கொதுவையைப்பற்றி கோஸ் எழுதியிருக்கும் புத்தகம், 5-ம் பதிப்பு 1-ம் வால்யும் 364-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, அப்படிப்பட்ட சகல வியாஜ்ஜியங்களிலும், கொதுவைச் சொத்திலாவது அதை மீட்கும் சுதந்தரத்திலாவது எவ்வித பற்றும் இராத ஒரு நபர் கொடுத்த தொகையானது கடன்காரருடைய நபர்ஜாமீன்மேல் அவருக்குக் கொடுத்த கடனேயாகுமா, அல்லது கடன் கொடுத்தவரின் ஸ்தானத்தைத் தாம் அடையும்படிச் செய்யப்படவேண்டுமென்று ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையின்படி ஷை தொகை கொடுக்கப்பட்டதா என்பது வாஸ்தவமான பிரசினையாகும். அப்படிப்பட்ட உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாக அனேக விஷயங்களில் கோர்ட்டார் நிச்சயமாய்க் கொள்ளக்கூடுமென்றாலும், அப்படிப்பட்ட உடன்படிக்கை எழுதி ரெஜிஸ்டர்செய்யப்படவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதென்று நாங்கள் நினைக்கிறோம்.

எவ்வித சிக்கலாயினும் ஏற்படுவதையும் பர்த்தி செய்வதனால் உண்டாகும் பாத்தியதைகளைப் பங்கிடு செய்வதில் கஷ்டம் நேரிடுவதையும் தடுக்கும்பொருட்டு, கொதுவைக் கடன் முழுவதும் செலுத்திவிடப்படுகிறவரையில் பர்த்திசெய்யப்பெறும் சுதந்தரம் ஏற்படுவதில்லையென கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் (இ. லா. ரி., கல்கத்தா 36-ம் வால்யும் 193-வது பக்கம்; அலஹாபாத் 38-ம் வால்யும் 502-வது பக்கம்). ஆகவே, எந்தக் கொதுவையின் விஷயத்தில் பர்த்திசெய்யப்பெறும் சுதந்தரத்துக்காகத் தாவா கொண்டுவரப்படுகிறதோ அந்தக் கொதுவை பூர்த்தியாய் மீட்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அந்த சுதந்தரத்துக்காக தாவா கொண்டுவரக் கூடாதென்று 92-வது பிரிவின் கடைசி பாராவில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 46—தொடர்ச்சி. பிரிவு 93.

பல கொதுவைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் கோட்பாடானது பர்த்திசெய்வதென்னும் கோட்பாட்டுக்கு நெருங்கிய சம்பந்தமுடையதாகையால், 80-வது பிரிவை 93-வது பிரிவாக அமைத்துக்கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 46—கொடர்ச்சி. புதிதாய் அமைத்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் 94-வது பிரிவு.

75-வது பிரிவிலும் ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 34-ம் அதிகாரத்தில் கண்ட 11-வது விதியிலும் பர்த்திசெய்வதென்னும் கோட்பாடு சிறிதுமட்டிலும், "முக்கிய கொதுவைகளை மீட்பதும் பிந்திய கொதுவைகளின் விஷயத்தில் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதும்" என்னும் சொற்றொடரில் அடங்கியுள்ள கோட்பாடு சிறிது மட்டிலும் அடங்கியிருக்கின்றன. 75-வது பிரிவிலும் 34-ம் அதிகாரத்தில் கண்ட 11-வது விதியிலும் பர்த்தி செய்வதென்னும் கோட்பாட்டுக்குச் சம்பந்தப்பட்ட பாகத்தை நாங்கள் 92-வது பிரிவுக்கு மாற்றி, ஷை பிரிவிலும் விதியிலும் "பிந்திய கொதுவைகளை மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வது" என்னும் கொள்கைக்கு எவ்வளவு சம்பந்தப்படுகிறதோ அதை ஒரு புதிய பிரிவில் சேர்த்திருக்கிறோம். இந்த விதியானது நடவடிக்கைமுறையைச் சேர்ந்ததாயிராமல் பெரிதும் முக்கியமான சட்டத்தைச் சேர்ந்ததாயிருப்பதால், அது சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் இருப்பது சரியாகுமேயொழிய ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் இருப்பது நியாயமல்ல. ஆகவே, 75-வது பிரிவை விட்டுவிட்டு, 34-ம் அதிகாரத்தில் கண்ட 11-வது விதியை ரத்துசெய்ய நாங்கள் உத்தேசிக்கிறோம். இந்தக் கோட்பாடு பர்த்திசெய்வதென்னும் கோட்பாட்டுக்குச் சம்பந்தப்பட்டதா யிருக்கிறபடியால, அதை 92-வது பிரிவுக்குப் பிறகு நாங்கள் அமைத்திருக்கிறோம்.

பகுதி 47. பிரிவு 95.

கூட்டாய்க் கொதுவை வைத்தவர் யாதொரு கொதுவையை மீட்கும்பட்சத்தில், கொதுவைச் சொத்தை மீட்பதற்காகவும் அதைச் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காகவும் அவர் செய்த செலவுகளினிமித்தம் கூட்டாய்க் கொதுவை வைத்த இதர நபர்களுக்குக் கொதுவைச் சொத்தில் உள்ள பங்குகளின்மேல் அவருக்கு 95-வது பிரிவின்படி பொறுப்பு ஏற்படுகிறது. வங்காளத்திலும் வடமேற்கு மாகாணங்களிலும் அமுலிலிருக்கும் கொதுவை சம்பந்தமான சட்டத்தைப்பற்றி மக்பர்ஸன் எழுதியுள்ள புத்தகம் 5-ம் பதிப்பின் 145-வது பக்கத்தில் கண்டிருக்கும் குறிப்புகளை அனுசரித்து இந்தப் பிரிவு எழுதப்பட்டிருக்கிறது. "சுவாதீனம் செய்துகொண்டால்" என்னும் வார்த்தைகள் ஏன் இந்தப் பிரிவில் அமைத்துக் கொள்ளப்பட்டனவென்று தெரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது. கூட்டாய்க் கொதுவை வைத்தவர் மீட்கும்பட்சத்தில், அவருக்கு இந்தப் பிரிவின்படி இரண்டு சுதந்தரங்கள் ஏற்பட்டனவென்றும், அவை (1) சுவாதீனம் செய்துகொள்ளும் சுதந்தரமும் (2) தம்முடன் கூட்டாய்க் கொதுவை வைத்தவர்களுடைய உரிமைகளின் மேல் ஒரு பொறுப்புமாகுமென்றும் இ. லா. ரி., சென்னபட்டணம் 11-ம் வால்யும் 416-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் சென்னை ஹைகோர்ட்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். கொதுவை வைத்துக் கொண்டவர் கொதுவைச் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தால் மாத்திரமே ஷை வார்த்தைகள் பிரயோகப்படுமென்று இ. லா. ரி., அலஹாபாத் 26-ம் வால்யும் 227-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் அலஹாபாத் ஹைகோர்ட்டார் அபிப்பிராயம் கொண்டார்கள். லா. ரி., இ. அ., 33-ம் வால்யும் 81-வது பக்கத்தில் கண்ட மாலிக் அஹமத் வாலிகானுக்கும்

முஸம்மத் ஷாம்ஸி ஜஹான் பீகமுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ப்ரிவி கௌன்ஸில் ஜட்ஜுகள் அடியிற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

"எந்தக் கொதுவைகளின்படி சொத்தின் சுவாதீனம் வேறொருவருக்குப் போவதனாலே, மீட்கப்படுவதன்மேல் முதல் நபருக்குக் கிரமமாய் அது மீண்டும் வருகிறதோ அந்தக் கொதுவைகளுக்கு மாத்திரமே பிரயோகப்படும்படி இந்தப் பிரிவுக்குக் கண்டிதமாய் அர்த்தம் கொள்ளலாம். ஆனால், கொதுவையின் சுபாவத்தை நோக்கும்போது சுவாதீனம் அடைவதென்னும் திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமாயிருக்கக்கூடிய விஷயங்களுக்கு மாத்திரமே அந்தத் திட்டம் பிரயோகப்படும்படிச் செய்யும்பொருட்டும் மற்ற விஷயங்களில் மீட்பது காரணமாக பொறுப்பு ஏற்படும்படிச் செய்யும் பொருட்டும் இந்தப் பிரிவுக்கு சகல விஷயங்களுக்கும் பொருந்தும்படியாய் அர்த்தம் கொள்வது மேலேகண்டபடி அர்த்தம் கொள்வதைக் காட்டிலும் நியாயமாயிருக்குமென்று எங்களுக்குத் தோற்றுகிறது."

மேலேகண்டபடி குறிப்பிடப்பட்டிருப்பதை நோக்கும்போது, மறுபடியும் சுவாதீனம் பெறுவதைக்குறித்து இந்தப் பிரிவில் சொல்லியிருப்பது விரும்பத்தக்கதல்லவென்று தோற்றுகிறது. ஆகவே, அதை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம். மேலும், புதிதாய் அமைத்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் 92-வது பிரிவிலே, கூட்டாய்க் கொதுவை வைப்பவருக்கு பர்த்திசெய்யப்பெறும் சுதந்தரம் கொடுத்திருக்கிறபடியால், மீட்பது சம்பந்தமான செலவுகளின் பொருட்டுப் பிரத்தியேகமான பொறுப்பு ஏற்படுத்துவதற்குப் பர்த்தியாக, கூட்டாய்க் கொதுவை வைத்தவர் அப்படிப்பட்ட செலவுகளைக் கொதுவைப் பணத்துடன் சேர்த்து, கூட்டாய்க் கொதுவைத்த இதர நபர்களுக்குச் சொத்தில் உள்ள பங்குகளின் வீதாசாரப்படி அவர்களிடமிருந்து வசூலிக்கக்கூடுமென்று நிபந்தனைகாணுவது நல்லதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். நாங்கள் இந்தப் பிரிவை அப்பிரகாரமே திருத்தியிருக்கிறோம்.

பகுதி 48. பிரிவு 98. 58-வது பிரிவைப்பற்றிய குறிப்புகளில் சொல்லியிருக்கிறபடி, குறிக்கப்படாத கொதுவை என்பதன் அர்த்தம் அந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொதுவைகளில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்குள்ள சுதந்தரங்களையும் பொறுப்புகளையும்பற்றி மாத்திரமே ஷை பிரிவில் சொல்ல வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பகுதி 49. பிரிவு 100. 100-வது பிரிவில் பொறுப்பு என்பதற்கு அர்த்தம் சொல்லியிருக்கிறது. மேலும், கொதுவைக்குச் சம்பந்தப்பட்ட சகல நிபந்தனைகளும், 81-வது, 82-வது பிரிவுகளும் யாதொரு பொறுப்பின் விஷயத்தில் பிரயோகப்படவேண்டுமென்று அந்தப் பிரிவின் பின்பாகத்தில் நிபந்தனை கண்டிருக்கிறது. பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பவருடைய சுதந்தரங்களும் பொறுப்புகளும் சரியாய் இன்னவையென்று இதிலிருந்து ஸ்பஷ்டமாய்ப் புலப்படவில்லை. பொறுப்பேற்றுவது என்பது பொறுப்புக்குட்பட்டிருக்கும் சொத்து விஷயத்தில் உள்ள எந்த உரிமையையும் ட்ரான்ஸ்பர் செய்வதாகாது.

ஆகையால், பொறுப்புக்கும் கொதுவைக்கும் வித்தியாசம் இருக்கிற தென்பது வாஸ்தவமே (கொதுவையைப் பற்றி கோஸ் எழுதிய புத்தகம் 1-ம் வால்யூம் 110-வது பக்கம் பார்க்கவும்). யாதொரு பொறுப்பின் விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் கட்சிக்காரர்களுக் குள்ள சுதந்தரங்களும் பொறுப்புகளும் ஒற்றியின் விஷயத்தில் சம் பந்தப்பட்டிருக்கும் நபர்களுக்குள்ள சுதந்தரங்களையும் பொறுப்பு களையும் போலவே இருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்து வது விரும்பத்தக்கதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஏனென்றால், பொறுப்பானது மற்ற கொதுவைகளைக்காட்டிலும் ஒற்றியை அதிகமாய் ஒத்திருக்கிறது. பொறுப்பு பெற்றிருப்பவர் ஒற்றி வைத்துக்கொண்டவரைப்போல கொதுவைச் சொத்தை விற் பனைக்குக் கொண்டுவரமாத்திரமே சுதந்தரமுடையவராவார். மீட் கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான சுதந்தரம் அவருக்கு இருக்கமுடியாது (ஸிவில் ப்ரொஸீஜர் கோர்ட் 34-ம் அதிகாரம் 15-வது விதியைப் பார்க்கவும்).

யாதொரு பொறுப்பு ஏற்பட்டிருப்பதனால், அந்தப் பொறுப் புக்கு உட்பட்டிருக்கும் சொத்தின் விஷயத்தில் உள்ள யாதொரு சுதந்தரத்தை ட்ரான்ஸ்பர் செய்யவேண்டியிராததால், நோடிஸ் பெறாமல் ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெறுகிறவர்மேல் அந்தப் பொறுப்பைச் செலுத்தமுடியாதென்று அபிப்பிராயம் கொள்ளப் பட்டிருக்கிறது (இ. லா. ரி., அலஹாபாத் 9-ம் வால்யூம் 591-வது பக்கம்; அலஹாபாத் 13-ம் வால்யூம் 28-வது பக்கம்; கல்கத்தா 33-ம் வால்யூம் 985-வது பக்கம்; கல்கத்தா 42-ம் வால்யூம் 849-வது பக்கம்; க. வீ. நோ. 19-ம் வால்யூம் 37-வது பக்கம்). யாதொரு டிக்ரி மூலமாய்ப் பொறுப்பு உண்டாக்கப்பட்ட சில விஷயங்களில், மேலே கண்டிருப்பதற்கு விரோதமான அபிப்பிராயம் கொள்ளப் பட்டது (அலஹாபாத் 2-ம் வால்யூம் 162-வது பக்கம்; அலஹா பாத் 28-ம் வால்யூம் 655-வது பக்கம்; அலஹாபாத் 38-ம் வால்யூம் 254-வது பக்கம்). முதலில் சொல்லிய அபிப்பிராயமே தருமத் துக்கு மிகவும் பொருத்தமாயிருப்பதாக எங்களுக்குத் தோற்றுகி றது.

சட்டப்பிரயோகத்தின் மூலமாகவாவது டிக்ரி மூலமாகவாவது உண்டாக்கப்படும் பொறுப்புகளை ரெஜிஸ்டர்செய்வது அவசியமா யிராததால், நோடிஸ் பெறாமல் ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெறு கிறவர்கள் விஷயத்தில் பாதுகாப்பு ஏற்படுத்துவதும் அவர்கள் விஷ யத்திலே பொறுப்பு அமுலுக்குக் கொண்டுவரப்படமாட்டா தென்று நிபந்தனை ஏற்படுத்துவதும் விரும்பத்தக்கதாகும்.

101-வது பிரிவானது "ஒன்றில் மற்றொன்று அடங்கிப்போ வது" என்னும் கோட்பாட்டுக்குச் சம்பந்தப்படுகிறது. மேலும், யாதொரு சொத்தைக் கொதுவை வைத்துக்கொண்ட நபராவது அதில் யாதொரு பொறுப்பு பெற்றிருப்பவராவது கொதுவை வைத்தவரின் அல்லது சொந்தக்காரரின் உரிமையை அடையும்பட் சத்தில், அவர் தம்முடைய கொதுவையாகிலும் பொறுப்பாகிலும் அப்படியே இருந்துவரவேண்டுமென்று வெளிப்படையாய் ஏற் படுத்திக்கொண்டாலொழிய, அல்லது அந்தப்படி இருந்துவருவது

பகுதி 50. பிரிவு 101.

அவருடைய நன்மையைப் பொறுத்ததாகுமென்று கொள்ளப்பட்டா லொழிய, அவருடைய சொந்த கொதுவை அல்லது பொறுப்பு அற்றுப்போகுமென்று ஷை பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. அமெரிக்காவில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில் சொல்லியுள்ளபடி, "தருமரீதியாய் அடையப்பட்டும் சட்டப்படி அடையப்பட்டுமுள்ள பூர்த்தியான பூஸ்திதிகள் ஒரே நபரிடத்தில் இருக்கும்போது அவைகளைத் தனித்தனியாய் வைத்திருப்பதற்கு நியாயம் இருக்கமுடியாதென்னும் விஷயத்திலிருந்து ஒன்றில் மற்றொன்று அடங்கிபோவதென்னும் கோட்பாடு ஏற்படுகிறது. ஏனென்றால், அறுதியான சுதந்தரம் இருக்கும்படி தாம் பெற்ற ஒரு பூஸ்திதிமேல் பொறுப்பேற்றி வைப்பதனால் சொந்தக்காரருக்கு யாதொரு பிரயோசனமும் இல்லை. நிறைவேற்றப்படாமல் இருக்கும் ஹக்காவது இடையில் ஏற்பட்ட ஹக்காவது இருக்கும்பட்சத்தில் விஷயம் வேறே மாதிரியாகும். ஆகவே, நிறைவேற்றப்படாத பொறுப்பு ஒன்றிருக்கும் பட்சத்தில் ஒரு கொதுவையை மற்றொரு கொதுவைக்குள் அடங்கும்படிச் செய்யமுடியாதென்று அமெரிக்காவில் வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது." (கொதுவையைப்பற்றி ஜோன்ஸ் எழுதிய புத்தகம், 7-ம் பதிப்பு 2-ம் வால்யும், 401 முதல் 403 வரையிலுள்ள பக்கங்கள்.) (Mer. 3-ம் வால்யூம் 210-வது பக்கத்தில் கண்ட டோல்மீனுக்கும் ஸ்டீருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், யாதொரு நபர் பிந்திய வில்லங்கங்கள் ஏற்பட்டிருப்பதைக் குறித்து நோடிஸ் பெற்று தருமரீதியாய் மீட்கும் பாத்தியதையைக் கிரயத்துக்கு வாங்கும்பட்சத்தில், அவர் தாமே கொதுவை வைத்தவராயிருந்தால் என்ன நிலைமையில் இருப்பாரோ அதே நிலைமையில் இருப்பதாகவும், அப்படிப்பட்ட பிந்திய வில்லங்கங்களை அவர் தாமே முந்தி வைத்துக்கொண்ட கொதுவையைக் கொண்டாவது தாம் தொகை செலுத்திவிட்டிருக்கக்கூடிய ஒரு கொதுவையைக்கொண்டாவது எதிர்க்கமுடியாதென்றும் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. தருமரீதியாய் மீட்கும் பாத்தியதையைக் கிரயத்துக்கு வாங்குகிறவர் செலுத்திவிடப்பட்ட பிரதம கடன் தமது பிரயோசனத்துக்காக இருந்துவருகிறதென்று சொல்லியே டோல்மீனுடைய வியாஜ்ஜியத்தின் முடிவினால் ஏற்பட்ட பிரயோசனம் ஏற்படாமற்போகும்படிச் செய்வதற்காக சுலபமாய் ஏற்பாடுகள் செய்யலாம். டோல்மீனுடைய வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட விதியானது இப்போதைய 101-வது பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தைப்பற்றி இங்கிலாந்து தேசத்துக் கோர்ட்டுகளில் பலமுறை ஆட்சேபனை செய்யப்பட்டிருக்கிறது (W. & T. L. C. 8-ம் பதிப்பு 2-ம் வால்யும் 49-வது பக்கத்தைப் பார்க்கவும்). A. C. 11-வது பக்கத்தில் கண்டிருக்கும் (1895-ம் வருஷத்தில்) தார்னுக்கும் கானுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், டோல்மீனுடைய வியாஜ்ஜிய விஷயமாய் லார்ட் ஹெர்ஷெல் அடியிற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிறார் :—

"இந்த வியாஜ்ஜியத்தை வாஸ்தவத்தில் சர்வ ஜனங்களும் ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், அதைப்பற்றி விரோதபாவமான வியாக்கியானம் எழுதப்பட்டிருப்பதுடன் தோஷம் கூறப்பட்டும் இருக்கிறது."

அதே வியாஜ்ஜியத்தில் லார்ட் மக்னுட்டென் சொல்லியிருப்பதாவது :—

"அந்த வியாஜ்ஜியத்தை இப்போது பிரமாணமாகக் கொள்ளும்பட்சத்தில், அதை வாஸ்தவமான தீர்மானத்தை மீறிச் செல்வதாக பாவிக்கமுடியாது."

ஒவ்வொரு வியாஜ்ஜியத்திலும் குறித்த ஒரு பொறுப்பாவது வில்லங்கமாவது ரத்துசெய்யப்பட்டதா அல்லது அப்படியே இருந்துவந்ததா என்பது கட்சிக்காரர்களின் உத்தேசத்தைப் பொறுத்ததாகுமென்று ப்ரிவி கௌன்ஸிலார் பல வியாஜ்ஜியங்களில் நிர்ணயித்திருக்கிறார்கள் (இ.அ., 10-ம் வால்யூம் 62-வது பக்கம்; இ.அ., 11-ம் வால்யூம் 126-வது பக்கம்; இ.அ., 29-ம் வால்யூம் 9-வது பக்கம்; இ.அ., 39-ம் வால்யூம் 68-வது பக்கம்). இ.அ., 11-ம் வால்யூம் 133-வது பக்கத்தில் கண்டிருக்கும் கோகுல்தாஸுக்கும் ராம்பக்ஸுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில், டோல்மீனுடைய வியாஜ்ஜியத்திலே ஏற்படுத்தப்பட்ட விதியை அனுசரித்த அம்சத்தின்மேல் செய்யப்பட்ட இந்திய தீர்மானங்களைப் புனர்விமரிசை செய்தபிறகு ஸர் ரிச்சர்ட் கௌச் பின்னே வருகிறபடி குறிப்பிட்டிருக்கிறார் :—

"அந்த வியாஜ்ஜிய விஷயமாய் (டோல்மீனுக்குக்கும் ஸ்டூருக்கும் நடந்த வியாஜ்ஜிய விஷயமாய்) ஏற்பட்டுள்ள சந்தேகங்களைப்பற்றியாவது, அதில் அடங்கியிருக்கும் கோட்பாட்டை நீதி, தருமம், நல்ல மனசாக்ஷி இவைகள் சம்பந்தமான விதியாக இந்தியாவில் கொண்டுவருவது நேர்மையாகுமா என்பதைப்பற்றியாவது கல்கத்தாவிலாகிலும் பம்பாயிலாகிலுமுள்ள ஹைகோர்ட்டார் ஆலோசித்திருப்பதாகத் தோற்றவில்லை."

"டோல்மீனுக்கும் ஸ்டூருக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலிருந்து அனுசரிக்கப்பட்டுவரும் கோட்பாடானது - நீதி, தருமம், நல்ல மனசாக்ஷி இவைகள் சம்பந்தமான சட்டமாகவன்றி மற்றப்படி இந்துதேசத்து விவகாரங்களுக்குப் பிரயோகப்படத்தக்கதல்ல. மேலும், அது நீதி சம்பந்தமாய் விரிவாயும் ஸ்பஷ்டமாயுமுள்ள யாதொரு கொள்கையை ஆதாரமாகக் கொண்டதாயிருந்தால், அதை மேலேகண்டபடி பிரயோகிப்பது தகுதியாயிருக்கும். ஆனால், அது அப்படிப்பட்ட யாதொரு கோட்பாட்டையும் ஆதாரமாய்க் கொண்டிருக்கவில்லை. அந்தப்படி அது ஆதாரமாய்க்கொண்டிருந்தால், ஒப்படை செய்பவர்களின் உத்தேசத்தைப் பிரசித்தப்படுத்துவதனாலாவது அவர்கள் கிரமாசாரப்படி செய்யும் சூழ்ச்சிகளினாலாவது அதை விலக்கவாகிலும் பிரயோசனமற்றதாய்ப் போகும்படிச் செய்யவாகிலும் முடியாது. ஆனால், அது அந்தப்படியே ஒவ்வொரு நாளும் பிரயோசனமற்றதாய்ப் போகும்படிச் செய்யப்படுகிறது. யாதொரு பூஸ்திதி ஒரு தொடர்ச்சியாய்ப் பல கொதுவைகளுக்குட்பட்டிருந்து, கடைசி கொதுவை மூலமாய்ச் சுதந்தரம் அடைபவர் தாம் கொதுவை வைத்துக்கொண்டதற்குமுன் ஏற்பட்ட கொதுவைத் தொகையைச் செலுத்திவிட்டால், தம்முடைய நன்மையை உத்தேசித்து, இடையில் கொதுவை வைத்துக்கொண்டவர்களால்

தமக்குப் பாதகம் உண்டாகாதிருக்கும்படி அதை ஒரு ட்ரஸ்டியினிடம் ஒப்படை செய்விப்பது காரியக் கிரமத்தில் செய்யவேண்டிய வேலையாகும். ஏனென்றால், இடையில் கொதுவை வைத்துக் கொண்டவர்களுக்கு அவர் நேரில் உத்தரவாதியல்ல."

"இந்தியாவிலே ஒப்படை செய்யும் முறையானது வெகு சாமானியமாய் இருந்துவந்ததுமல்லாமல் இன்னும் அந்தப்படியே யிருக்கிறது. யாதொரு கொதுவை எப்போதாகிலும் கிரமாசாரப்படி ட்ரான்ஸ்பர் செய்யப்படுவதாகவாவது, அதைச் செலாவணியாகும்படி வைத்திருக்கவேண்டுமென்னும் உத்தேசம் எப்போதாகிலும் கிரமாசாரப்படி வெளிப்படையாய்த் தெரிவிக்கப்படுவதாகவாவது கௌரவம் பொருந்திய ஜட்ஜிகள் கண்டறியக்கூடவில்லை. அப்படிப்பட்ட அனுஷ்டானத்துக்கு டோல்மீனுக்கும் ஸ்டீருக்கும் நடந்த வியாஜ்ஜியத்திலிருந்து ஏற்பட்ட சித்தாந்தத்தைப் பிரயோகிப்பதனால் நீதியும் தருமமும் அபிவிருத்தி அடையுமென்று அவர்களுக்குத் தோற்றவில்லை. ஆனால், அந்தப்படி பிரயோகிப்பது காரணமாக ஒழுங்கின்மையும் தஸ்தவேஜுகளின் பெருக்கமும் பிரயோசனமற்ற சங்கேதங்களும் செலவும் வழக்குந்தான் வெகுசாய் ஏற்படக்கூடுமென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்."

இ. லா. ரி., சென்னபட்டணம் 47-ம் வால்யூம் 199-வது பக்கத்தில் கண்டிருக்கும் மாவி ரெட்டி ஐயா ரெட்டிக்கும் கோபால கிருஷ்ணய்யாவுக்கும் சமீபகாலத்தில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில், ப்ரிவி கௌன்ஸில் என்னும் சபையார் மீண்டும் அடியிற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

"இந்தியாவிலே ஒரு சொத்தின்மேல் பல கொதுவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கொதுவைகளுக்கு உட்பட்ட சொத்தின் சொந்தக்காரர் முந்திய ஒரு கொதுவைக்குப் பணம் செலுத்திவிடும்பட்சத்தில், அவர் அதைத் தாம் கிரயத்துக்கு வாங்குவதாக பாவித்துக்கொள்ளலாமென்பதும், அதைத் தமக்கு விற்பனை செய்பவர் என்ன ஸ்தானத்தில் இருப்பாரோ அதே ஸ்தானத்திலிருக்கலாமென்பதும் இப்போது ஸ்திரமாய் ஏற்பட்டிருக்கும் சட்டமாகும். இது விஷயத்தை வேறே விதமாய்ச் சொல்லும்பட்சத்தில், அவர் ஷை வில்லங்கத்தைத் தம்முடைய பிரயோசனத்துக்காக அப்படியே வைத்திருந்து பிற்பட்டு கொதுவை வைத்துக்கொண்டவரைக்காட்டிலும் முற்பட்ட பாத்தியதை உடையவராகலாம்."

தொடர்ச்சியாய் இங்கிலாந்தில் செய்யப்பட்டு வந்திருக்கும் அனேக தீர்மானங்களையும் ஜுடிஷல் கம்மிட்டியாரால் செய்யப்பட்டு வந்திருக்கும் மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானங்களையும் நிறைவேற்ற நாங்கள் உத்தேசிக்கிறோம். கடன் கொடுத்தவர் தம் மூலமாய் ஏற்பட்டிருக்கும் வில்லங்கங்களையும் தாம் எந்த வில்லங்கங்களுக்காகத் தொகை செலுத்தியிருக்கிறாரோ அந்த வில்லங்கங்களையும் பின்னிட்ட வில்லங்கங்களுக்கு இடம் கொடுக்காதிருக்கும்பொருட்டு அந்தப்படியே வைத்திருப்பது அவருடைய உத்தேசமாகுமென்றும்,

அவருடைய நன்மைக்கு அனுகுணமானதென்றும் பொதுவாய்க் கொள்ளலாம். இப்போதிருக்கும் பிரிவை அப்பிரகாரமே திருத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 51. பிரிவு 102.

கொதுவை வைத்துக்கொண்டவரின் ஏஜென்டுக்கு நோடிஸ் சேர்ப்பிப்பது அல்லது பணம் செலுத்தக் காட்டுவதைப்பற்றி 102-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. கொதுவை வைத்துக்கொண்டவராவது அவருடைய ஏஜென்டாவது கொதுவைச் சொத்து எந்த ஜில்லாவில் இருக்கிறதோ அந்த ஜில்லாவில் காணப்படாவிட்டால், இன்னது செய்யவேண்டுமென்பதைக் குறித்து உத்தரவு பிறப்பிக்கும்படி கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள கொதுவை வைத்தவருக்கு இந்தப் பிரிவின்படி அனுமதி ஏற்படுகிறது. கொதுவை வைத்துக்கொண்டவராவது அவருடைய ஏஜென்டாவது ஷ ஜில்லாவுக்கு வெளியே இருக்கிற இடம் கொதுவை வைத்தவருக்குத் தெரிந்திருந்தாலுங்கூட, இந்தப் பிரிவின்படி அவர் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். மேலும், பணம் செலுத்தக் காட்டுவது விஷயமாய் இதே மாதிரியான நிபந்தனை ஒன்று மூன்றுவது பாராவில் அடங்கியிருக்கிறது. கொதுவை வைத்துக்கொண்டவராவது அவருடைய ஏஜென்டாவது இருக்கிற இடமே கொதுவை வைத்தவருக்குத் தெரியாமற்போனாலன்றி மற்றப்படியாகிலும், கொதுவை வைத்துக்கொண்டவராவது அவருடைய ஏஜென்டாவது எங்குமே காணப்படாமற்போனாலன்றி மற்றப்படியாகிலும், உத்தரவு பிறப்பிக்கும்படி கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள கொதுவை வைத்தவருக்கு பாத்தியதை இருக்கக்கூடாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப் பிரிவின் 2-வது, 3-வது பாராக்களிலுள்ள "ஷ டிஸ்ட்ரிக்டில்" என்னும் வார்த்தைகளை விட்டுவிட உத்தேசித்திருக்கிறோம். நோடிஸ் சேர்ப்பிக்கும்படிச் செய்துகொள்ளும் விண்ணப்பத்தைத் தொகை எந்தக் கோர்ட்டில் கட்டப்பட்டதோ அந்தக் கோர்ட்டுக்குச் செய்துகொள்ளவேண்டுமேயொழிய வேறெந்தக் கோர்ட்டுக்கும் செய்துகொள்ளக்கூடாதென்பதை 2-வது பாராவில் ஸ்பஷ்டமாய்க் காட்ட நாங்கள் உத்தேசிக்கிறோம். மீட்பதற்கான வியாஜ்ஜியத்தை எந்தக் கோர்ட்டில் தாக்கல்செய்யலாமோ அந்தக் கோர்ட்டில் தொகை கட்ட வேண்டுமென்னும் விஷயத்தை 3-வது பாராவில் ஸ்பஷ்டமாய்க் காட்ட நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 52. பிரிவு 103.

எழுத்துப்பிழையாகவே உள்ள ஒரு பிழையைத் திருத்தும்பொருட்டு, "க்யூரேட்டர் அப்படிப்பட்ட நோடிஸைச் சேர்ப்பிக்கலாம்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "க்யூரேட்டராவது க்யூரேட்டருக்காவது அப்படிப்பட்ட நோடிஸைச் சேர்ப்பிக்கலாம் அல்லது க்யூரேட்டர்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள உத்தேசிக்கிறோம். இந்தப் பிரிவின் பிந்திய பாகம் அனாவசியமாயிருக்கிறதென்று விட்டுவிடப்பட்டது.

பகுதி 53. பிரிவு 106.

விட்டுப்போகும்படி கொடுக்கப்படும் நோடிஸ் விஷயத்தில், தபால்மூலமாய் நோடிஸ் சேர்ப்பிப்பது நோடிஸ் சேர்ப்பிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முறையாகுமென்று இங்கிலாந்து, இந்தியா ஆகிய

இரண்டு தேசங்களிலும் கொள்ளப்பட்டிருக்கிறது [(1906) கி. பெ. 2-ம் வால்யும் 82-வது பக்கம்; இ. லா. ரி., கல்கத்தா 46-ம் வால்யும் 458-வது பக்கம்]. ஆகவே, 106-வது பிரிவின்படிக்கான நோடிஸ் மூலமாய் எந்த நபரைப் பிணைப்படுத்த உத்தேசித்திருக்கிறதோ அந்த நபருக்கு அதைத் தபால் மூலமாய் அனுப்பலாமென்று அந்தப் பிரிவின் இரண்டாவது பாராவில் ஒரு நிபந்தனையைச் சேர்க்க நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 54. பிரிவு 107. விற்பனையின் விஷயத்திலும் கொதுவையின் விஷயத்திலும் எப்படியோ அப்படியே, அசையாப் பொருளைக் குத்தகை அல்லது வாடகைக்கு விடும் சகல விஷயங்களையும் ரெஜிஸ்டர்செய்யவேண்டுமென்று இந்தப் பிரிவில் நிபந்தனை ஏற்படுத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். ஆயினும், மாதவாரியாகவாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத யாதொரு காலத்துக்காவது குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடும் விஷயங்களில் இந்த நிபந்தனை பிரயோகப்படாதபடி செய்யவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், குறித்த வாடகைகளை அல்லது குத்தகைகளைக் கட்டாயமாய் ரெஜிஸ்டர் செய்வதனின்றும் நிவாரணை செய்யப் பிரதேச கவர்ன்மென்டுகளுக்குள்ள அதிகாரம் அப்படியே வைத்துவைக்கப்பட்டிருக்கிறது.

யாதொரு குத்தகை அல்லது வாடகைச் சீட்டைக் குத்தகை அல்லது வாடகைக்கு விடுபவர் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொள்பவர் ஆகிய இருவரும் எழுதிக்கொடுக்கவேண்டுமா, அவர்களில் ஒருவர் மாத்திரம் எழுதிக்கொடுத்தால் போதுமா என்பது விஷயமாய் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. குத்தகை அல்லது வாடகைக்கு விடுபவர் கையெழுத்துபோட்ட பத்திர மூலமாய் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடவேண்டுமென்றும், குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொள்பவர் மாத்திரமே எழுதிக்கொடுத்த ஒருதலையான தஸ்தவேஜு குத்தகைச் சீட்டாகாதென்றும் அலஹாபாத் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள் (இ. லா. ரி., அலஹாபாத் 26-ம் வால்யும் 368-வது பக்கம்; அலஹாபாத் 27-ம் வால்யும் 190-வது பக்கம்; அலஹாபாத் 31-ம் வால்யும் 276-வது பக்கம்). சென்னை ஹைகோர்ட்டாரும் கல்கத்தா ஹைகோர்ட்டாரும் இதற்குமுன் நடந்த வியாஜ்ஜியங்களில் இதே அபிப்பிராயம் கொண்டார்கள் (இ. லா. ரி., சென்னபட்டணம் 30-ம் வால்யும் 322-வது பக்கம்; சென்னபட்டணம் 32-ம் வால்யும் 532-வது பக்கம்; க. வீ. நோ. 14-ம் வால்யும் 73-வது பக்கம்). ஆனால், சென்னபட்டணம் 35-ம் வால்யும் 95-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் சென்னபட்டணத்திலும், கல்கத்தா 39-ம் வால்யும் 1016-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் கல்கத்தாவிலும் இந்த அபிப்பிராயம் கைவிடப்பட்டது. ரங்கூன் ஹைகோர்ட்டாரும் பம்பாய் ஹைகோர்ட்டாரும் அலஹாபாத்தில் கொள்ளப்பட்ட அபிப்பிராயத்தையே அனுசரிக்கிறார்கள் (ரங்கூன் 3-ம் வால்யும் 379-வது பக்கம்; பம்பாய் லா. ரி. 27-ம் வால்யும் 626-வது பக்கம்). குத்தகை அல்லது வாடகைக்கு விடுபவரும் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொள்பவரும் செய்துகொள்ளும் உடன்படிக்கைகள்

சாதாரணமாய் குத்தகை அல்லது வாடகைச் சீட்டில் அடங்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட குத்தகை அல்லது வாடகைச் சீட்டைக் குத்தகை அல்லது வாடகைக்குக் கொடுப்பவரும் வாங்கிக்கொள்பவரும் எழுதிமுடிப்பது விரும்பத்தக்கதாகும். புதிதாய் அமைத்துக் கொள்ள உத்தேசித்திருக்கும் 107-வது பிரிவின் முதல் பாராவில் இந்த நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கிறது.

108-வது பிரிவைச் சேர்ந்த (h) குறிப்பிட்ட உட்பிரிவில், "அந்த குத்தகை அல்லது வாடகை நடந்துகொண்டிருக்கும் காலத்தில்" என்னும் வார்த்தைகள் உபயோகித்திருப்பது காரணமாக நீதி விசாரணை முறையில் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கின்றன (இ. லா. ரி., சென்னபட்டணம் 38-ம் வால்யும் 710-வது பக்கமும் அதில் ஆலோசிக்கப்பட்டிருக்கும் வியாஜ்ஜியங்களும்). இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தின்படி "இன்னதுதான் அப்புறப்படுத்துவதற்கான காலம்" என்று நிச்சயமாய் ஏற்படவில்லை. "அந்தக் காலமானது - 'தாம் குடித்தனக்காரராயிருப்பதாக இன்னும் நினைப்பதற்குரிய ஒரு சுதந்தரத்தின்படி குடித்தனக்காரர் பிரஸதாப வளவைத் தம் சுவாதீனத்தில் வைத்திருக்கும் பின்னும் கால அளவு வரையிலாவது'; அவர் 'குடித்தனக்காரர் ஹோதாவில்' அதைக் கைப்பற்றில் வைத்திருக்கும் பின்னும் கால அளவு வரையிலாவது நீடித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கால அளவானது பிரதம கால அளவின் வளர்ந்த பாகம் அலலது அதிகமாக்கப்பட்ட பாகம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. சம்மதியின்மேல் குடித்தனக்காரராயிருப்பது இதன் உத்தேசமாயிருக்கக்கூடுமென்று கூட சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எப்படியிருந்தாலும் நிலச்சுவான்தார் சொத்தில் பிரவேசித்தாவது வெளிப்படுத்துவதற்கான கட்டளை பிறப்பித்தாவது குத்தகை அல்லது வாடகையை முடித்துவிட்ட பிறகு மேலே கண்டபடி குடித்தனக்காரராயிருப்பதென்பது உத்தேசிக்கப்படவில்லை" [நிலச்சுவான்தாரரையும் குடித்தனக்காரரையும் பற்றி (Foa) போவா என்பவர் எழுதியிருக்கும் புத்தகம், 6-ம் பதிப்பு 784-வது பக்கம்]. அப்புறப்படுத்தப்படுவது விஷயமாய்க் குடித்தனக்காரருக்குள்ள உரிமையைப்பற்றிய சகல சந்தேகத்தையும் நிவர்த்திசெய்வது விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம். குடித்தனக்காரரின் பாத்தியதை முடிந்துபோய்விட்டிருந்தாலுங்கூட, குடித்தனக்காரர் சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவரையில், அவர் நிலத்தோடு சேர்த்திருக்கும் பொருள்களை அப்புறப்படுத்த அவருக்கு அனுமதி கொடுப்பது நீதிக்குப் பொருத்தமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இதன் காரணமாக ஷை கால அளவு நிஷ்கரிஷையானதாய்விடும். மேலும், குடித்தனக்காரர் யதேச்சையாய்க் காலிசெய்தாலுஞ்சரி காலி செய்யும்படி சட்ட சம்பந்தமான ப்ராஸெஸ் என்னும் கட்டளை மூலமாய் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டாலுஞ்சரி அக்கறையில்லை. நிலச்சுவான்தாருக்கு இதனால் கஷ்டம் ஏற்படாது. ஏனென்றால், குடித்தனக்காரர் அக்கிரமமாய்ச் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் பட்சத்தில், நஷ்டஈடு பெற நிலச்சுவான்தாருக்குப் பாத்தியதை உண்டு. குடித்தனக்காரர் கிரமமாய்ச் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டி

பகுதி 55, பிரிவு 108, உட்பிரிவு (h).

ருக்கும் பட்சத்தில், அவர் நிலத்தோடு சேர்த்திருக்கும் பொருள்களை அப்புறப்படுத்த அவருக்கு உரிமை இருக்கவேண்டுமென்பது வெளிப்படை. இவ்விரண்டில் எந்த விஷயத்திலும் கால அளவை நிஷ்கரிஷை செய்வது காரணமாக உண்டாகும் கஷ்டமானது அது இப்போது நிஷ்கரிஷை செய்யப்படாதிருப்பதனால் உண்டாகும் கஷ்டத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கும்.

ஒரு குடித்தனக்காரர் அயோக்கியராயிருந்தால், அவர் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் விதியினால் அனுகூலம் அடையப் பார்க்கக்கூடுமென்றும், நிஷ்கரிஷையற்ற ஒரு கால அளவுக்கு நிலச்சுவான்தாரரைச் சொத்தின் சுவாதீனம் அடையவொட்டாதபடி தடுக்கலாமென்றும் சொல்லக்கூடும். ஆனால், அப்படிப்பட்ட குடித்தனக்காரர் தாமே அமைத்திருக்கும் கட்டுக்கோப்புகள் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அந்தப்படி செய்யக்கூடும். எவ்விஷயத்திலும் நிலச்சுவான்தாரர் நஷ்ட ஈடு மூலமாய்ப் பரிகாரம் பெறக்கூடும்.

பகுதி 55—தொடர்ச்சி. பிரிவு 108, உட்பிரிவு (o).

குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் மரங்கள் வெட்டவாவது கட்டிடங்களை இடித்துவிடவாவது அவைகளுக்குச் சேதம் உண்டாக்கவாவது கூடாதென்று 108-வது பிரிவைச் சேர்ந்த (o) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆனால், குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவருக்குச் சொந்தமாயுள்ள மரங்கள் அல்லது கட்டிடங்களையும் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவருக்குச் சொந்தமாயுள்ள மரங்கள் அல்லது கட்டிடங்களையும் வித்தியாசப்படுத்தவில்லை. இது விஷயத்தை ஸ்பஷ்டமாக்கும்பொருட்டு, "வீடுகளை" என்னும் வார்த்தைக்குமுன் "குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவனுக்குச் சொந்தமாயுள்ள" என்னும் வார்த்தைகளைச் சேர்க்க உத்தேசிக்கிறோம்.

பகுதி 56. பிரிவு 111, பகுதி (g).

இழந்துபோவதனால் குத்தகை அல்லது வாடகை முடிவாய் விடுவதைப்பற்றி 111-வது பிரிவைச் சேர்ந்த (g) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கிறது. மேலும், அதில் இரண்டு சந்தர்ப்பங்களில் இழந்துபோன விஷயத்தை வற்புறுத்தலாமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. (1) குறிப்பிட்ட உட்தலைப்பின்படி—(a) குத்தகை அல்லது வாடகையில் வெளிப்படையாய்க் கண்டுள்ள எந்த திட்டத்தைக் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் மீறுகிறபட்சத்திலே குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் மறுபடியும் பிரவேசிக்கலாமென்று நிபந்தனை கண்டிருக்கிறதோ அந்த திட்டத்தைக் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் மீறினாலும், (b) குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் வெளிப்படையான எந்த திட்டத்தை மீறுகிறபட்சத்தில் குத்தகை அல்லது வாடகை செல்லாமற்போகுமோ அந்த திட்டத்தை அவர் மீறினாலும், இழந்துபோன விஷயத்தை வற்புறுத்தக்கூடும். (b) குறிப்பிட்ட பாகத்தின்படிக்கான நிபந்தனையானது - குத்தகை அல்லது வாடகையில் கண்டிருக்கும் எந்த திட்டத்தையாகிலும் மீறுவதன்மேல் குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவர் மறுபடியும் பிரவேசிக்கலாமென்று வெளிப்படையான ஷரத்து கண்டிருந்தாலொழிய அந்தப்படி பிரவேசிக்கக்கூடாதென்று இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தில் நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கோட்பாட்

டெக்கு ஒத்திருக்கவில்லை. இந்தியாவிலும் இதே அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., கல்கத்தா 17-ம் வால்யும் 826-வது பக்கம்). ஆகவே, (g) குறிப்பிட்ட பகுதியிலுள்ள "அந்த குத்தகை அல்லது வாடகை செல்லாமற்போகவேண்டுமென்றுவது" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கப்படுவது காரணமாக அதை இழந்துவிடும் விஷயத்தைப்பற்றி இப்போதுள்ள 111-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கவில்லை. சொத்திலுள்ள யாதொரு சுதந்தரமானது எந்த நபருக்காகிலும் அவருடைய பிரயோசனத்துக்காகவாகிலும் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருந்து அல்லது கொடுக்கப்பட்டிருந்து, அவர் கடனிறுக்கச் சக்தியற்றவராய்விடுகிறபட்சத்திலே அந்த சுதந்தரம் அற்றுப்போகும் என்னும் திட்டத்துக்குட்பட்டு அந்த சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்தால், அந்த திட்டம் செல்லாததாய்விடுமென்று 12-வது பிரிவில் மற்ற நிபந்தனைகளுடன்கூட ஒரு நிபந்தனை கண்டிருக்கிறது. இதோடுகூட, அந்தப் பிரிவின் இரண்டாவது பாராவில் மற்றொரு நிபந்தனை கண்டிருக்கிறது. அதாவது, அந்தப் பிரிவில் கண்டதெதுவும் குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவருடைய பிரயோசனத்துக்காவது அவரை முன்னிட்டு தாவா செய்கிறவர்களுடைய பிரயோசனத்துக்காவது குத்தகை அல்லது வாடகையில் கண்டிருக்கும் திட்டம் எதற்கும் பிரயோகப்படமாட்டாது என்று நிபந்தனை கண்டிருக்கிறது. குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் கடனிறுக்கச் சக்தியற்றவராய்விடுவதன்மேல் குத்தகை அல்லது வாடகை முடிவாய்விடுமென்று குத்தகை அல்லது வாடகைச் சீட்டில் ஒரு திட்டம் கண்டிருந்தால், அந்தத் திட்டம் சட்டப்படி செல்லத்தக்கதாயிருப்பதே மேலே கண்டபடி நிபந்தனை கண்டிருப்பதன் பலனாகும். ஆயினும், அப்படிப்பட்ட திட்டத்தின் காரணமாக குத்தகை அல்லது வாடகை முடிவாய்விடவுமாட்டாது, இப்போதிருக்கிற 111-வது பிரிவின்படி அந்த திட்டம் குத்தகை அல்லது வாடகையை இழந்துவிடும்படிச் செய்யத்தக்கதுமல்ல. ஆகவே, குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கப்படும்பட்சத்திலும், அவர் அந்தப்படி சக்தியற்றவராய்விட்டால் குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவர் சொத்தில் மறுபடியும் பிரவேசிக்கலாமென்று குத்தகை அல்லது வாடகையில் நிபந்தனை கண்டிருக்கும்பட்சத்திலும், அந்த குத்தகை அல்லது வாடகை இழந்துவிடப்பட்டதாகி முடிவாய்விடுமென்று வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவருடைய உரிமையை மறுக்கும் விஷயத்தில் குத்தகை அல்லது வாடகையை இழந்துவிடுவது சம்பந்தமாகவும் 111-வது பிரிவைச் சேர்ந்த (g) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. அந்த உட்பிரிவின்படி, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் அப்புறப்படுத்துவதற்காக வாஸ்தவத்தில் வியாஜ்ஜியம் தொடருவதற்குமுன், குத்தகை அல்லது வாடகையை முடித்துவிடத் தாம் உத்தேசித்திருப்பதைக் காட்

டும் யாதொரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., அலஹாபாத் 47-ம் வால்யூம் 348-வது பக்கம்; கல்கத்தா 45-ம் வால்யூம் 469-வது பக்கம்). வியாஜ்ஜியம் தொடருவதே அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதாகுமா என்பது விஷயமாய்ச் சிறிது அபிப்பிராயபேதம் இருந்திருக்கிறபடியால் (இ.லா.ரி., பம்பாய் 42-ம் வால்யூம் 195-வது பக்கம்), இவ்விஷயத்தை ஸ்பஷ்டப்படுத்துவது அவசியமாகும். அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு முன், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் குத்தகை அல்லது வாடகையை முடித்துவிட தீர்மானித்திருக்கிறாரென்றும் அந்தப்படி செய்ய அவருக்குள்ள உரிமையை அவர் விட்டுவிடவில்லையென்றும் குத்தகை அல்லது வாடகைக்கு எடுத்துக்கொண்டவருக்குத் தெரிய வேண்டும்.

பகுதி 57. புதிதாய் அமைத்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் 114A பிரிவு.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் இப்போதிருக்கிறபடி, வாடகை செலுத்தாமற்போகும் விஷயத்தில் மாத்திரம் குத்தகை அல்லது வாடகை இழந்துபோகாதபடி பரிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பரிகாரம் பிரஸ்தாப ஆக்டின் 114-வது பிரிவில் கண்டிருக்கிறது. யாதொரு வெளிப்படையான திட்டம் ஏற்படுத்தப்பட்டு, அதை மீறும் விஷயத்தில் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் மறுபடியும் பிரவேசிக்கலாமென்று அந்த திட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கும்போது அந்த திட்டத்தை மீறுவதனால் குத்தகை அல்லது வாடகையை இழக்கவேண்டியதாய் ஏற்படும் விஷயங்களில், அந்தப்படி மீறினதற்காக சுலபமாய்ப் பரிகாரம் செய்யக்கூடியதாயிருந்தாலுங்கூட விசேஷ கஷ்டம் உண்டாயிருக்கிறது. இந்தக் குறை இங்கிலாந்து தேசத்துச் சட்டத்தில் கிடையாது; ஏனென்றால், அப்படிப்பட்ட விஷயங்களில் குத்தகை அல்லது வாடகையை இழந்துவிடும்பட்சத்தில் பரிகாரம் செய்துகொடுப்பதற்காக 1881-ம் வருஷத்து ஒப்படை செய்வதற்கான ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒப்படை செய்வதற்கான ஆக்டில் கண்ட இந்த நிபந்தனைகள் 1925-ம் வருஷத்திய இங்கிலாந்து தேசத்துச் சொத்தைக்குறித்த சட்டத்தின் 146-வது பிரிவில் மறுபடியும் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் நிலைமைகளுக்குத் தகுந்தவைகளாயுள்ள அதே மாதிரியான நிபந்தனைகளைச் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அமைத்துக்கொள்வது விரும்பத்தக்கதென்று நாங்கள் எண்ணுகிறோம். அப்பிரகாரமே நாங்கள் 114A பிரிவைச் சேர்த்திருக்கிறோம்.

பகுதி 58. பிரிவு 119.

இந்தப் பிரிவு - பரிவர்த்தனையாகப் பெற்றுக்கொண்ட பொருளை இழந்துவிட்ட நபரின் சுதந்தரத்துக்குச் சம்பந்தப்பட்டதாகும். ஆனால், அப்படிப்பட்ட நபரிடமிருந்து ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொள்ளுகிறவர்களின் சுதந்தரங்கள் விஷயமாய் அதில் நிபந்தனை எதுவும் கண்டிருக்கவில்லை. இந்துதேசத்துக் கான்ட்ராக்ட் ஆக்ட் 109-வது பிரிவை அனுசரித்து அந்தப் பிரிவைத் திருத்த நாங்கள் உத்தேசிக்கிறோம்.

மேலும், இப்போதுள்ளபடி அந்தப் பிரிவின் பிரகாரம், ட்ரான்ஸ்பர் பெற்றவரால் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட பொருளுக்காக பிரதிபலன் கொடுக்கும்படி கேட்கவாவது அந்தப் பொருளை வாபஸ்

பண்ணும்படி கேட்கவாவது ட்ரான்ஸ்பர் பெற்றவருக்கு அதிகாரம் ஏற்படுகிறது. அவர் ட்ரான்ஸ்பர் செய்த பொருளை மற்றொரு நபர் தம் சுவாதீனத்தில் வைத்திருந்தாலொழிய, அதை அவருக்கு வாபஸ் பண்ணமுடியாதென்பது வெளிப்படை. இது விஷயமாய் நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு, புதிய பிரிவின் கடைசியில் "அப்படிப்பட்ட மற்றொரு கட்சிக்காரரின் சுவாதீனத்தில் இன்னும் இருந்தால்" என்னும் வார்த்தைகளை நாங்கள் சேர்த்திருக்கிறோம்.

"கடன்களையும்" என்னும் வார்த்தைக்குப் பிறகு "பொறுப்புகளையும்" என்னும் வார்த்தையைச் சேர்த்து, இந்தப் பிரிவு இன்னின்ன விஷயங்களுக்குப் பிரயோகப்படுமென்பதைத் தெளிவாக்கியிருக்கிறது. தானம் பெற்றவர் தம் வசத்திலிருக்கும் சொத்தின் அளவுக்குத் தானம் கொடுத்தவரின் கடன்களுக்கு மாத்திரமேயல்லாமல் அவருடைய இதர பொறுப்புகளுக்குங்கூட உத்தரவாதியாயிருக்கவேண்டும் (ரோமன் லாவுக்கு ஹன்டர் எழுதியிருக்கும் முன்னுரை, 150-வது பக்கம்). பகுதி 59. பிரிவு 128.

123-வது பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகள் ஒருபுறமிருக்க, தானங்கள் விஷயமாய் ஹிந்து லாவிலும் புத்தர்களின் சட்டங்களிலும் கண்டிருக்கும் சகல விதிகளின் விஷயத்திலும் 129-வது பிரிவில் நிவாரணை ஏற்படுத்தியிருக்கிறது. 7-ம் அத்தியாயத்தில் தானங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் பொதுக் கோட்பாடுகளை அனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. மேலும், அவை ஹிந்து லாவிலாகிலும் புத்தர்களின் சட்டங்களிலாகிலும் கண்டிருக்கும் விதிகளுக்கு விரோதமாயில்லை. இந்தப் பிரிவிலிருந்து "புத்த" என்னும் வார்த்தையை விட்டுவிடுவதை பர்மா கவர்ன்மென்டார் ஆட்சேபிக்கவில்லை. ஆகவே, ஹிந்து லாவையும் புத்தர்களின் சட்டங்களையும் குறிப்பிட்டிருப்பதை விட்டுவிட நாங்கள் உத்தேசிக்கிறோம். பகுதி 60. பிரிவு 129.

"123-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே" என்னும் வார்த்தைகள் 1925-ம் வருஷத்து 38-வது ஆக்டாகிய சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்த (திருத்துவதற்கான) ஆக்டின்படி இந்தப் பிரிவில் அமைத்துக்கொள்ளப்பட்டன. யாதொரு லைவ் பாலிஸியைத் தானம் செய்வதாயிருந்தால், 123-வது பிரிவின்படி அது ரெஜிஸ்டர் செய்த ஒரு ஆதாவு மூலமாக மாத்திரமே தானம் செய்யக்கூடுமாகையால், அப்படிப்பட்ட தானம் செய்யவேண்டியதாயிருக்கும்போது மிகுந்த கஷ்டம் நேரிட்டதென்று இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தெரிவித்திருந்தன. அந்தக் கம்பெனிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கத்துடன் மேற்படி வார்த்தைகள் அமைத்துக்கொள்ளப்பட்டன. ஆயினும், யாதொரு மகம்மதியர் வியாஜ்ஜியம் கொண்டுவரத்தக்க பாத்தியதையைத் தானம் செய்யும் பட்சத்தில் அந்த தானத்துக்கு இந்த வார்த்தைகள் பிரயோகப்படுமா என்பது விஷயமாய்ச் சந்தேகங்கள் ஏற்பட்டன. மேற்படி திருத்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டதற்குமுன், அசையும்பொருளைத் தானம் செய்யும் விஷயத்தில் அந்த தானத்தை 123-வது பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்த ஆதாவுமூலமாய்ப் பண்ணவேண்டியிருந்த விஷயங்களுக்கு மாத்திரமே பிரஸ்தாப வார்த்தைகள் பிரயோகப்பட்டனவென்றும், 123-வது பிரிவானது மகம்மதியர்கள்செய்யும் தானத் பகுதி 61. பிரிவு 130.

துக்குப் பிரயோகப்படவில்லையாகையால், ஷை வார்த்தைகள் மகம்ம தியர்கள் செய்யும் தானங்களுக்குப் பிரயோகப்படவில்லையென்றும் சிறிதுகாலத்துக்குமுன் பம்பாயில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்திலே வா திக்கப்பட்டது. இந்த அபிப்பிராயத்தை பமபாய் ஹைகோர்ட்டார் அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். இப்போது செலாவணியாய்க்கொ ண்டிருக்கும் விதியின்படியும் வியாஜ்ஜியம் கொண்டுவரத்தக்க பாத்தி யதையைத் தானம்செய்யும் விஷயத்தில், எழுத்துமூலமான ஆதரவு வேண்டியிருக்கிறது. வியாஜ்ஜிம் கொண்டுவரத்தக்க பாத்தியதையை மகம்மதியர்கள் தானம் செய்யும் விஷயத்தில் அந்த தானத்துக்கு ஷை விதி பிரயோகப்படாதபடி நிவாரணை செய்வது விரும்பத்தக்க தல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். வாஸ்தவத்தில் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களிலே வியாஜ்ஜியம் கொண்டுவரத் தக்க பாத்தியதையைத் தானம் செய்யும் பட்சத்தில், லைவ் பாலிஸி களைத் தானம் செய்யும் விஷயத்தில் எப்படியோ அப்படியே எழுத் துமூலமாகவே தானம்செய்யப்படுகிறது. "123-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே" என்னும் வார்த்தை களினால் உண்டாகும் சந்தேகத்தை நிவர்த்திக்கும்பொருட்டு, அந்த வார்த்தைகளை விட்டுவிட்டு, அவைகளுக்குப் பர்த்தியாக "வியாஜ்ஜி யம் கொண்டுவரத்தக்க பாத்தியதையை ட்ரான்ஸ்பர் செய்வது" என்னும் வார்த்தைகளுக்கு முன்னே "ஐவேஜுடனாகிலுஞ்சரி ஐவேஜில்லாமலாகிலுஞ்சரி" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம்.

பகுதி 62. இந்த மசோதா ஆக்டிற்கண்ட இன்ன நிபந்தனைகள் பிற்போக் காய்ப் பிரயோகப்படமாட்டாவென்று இந்தப் பகுதியில் குறிப்பிட் டிருக்கிறது.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவ தற்கான) ஆக்டுக்கு உடன்சேர்க்கையான மசோதா ஆக்ட்.

[(1874-ம் வருஷத்து 3-வது ஆக்டாகிய) விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்ட்.]

பகுதி 2. பிரிவு 8. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் 10-வது பிரி வில், "முன் நடக்கப்போவதை எதிர்ப்பார்த்துத் தடுப்பது" என் னும் கோட்பாடு அடங்கியிருக்கிறது. 1865-ம் வருஷத்திய இந்து தேசத்து தாயபாக ஆக்ட் 4-வது பிரிவும் 44-வது பிரிவும் ஏற்படுவ தற்குமுன், பொதுச் சட்டத்தின்படி யாதொரு ஸ்திரீயின் சொத்தா னது அவள் விவாகம் செய்துகொள்வதன்மேல், அவள் புருஷனு டைய சொத்தாய் விடுவதாக இருந்தது. ஆனால், ட்ரஸ்டிகள் பிரவே சித்து சொத்து பிரத்தியேகமாய் அவள் பெயரிலேயே இருக்கும்படி ஏற்பாடு செய்யக்கூடும். அவள் சம்பாதிக்கும் சம்பளத்தையும் பொரு ளையும் பிரத்தியேகமாய்த் தன்னுடைய சொத்தாக வைத்திருக்கலா மென்று 1874-ம் வருஷத்து விவாகமான ஸ்திரீகளின் சொத்தைக் குறித்த ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆக்ட்

8-வது பிரிவில் விவாகமான ஸ்திரீகள் விவாகமானதற்குப்பின் வாங்கின கடன்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. பிரத்தியேகமாய்ச் சொத்துடையவளாயிருக்கும் விவாகமான யாதொரு ஸ்திரீயுடன் எந்த நபராகிலும் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்து, அந்த சொத்திலிருந்து அவளுக்குப் பணம் கொடுக்கப்படவேண்டுமென்று ஷரத்து ஏற்படுத்தப்பட்டால், அந்த நபர் ஷை ஸ்திரீ விவாகமாகாதவளாயிருந்தால் தாம் எவ்வளவு பெற்றிருக்கக்கூடுமோ அவ்வளவுக்காக வியாஜ்ஜியம் செய்து பிரத்தியேகமாயுள்ள சொத்தின் அளவுக்கு அதை வசூலிக்க பாத்தியதை உடையவராவாரென்று அந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. விவாகமான ஸ்திரீக்கு சொத்தை ட்ரான்ஸ்பர் செய்யும்பட்சத்தில், அவள் புருஷனுடைய ஆதீனத்திலிருக்கும்போது அதைப் பராதீனப்படுத்தக்கூடாதென்றாவது அதன்மேல் பொறுப்பு ஏற்றக்கூடாதென்றாவது தடுத்து ட்ரான்ஸ்பர் செய்யக்கூடுமென்று சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான 1882-ம் வருஷத்து ஆக்ட் 10-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆகவே, விவாகமான ஸ்திரீக்கு சொத்து இருந்து அதை அவள் பராதீனப்படுத்தக்கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தால், அந்த ஸ்திரீக்குக் கடன் கொடுத்தவர் விவாகமான ஸ்திரீகளின் சொத்தைக் குறித்த ஆக்ட் 8-வது பிரிவின்படி ஷை சொத்தின்மேல் தம்முடைய சுதந்தரத்தைச் செலுத்தலாமாவென்னும் பிரசினை ஏற்படுகிறது. அதாவது, அந்தப் பிரிவானது சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 10-வது பிரிவில் கண்ட நிபந்தனையினால் பாதிக்கப்பட்டிருக்கிறதாவென்பது பிரசினையாகும். (இ.லா.ரி., கல்கத்தா 12-ம் வால்யும் 522-வது பக்கத்தில் கண்டிருக்கும்) கல்கத்தாவில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்திலே இந்தப் பிரசினை கடன் கொடுத்தவருக்கு அனுகூலமாய்த் தீர்மானிக்கப்பட்டதுடன், விவாகமான ஸ்திரீகளின் சொத்தைக் குறித்த ஆக்டில் கண்டிருக்கும் நிபந்தனையானது சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 10-வது பிரிவினால் பாதிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த அபிப்பிராயத்தின் விஷயமாய் பம்பாயில் சந்தேகம் ஏற்பட்டது (இ.லா.ரி., பம்பாய் 11-ம் வால்யும் 348-வது பக்கம்). மேலும், சென்னையில் அது அனுசரிக்கப்படவில்லை (இ.லா.ரி., சென்னபட்டணம் 30-ம் வால்யும் 378-வது பக்கம்). பராதீனம் செய்யக்கூடாதென்று தடுத்திருப்பதைக்குறித்த ஒரு திட்டமானது சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் பிரகாரம் சட்டப்படி செல்லக்கூடியதாயிருந்தால், அதைச் செல்லாதபடி செய்வதற்காக விவாகமான ஸ்திரீகளின் சொத்தைக் குறித்த ஆக்ட் 8-வது பிரிவு உத்தேசிக்கப்படவில்லையென்று பம்பாயில் நடந்த வியாஜ்ஜியத்தில் சரியாய் எடுத்துக்காட்டப்பட்டது. விவாகமான ஸ்திரீக்கு விவாகமான பிறகு ஏற்பட்ட கடன் விஷயத்திலுள்ள உத்தரவாதமானது விவாகமாவதற்குமுன் ஏற்பட்ட கடன் விஷயத்திலுள்ள உத்தரவாதத்தைப் போன்றதேயாகுமென்று மாத்திரமே அந்தப் பிரிவில் நிர்ணயித்திருக்கிறது. தடைக்கு உட்பட்டிருக்கும் அவளுடைய சொத்தானது அவள் விவாகமாகாதவளாயிருந்தாற்போலவே பொறுப்புக்கு உட்பட்டிருக்கிறதென்று அதில் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த விஷயத்தைத் தெளிவாக்கும்பொருட்டு, 1882-ம் வருஷத்து

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 10-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமாக ஒரு விலக்கை விவாகமான ஸ்திரீகளின் சொத்தைக் குறித்த ஆக்ட் 8-வது பிரிவில் அமைத்துக் கொள்ள நாங்கள் உத்தேசிக்கிறோம்.

[(1877-ம் வருஷத்து 1-வது ஆக்டாகிய) ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்ட்.]

பகுதி 3. பிரிவு 30 A. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அமைத்துக் கொள்ள உத்தேசித்திருக்கும் 53A பிரிவின் கீழ்கண்ட குறிப்புகளில் சொல்லியிருக்கும் காரணங்களுக்காக, ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்டின் 2-ம் அத்தியாயத்தில் ஒரு பிரிவைச் சேர்க்க உத்தேசிக்கிறோம்.

[(1908-ம் வருஷத்து 5-வது ஆக்டாகிய) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டம்.]

பகுதி 4. அதிகாரம் 34. கொதுவை சம்பந்தமான வியாஜ்ஜியங்களைக் குறித்து இந்த அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. இதில் கண்ட நிபந்தனைகள் பிரதமத்திலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் இருந்தன (85 முதல் 99 வரையிலுள்ள பிரிவுகள்). ஆனல், 1908-ம் வருஷத்தில் அவை ஸிவில் ப்ரொஸீஜர் கோடுக்கு மாற்றப்பட்டன. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டை, முக்கியமாய்க் கொதுவைகளுக்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளைத் திருத்தியிருப்பது காரணமாக, இந்த அதிகாரத்தில் கண்ட 2 முதல் 8 வரையிலுள்ள விதிகளையும் 10, 11, 15-வது விதிகளையும் திருத்தவேண்டியது அவசியமாகிறது.

விதி 2. இந்த விதியில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்ய நாங்கள் உத்தேசிக்கிறோம்; அவையாவன :—

(1) இந்த விதியின்படி பிறப்பிக்கப்படும் டிக்ரியானது "பிரதம டிக்ரியாகுமென்று" ஸ்பஷ்டமாய்க் குறிப்பிடவேண்டும்.

(2) கோர்ட்டார் (a) கொதுவையின் அசல் பணத்தினிமித்தமும் வட்டியினிமித்தமும் (b) வியாஜ்ஜியச் செலவினிமித்தமும் வாதிக்குச் சேரவேண்டியதாயிருக்கும் தொகையை இவ்வளவென்று கணக்கிடவேண்டுமென்று மாத்திரமே இப்போதுள்ள விதியின் (a) குறிப்பிட்ட பகுதியில் கட்டளையிட்டிருக்கிறது. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 72, 76-வது பிரிவுகளின்படி, கொதுவை ஈட்டின் சம்பந்தமாய்ச் சில அவசியமான காரியங்களுக்காகப் பணம் செலவழிக்க கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் சேர்க்க உத்தேசித்திருக்கிறபடிக்குள்ள 63A பிரிவின்படி, சில சந்தர்ப்பங்களில் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பணம் செலவழிக்க கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. கொதுவை வைத்துக்கொண்டவர் அந்தப்படி

செலவு செய்யும் பணத்தை அசல் பணத்துடன் சேர்க்கவேண்டுமென்றுகூட ஷை நிபந்தனைகளில் விதித்திருக்கிறது. ஆகவே, கணக்கு எடுக்கும்போது, கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவை ஈட்டின் விஷயமாய் அவசியமான கோர்ட் செலவுக்காகவும் கட்டணங்களுக்காகவும் மற்ற செலவுக்காகவும் செலுத்தியிருக்கும் தொகைகளை அவைகளுக்குண்டான வட்டி சகிதமாகக் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதை ஸ்பஷ்டமாக்கும்பொருட்டு (a) குறிப்பிட்ட பகுதியைத் திருத்தியிருக்கிறது.

(3) வாதிக்குச் சேரவேண்டியதாயுள்ள தொகையின் கணக்கைத் தொகை செலுத்துவதற்காகப் பிரதம டிக்ரியில் நிஷ்கரிஷை செய்யப்பட்டுள்ள தேதிவரையில் எடுக்கவேண்டுமென்று இப்போதுள்ள 2-வது விதியின் (a) குறிப்பிட்ட பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்படும் தேதியானது டிக்ரி பிறந்த தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் இருக்கவேண்டும். ஆயினும், கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சேரவேண்டியதாயுள்ள தொகையைக் கோர்ட்டார் நிர்ணயிப்பதற்குச் சம்பந்தப்பட்ட (b) குறிப்பிட்ட பகுதியில், டிக்ரியின் தேதியில் பாக்கியாயுள்ள தொகையை அந்தப்படி நிர்ணயிக்கவேண்டுமென்று மாத்திரமே நிபந்தனை கண்டிருக்கிறது. அந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்காக ஆறு மாதத்துக்குட்பட்ட ஒரு தேதியைக் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யவேண்டுமெனறு (c) குறிப்பிட்ட பகுதியில் நிபந்தனை ஏற்படுத்தியிருந்தபோதிலும், மேலேகண்டபடி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்குப் பிறகாவது டிக்ரியின் தேதிக்குப் பிறகாவது கொதுவை ஈட்டின் விஷயமாய்க் கொதுவை வைத்துக்கொணடவரால் செய்யப்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகளையும் அவரால் செலுத்தப்பட்ட கட்டணங்களையும் கொடுக்கும்படி தீர்ப்பு செய்வதற்கு அந்தப் பகுதியில் நிபந்தனை எதுவும் கண்டிருக்கவில்லை. இது விபரீதமாயிருப்பதாகத் தோற்றுகிறது. கோர்ட்டார் தொகையை நிர்ணயித்து விடும்பட்சத்தில், அதற்குப் பிற்பட்டு செய்யப்பட்ட கோர்ட் செலவு முதலியவைகளின் தொகையைக் கொதுவை வைத்துக்கொண்டவர் ஏன் இழக்கவேண்டுமென்பதற்கு நியாயம் எதுவும் இல்லை. ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 34-ம் அதிகாரத்தில் அனுசரிக்கப்பட்டிருக்கும் முறையின்படி பிரதம டிக்ரியென்றும் முடிவான டிக்ரியென்றும் நன்றாய் வித்தியாசப்படுத்தியிருக்கிறது. கணக்கு எடுப்பதன்மேல் நிர்ணயிக்கப்படவேண்டியதாகவாவது சேரவேண்டியிருப்பதாய் ஏற்பட்டாவதுள்ள தொகையைப் பிரதம டிக்ரியின் தேதி வரையில் கணக்கிடவேண்டுமென்பதை ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு 2-வது விதியைத் திருத்தியிருக்கிறது. அப்போது பிரதிவாதியானவர் மீட்கும் பாத்தியதையைச் செலுத்துவதற்குத் தாம் இன்ன தொகை செலுத்தவேண்டியிருக்கிறதென்று அறியக்கூடிய நிலைமையில் இருப்பார். மேலேகண்டபடி நிர்ணயிக்கப்பட்ட அல்லது சேரவேண்டியதாய் ஏற்பட்ட தொகையைச் செலுத்தக் காட்டினபிறகு, பிற்பட்ட வட்டிக்காகவும் பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுக்காகவும் கட்டணங்களுக்காகவும் கோர்ட்டார் தீர்ப்பு செய்யக்கூடிய

தொகையைப் பிரதிவாதி செலுத்தவேண்டியவாராவாரென்று திருத்தப்பட்ட விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின் (c) அடையாளமிட்ட பகுதியில் ஜாக்கிரதையாய் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது. அப்படிப்பட்ட வட்டியினிமித்தமும் கோர்ட் செலவினிமித்தமும் இன்ன தொகை செலுத்தவேண்டுமென்று தீர்ப்பு செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கும்பொருட்டு 10-வது, 11-வது விதிகளைத் திருத்தியிருக்கிறது.

(4) கணக்கு எடுப்பதன்மேல் சேரவேண்டியிருப்பதாய்த் தெரியவரும் தொகையைச் செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்படும் தேதியைக் குறித்து இந்த விதியின் (a) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கிறபோதிலும், சேரவேண்டிய தொகையை (b) குறிப்பிட்ட பகுதியின்படி கோர்ட்டார் நிர்ணயித்த தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் அந்த தேதியிருக்கவேண்டுமென்று (c) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிட்டிருக்கிறது. இது பிழையாயிருப்பதாகத் தோற்றுகிறது. தொகை செலுத்துவதற்காக நிர்ணயிக்கப்படும் தேதியானது சேரவேண்டிய தொகையைக் கோர்ட்டார் நிர்ணயிக்கிற தேதியிலிருந்தாவது, கணக்கு எடுக்கும்படி அவர்கள் கட்டளையிடும் பட்சத்தில், அந்த கணக்கு கோர்ட்டாரால் ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படும் தேதியிலிருந்தாவது ஆறு மாதத்துக்குள் இருக்கவேண்டும்.

(5) கொதுவை வைத்தராவது மீட்க விரும்பும் வேறே யாதொரு நபராவது மீட்பது சம்பந்தமான சகல செலவுகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டியிருப்பதால், கொதுவை வைத்துக்கொண்டவரிடமிருந்து சேரவேண்டியிருக்கும் தொகை செலுத்தப்படுவதன்மேல் கொதுவை வைத்துக்கொண்டவர் திருப்பி ஒப்படை செய்வதற்காவது திருப்பி ட்ரான்ஸ்பர் செய்வதற்காவது பிடிக்கும் செலவைக் கொதுவை வைத்தவராகிலும் மேலேகண்ட வேறே நபராகிலும் செய்யவேண்டுமென்று (1) குறிப்பிட்ட உபவிதியின் (c) அடையாளமிட்ட பகுதியில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது.

(6) தொகை செலுத்துவதற்காக முடிவான டிக்ரியில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்தை அதிகப்படுத்துவது விஷயமாய் 3-வது விதியிற்கண்ட (2) குறிப்பிட்ட உபவிதியில் சேர்த்திருக்கும் விலக்கில் நிபந்தனை கண்டிருக்கிறது. தொகை செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் காலத்தை அதிகப்படுத்த கோர்ட்டாருக்குள்ள அதிகாரம் நன்றாய் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அந்த அதிகாரமானது - மீட்கும் பாத்தியதை அற்றுப்போம்படிச் செய்வதற்காக முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுவதற்குமுன் எந்தக் காலத்திலாகிலும் செலுத்தப்படுகிறது. இந்த நிபந்தனை நியாயமாய்ப் பிரதம டிக்ரிக்குச் சம்பந்தப்பட்ட விதியில் இருக்கவேண்டும். ஆகவே, ஷை விலக்கு நிபந்தனை (2) குறிப்பிட்ட உபவிதியாக 2-வது விதியில் அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒருமுறை நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவு கழிந்துபோன பிறகு கூட அந்தக் காலத்தை அதிகப்படுத்தலாமென்பதை ஸ்பஷ்டமாய்க் காட்டும்பொருட்டு இந்த விலக்கு நிபந்தனையிலுள்ள "தினத்தைத் தள்ளிவைக்கலாம்" என்னும் சொற்றொடருக்குப் பார்த்தியாக "காலத்தை அதிகப்படுத்தலாம்" என்னும் சொற்றொடர் அமைத்துக்

கொள்ளப்பட்டிருக்கிறது. தொகை செலுத்துவதற்காக நிஷ்கரிஷை
செய்யப்படும் அதிக காலமானது கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யக்
கூடிய ஷரத்துகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டுமென்றுகூட (2)
குறிப்பிட்ட உபவிதியில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது. கொது
வையின்மேல் பாக்கியாயுள்ள தொகை செலுத்தப்படுவதற்காக வாதி
டிக்ரி பெற்ற பிறகும், தொகை செலுத்துவதை ஆறு மாதம் வரை
யில் ஏற்கனவே தள்ளிவைத்ததன்மேலும், தொகை செலுத்தப்
பெறுவதற்காகப் பின்னும் ஒரு கால அளவு வரையில் வாதியைப்
பிரதிபலன் எதுவும் பெறாமல் நிதானிக்கும்படிச் செய்வது நியாய
மல்ல. காலத்தை அதிகப்படுத்தும்படி பிரதிவாதி விண்ணப்பம்
செய்துகொண்டால், அந்த விண்ணப்பத்தின்படி செய்வதற்குமுன்
அவருக்கு ஷரத்துகள் ஏற்படுத்தவேண்டும்.

(7) (1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (a), (b) அடை
யாளமிட்ட பகுதிகளில், கொதுவை வைத்துக்கொண்டவருக்குப்
பிரதம டிக்ரியின் தேதி வரையில் சேரவேண்டியிருக்கும் தொகை
இவ்வளவென்று தீர்ப்பு செய்வது விஷயமாய் நிபந்தனை ஏற்படுத்
தப்படுமாகையால், அந்தத் தொகை செலுத்தப்பட்ட பிறகு பிரதி
வாதியானவர் வாஸ்தவத்தில் தொகை செலுத்தப்படுகிற தேதி
வரையில் வாதிக்குச் சேரவேண்டியிருக்கும் பின்னிட்ட செலவுகளை
யும் வட்டியையும் செலுத்தக் கடமைப்பட்டவராவாரென்பதை
(1) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதி
யில் நாங்கள் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறோம். பிரதம டிக்ரியில் நிஷ்
கரிஷை செய்யப்பட்ட தேதியன்றைக்காவது அதற்கு முன்பாவது
தொகை செலுத்துவதற்கான காலம் (2) குறிப்பிட்ட உபவிதியின்
படி வேறே எந்தத் தேதிவரையில் அதிகப்படுத்தப்பட்டிருக்குமோ
அந்தத் தேதியன்றைக்காவது அதற்கு முன்பாவது மேலேகண்டபடி
வாஸ்தவத்தில் செலுத்தப்படலாம். கொதுவை வைத்துக்கொண்ட
வர் பிரதம டிக்ரி ஜாரி செய்யப்படுவதற்கும் முடிவான டிக்ரி ஜாரி
செய்யப்படுவதற்கும் மத்தியில் செலவு செய்த பணத்தைக் கொது
வைப் பணத்துடன் சேர்க்கக்கூடுமென்று நன்றாய் ஸ்தாபிக்கப்பட்
டிருக்கிறது (இ.லா.ரி., கல்கத்தா 44-ம் வால்யும் 448-வது பக்கம்).

(8) மீட்கும் பாத்தியதை அற்றுப் போகும்படிச் செய்து முடி
வான டிக்ரி பிறப்பிக்கப்படுகிறவரையில் கொதுவைச் சொத்தை
மீட்க கொதுவை வைத்தவருக்குள்ள சுதந்தரம் அப்படியே இருந்து
வருகிறதென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது (இ. லா. ரி.
கல்கத்தா 27-ம் வால்யும் 705-வது பக்கம்). தொகை செலுத்துவ
தற்காகப் பிரதம டிக்ரியில் முதலிலே நிஷ்கரிஷை செய்யப்பட்ட
தேதியன்றைக்காவது தொகை செலுத்துவதற்கான காலம் எந்தத்
தேதிவரையில் கோர்ட்டாரால் அதிகப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமோ
அந்தத் தேதி யன்றைக்காவது தொகை செலுத்தத் தவறிப்போய்
விட்டதென்னும் விஷயத்தினாலேயே கொதுவை வைத்தவருக்கு மீட்
பதற்குள்ள சுதந்தரம் அற்றுப்போய்விடமாட்டாது. மீட்கும் பாத்
தியதை அற்றுப்போகும்படிச் செய்து முடிவான டிக்ரி பிறப்பிக்கப்
படுகிறவரையில், கொதுவை வைத்தவர் தொகை செலுத்துவதற்கான
காலத்தை அதிகப்படுத்தும்படி விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.
மேலும், ஒரு முறை நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவு கழிந்து

போன பிறகுங்கூட அவர் அந்தப்படி விண்ணப்பம் செய்துகொள்ளலாம் (இ. லா. ரி., சென்னபட்டணம் 39-ம் வால்யும் 882-வது பக்கம்; பம்பாய் 28-ம் வால்யும் 102-வது பக்கம்). 2-வது விதியைச் சேர்ந்த (d) குறிப்பிட்ட பகுதியானது இப்போதுள்ள சொல்லமைப்பின்படி மேலேகண்ட விதிகளுக்குப் பொருத்தமாயில்லை. அந்த விதியில் நிபந்தனை கண்டபடி தொகை செலுத்தப்படாவிட்டால், சொத்தை மீட்பதற்குள்ள எவ்வித சுதந்தரத்தையும் பிரதிவாதி உபயோகிக்க முடியாதபடி தடுக்கப்படுவாரென்று ஷை பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆகவே, சேரவேண்டிய தொகை செலுத்தப்படாமற் போவதன்மேல், மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான டிக்ரிக்காக விண்ணப்பம் செய்துகொள்ள மாத்திரமே வாதிக்குச் சுதந்தரம் இருக்குமென்று திருத்தப்பட்ட விதியின் (2) குறிப்பிட்ட உபவிதியில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது. பிரதம டிக்ரியில் சேரவேண்டியதாகத் தீர்ப்பு செய்யப்பட்ட தொகை முழுவதும் செலுத்தப்படாமல் போகும்போது மாத்திரமேயன்றி பின்னிட்ட செலவுக்கும் பின்னிட்ட வட்டிக்கும் சம்பந்தப்பட்ட தொகைகளில் யாதொரு பாகம் செலுத்தவேண்டியதாய் நின்றிருக்கும்போதுகூட விண்ணப்பம் செய்துகொள்ள வாதிக்குச் சுதந்தரம் ஏற்படுகிறதென்னும் விஷயத்தைத் தெளிவாக்க நாங்கள் உத்தேசிக்கிறோம்.

(9) மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகவோ விற்பனை செய்வதற்காகவோ தொடரப்படும் வியாஜ்ஜியங்களில் கொதுவை வைத்தவருடன்கூட பின்னிட்டு கொதுவை வைத்துக்கொண்டவர்கள் அல்லது அவர்களுடைய பாத்தியதைகளை அனுபவிக்கும்படி அவர்களுக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டவர்களைப்போல் மீட்கும் பாத்தியதை பெற்றுள்ள வேறே நபர்களும் கட்சிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களில் டிக்ரி பிறப்பிப்பதைப்பற்றி 34-ம் அதிகாரத்தில் கண்ட 2 முதல் 8 வரையிலுள்ள விதிகளில் குறிப்பிட்டு நிபந்தனை கண்டிருக்கவில்லை. இந்தப்படி நிபந்தனை காணுமல் விட்டுப்போயிருந்ததற்குப் பரிகாரமாக மேற்கண்ட வியாஜ்ஜியங்களில் பிறப்பிக்கும் டிக்ரிகளுக்காக நமூனுக்கள் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது—ஷை கோடிலுள்ள D அனுபந்தத்தில் கண்ட 9 முதல் 11 வரையிலுள்ள நமூனுக்களைப் பார்க்கவும். ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 48-ம் அதிகாரத்தைச் சேர்ந்த 1-வது விதியின்படி நமூனுக்கள் கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்தக்கூடியவையல்ல. மேலும், கோர்ட்டார் அவைகளை மாற்றலாம். இந்த நமூனுக்களைச் சட்டப்படி பூர்த்தியாய்ச் செலாவணியாகத்தக்கவைகளாகச் செய்வதற்கு 34-ம் அதிகாரத்திலேயே வெளிப்படையாய் நிபந்தனை ஒன்று ஏற்படுத்துவது அவசியமாகும். அப்படிப்பட்ட கேஸுகள் வெவ்வேறு மாதிரியானவைகளாய் இருப்பதுடன், அவைகள் எல்லாவற்றையும் முன்னதாய்க் கண்டறியவும் முடியாது. ஆகையால், அப்படிப்பட்ட கேஸுகளில் அனுபந்தத்தில் கண்டிருக்கும் நமூனுக்களின் பிரகாரம் கட்சிக்காரர்களின் சுதந்தரங்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தப்படுமென்றும், ஒவ்வொரு கேஸின் சந்தர்ப்பங்களையும் நோக்கும்போது அவசியமாயிருக்கக்கூடிய மாறுதல்கள் ஷை நமூனுக்களில் செய்யப்படு

மென்றும் 34-ம் அதிகாரத்தில் நிபந்தனை ஏற்படுத்துவது போதுமானது. இம்மாதிரி பொருள்படும் நிபந்தனைகள் 2-வது விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியிலும் 4-வது விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கொதுவை வைத்தவர் மீட்பதற்காகக் கொண்டுவரும் வியாஜ்ஜியத்தில் அவ்விதமான கஷ்டங்கள் உண்டாகமாட்டா. இந்தத் திருத்தத்தின் காரணமாக 7-வது, 8-வது விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

2-வது விதியில் செய்திருக்கும் மாறுதல்களை அனுசரித்து இந்த விதியைத் திருத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். இந்த விதியின்படி செய்யப்பட்ட டிக்ரி முடிவானதாகுமென்று வெளிப்படையாய்க் குறிப்பிட்டிருக்கிறது. மேலே (5) குறிப்பட்ட பாராவில் கண்ட காரணங்களினிமித்தம், கொதுவை வைத்தவர் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக முடிவான டிக்ரி வாஸ்தவத்தில் பிறப்பிக்கப்படுகிறவரையில் எப்போதாகிலும் தொகை செலுத்தலாமென்று இந்த விதியில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது. மேலும், பிரதம டிக்ரியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அல்லது சேரவேண்டியிருப்பதாகத் தெரியவந்திருக்கிற தொகையானது பின்னிட்ட செலவுகளினிமித்தமும் பின்னிட்ட வட்டியினிமித்தமும் சேரவேண்டியிருக்கிற தொகை சகிதமாக செலுத்தப்பட்ட பிறகு, கொதுவை வைத்தவர் விண்ணப்பம் செய்துகொண்டால், கொதுவைச் சொத்தைத் திருப்பி ஒப்படை செய்யும்படியாவது திருப்பி ட்ரான்ஸ்பர் செய்யும்படியாவது கொதுவை வைத்துக்கொண்டவருக்கு உத்தரவு செய்யக்கூடுமென்று ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது. இ. லா.ரி., பம்பாய் 50-ம் வால்யும் 730-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்தைப் போன்ற வியாஜ்ஜியங்களில் ஏற்படும் கஷ்டங்களைத் தடுக்கும்பொருட்டு, கொதுவை வைப்பவர் விண்ணப்பம் செய்துகொள்வதைக்குறித்த நிபந்தனையைச் சேர்த்திருக்கிறது. அம்மாதிரி பொருள்படும் வார்த்தைகள் பிரதம 8-வது விதியில் இராததுகாரணமாக, கொதுவை வைத்தவரால் தொகை செலுத்தப்படுவதன்மேல் காலவரையறை சம்பந்தமான இன்ன விதி பிரயோகப்படுகிறதென்று தீர்மானிப்பது கோர்ட்டாருக்குக் கஷ்டமாயிருந்தது. பிரேரேபித்திருக்கும் விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியில், மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யப்படுவதன்மேல், கொதுவை விஷயத்தில் மாத்திரமேயல்லாமல் வியாஜ்ஜியச் செலவு சம்பந்தமாகவும் பிரதிவாதி சகல பொறுப்பினின்றும் விடுதலையாகிறாரென்றும் அந்தப் பொறுப்பு அற்றுப்போகிறதென்றும் நிபந்தனை கண்டிருக்கிறது. மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக முடிவாய் டிக்ரி பிறப்பிக்கப்பட்டால், கொதுவைச் சொத்து கொதுவை வைத்துக் கொண்டவரிடத்தில் அறுதியாய்ச் சங்கிரமித்துவிடுகிறது. மேலும், கொதுவை விஷயமாய்ச் சேரவேண்டிய கடன் தீர்ந்துபோய்விடுவதுமாத்திரமேயல்லாமல், அதை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகத் தொடரப்பட்ட வியாஜ்ஜிய விஷயமாய் ஏற்படும் சகல பொறுப்பும் நீங்கிப்போய்விடுகிறது. மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செயவது ஒரு விசேஷ பரிகாரமாகும். ஆகவே, அந்தப்படி செய்

பகுதி 4 —தொடர்ச்சி. விதி 3.

யும்பட்சத்தில், கொதுவை வைத்தவருடைய முழு பொறுப்பும் அறவே நீங்கிப்போய்விடவேண்டும்.

பகுதி 4 —தொடர்ச்சி. விதி 4

விற்பனை செய்வதற்கான பிரதம டிக்ரியைக்குறித்துச் சொல்லும் இந்த விதியை 2-வது விதியை அனுசரித்து நாங்கள் திருத்த உத்தேசிக்கிறோம். சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் செய்திருக்கும் திருத்தத்தின்படி, அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்திலும் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதென்னும் பரிகாரம் ஏற்படுத்தியிருக்கும் குறிக்கப்படாத கொதுவையின் விஷயத்திலும் மாத்திரமே மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யும் பரிகாரம் பெற அனுமதி கொடுக்கஉத்தேசித்திருக்கிறது. ஆகவே, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்குப் பர்த்தியாக விற்பனை செய்வதென்னும் பரிகாரம் செய்துகொடுக்கக் கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தை, குறிக்கப்படாத அப்படிப்பட்ட ஒரு கொதுவையின் விஷயத்தில் மாத்திரமே செலுத்தக்கூடும். அவதிக்கிரயக் கொதுவையின் சுபாவத்தைக் கவனிக்கும்போதே சொத்தை விற்பனை செய்யும்படி கோர்ட்டார் உத்தரவு பண்ணமுடியாது. (2) குறிப்பிட்ட பகுதியானது மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக ஷரத்து ஏற்படுத்தியிருக்கும் குறிக்கப்படாத ஒரு கொதுவைக்கு மாத்திரமே பிரயோகப்படுமென்று ஸ்பஷ்டமாய் கண்டு அந்தப் பகுதியைத் திருத்த நாங்கள் உத்தேசிக்கிறோம். 2-வது விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியை அனுசரித்து 4-வது விதியுடன் (3) குறிப்பிட்ட உபவிதியைச் சேர்த்திருக்கிறோம். விற்பனைக்காகத் தொடரப்படும் வியாஜ்ஜியத்தில் கொதுவை வைத்தவருடன் கூட வேறே கட்சிக்காரர்களும் இருந்தால், அப்படிப்பட்ட விஷயத்துக்காக அந்த உபவிதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

ஆயினும், விற்பனை செய்யும்படி டிக்ரி பிறப்பிக்கும் விஷயத்தில் தொகை செலுத்துவதற்கான காலத்தைக் கோர்ட்டார் ஏன் அதிகப்படுத்தவேண்டுமென்பதற்கு நியாயமில்லை. விற்பனை நடத்தப்பட்ட பிறகுங்கூட, அந்த விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுவதற்குமுன் சொத்தை மீட்டுக்கொள்ள கொதுவை வைத்தவருக்கு அவகாசம் இருக்கிறது. ஆகவே, விற்பனைக்காக முடிவான டிக்ரி பிறப்பிப்பதற்குமுன் காலத்தை அதிகப்படுத்த கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுப்பதற்கு அவசியம் எதுவும் இல்லை (இ. லா. ரி., அலஹாபாத் 20-ம் வால்யும் 354-வது பக்கம்).

பகுதி 4 —தொடர்ச்சி. விதி 5.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 89-வது பிரிவுக்குப் பர்த்தியாக ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 34-ம் அதிகாரத்தின் 5-வது விதி அமைத்துக்கொள்ளப்பட்டது. அந்தப் பிரிவின் கடைசியில், "அதற்குமேல் மீட்கும்படி பிரதிவாதிக்குண்டான பாத்தியதை - அந்த ஈடு—இவ்விரண்டும் அற்றுப்போகவேண்டும்" என்னும் வார்த்தைக்ள் அடங்கியிருந்தன. இந்தப் பிரிவின்படி அறுதியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், கொதுவை மூலமாய் ஏற்படும் சுதந்தரங்கள் அற்றுப்போய்விடுமென்றும், அந்தத் சுதந்தரங்களுக்குப் பர்த்தியாக டிக்ரியின்படிக்கான சுதந்தரங்கள் ஏற்படுமென்றும், கொதுவை வைத்தவர் அறுதியான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு சொத்தை மீட்டுக்கொள்ள முடி

யாதென்றும் ஒரு அபிப்பிராயம் மேற்படி வார்த்தைகள் காரணமாக ஏற்பட்டது (இ. அ., 45-ம் வால்யும் 130-வது பக்கத்தில் கண்டிருக்கும் ஹேரத் ராமுக்கும் ஷாடி ராமுக்கும் நடந்த வியாஜ்ஜியம்; இ. அ., 47-ம் வால்யும் 71-வது பக்கத்தில் கண்டிருக்கும் மாத்ரு மாலுக்கும் துர்கா கன்வாருக்கும் நடந்த வியாஜ்ஜியம்). இப்படிப்பட்ட முடிவு ஏற்படாமல் தடுக்கும்பொருட்டு, 89-வது பிரிவிலிருந்த மேலேகண்ட வார்த்தைகள் 34-ம் அதிகாரத்தில் இந்தப் பிரிவுக்குப் பொருத்தமாயிருக்கும் 5-வது விதியில் விட்டுவிடப்பட்டன. ஆகவே, முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுவதனுலேயே சொத்தை மீட்கும் விஷயத்தில் கொதுவை வைத்தவருக்குள்ள சுதந்தரம் அற்றுப்போகமாட்டாதென்பது விஷயமாய்ச் சந்தேகம் எதுவும் இல்லை (அலஹாபாத் 42-ம் வால்யும் 517-வது பக்கம்; இ. அ., 48-ம் வால்யும் 472-வது பக்கத்தில் கண்டிருக்கும் ஸுகிக்கும் குலாம் ஸப்தருக்கும் நடந்த வியாஜ்ஜியத்தையும் பார்க்கவும்). கொதுவை வைத்தவருக்கு விரோதமாய் 4-வது விதியின்படியாகிலும் 7-வது விதியின்படியாகிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை நிறைவேற்றுகையில் செய்யப்பட்ட விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுகிறவரையில் சொத்தை மீட்கும் விஷயத்தில் அவருக்குள்ள சுதந்தரம் அப்படியே இருந்துவருமென்று திட்டமாய் விதிக்க நாங்கள் உத்தேசிக்கிறோம். ஆயினும், விற்பனை நடந்த பிறகும் அது ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுவதற்கு முன்னும் கொதுவை வைத்தவர் சொத்தை மீட்டுக்கொள்ள பிரயத்தனப்படும் விஷயத்தில் கிரயத்துக்கு வாங்கினவருக்குப் பிரதிபலன் கொடுக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம்.

6-வது விதியில் உள்ள 'அப்படிப்பட்ட யாதொரு விற்பனையினால்' என்னும் வார்த்தைகள் காரணமாகவும், இந்த விதி 3 முதல் 5 வரையிலுள்ள விதிகளுக்குப் பிறகு அமைக்கப்பட்டிருப்பது காரணமாகவும் பின்வருமாறு அபிப்பிராயப்படுவதற்கு இடம் உண்டாயிற்று. அதாவது, கொதுவை வைத்தவருக்கு விற்பனையான பிறகு சேரவேண்டிய பாக்கித் தொகைக்காக நபர் சம்பந்தமான டிக்ரியை விற்பனை செய்வதற்காகக் கொதுவை வைத்துக்கொண்டவரால் தொடரப்பட்ட வியாஜ்ஜியத்தில்தான் பிறப்பிக்கக்கூடுமென்றும், சொத்தை மீட்பதற்கான டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருக்கும் விஷயத்திலே கொதுவை வைத்தவர் தொகை செலுத்தத் தவறிப்போகும் பட்சத்தில் கொதுவைச் சொத்தை விற்பனை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கக்கூடுமானாலும், மீட்பதற்காகக் கொதுவை வைத்தவரால் தொடரப்படும் வியாஜ்ஜியத்தில் அப்படிப்பட்ட டிக்ரி பிறப்பிக்கக் கூடாதென்றும் அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இடம் உண்டாயிற்று. கொதுவைப் பணத்தில் பாக்கியாயிருக்கும் தொகையினிமித்தம் நபர் சம்பந்தமான டிக்ரி பிறப்பிப்பதற்காக இந்த விதியின்படி, கொதுவை வைத்துக்கொண்டவர் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது அவசியமல்ல. ஆகவே, அப்படிப்பட்ட பரிகாரம் செய்துகொடுக்கும்படி கேட்பதற்காக காலவரையறை சம்பந்தமான நிர்ணயம் எதுவும் பிரயோகப்படமாட்டாதென்று இ. வா. ரி., கல்கத்தா 42-ம் வால்யும் 294-வது பக்கத்தில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தை இதர கோர்ட்டார் அனு

பகுதிகள் 4, 5. விதிகள் 6, 8-A.

சரிக்கவில்லை (இ. லா. ரி., அலஹாபாத் 40-ம் வால்யும் 551-வது பக்கம்). "வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல்" என்னும் வார்த்தைகளை 6-வது விதியிலும், "பிரதிவாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல்" என்னும் வார்த்தைகளை 8-A விதியிலும் அமைத்துக்கொண்டு இந்த விஷயத்தைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

பகுதி 6. விதி 10. இப்போதிருக்கிறபடி 10-வது விதியில் வியாஜ்ஜியத்துக்குப் பின்னிட்ட செலவுகளைப்பற்றி மாத்திரமே சொல்லியிருக்கிறது. முடிவாய்த் தொகையைச் சரிக்கட்டும்போது, கோர்ட்டார் - பிரதம டிக்ரியின் தேதிக்குப் பிறகு கொதுவை வைத்துக்கொண்டவர் செய்திருக்கக்கூடிய கோர்ட் செலவு முதலிய செலவுகளையும் செலுத்தியிருக்கக்கூடிய கட்டணங்களையுங்கூட கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. கொதுவை வைத்துக்கொண்டவர்-அந்தப்படி செலவு செய்திருக்கும் தொகையைப் பெற பாத்தியதை உடையவராயிருக்க வேண்டும் (இ.லா.ரி., கல்கத்தா 44-ம் வால்யும் 448-வது பக்கம்). ஆகவே, அப்படிப்பட்ட தொகைகளை ஆலோசனையில் எடுத்துக் கொள்ள கோர்ட்டாருக்கு அதிகாரம் ஏற்படுத்திக்கொடுக்கும்பொருட்டு 10-வது பிரிவைத் திருத்தியிருக்கிறது. கணக்கு ஒரு முறை எடுத்தாய்விட்டாலும் பிரதம டிக்ரியில் தொகை நிர்ணயிக்கப்பட்டு விட்டாலும், அதன் பிறகு செலவு செய்யப்பட்ட தொகைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தை வெளிப்படையாய் அங்கீகரிப்பது அவசியமாகும்.

பகுதி 6 —தொடர்ச்சி. விதி 11. 11-வது விதியில்கண்ட நிபந்தனைகளில், "முந்திய கொதுவைகளை மீட்பதும் பிந்திய கொதுவைகளின் விஷயத்தில் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதும்" என்னும் கோட்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைகளை, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின் புதிய 94-வது பிரிவில் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இந்த விதியை விட்டுவிடவேண்டும்.

வட்டி விஷயமாய்க் குறிப்பாக விதி எதுவும் இராதபடியால், முற்றிலும் வட்டியைக் குறித்தே சொல்லும் புதிய விதி ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் உத்தேசிக்கிறோம். இந்த விதிக்கு 11-வது விதியென்று இலக்கமிட உத்தேசிக்கிறோம்.

(1885-ம் ஹூ த்து 28-வது ஆக்டாகிய) அதீத வட்டியைக்குறித்த சட்டங்களை ரத்துசெய்வதற்கான ஆக்ட் 2-வது பிரிவின்படி, வட்டி வசூலிக்கத்தக்கதாயிருக்கும் யாதொரு வியாஜ்ஜியத்திலே, கட்சிக்காரர்கள் உடன்படிக்கை செய்துகொண்ட வட்டி (வீதம் ஏதாகிலுமிருந்தால் அந்த) வீதத்தின்படி கோர்ட்டார் தொகையைச் சரிக்கட்டவோ அதற்காக டிக்ரி பிறப்பிக்கவோ வேண்டியிருக்கிறது. மேலும், அநியாய வட்டிக்குக் கடன்கள் வாங்குவதைக் குறித்த 1918-ம் ஹூ த்து ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படியும் இந்து தேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 74-வது பிரிவின்படியும், வட்டி வீதமானது குற்றமாய் ஏற்படக்கூடிய அளவுக்கு அதிகமாயிருந்தாலும் மிதமிஞ்சியிருந்தாலும் அதைக் குறைக்க கோர்ட்டாருக்கு அனுமதி

கொடுத்திருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்கும் பிரிவுக்கும் மேற்படி நிபந்தனை உட்பட்டதாகும். சேரவேண்டியிருப்பதாக தீர்ப்பு செய்யப்படும் அல்லது டிக்ரி செய்யப்படும் தொகைக்குப் பின்னும் வட்டி வாங்க அனுமதி கொடுக்க கோர்ட்டார் தீர்மானிக்கும் விஷயத்தில், 1855-ம் ஹுத்து 28-வது ஆக்ட் 3-வது பிரிவின்படி அவர்கள் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட வட்டியை யுக்தானுசாரமாய் மாற்றலாம். அப்படிப்பட்ட வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால், கோர்ட்டார் - தங்களுக்கு நியாயமாகத் தோற்றும் வீதப்படி வட்டி கொடுக்கும்படி தீர்ப்பு செய்யலாம். தொகை செலுத்துவதற்காக கொதுவைப் பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு வட்டி கொடுக்கும்படி தீர்ப்புசெய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்று ஒரு காலத்தில் எண்ணப்பட்டது. ஆயினும், பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு வட்டி செலுத்தவேண்டுமென்று உடன்படிக்கை எதுவும் ஏற்பட்டிராதபோதிலும், நஷ்ட ஈடு செய்வதற்காகவாவது (1839-ம் ஹுத்து 32-வது ஆக்டாகிய) வட்டியைக்குறித்த ஆக்டின்படியாவது வட்டிகொடுக்கும்படி தீர்ப்பு செய்யக்கூடுமென்று இப்போது நன்றாய் ஸ்தாபிதமாயிருக்கிறது. அனுமதிக்கப்படும் வட்டி வீதமோ அனேகமாய்ப் பத்திரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வீதமேயாகும் (லா.ரி., இ.அ., 25-ம் வால்யும் 9-வது பக்கம்). ப்ரிவி கௌன்ஸில் என்னும் சபையார் குறிப்பிட்டிருக்கிறபடி, ஒரே தடவையாய்ப் பொதுவாகக் கணக்கெடுத்து, குறித்த ஒரு தினத்தில் சேரவேண்டியிருக்கும் அசல் - வட்டி - செலவுகள் ஆகிய இவைகளின் மொத்த தொகையை டிக்ரியில் கண்டெழுதவேண்டுமென்பதும், அந்த தினம் கடந்துபோன பிறகு சொத்து மீட்கப்படாதபட்சத்தில், அந்த விஷயம் ஒப்பந்த சம்பந்தமான விஷயமாய் இருப்பது மாறி தீர்ப்புக்குட்பட்ட விஷயமாகவேண்டுமென்பதும், அது முதல் கட்சிக்காரர்களின் சுதந்தரங்கள் ஒப்பந்தத்தையாவது பத்திரத்தையாவது பொறுத்தவைகளாயிராமல் டிக்ரியில் கண்ட கட்டளைகளைப் பொறுத்தவைகளாயிருக்கவேண்டுமென்பதுமே ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 34-வது அதிகாரத்திலுள்ள நிபந்தனைகளில் கண்ட ஏற்பாடாகும் (லா.ரி., இ.அ., 34-ம் வால்யும் 21-வது பக்கமும், இ.அ., 54-ம் வால்யும் 1-வது பக்கமும்). கொதுவை சம்பந்தமான வியாஜ்ஜியத்தில் பிறப்பிக்கப்பட்ட பிரதம டிக்ரியில் தொகை செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் தேதிவரையில், சாதாரணமாய் ஒப்பந்த வீதப்படி வட்டி வாங்க அனுமதி கொடுக்கப்படுகிறது. மேலும், அதற்குப் பிறகு தொகை வசூலிக்கப்படுகிறவரையிலாவது வாஸ்தவமாய்ச் செலுத்தப்படுகிறவரையிலாவது கோர்ட்டார் - முற்றிலும் யுக்தானுசாரமாய்த் தங்களுக்கு நியாயமென்று தோற்றும் வீதப்படி வட்டி வாங்குவதற்கு அனுமதி கொடுக்கலாம் (இ.லா.ரி., கல்கத்தா 20-ம் வால்யும் 360-வது பக்கம்; சென்னபட்டணம் 21-ம் வால்யும் 364-வது பக்கம்; பம்பாய் 20-ம் வால்யும் 744-வது பக்கம்; இ.அ., 23-ம் வால்யும் 138-வது பக்கம்). மேற்படி தீர்மானங்களினால் ஏற்பட்ட முடிவைப் புதிய 11-வது விதியில் அமைத்திருக்கிறது.

மேலும், தொகை செலுத்தப்படவேண்டிய தேதிக்குப் பிறகு வட்டி வாங்குவது விஷயமாய் 34-ம் அதிகாரத்திலும் சொத்தை

ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டில் அதற்குப் பொருத்தமான 85 முதல் 99 வரையிலுள்ள பழைய பிரிவுகளிலும் நிபந்தனை எதுவும் இராததுகாரணமாக விநோதமான அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. டிக்ரியின் எந்த பாகத்தில் அப்படிப்பட்ட வட்டியைப்பற்றி தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த பாகத்தை தொகை செலுத்துவதற்கான டிக்ரியாக பாவிக்கவேண்டுமென்றும் அம்மாதிரியே அதை நிறைவேற்றவேண்டுமென்றும் சில கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள் (இ.லா.ரி., அலஹாபாத் 17-ம் வால்யும் 581-வது பக்கம்; அலஹாபாத் 18-ம் வால்யும் 316-வது பக்கம்). ஆயினும், இந்த அபிப்பிராயத்தை இதர கோர்ட்டார் அனுசரிக்கவில்லை. அந்தத் தொகையைக் கொதுவைப் பணத்தின் பாகமாக பாவிக்கவேண்டுமென்றும், அசல் தொகையும் வியாஜ்ஜியச் செலவும் எம்மாதிரி வசூலிக்கப்படுமோ அம்மாதிரியே அது கொதுவைச் சொத்திலிருந்து வசூலிக்கப்படத்தக்கதாகுமென்றும் ஷை கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள் (இ.லா.ரி., கல்கத்தா 21-ம் வால்யும் 274-வது பக்கம்; சென்னபட்டணம் 18-ம் வால்யும் 248-வது பக்கம்; கல்கத்தா 24-ம் வால்யும் 766-வது பக்கம்). அந்தப்படி அபிப்பிராயபேதம் ஏற்படாமல் நிறுத்திவிடுவதற்காகவே இந்த நிபந்தனை உத்தேசிக்கப்பட்டது. அப்படிப்பட்ட வட்டி கொதுவைப் பணத்தின் பாகமாகுமென்று நிபந்தனை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது.

9-வது விதியிலாவது 12 முதல் 14 வரையிலுள்ள விதிகளிலாவது மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை.

நமூனாக்கள்.

பகுதி 8. கொதுவை சம்பந்தமான வியாஜ்ஜியங்களில் பிறப்பிக்கப்படும் டிக்ரிகளுக்காக ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் D அனுபந்தத்தில் கண்ட 3 முதல் 11 வரையிலுள்ள நமூனாக்களுக்குப் பர்த்தியாக புதிய நமூனாக்களை அமைத்துக்கொள்ள உத்தேசிக்கிறோம். ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 48-ம் அதிகாரத்தைச் சேர்ந்த 1-வது விதியின்படி, கோர்ட்டார் - பிரஸ்தாப சந்தர்ப்பங்களை உத்தேசித்து அவசியமாயிருக்கக்கூடிய மாறுதல்களுடன் ஷை நமூனாக்களை அனுசரிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இப்போது D அனுபந்தத்திலுள்ள 3-ம் ஷை. நமூனாவானது 34-ம் அதிகாரத்தைச் சேர்ந்த 2-வது விதியின்படி ஏற்படுத்தப்பட்டிருப்பதாய்ப் பொருள்பட்டபோதிலும், அது அந்த விதிக்குப் பொருத்தமாயில்லை. கணக்கு எடுக்கும்படி கட்டளைகள் பிறப்பிக்க அதில் நிபந்தனையில்லை. ஆனால், சேரவேண்டியதாயுள்ள தொகையைக் கோர்ட்டார் நிர்ணயிப்பதைக் குறித்து மாத்திரமே அதில் சொல்லியிருக்கிறது. ஆகவே, மீட்பதற்குள்ள பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான எந்த பிரதம டிக்ரிகளில் கணக்கு எடுக்கும்படி கோர்ட்டார் கட்டளையிடுவதுடன் சேரவேண்டிய தொகையையும் நிர்ணயிக்கிறார்களோ அப்படிப்பட்ட பிரதம டிக்ரிகளுக்காக பிரத்தியேகமாய் 3-ம் ஷை., 3-A ஷை. நமூனாக்களை ஏற்படுத்தியிருக்கிறது. 2-வது, 3-வது விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்களை அனுசரித்து இந்த நமூனாக்கள் தயார்செய்

யப்பட்டிருக்கின்றன. அம்மாதிரியே, மீட்பதற்குள்ள பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வது சம்பந்தமாய்ப் பிறப்பிக்கப்படும் முடிவான டிக்ரிக்காக ஏற்படுத்தப்பட்ட 4-ம் நெ. நமூனா 10-ம் நெ. நமூனாவுக்குப் பார்த்தியாக அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது 3-ம் நெ., 3-A நெ. நமூனாக்களுடன் ஒத்திருக்கும்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது. அம்மாதிரியே, விற்பனை விஷயமாயும் மீட்பது விஷயமாயும் பிறப்பிக்கப்படும் பிரதம டிக்ரிகளுக்காக 5-ம் நெ., 5-A நெ. நமூனாக்களையும் 7-ம் நெ. முதல் 7 C நெ. வரையி லுள்ள நமூனாக்களையும் தயாரித்திருக்கிறது. அவை 4 முதல் 7 வரையிலுள்ள திருத்தப்பட்ட விதிகளை அனுசரித்துத் தயாரிக்கபட்டவைகளாகும்.

மீட்பதற்கான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காவோ விற்பனை செய்வதற்காகவோ மீட்பதற்காகவோ தொடரும் வியாஜ்ஜியத்தில் கொதுவை வைத்தவர் டிக்ரியில் கண்ட தொகையைச் செலுத்தும்போது பிறப்பிக்கப்படும் முடிவான டிக்ரிக்காக உதவியாயிருக்கும்பொருட்டு 7 D நெ. முதல் 7 F நெ. வரையிலுள்ள நமூனாக்களைச் சேர்த்திருக்கிறது.

8-ம் நெ. நமூனாவானது 6-வது விதியின்படியும் 8 A விதியின் படியும் பிறப்பிக்கப்படும் முடிவான டிக்ரிக்காக ஏற்படுத்தப்பட்டதாகும். மேலும், அது பிரதமத்திலிருந்த 11-ம் நெ. நமூனாவுக்குப் பார்த்தியாக அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 6-வது விதியிலும் 8 A விதியிலும் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்களின் பிரகாரம் ஷை நமூனாவைத் திருத்தியிருக்கிறது.

இப்போதுள்ள 6-ம் நெ. நமூனாவுக்குப் பார்த்தியாக 9-ம் நெ. நமூனா அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மீட்பதற்கான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகவாவது விற்பனைக் காகவாவது தொடரப்படும் வியாஜ்ஜியத்தில் கொதுவை வைத்தவருடன்கூட பின்னிட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவரும் பிரதிவாதியாய்ச் சேர்க்கப்படுகிற யாதொரு விஷயத்துக்காக அதில் ஏற்பாடு செய்திருக்கிறது. 2-வது விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியிலும் 4-வது விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியிலும் சொல்லியிருக்கிறபடி முறையே சகல கட்சிக்காரர்களுக்கும் அவர்களில் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டமட்டிலுள்ள சுதந்தரங்களை இந்த நமூனாவில் விவரமாய்க் குறிப்பிட்டிருக்கிறது. பல கொதுவைகள் இருக்கும்பட்சத்தில் மீட்பதற்காக ஒன்றின்பின் ஒன்றாகக் கால அளவுகள் ஏற்படுத்திக்கொடுக்கும் வழக்கம் இங்கிலாந்தில் கூட ஆசாரத்தை விட்டு நீங்கிக்கொண்டிருக்கிறது. மீட்பதற்காக ஒரே கால அளவு ஏற்படுத்திக் கொடுப்பதே இப்போது சாதாரணமாய் அனுசரிக்கப்படும் முறையாகும். முக்கியமாய், கொதுவைச் சொத்து வெகுசாய்ச் சீர்கெட்டுப் போகக்கூடியதாயிருந்தால், இந்த முறைதான் அனுசரிக்கப்படுகிறது (கொதுவையைப்பற்றி கோஸ் என்பவர் எழுதிய புத்தகம், 5-ம் பதிப்பு 1-ம் வால்யும் 639-வது பக்கம்). இப்போதைய 6-ம் நெ. நமூனாவின்படி, பின்னிட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர் ஆறு மாதத்துக்குள்ளும் கொதுவை வைத்தவர் அதன்பிறகு பின்னும் மூன்று மாதத்துக்குள்ளும் சொத்தை மீட்டுக்கொள்ளலாம். மீட்பதற்காகச் சாதாரணமாய்க் கொடுக்கும்

ஆறு மாதத்துக்கு அதிகமான காலம் ஏன் கொடுக்கவேண்டுமென்பதற்கும், கொதுவை வைத்தவர் பின்னும் வில்லங்கங்கள் ஏற்படுத்த விரும்பினது காரணமாகவே, கொதுவை வைத்துக்கொண்டவர் தாம் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு ஏன் காத்திருக்க வேண்டுமென்பதற்கும் நியாயம் எதுவும் இல்லை. மீட்கும் விஷயத்தில் சகல பிரதிவாதிகளுக்கும் ஒரே கால அளவுதான் 9-ம் நெ. நமூனுவில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

10-ம் நெ., 11-ம் நெ. நமூனுக்கள் இப்போதுள்ள 7-ம் நெ., 8-ம் நெ. நமூனுக்களுக்குப் பார்த்தியாக அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், அவை 3 முதல் 8 வரையிலுள்ள விதிகளில் செய்திருக்கும் திருத்தங்களுக்குப் பொருத்தமாகத் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. மீட்பதற்காக ஒரே கால அளவு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்னும் கோட்பாட்டை 11-ம் நெ. நமூனுவில் கண்டிதமாய் அனுசரித்திருக்கிறது.

[(1908-ம் வருஷத்து 16-வது ஆக்டாகிய) இந்துதேசத்து ரெஜிஸ்டரேஷன் ஆக்ட்.]

பகுதி 9. பிரிவு 17 (1) (e). நூறு ரூபாய்க்கோ அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பிறப்பிக்கப்பட்டிருக்கும் யாதொரு கொதுவை டிக்ரியை ஒப்படை செய்யும் பட்சத்தில், அந்த ஒப்படையை இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அந்தப்படி ஒப்படை செய்வதனுல் டிக்ரியில் கண்டிருக்கும் அசையாப் பொருளை விற்பனை செய்ய ஒப்படை பெற்றவருக்கு சுதந்தரம் ஏற்படுகிறதென்பதும், அசையாப் பொருளை விற்பனை செய்வதற்கான சுதந்தரமானது அப்படிப்பட்ட சொத்தில் ஏற்படும் சுதந்தரம் அல்லது உரிமையாகுமென்பதுமே மேலேகண்டபடி அபிப்பிராயப்படுவதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது (பம்பாய் 1-ம் வால்யும் 267-வது பக்கம், பம்பாய் லா. ரி., 11-ம் வால்யும் 356-வது பக்கத்தையும் பார்க்கவும்). ஆனல், மேலே கண்டபடி ஒப்படை செய்வதை ரெஜிஸ்டர் பண்ணவேண்டியதில்லையென்று கல்கத்தா ஹைகோர்ட்டாரும் அலஹாபாத் ஹைகோர்ட்டாரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், டிக்ரிதான் ஒப்படை செய்யப்படுகிறதேயொழிய அசையாப் பொருள் எதுவும் ஒப்படை செய்யப்படுவதில்லையென்பதும், டிக்ரி கொதுவைப் பத்திரத்தின்மேல் பிறப்பிக்கப்பட்டிருந்தபோதிலும் அதை எவ்விதத்திலும் அசையாப் பொருளாக பாவிக்கமுடியாதென்பதுமே. மேலும், ஒப்படை செய்ததனுலேயே அசையாப் பொருளில் உரிமை ஏற்படாதென்று இந்தக் கோர்ட்டார் கூறியிருக்கிறார்கள் (கல்கத்தா 23-ம் வால்யும் 450-வது பக்கம்; க. வீ. நோ. 6-ம் வால்யும் 5-வது பக்கம்; க. வீ. நோ. 12-ம் வால்யும் 625-வது பக்கம்; அலஹாபாத் 13-ம் வால்யும் 89-வது, 91-வது பகக்ங்கள்; அலஹாபாத் 35-ம் வால்யும் 524-வது பக்கம்).

இந்தப் பிரிவின் (b) அடையாளமிட்ட பகுதியிலுள்ள "பொருள்படுகிற அல்லது செலாவணியாகிற" என்னும் வார்த்தைகளுக்கு "தாமாகவே பொருள்படுகிற அல்லது செலாவணியாகிற" என்று அர்த்தம் செய்வதற்கு ஆதாரம் எதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. பம்பாய் ஹைகோர்ட்டார் கொண்ட அபிப்பிராயமே சரியான அபிப்பிராயமென்று எங்களுக்குத் தோற்றுகிறது. ஆகவே, அந்த அபிப்பிராயத்தை அமுலுக்குக் கொண்டு வரும்பொருட்டு, 17-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற்கண்டதை (e) அடையாளமிட்ட பகுதியாக நாங்கள் அமைத்துக்கொண்டிருக்கிறோம் :—

(e) கோர்ட்டார் பிறப்பித்த யாதொரு டிக்ரி அல்லது உத்தரவாவது யாதொரு பஞ்சாயத்தின் தீர்மானவாவது எந்த அசையாப்பொருளிலாகிலும் நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் பெறுமானமுள்ளதாய், ஏற்கனவே சங்கிரமித்தோ அல்லது இனி ஏற்படக்கூடியதாகவோ இருக்கிற யாதொரு பாத்தியதை, உரிமை அல்லது சுதந்தரத்தைத் தற்காலத்திலாயினும் இனி மேலாயினும் உண்டுபண்ணுகிறதாகவோ நிர்ணயிக்கிறதாகவோ சாட்டுகிறதாகவோ மட்டுப்படுத்துகிறதாகவோ அற்றுப்போகும்படிச் செய்கிறதாகவோ பொருள்படுகிறதாய் அல்லது செலாவணியாகிறதாயிருக்கும்போது, அப்படிப்பட்ட டிக்ரியை அல்லது உத்தரவை அல்லது தீர்மானத்தை ட்ரான்ஸ்பர் செய்பவைகளாய் அல்லது சாட்டுபவைகளாயுள்ள மரண சாஸனமல்லாத இதர ஆதாரவுகள்.

மேலும், ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (d) அடையாளமிட்ட பகுதியை, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 107-வது பிரிவில் செய்யும்படி பிரேரேபித்திருக்கும் திருத்தத்துக்குப் பொருத்தமாயிருக்கும்படிச் செய்ய உத்தேசிக்கிறோம். 107-வது பிரிவின்படி, மாதவாரியாய்க் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவது சம்பந்தமான சீட்டுகளைத் தவிர மற்ற சகல குத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருப்பதால், "வருஷா வருஷத்திற்காவது . . . . . . நிறுத்திவைத்துக்கொள்ளுகிறதாகவாவதுள்ள" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும். மேலும், மாதவாரியாகவாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்காவது குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவது சம்பந்தமான சகல சீட்டுகளும் கட்டாயமாய் ரெஜிஸ்டர் செய்யப்படத்தக்கவைகளாயிருக்கும்படிச் செய்யவேண்டும்.

பகுதி 9—தொடர்ச்சி. பிரிவு 17 (2) (vi).

17-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b), (c) அடையாளமிட்ட பகுதிகளில் கண்டது எதுவும் கோர்ட்டார் பிறப்பிக்கும் டிக்ரிகளுக்காவது உத்தரவுகளுக்காவது பஞ்சாயத்துத் தீர்மானங்களுக்காவது பிரயோகப்படமாட்டாதென்று அந்தப் பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (vi) அடையாளமிட்ட பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. கோர்ட்டார் பிறப்பிக்கும் டிக்ரிகளையும் உத்தரவுகளையும், எந்த விஷயத்திலும் விலக்கில்லாமல், ரெஜிஸ்டர் செய்வதிலிருந்து நிவாரணை செய்திருப்பது காரணமாக மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், முக்கியமாய் அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட சம்மத டிக்ரிகளின் விஷயத்தில் அப்படிப்பட்ட கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒரு வியாஜ்ஜியமானது சட்ட சம்மதமான

யாதொரு ராஜிமூலமாய்த் தீர்த்துக்கொள்ளப்பட்டால், அந்தப்படி ராஜியானதை ரெகார்ட் பண்ணும்படி கோர்ட்டார் உத்தரவு செய்து, பிரஸ்தாப வியாஜ்ஜியத்துக்குச் சம்பந்தப்பட்டமட்டில் அந்த ராஜியை அனுசரித்து டிக்ரி பிறப்பிக்கவேண்டுமென்று ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 23-வது அதிகாரத்தில் கண்ட 3-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. இ. அ., 46-ம் வால்யும் 240-வது பக்கத்தில் கண்டிருக்கும் வியாஜ்ஜியத்திலே ஜுடிஷல் கம்மிட்டி என்னும் சபையார் தீர்மானம் செய்ததற்கு முன், பிரஸ்தாப வியாஜ்ஜியத்துக்குச் சம்பந்தப்படாத அசையாப் பொருள்களை டிக்ரியில் சேர்க்க 23-ம் அதிகாரத்தில் கண்ட 3-வது விதியின்படி கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டா என்பது விஷயமாய் ஒன்றுக்கொன்று விரோதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருந்தன. அந்தப்படி செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டென்றும், பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்படாத விஷயங்கள் டிக்ரியில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அதை ரெஜிஸ்டர் செய்வது அவசியமல்லவென்றும் சில வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. ஆனால், வியாஜ்ஜியத்துக்குச் சம்பந்தப்படாத அசையாப்பொருளைத் தாங்கள் பிறப்பிக்கும் டிக்ரியில் சேர்க்கக் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்றும், அப்படிப்பட்ட சொத்தைத் தாங்கள் பிறப்பிக்கும் டிக்ரியில் கோர்ட்டார் சேர்த்தாலுங்கூட, கட்சிக்காரர்களின் சம்மதத்தின் மேல் டிக்ரி பிறப்பிப்பதற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பம் அப்படிப்பட்ட சொத்துக்குச் சம்பந்தப்பட்ட வரையில் அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்றும் பெரும்பான்மையான வியாஜ்ஜியங்களில் அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. ராஜி ஏற்பாடு முழுவதையும் டிக்ரியில் எடுத்துரைத்து, பிறகு அதில் பிரஸ்தாப வியாஜ்ஜிய விஷயமாயிருக்கும் பாக சம்பந்தமாய் ஒரு உத்தரவுடன் அந்த டிக்ரியை முடிப்பதே 23-ம் அதிகாரத்தைச் சேர்ந்த 3-வது விதியிற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குச் சரியான முறையாகுமென்று இ. அ., 46-ம் வால்யும் 240-வது பக்கத்தில் ஜுடிஷல் கம்மிட்டி என்னும் சபையார் இப்போது அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால், கோர்ட்டார் டிக்ரியுடன் ஒரு ஷெட்யூலைச் சேர்த்து ராஜியேற்பாட்டை அந்த ஷெட்யூலில் கண்டெழுதலாமென்றும் ஷை கம்மிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால், மேலேகண்ட இரண்டு விஷயங்களில் எதிலும், டிக்ரியில செலாவணியாகத்தக்க பாகமானது வாஸ்தவத்திலே வியாஜ்ஜிய விஷயமாயிருந்த சொத்துக்கு மாத்திரமே சம்பந்தப்படுவது தகுதியாயிருக்குமாயினும், மொத்தத்தில் டிக்ரியை எடுத்துக்கொண்டால் அதில் ராஜி ஏற்பாடும் அடங்குமென்றும் ஷை கம்மிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அந்த வியாஜ்ஜியத்திலே கௌரவம் பொருந்திய ஜட்ஜுகள் பின்னும் சொல்லியிருப்பதாவது: "இப்போது 1908-ம்௵த்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டை எடுத்துக்கொண்டு, 17-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (vi) அடையாளமிட்ட பகுதியில் 'டிக்ரி' என்னும் வார்த்தைக்குக் கொடுத்திருக்கும் அர்த்தத்தைப்பற்றி ஆலோசிக்கும்போது, அதற்கு அந்த சட்டத்தின் நோக்கத்தை அனுசரித்து அர்த்தம் செய்யவேண்டும். அந்த நோக்கம் என்னவென்றால், பஹிரங்க

மாய் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்கு ஒரு முறையை நிர்ணயிப்பதேயாகும். ஆகவே, ஷை வார்த்தை டிக்ரியில் செலாவணியாகத்தக்க பாகத்துக்கு மாத்திரமே பிரயோகப்படும்படி அதன் அர்த்தத்தின் விஷயமாய் ஏன் வரையறை ஏற்படுத்தவேண்டுமென்பதற்கு நியாயம் எதுவும் இல்லை." இந்தப்படி ஷை ஜட்ஜிகள் சொல்லியிருப்பதால், ப்ரிவி கௌன்ஸில் என்னும் சபையார் தீர்மானம் ஏற்பட்டது முதல், ராஜி ஏற்பாட்டில் அல்லது டிக்ரியில் எந்த பாகம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் சேராத அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த பாகத்தை ரெஜிஸ்டர் செய்வது கட்டாயமல்லவென்று ஏற்பட்டுவிட்டது. இதனால் விசேஷ கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, டிக்ரிகளையும் உத்தரவுகளையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டியிராதபடி நிவாரணை செய்திருப்பதானது யாதொரு ராஜியேற்பாட்டை அனுசரித்துப் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லும் டிக்ரிகளுக்கும் உத்தரவுகளுக்கும் பிரயோகப்படக்கூடாதென்று பிரேரேபிக்கப்படுகிறது. அசையாப் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து தீர்மானங்களை ரெஜிஸ்டர் செய்யாவிட்டால், ராஜி யேற்பாட்டின்மேல் பிறப்பிக்கப்படும் டிக்ரிகளின் விஷயத்திலும் உத்தரவுகளின் விஷயத்திலும் என்ன கஷ்டம் உண்டாகிறதோ அதே கஷ்டம் உண்டாகிறது. ஆகவே, 17-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (vi) அடையாளமிட்ட பகுதியை அடியிற்கண்டபடி மாற்றியிருக்கிறோம் :—

"ராஜி ஏற்பாட்டின்மேல் பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கும் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவைத் தவிர, கோர்ட்டின் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவு."

எந்த விவகாரங்களை வாய்மொழியான உடன்படிக்கை மூலமாகவும், அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்திற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் சொத்தை சுவாதீனப்படுத்துவது மூலமாகவும் நடத்தினால் அவை செல்லுமோ அந்த விவகாரங்களுக்கு மாத்திரம் பார்த்தியாக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவுகள் மூலமாய்ப் பிறப்பட்டு நடத்தப்படும் விவகாரங்களைப் பொருத்திக்கொள்ளமுடியாதென்னும் விஷயத்தை நாங்கள் இந்தப் பிரிவில் விளக்கிக் காட்ட உத்தேசிக்கிறோம். பகுதி 9—தொடர்ச்சி. பிரிவு 48.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 59-வது பிரிவின்படி ஹக்கு சாஸனங்களைக் கொடுத்துவைப்பது மூலமாக கொதுவை ஏற்படுத்துவது செல்லத்தக்கதாகும். அந்தக் கொதுவை எழுத்து மூலமாயிராதாகையால், ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாவு மூலமாய் ஏற்படுத்தப்படமாட்டாது. ஆகவே, இப்படிப்பட்ட கொதுவையையும் மேலேகண்ட மாதிரியாகவே விலக்கவேண்டிவரும். தருமரீதியாய் ஏற்பட்டுள்ள எக்விடபில் மார்ட்கேஜ் என்னும் கொதுவைகள் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின்படி அங்கீகரிக்கப்படுகிறபடியால், அதே சொத்துக்குச் சம்பந்தப்பட்ட பிந்திய ஒரு கொதுவை ரெஜிஸ்டர் செய்யப்பட்டாலுங்கூட, அதைக்கொண்டு முந்திய கொதுவைகளை பார்த்தி செய்யமுடியாதென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது (இ.லா.ரி., கல்கத்தா 33-ம் வால்யும் 410-வது பக்கம்).

பகுதி 9—தொடர்ச்சி. பிரிவு 49. யாதொரு தஸ்தவேஜூ ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியதாயிருந்தும் அது ரெஜிஸ்டர் செய்யப்படாதபட்சத்திலே, அதைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளமுடியாதென்று 49-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. அந்த தஸ்தவேஜூகள் மூலமாக நடத்தப்பட்டிருப்பதாகப் பொருள்படும் விவகாரத்தை ருஜூப்படுத்தும் காரியத்துக்காக அவைகளை ஏற்றுக்கொள்ளமுடியாமற்போனாலும், சுவாதீனம் இப்படிப்பட்டதென்று நிச்சயித்தறிவதுபோன்ற பிரஸ்தாப விஷயத்துக்கு முக்கியாம்சத்தில் அல்லாமல் மற்றப்படி சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக சாட்சியமாய் அவைகளை ஏற்றுக்கொள்ளக் கூடுமென்று ஜூடிஷல் கம்மிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் (இ. லா. ரி., சென்னபட்டணம் 43-ம் வால்யும் 244-வது பக்கம் P. C.). ரெஜிஸ்டர் செய்யாமல் விட்டுப்போனது காரணமாக விவகாரங்கள் பூர்த்தியாயிராதபோது, ஒப்பந்தத்தைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதென்னும் கோட்பாட்டை அமுலுக்குக் கொண்டு வருகையில், சிறிதுமட்டில் நிறைவேற்றியிருப்பதை ருஜூப்படுத்தும்பொருட்டு ஷை விவகாரங்களைச் சாட்சியமாய் ஏற்றுக்கொள்ள கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுப்பது அவசியமாகும். அப்பிரகாரமே இந்தப் பிரிவில் ஒரு விலக்கு நிபந்தனையைச் சேர்த்திருக்கிறது.

[(1925-ம் வருஷத்து 39-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தாயபாக ஆக்ட்.]

பகுதி 10. பிரிவுகள் 115–117. இந்தப் பிரிவுகளில் செய்ய உத்தேசிக்கும் திருத்தங்களானவை - சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 15, 16, 18-வது பிரிவுகளில் செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தங்கள் காரணமாக ஏற்பட்டவைகளாகும்.

பகுதி 11. உடன்சேர்க்கையான மசோதா ஆக்ட் பிற்போக்காய்ப் பிரயோகப்படமாட்டாதென்று இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 12. பிரதான மசோதா ஆக்டைச் சேர்ந்த 8-வது பகுதியின் கீழ் கண்ட குறிப்பில் சொல்லியிருக்கும் காரணங்களுக்காக, 2-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் மூன்று ஆக்டுகளை ரத்துசெய்ய இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

LEGISLATIVE ASSEMBLY BILL No. 34 OF 1927.

இந்திய சட்டநிரூபண சபையாரின் 1927-ம் வருஷத்து 34-வது மசோதா ஆக்ட்.

A BILL TO SUPPLEMENT THE TRANSFER OF PROPERTY (AMENDMENT) ACT, 192 .

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவதற்கான) ஆக்டுக்கு உடன்சேர்க்கையாயுள்ள 192 -ம் வருஷத்து மசோதா ஆக்ட்.

சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான 192 -ம் ௵த்து (திருத்துவதற்கான) ஆக்ட் ஜாரி செய்யப்படுவது காரணமாக, 1874-ம் ௵த்து விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்டிலும், 1877-ம் ௵த்து ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்டிலும், 1908-ம் ௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்திலும், 1908-ம் ௵த்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிலும், 1925-ம் ௵த்திய இந்துதேசத்து தாயபாக ஆக்டிலும் சில திருத்தங்கள் செய்வது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

192 -ம் ௵த்து -வது ஆக்ட். 1874-ம் ௵த்து 3-வது ஆக்ட். 1877-ம் ௵த்து 1-வது ஆக்ட். 1908-ம் ௵த்து 5-வது ஆக்ட். 1908-ம் ௵த்து 16-வது ஆக்ட். 1925-ம் ௵த்து 39-வது ஆக்ட். 1874-ம் ௵த்து 3-வது ஆக்ட்.

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த (திருத்துவதற்கான) ஆக்டுக்கு உடன்சோக்கையாயுள்ள 192 -ம் ௵த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று செலாவணியாகத் தொடங்கும்.

1874-ம் ௵த்து 3-வது ஆக்ட் 8-வது பிரிவில் திருத்தம்.

2. 1874-ம் ௵த்து விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்ட் 8-வது பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனைக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“ ஆனால், இந்தப் பிரிவில் கண்டதெதனாலும்—

(a) யாதொரு சொத்தானது யாதொரு ஸ்திரீக்காவது அவளுடைய பிரயோசனத்துக்காகவாவது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்து, அந்த சொத்தையாகிலும் அதில் அவளுக்குள்ள பிரயோசனமடைவதற்கான உரிமையையாகிலும் அவள் விவாகமாயிருக்கும் காலத்தில் ட்ரான்ஸ்பர் செய்யவோ அந்தக் காலத்தில் அந்த சொத்தின்மேல் அல்லது உரிமையின்மேல் யாதொரு பொறுப்பேற்றவோ அதிகாரம் கிடையாதென்னும் திட்டத்துக்கு உட்பட்டு மேலே கண்டபடி ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்தால், ஜப்திபண்ணி விற்பனை செய்வது மூலமாகவாயினும் மற்றப்படியாயினும் அந்த சொத்திலிருந்து எவ்வளவாவது வசூலிக்க ஷி நபருக்குப் பாத்தியதை ஏற்படவுமாட்டாது ;

(b) வெளிப்படையாகவோ ஊகிக்கத்தக்க விதமாகவோ தம்முடைய மனைவிமூலமாய் ஏற்பட்ட கடன்களுக்குப் புருஷன் உத்தரவாதியாயிருப்பதற்குப் பாதகம் உண்டாகவுமாட்டாது.”

1877-ம் ௵த்து 1-வது ஆக்டில் 30 A பிரிவைப் புதிதாய் அமைத்துக் கொள்வது.

3. 1877-ம் ௵த்து ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்தபரிகார ஆக்ட் 30-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட தலைப்பையும் பிரிவையும் அமைத்துக்கொள்ள வேண்டும் ; அவையாவன :

1877-ம் ௵த்து 1-வது ஆக்ட்.

"(k) சிறிதுமட்டில் நிறைவேற்றுவது.

குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவது சம்பந்தமான காண்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றியிருக்கும் விஷயத்தில் குறித்தபிரகாரம் நிறைவேற்றுவது.

30 A. அசையாப்பொருளைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட எழுத்துமூலமாய்க் காண்ட்ராக்ட் செய்துகொள்ளப்பட்டிருந்து, அந்த காண்ட்ராக்டில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களாலாவது அவர்கள் சார்பிலாவது கையெழுத்து போடப்பட்டிருந்தால், அந்த காண்ட்ராக்ட் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியதாயிருந்தும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிராவிட்டாலும் பாதகமில்லாமலே, இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்சிக்காரர்களில் எவராவது—

(a) குறித்த பிரகாரம் நிறைவேற்றவேண்டுமென்று குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டவர் தாவா செய்திருந்து, அவர் காண்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்காக குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவருக்குச் சொத்தின் சுவாதீனத்தை ஒப்புவித்திருக்கும்பட்சத்திலும்,

(b) குறித்த பிரகாரம் நிறைவேற்றவேண்டுமென்று குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் தாவா செய்திருந்து, காண்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்காக அவர் சொத்தின் சுவாதீனத்தை அடைந்திருக்கும்பட்சத்திலும், அல்லது ஏற்கனவே சொத்தின் சுவாதீனம் பெற்றிருந்தால், காண்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்காக சொத்தை அந்தப்படியே சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்து, காண்ட்ராக்டைப் பின்னும் நிறைவேற்றுவதற்காக யாதொரு காரியத்தைச் செய்திருக்கும்பட்சத்திலும்,

ஷை காண்ட்ராக்டைக் குறித்த பிரகாரம் நிறைவேற்றும்படிச் செய்வதற்காக மற்றொரு கட்சிக்காரர் மேல் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்:

ஆனால், ஷை காண்ட்ராக்டைக் குறித்தாகிலும் அதைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதைக் குறித்தாகிலும் நோடிஸ் பெறாமல் ஐவேஜுக்காக ட்ரான்ஸ்பர் பெற்றிருக்கும் யாதொரு நபரின் சுதந்தரங்களுக்கு இந்தப் பிரிவில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது.

இந்தப் பிரிவானது - 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்குப் பிறகு எழுதிக்கொடுக்கப்படும் குத்தகை அல்லது வாடகை சம்பந்தமான காண்ட்ராக்டுகளுக்குப் பிரயோகப்படுகிறது."

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூல் 34-ம் அதிகாரத்தில் கண்ட 2 முதல் 8 வரையிலுள்ள விதிகளுக்குப் பர்த்தியாக புதிய பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

4. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 34-ம் அதிகாரத்தில் கண்ட 2 முதல் 8 வரையிலுள்ள விதிகளுக்குப் பர்த்தியாக அடியிற் கண்ட விதிகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:

மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதைக் குறித்த வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்ரி.

"2. (1) மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகக் கொண்டு வரப்படும் வியாஜ்ஜியத்தில் வாதி ஜயமடைகிறபட்சத்திலே, கோர்ட்டார் டிக்ரி பிறப்பித்து, அதில்

(a) (i) கொதுவையின்மேல் அசலுக்காகவும் வட்டிக்காகவும்,

(ii) வாதிக்கு வியாஜ்ஜியச் செலவு ஏதாவது தீர்ப்பு செய்யப்பட்டிருந்தால் அந்தச் செலவுக்காகவும்,

(iii) அவருடைய கொதுவை ஈட்டின் விஷயமாய் ஷை டிக்ரியின் தேதிவரையில் கிரமமாய் அவருக்குப் பிடித்த கோர்ட் செலவு முதலிய வேறே செலவுகளுக்காகவும் அவர் செலுத்தியிருக்கும் கட்டணங்களுக்காகவும் அவைகளுக்குண்டான வட்டிக்காகவும், ஷை தேதியன்றைக்கு வாதிக்குச் சேரவேண்டியதைக்குறித்துக் கணக்கு எடுக்கும்படி உத்தரவு பண்ணவேண்டும்; அல்லது,

(b) அந்தத் தேதியில் மேலேகண்டபடி சேரவேண்டியதாயிருக்கும் தொகையை நிர்ணயிக்கவேண்டும்; மேலும்,

(c) (i) சேரவேண்டியதாக அந்தப்படி தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகையை, சந்தர்ப்பத்துக்கேற்றபடி (a) குறிப்பிட்ட பகுதியின்படி எடுக்கப்பட்ட கணக்கைக் கோர்ட்டார் ஊர்ஜ்ஜிதப்படுத்தி அதில் மேல்கையெழுத்து போடுகிற தேதியிலிருந்தாவது, (b) குறிப்பிட்ட பகுதியின்படி அப்படிப்பட்ட தொகை கோர்ட்டில் நிர்ணயிக்கப்படுகிற தேதியிலிருந்தாவது ஆறுமாதத்துக்குள் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்பாகிலும் பிரதிவாதி கோர்ட்டில் செலுத்தி, அதன்பிறகு பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாயும் கட்டணங்கள் விஷயமாயும் சேரவேண்டியதென்று 10-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறபடி தீர்ப்பு செய்யப்படக்கூடிய தொகையை, 11-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறபடி முறையே அந்தத் தொகைகளின்மேல் பிற்பட்டு ஏற்படும் வட்டி சகிதமாகச் செலுத்தும்பட்சத்தில், வாதியானவர் - கொதுவைச் சொத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாய்த் தம்முடைய சுவாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிற சகல தஸ்தவேஜுகளையும் பிரதிவாதியினிடத்திலாகிலும் அவரால் நியமிக்கப்படுகிற நபரிடத்திலாகிலும் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், ஷை சொத்தைக் கொதுவையிலிருந்தும், வாதியாலாயினும் அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடுகிற யாதொரு நபராலாயினும், வாதியே இன்னொருவரிடமிருந்து அடைந்த சுதந்தரத்தைக்கொண்டு பாத்தியதை கொண்டாடுகிற விஷயத்திலே அவர் யாரைமுன்னிட்டு பாத்தியதை கொண்டாடுகிறாரோ அவர்களாலாயினும் உண்டாக்கப்பட்ட சகல சிக்குச்சிலுகுகளிலிருந்தும் விடுவித்து, தம்முடைய செலவில் அந்த சொத்தைப் பிரதிவாதிக்கு மறுபடி ட்ரான்ஸ்பர் பண்ணும்படி கேட்கப்பட்டால் அந்தப்படியே ட்ரான்ஸ்பர் பண்ணவேண்டுமென்றும், ஷை சொத்தை அவசியமானால் பிரதிவாதிக்குச் சுவாதீனப்படுத்தவும் வேண்டுமென்றும்,

(ii) சேரவேண்டியதென்று பிரதம டிக்ரியின்படியாவது அதன்மூலமாயாவது தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகை மேலேகண்டபடி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியன்றைக்காகிலும் அதற்குமுன்பாகிலும் செலுத்தப்படாவிட்டாலும், பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாயும், கட்டணங்கள், வட்டி ஆகிய இவைகள் விஷயமாயும் சேரவேண்டியதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் தொகையைக் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் பிரதிவாதி செலுத்தத் தவறிப்போய்விட்டாலும், ஷை சொத்தை மீட்டுக் கொள்ள பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியதையும் இராதபடி தடுத்து முடிவான டிக்ரி பிறப்பிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ள வாதி அர்ஹராவாரென்றும்
கட்டளையிடவேண்டும்.

(2) சரியான காரணம் காட்டப்படுவதன்மேலும், கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் ஷரத்துகளின்படியும் கோர்ட்டார் - (1) குறிப்பிட்ட உபவிதியின்படி பாக்கியாயிருப்பதாகத் தெரியவந்த அல்லது நிர்ணயிக்கப்பட்ட தொகையையாவது பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாயும், கட்டணங்கள், வட்டி ஆகிய இவைகள் விஷயமாயும் சேரவேண்டியிருப்பதாகத் தீர்ப்பு செய்யப்பட்ட தொகையையாவது செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்தை அப்போதைக்கப்போது அதிகப்படுத்தலாம்.

(3) மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்திலே, பிற்பட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர்களாவது, அந்தப்படி கொதுவை வைத்துக்கொண்ட எவர்களிடமிருந்தாகிலும் பாத்தியதை அடைகிற அல்லது அவர்களுடைய சுதந்தரங்களுக்குப் பர்த்திசெய்யப்படுகிற நபர்களாவது கட்சிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டால், வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் கட்சிக்காரர்களுக்கு முறையேயுள்ள சுதந்தரங்களையும் பொறுப்புகளையும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி D அனுபந்தத்தில் கண்ட 9-ம் நெ. நமூனாவிலாவது 10-ம் நெ. நமூனாவிலாவது பிரஸ்தாப விஷயத்தின் சந்தர்ப்பங்களை அனுசரித்து அவசியமாயிருக்கும் மாறுதல்களைச் செய்து அந்த நமூனாவில் ஏற்படுத்தியிருக்கிற மாதிரியாகவும் விதமாகவும் தீர்ப்பு செய்வதற்காக பிரதம டிக்ரியில் கிடந்தனை ஏற்படுத்தவேண்டும்.

மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் முடிவான டிக்ரி.

3. (1) கொதுவைச் சொத்தை மீட்கும்படியான பாத்தியதை பிரதிவாதிக்கு எவ்வளவும் இராதபடி தடுத்து முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுவதற்கு முன்னே, 2-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தம்மிடமிருந்து சேரவேண்டிய சகல தொகைகளையும் பிரதிவாதி கோர்ட்டில் செலுத்தினல், இது

விஷயமாய்ப் பிரதிவாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கோர்ட்டார் முடிவான டிக்ரி பிறப்பித்து, அதில்—

(a) பிரதம டிக்ரியில் குறிப்பிட்டிருக்கும் தஸ்தவேஜுகளை ஒப்பித்துவிடும்படி வாதிக்கு உத்தரவு செய்யவேண்டும் ;

மேலும், அவசியமாயிருக்கும் பட்சத்தில்,—

(b) கொதுவைச் சொத்தை ஷை டிக்ரியில் கட்டளையிட்டிருக்கிறபடி பிரதிவாதியின் செலவில் மீண்டும் ட்ரான்ஸ்பர் செய்ய வேண்டுமென்று வாதிக்கு உத்தரவு செய்யவேண்டும் ;

அல்லாமலும், அவசியமாயிருக்கிற பட்சத்தில்—

(c) மேற்கண்ட சொத்தைப் பிரதிவாதிக்குச் சுவாதீனப் படுத்தும்படி வாதிக்கு உத்தரவு செய்யவும்வேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தொகை செலுத்தப்பட்டிராவிட்டால், இதுவிஷயமாய் வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - பிரதிவாதிக்கும் அவர் மூலமாயாவது அவரை முன்னிட்டாவது பாத்தியதை கொண்டாடுகிற சகல நபர்களுக்கும் கொதுவைச் சொத்தை மீட்கும் பாத்தியதை எவ்வளவும் இராதபடி அவர்களைத் தடுத்திருப்பதாக நிர்ணயித்தும், அவசியமாயிருக்கும் பட்சத்தில், ஷை சொத்தை வாதிக்குச் சுவாதீனப்படுத்தும்படி பிரதிவாதிக்கு உத்தரவு பண்ணியும் முடிவான டிக்ரி பிறப்பிக்க வேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உபவிதியின்படி முடிவான டிக்ரி பிறப்பிக்கப்படுவதன்மேல், கொதுவை விஷயத்திலாவது வியாஜ்ஜியத்தின் காரணமாகவாவது பிரதிவாதி உள்ளாயிருக்கும் சகல உத்தர வாதங்களும் தீர்ந்துபோயிருப்பதாகக் கருதப்படும்.

விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்ரி.

4. (1) விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்திலே, வாதி ஜயமடையும் விஷயத்தில், கோர்ட்டார் - 2-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட (a), (b), (c) அடையாளமிட்ட பகுதிகளில் கண்ட பொருள்படும்படி பிரதம டிக்ரி பிறப்பிக்கவேண்டும் ; மேலும், அந்த டிக்ரியில் கண்டபடி பிரதிவாதி தொகை செலுத்தத் தவறிப்போனால், கொதுவைச் சொத்தையாகிலும் அதில் போதுமான ஒரு பாகத்தையாகிலும் விற்பனை செய்யும்படியும், விற்பனை செய்வதனால் கிடைத்த (பணத்திலிருந்து விற்பனை சம்பந்தமான செலவுகளைக் கழித்தபின்பு நிற்கும்) பணத்தைக் கோர்ட்டில் செலுத்தும்படியும், பிரதம டிக்ரியின்படியாகிலும், அதன்மூலமாகவாகிலும் வாதிக்குச் சேரவேண்டியதாகத் தெரியவந்த அல்லது நிர்ணயிக்கப்பட்ட தொகையைப் பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும், கட்டணம் - வட்டி ஆகிய இவைகள் விஷயமாகவும் சேரவேண்டியதாகத் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கக்கூடிய தொகை சகிதமாகச் செலுத்துவதற்கு உபயோகித்துக்கொள்ளும்படியும், மிகுதி ஏதாகிலும் இருந்தால் அதைப் பிரதிவாதியினிடத்திலோ அதைப் பெற்றுக்கொள்ள பாத்தியதை உடையவர்களாயுள்ள இதர நபர்களிடத்திலோ கொடுத்துவிடும்படியும் கட்டளையிட்டு முடிவான டிக்ரி பிறப்

பிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ள வாதி அர்ஹராவாரென்றுங்கூட ஷெ பிரதம டிக்ரியில் கோர்ட்டார் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான வியாஜ்ஜியத்தில் விற்பனை செய்யும்படி டிக்ரி பிறப்பிக்க அதிகாரம்.

(2) குறிக்கப்படாத யாதொரு கொதுவையின் விஷயத்தில் மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்யவேண்டுமென்று கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்திலே, வாதி ஜயமடையும்பட்சத்தில், வியாஜ்ஜியத்தில், சம்பந்தப்பட்ட யாதொரு கட்சிக்காரராவது கொதுவை ஈட்டின் விஷயத்திலாகிலும் அதை மீட்கும் பாத்தியதையின் விஷயத்திலாகிலும் பற்றுள்ள வேறே யாதொரு நபராவது கேட்டுக்கொள்வதன்மேல், கோர்ட்டார் - (மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான டிக்ரி பிறப்பிப்பதற்குப் பர்த்தியாக) தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளின்மேல் மேலே கண்டபடிக்கான டிக்ரி பிறப்பிக்கலாம்; விற்பனைக்காகப் பிடிக்கும் செலவுகளைச் செய்யவும் அந்த ஷரத்துகள் நிறைவேற்றப்படும்படி பார்த்துக்கொள்ளவும் கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் நியாயமான ஒரு தொகையைக் கோர்ட்டில் கட்டிவைப்பதும் ஷெ ஷரத்துகளில் அடங்கவேண்டும்.

(3) விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்திலாவது, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் விற்பனை செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டால் அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாவது, பிற்பட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர்களாகிலும், அந்தப்படி கொதுவை வைத்துக்கொண்டவர்கள் எவர்களிடமிருந்தாயினும் பாத்தியதை பெறுகிற அல்லது அவர்களுடைய சுதந்தரங்களுக்குப் பர்த்திசெய்யப்பட்ட வேறே நபர்களாகிலும் கட்சிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டால், வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு முறையே ஏற்படும் சுதந்தரங்களையும் பொறுப்புகளையும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி D அனுபந்தத்தில் கண்ட 9-ம் நெ. 10-ம் நெ. அல்லது 11-ம் நெ. நமூனாவில் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தின் சந்தர்ப்பங்களை அனுசரித்து அவசியமாயிருக்கக்கூடிய மாறுதல்களைச் செய்து அந்த நமூனாவில் ஏற்படுத்தியிருக்கிற மாதிரியாகவும் விதமாகவும் தீர்ப்பு செய்வதற்காக (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட பிரதம டிக்ரியில் நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்.

விற்பனை செய்வதாகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் முடிவான டிக்ரி.

5. (1) 4-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தாம் செலுத்தவேண்டியிருக்கும் சகல தொகைகளையும் பிரதிவாதியானவர் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தினத்திலாவது அதற்கு முன்பாவது, இந்த விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியின்படி பிறப்பிக்கப்பட்ட முடிவான டிக்ரியை அனுசரித்துச் செய்யப்பட்ட விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்படுவதற்கு முன் எப்போதாவது கோர்ட்டில் செலுத்திவிடும்பட்சத்தில், கோர்ட்டார் - இது விஷயமாய்ப் பிரதிவாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் முடிவான டிக்ரி பிறப்பித்து, அதில்—

(a) பிரதம டிக்ரியில் குறிப்பிட்டிருக்கும் தஸ்தவேஜுகளை ஒப்புவித்துவிடும்படி வாதிக்கு உத்தரவு பண்ணவேண்டும்;

மேலும், அவசியமாயிருக்கும்பட்சத்திலே,—

(b) ஷை டிக்ரியில் கட்டளையிட்டிருக்கிறபடி கொதுவைச் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்யும்படி அவருக்கு உத்தரவுபண்ண வேண்டும்;

அல்லாமலும், அவசியமாயிருக்கும்பட்சத்திலே,—

(c) மேலேகண்ட சொத்தைப் பிரதிவாதிக்குச் சுவாதீனப் படுத்தும்படியும் வாதிக்கு உத்தரவு பண்ணவேண்டும்.

(2) கொதுவைச் சொத்தாகிலும் அதில் ஒரு பாகமாகிலும் இந்த விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை அனுசரித்து விற்பனை செய்யப்பட்டிருந்தால், கிரயத்துக்கு வாங்கினவர் கோர்ட்டில் செலுத்தியிருக்கும் கிரயத் தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியான ஒரு தொகையைக் கிரயத்துக்கு வாங்கினவருக்குக் கொடுப்பதற்காக (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட தொகையுடன்கூட பிரதிவாதி கோர்ட்டில் கட்டினாலன்றி மற்றப்படி, கோர்ட்டார் - இந்த விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி முடிவான டிக்ரி பிறப்பிக்கக்கூடாது.

மேலேகண்ட தொகை கட்டப்பட்டிருந்தால், கிரயத்துக்கு வாங்கினவர் - தாம் கோர்ட்டில் செலுத்தியிருக்கும் கிரயத்தொகையையும் அதில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியான ஒரு தொகையையும் தம்மிடத்தில் செலுத்தும்படி உத்தரவு பெற அர்ஹராவார்.

(3) 4-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின் பிரகாரம் தொகை செலுத்தப்பட்டிராத பட்சத்திலே, இது விஷயமாய் வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - கொதுவைச் சொத்தையாவது அதில் போதுமான ஒரு பாகத்தையாவது விற்பனை செய்யும்படியும், அந்த விற்பனையில் கிடைக்கும் தொகையை 4-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியில் சொல்லியிருக்கிற விதமாய் உபயோகிக்கும்படியும் கட்டளையிட்டு முடிவான டிக்ரி பிறப்பிக்கவேண்டும்.

விற்பனை செய்வதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் கொதுவையின் மேல் பாக்கியாயிருக்கிற மிகுதித் தொகையை வசூல் பண்ணுவது.

6. அடுத்து முந்திய விதியின்படி நடத்தப்படும் யாதொரு விற்பனையில் செலவு முதலியவை போக கிடைக்கும் நிகரத்தொகையானது வாதிக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்துவதற்குப் போதவில்லையென்று தெரியவந்தால், அவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - பாக்கி நிற்கும் தொகையை நோாய்ப் பிரதிவாதியினிடமிருந்து சட்டப்பிரகாரம் வேறே விதமாக வசூல்செய்யக்கூடுமானால், அந்த தொகைக்காக டிக்ரி பிறப்பிக்கலாம்.

மீட்பதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்ரி.

7. (1) மீட்பதற்காகக் கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்தில், வாதி ஜயமடைகிற பட்சத்திலே, கோர்ட்டார் பிரதம டிக்ரி பிறப்பித்து, அதில்—

(a) அந்த டிக்ரியின் தேதியில் பிரதிவாதிக்கு—

(i) கொதுவையின்மேல் அசலுக்காகவும் வட்டிக்காகவும்,

(ii) அவருக்கு வியாஜ்ஜியச் செலவு ஏதாகிலும் தீர்ப்பு செய்யப்பட்டிருந்தால் அதற்காகவும்,

(iii) அவரிடத்தில் கொதுவை வைக்கப்பட்ட ஈட்டின் விஷயமாய் ஷை தேதி வரையில் கிரமமாய் அவருக்குப் பிடித்திருக்கும் கோர்ட் செலவு முதலிய செலவுக்காகவும் அவர் செலுத்தியிருக்கும் கட்டணங்களுக்காகவும், அவைகளுக்குண்டான வட்டிக்காகவும்,

எவ்வளவு சேரவேண்டியிருக்கதென்பதை குறித்துக் கணக்கு எடுக்கும்படி உத்தரவுபண்ணவேண்டும்; அல்லது,

(b) அந்தத் தேதியில் மேலேகண்டபடி சேரவேண்டியிருந்த தொகை இவ்வளவென்று நிர்ணயிக்கவேண்டும்; மேலும்,

(c) (i) சேரவேண்டியதாக அந்தப்படி தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகையை, சந்தர்ப்பத்துக்கேற்றபடி (a) குறிப்பிட்ட பகுதியின்படி எடுக்கப்பட்ட கணக்கைக் கோர்ட்டார் ஊர்ஜ்ஜிதப்படுத்தி அதில மேல்கையெழுத்து போடுகிற தேதியிலிருந்தாவது, (b) குறிப்பிட்ட பகுதியின்படி அப்படிப்பட்ட தொகை கோர்ட்டில் நிர்ணயிக்கப்படுகிற தேதியிலிருந்தாவது ஆறு மாதத்துக்குள் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்பாகிலும் வாதி கோர்ட்டில் செலுத்தி, அதன் பிறகு 10-வது விதியில் நிபந்தனை கண்டபடி பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும் கட்டணங்கள் விஷயமாகவும் சேரவேண்டியதென்று தீர்ப்பு செய்யப்படக்கூடிய தொகையை, 11-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி முறையே அந்தத் தொகைகளுக்குப் பிற்பட்டு ஏற்படும் வட்டி சகிதமாய்ச் செலுத்துமபட்சத்திலே, பிரதிவாதியானவர் - கொதுவைச் சொத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாய்த் தம் சுவாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிற சகல தஸ்தவேஜுகளையும் வாதியினிடத்திலாகிலும் வாதியால் நியமிக்கப்படுகிற யாதொரு நபரிடத்திலாகிலும் ஒப்பித்துவிடவேண்டுமென்றும், ஷை சொத்தைக் கொதுவையிலிருந்தும் பிரதிவாதியாலாயினும் அவரை முன்னிட்டுப் பாத்தியதை கொண்டாடுகிற யாதொரு நபராலாயினும் பிரதிவாதியே மற்றவர்களிடமிருந்து பெற்ற சுதந்தரத்தைக்கொண்டு பாத்தியதை கொண்டாடுகிற விஷயத்தில், அவர் யாரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடுகிறாரோ அவர்களாலாயினும் உண்டாக்கப்பட்ட சகல சிக்குச்சிடுக்குகளிலிருந்தும் விடுவித்து, பிரதிவாதியின் செலவில் அந்த சொத்தை வாதிக்கு மறுபடியும் ட்ரான்ஸ்பர் பண்ணும்படி

கேட்கப்பட்டால் அந்தப்படியே ட்ரான்ஸ்பர் பண்ணவேண்டுமென்றும், அவசியமானால் ஷை சொத்தை வாதிக்குச் சுவாதீனப்படுத்தவும் வேண்டுமென்றும்,

(ii) பிரதம டிக்ரியின்படியாவது அதன்மூலமாகவாவது சேரவேண்டியதென்று தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகை மேலேகண்டபடி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்பாகிலும் செலுத்தப்படாவிட்டாலும், பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும், கட்டணம் - வட்டி ஆகிய இவைகள் விஷயமாகவும் சேரவேண்டியதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் தொகையைக் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் வாதி செலுத்தத் தவறிப்போய்விட்டாலும்,—

(a) பெந்தக போக்கியமாகவாவது அவதிக்கிரயக் கொதுவையாகவாவது, குறிக்கப்படாத கொதுவையாயிருந்து விற்பனைக்காகவல்லாமல் மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காக மாத்திரம் அந்தக் கொதுவையின் ஷரத்துகளில் ஏற்பாடு செய்திருந்தால் அப்படிப்பட்ட கொதுவையாகவாவது இராத வேறே யாதொரு கொதுவையின் விஷயத்தில், கொதுவைச் சொத்தை விற்பனை செய்யவேண்டுமென்றாகிலும்,

(b) அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்திலாவது மேற்சொல்லியபடிக்குள்ள குறிக்கப்படாத யாதொரு கொதுவையின் விஷயத்திலாவது, ஷை சொத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை வாதிக்கு எவ்வளவும் இராதபடி அவரைத் தடுக்கவேண்டுமென்றாகிலும்,

முடிவான டிக்ரி பிறப்பிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ள பிரதிவாதி அர்ஹராவாரென்றும்

மேலேகண்ட பிரதம டிக்ரியில் கட்டளையிடவேண்டும்.

(2) சரியான காரணம் காட்டப்படுவதன்மேலும் கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் ஷரத்துகளின்படியும், கோர்ட்டார் - (1) குறிப்பிட்ட உபவிதியின்படி பாக்கியாயிருப்பதாகக் தெரியவந்த அல்லது நிர்ணயிக்கப்பட்ட தொகையையாவது, பிற்பட்ட கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும் கட்டணங்கள் - வட்டி ஆகிய இவை விஷயமாகவும் சேரவேண்டியிருப்பதாகத் தீர்ப்பு செய்யப்பட்ட தொகையையாவது செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்தை அப்போதைக்கப்போது அதிகப்படுத்தலாம்.

மீட்பதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் முடிவான டிக்ரி.

8. (1) கொதுவைச் சொத்தை மீட்கும்படியான பாத்தியதை வாதிக்கு எவ்வளவும் இராதபடி தடுப்பதற்காக முடிவான டிக்ரி பிறப்பிக்கப்பட்டதற்கு முன்பாவது, இந்த விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியின்படி பிறப்பிக்கப்பட்ட முடிவான டிக்ரியை அனுசரித்து நடத்தப்பட்ட விற்பனை ஊர்ஜிதப்படுத்தப்படுவதற்கு முன்பாவது, 7-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தாம்

செலுத்தவேண்டியிருக்கும் சகல தொகைகளையும் வாதியானவர் கோர்ட்டில் செலுத்தினால், கோர்ட்டார் - இது விஷயமாய் வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் முடிவான டிக்ரி பிறப்பித்து, அதில்—

(a) பிரதம டிக்ரியில் குறிப்பிட்டிருக்கும் தஸ்தவேஜுகளை ஒப்புவித்துவிடும்படி பிரதிவாதிக்கு உத்தரவு பண்ணவேண்டும்;

மேலும், அவசியமாயிருக்கும்பட்சத்தில்,—

(b) கொதுவைச் சொத்தை ஷை டிக்ரியில் கட்டளையிட்டிருக்கிறபடி வாதியின் செலவில் மீண்டும் ட்ரான்ஸ்பர் செய்யும்படி பிரதிவாதிக்கு உத்தரவு பண்ணவேண்டும்;

அல்லாமலும், அவசியமாயிருக்கும்பட்சத்தில்,—

(c) ஷை சொத்தை வாதிக்குச் சுவாதீனப்படுத்தும்படி பிரதிவாதிக்கு உத்தரவு பண்ணவும் வேண்டும்.

(2) கொதுவைச் சொத்தாகிலும் அதன் யாதொரு பாகமாகிலும் இந்த விதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபவிதியின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை அனுசரித்து விற்பனை செய்யப்பட்டிருந்தால், கிரயத்துக்கு வாங்கினவர் கோர்ட்டில் செலுத்தியிருக்கும் கிரயத் தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியான ஒரு தொகையைக் கிரயத்துக்கு வாங்கினவருக்குக் கொடுப்பதற்காக (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்ட தொகையுடன்கூட வாதி கோர்ட்டில் கட்டினாலன்றி மற்றப்படி, கோர்ட்டார் இந்த விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியின்படி முடிவான டிக்ரி பிறப்பிக்கக்கூடாது.

அந்தப்படி தொகை கட்டப்பட்டிருந்தால், கிரயத்துக்கு வாங்கினவர் - தாம் கோர்ட்டில் செலுத்தியிருக்கும் கிரயத்தொகையையும் அதில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியான ஒரு தொகையையும் தம்மிடத்தில் செலுத்தும்படி உத்தரவு பெற அர்ஹராவார்.

(3) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தொகை செலுத்தப்படாவிட்டால், இது விஷயமாய்ப் பிரதிவாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார்—

(a) அவதிக்கிரயக் கொதுவையின் விஷயத்திலாவது இதில் முன்னால் 7-வது விதியில் சொல்லியிருக்கிறபடிக்குள்ள குறிக்கப்படாத யாதொரு கொதுவையின் விஷயத்திலாவது, வாதிக்கும் அவரை முன்னிட்டு பாத்தியதை கொண்டாடுகிற சகல நபர்களுக்கும் கொதுவைச் சொத்தை மீட்கும் பாத்தியதை எவ்வளவும் இராதபடி அவர்களைத் தடுத்திருப்பதாக நிர்ணயித்தும், அவசியமாயிருந்தால் கொதுவைச் சொத்தைப் பிரதிவாதிக்குச் சுவாதீனப்படுத்தும்படியுங்கூட வாதிக்கு உத்தரவுசெய்தும் முடிவான டிக்ரி பிறப்பிக்க வேண்டும்; அல்லது,

(b) பெந்தக போக்கியமாயிராத வேறே யாதொரு கொதுவையின் விஷயத்தில், கொதுவைச் சொத்தையோ அதில் போதுமான யாதொரு பாகத்தையோ விற்பனை செய்யவேண்டுமென்றும்,

அந்த விற்பனையில் கிடைத்த தொகையிலிருந்து (விற்பனைக்காகப் பிடித்த செலவைக் கழித்த பிறகு) நிற்கும் மிகுதியைக் கோர்ட்டில் செலுத்தி, பிரதிவாதிக்குச் சேரவேண்டியதாய்த் தெரியவரும் தொகையைச் செலுத்துவதற்காக உபயோகிக்கவேண்டுமென்றும், மிகுதி ஏதாவதிருந்தால் அதை வாதியினிடத்திலாகிலும் அதைப் பெற்றுக் கொள்ள பாத்தியதையுடைய வேறே நபர்களிடத்திலாகிலும் செலுத்தவேண்டுமென்றும் கண்டு முடிவான டிக்ரி பிறப்பிக்கவேண்டும்."

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூல் 34-ம் அதிகாரத்தில் 8A விதியைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

5. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 34-ம் அதிகாரத்தில், 8-வது விதிக்குப் பிறகு அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

மீட்பதற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் கொதுவையின்மேல் பாக்கியாயிருக்கிற மிகுதித் தொகையை வசூல் பண்ணுவது.

"8A அடுத்துமுந்திய விதியின்படி நடத்தப்படும் யாதொரு விற்பனையில் செலவு முதலியவை போக கிடைக்கும் நிகரத்தொகையானது பிரதிவாதிக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்துவதற்குப் போதவில்லையென்று தெரியவந்தால், அவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - பாக்கி நிற்கும் தொகையை நேராய் வாதியினிடமிருந்து சட்டப்பிரகாரம் வேறே விதமாக வசூல் செய்யக்கூடுமானால் அந்த தொகைக்காக டிக்ரி பிறப்பிக்கலாம்."

1908 ம் வருஷத்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூல் 34-ம் அதிகாரத்தில் கண்ட 10-வது, 11-வது விதிகளுக்குப் பர்த்தியாகப் புதிய விதிகளை அமைத்துக்கொள்வது.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

6. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 34-ம் அதிகாரத்தில் 10-வது, 11-வது விதிகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட விதிகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

கொதுவை வைத்துக்கொண்டவருக்கு டிக்ரிக்குப் பிறகு பிடிக்கும் செலவு.

"10. மீட்கும்படியான பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்கிற விஷயத்திலாவது விற்பனை செய்யப்படுகிற விஷயத்திலாவது சொத்து மீட்டுக்கொள்ளப்படுகிற விஷயத்திலாவது, கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையைக் கடைசியாய் சரிக்கட்டுகையில் கோர்ட்டார் - வியாஜ்ஜியச் செலவுகளின் விஷயத்தில் கொதுவை வைத்துக்கொண்டவர் அவைகளைப் பெறும் சுதந்தரம் தமக்கில்லாதபடி நடந்துகொண்டிருந்தாலொழிய, மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகவாகிலும் விற்பனை செய்வதற்காகவாகிலும் சொத்தைமீட்டுக்கொள்வதற்காகவாகிலும் பிரதம டிக்ரி பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து வாஸ்தவமாய்த் தொகை செலுத்தப்படுகிற காலம் வரையில் ஷை கொதுவை வைத்துக்கொண்டவருக்குக் கிரமமாய்ப் பிடித்திருக்கும் வியாஜ்ஜியச் செலவு முதலிய செலவுகளையும் அவரால் கிரமமாய்ச் செலுத்தப்பட்டிருக்கும் கட்டணங்களையும் கொதுவைப் பணத்துடன் சேர்க்கவேண்டும்.

வட்டி செலுத்துவது.

11. மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்காகவோ, விற்பனை செய்வதற்காகவோ அல்லது சொத்தை மீட்பதற்காகவோ கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்தில் சட்டப்படி வட்டி வசூலிக்கப்படத்தக்கதாயிருந்தால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தில் பிறப்பிக்கப்பட்ட எந்த டிக்ரியிலாகிலும் கோர்ட்டார் - கொதுவை வைத்துக்கொண்டவருக்கு அடியிற்கண்டபடி வட்டி செலுத்தும்படி உத்தரவு செய்யலாம்; அதாவது :—

(a) சேரவேண்டியதாகத் தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகையைக் கொதுவை வைத்துக்கொண்டவராவது கொதுவையை மீட்கும் வேறே நபராவது பிரதம டிக்ரியின்படி எந்தத் தேதியிலாகிலும் தேதிக்குமுன்பாகிலும் செலுத்த வேண்டுமோ அந்தத் தேதிவரையில்—

(i) கொதுவையின்மேல் சேரவேண்டியதாய்த் தெரியவந்திருக்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அசல் தொகையின் மேல்,—கொதுவைப் பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் வீதப்படியும், அல்லது அந்தப்படி வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால், கோர்ட்டாருக்கு நியாயமாகத் தோற்றுகிற வீதப்படியும்,

(ii) கொதுவை வைத்துக்கொண்டவருக்குத் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் வியாஜ்ஜியச் செலவுத்தொகையின்மேல்—பிரதம டிக்ரியின் தேதியிலிருந்து கோர்ட்டாருக்கு நியாயமாகத் தோற்றுகிற வீதப்படியும்,

(iii) கொதுவை ஈட்டின்விஷயத்தில் பிரதம டிக்ரியின் தேதிவரையில், கொதுவை வைத்துக்கொண்டவருக்கு கிரமமாய்ப் பிடித்திருக்கும் கோர்ட் செலவு முதலிய செலவுகளுக்காகவும் அவரால் கிரமமாய்ச் செலுத்தப்பட்டிருக்கும் கட்டணங்களுக்காகவும் கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சேரவேண்டியதாய்த் தீர்ப்பு செய்து கொதுவைப்பணத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் தொகையின்மேல்—கொதுவைப் பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் வீதப்படியும், அந்தப்படி வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீதப்படியும்

வட்டி; மேலும்,

(b) (i) (a) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிட்ட அசல் தொகைகளும் அந்தப் பகுதியின்படி அவைகளின்மேல் கணக்கிடப்பட்ட வட்டியும் சேர்ந்த மொத்தத்தின்மேலும்,

(ii) 10-வது விதியின்படி பின்னும் செலுத்தப்படத்தக்கதாயுள்ள கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும் கட்டணங்கள் விஷயமாகவும் கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சேரவேண்டியிருப்பதாகத் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் தொகையின்மேலும்,

அந்தத் தொகைகள் வசூலிக்கப்படுகிற அல்லது வாஸ்தவத்தில் செலுத்தப்படுகிற தேதிவரையில் கோர்ட்டாருக்கு நியாயமாய்த் தோற்றுகிற வீதப்படி பிற்பட்ட வட்டி."

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூல் 34-ம் அதிகாரத்தில் கண்ட 15-வது விதிக்குப் பர்த்தியாக புதிய விதியை அமைத்துக்கொள்வது.

7. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 34-ம் அதிகாரத்தில் 15-வது விதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ள வேண்டும்; அதாவது:— 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

"15. இந்த அதிகாரத்தில் கண்ட நிபந்தனைகளில் ஒற்றிக்குப் பிரயோகப்படுகிற சகல நிபந்தனைகளும் சாத்தியமானமட்டில், 1882-ம் வருஷத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 100-வது பிரிவின் தாற்பரியப்படி யாதொரு பொறுப்புக்குப் பிரயோகப்படும்." 1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.

பொறுப்பு.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூல் D அனுபந்தத்தில் கண்ட 3 முதல் 11 வரையிலுள்ள நமூனாக்களுக்குப் பர்த்தியாக புதிய நமூனாக்களை அமைத்துக்கொள்வது.

8. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் முதல் ஷெட்யூலுடன் சேர்த்திருக்கும் D அனுபந்தத்தில் கண்ட 3 முதல் 11 வரையிலுள்ள நமூனாக்களுக்குப் பர்த்தியாக 1-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் நமூனாக்களை அமைத்துக்கொள்ள வேண்டும். 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

1908-ம் வருஷத்து 16-வது ஆக்டில் திருத்தம்.

9. (1) 1908-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில்,— 1908-ம் வருஷத்து 16-வது ஆக்ட்.

(a) (d) குறிப்பிட்ட பகுதியில், "வருஷா வருஷத்திற்காவது ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட காலத்திற்காவது வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகையை நிறுத்தி வைத்துக்கொள்ளுகிறதாகவாவதுள்ள" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "மாதவாரியாகவாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்காவது சம்பந்தப்பட்ட குத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளைத் தவிர" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) (d) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"(e) யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு டிக்ரி அல்லது உத்தரவாவது யாதொரு பஞ்சாயத்து தீர்ப்பாவது யாதொரு அசையாப்பொருளுக்காகிலும் அசையாப்பொருளிலாகிலும் நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் பெறுமானமுள்ளதாய் இப்போது சங்கிரமித்தோ அல்லது இனி ஏற்படக்கூடியதாகவோவுள்ள யாதொரு பாத்தியத்தை, ஹக்கை அல்லது சுதந்தரத்தைத் தற்காலத்திலாயினும் இனிமேலாயினும் உண்டுபண்ணுகிறதாகவாவது நிர்ணயிக்கிறதாகவாவது சாட்டுகிறதாகவாவது மட்டுப்படுத்துகிறதாகவாவது அற்றுப்போகும்படிச் செய்கிறதாகவாவது

பொருள்படுகிறதாயிருந்தாலும் செலாவணியாகிறதா யிருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு டிக்ரியை, உத்தரவை அல்லது தீர்ப்பை ட்ரான்ஸ்பர் செய்கிற அல்லது சாட்டுகிற மரண சாஸனமல்லாத வேறே ஆதரவுகள் : ”

(2) ஷை பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (vi) அடையாளமிட்ட பகுதியில், “ கோர்ட்டின் யாதொரு . . . . . தீர்மானங்களுக்குமாவது ” என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக “ ராஜியாவதன்மேல் பிறப்பிக்கப்படுகிறதாகச் சொல்லப்படும் டிக்ரி அல்லது உத்தரவல்லாமல் கோர்ட்டின் வேறே யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுக்காவது ” என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(3) ஷை ஆக்ட் 48-வது பிரிவில் “ பயன்படத்தக்கவைகளாகும் ” என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

“ மேலும், அந்தப்படி பயன்படத்தக்கவைகளாய் விடுவது-அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டப்படி செல்லத்தக்க ட்ரான்ஸ்பராகும் :

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட். ஆனால், அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட ஹக்கு சாஸனங்களை ஒப்புவிப்பதுமூலமாகக் கொதுவை வைத்து அந்தக் கொதுவை 1882-ம் வருஷத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 59-வது பிரிவின்படி செல்லத்தக்கதாயிருந்தால், அது-அதே சொத்துக்குச் சம்பந்தப்பட்டதாய்ப் பின்னிட்டு எழுதி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு கொதுவைப் பத்திரத்துக்குப் பிரதிகூலமாகச் செலாவணியாகும். ”

(4) ஷை ஆக்ட் 49-வது பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட். 1877-ம் வருஷத்து 1-வது ஆக்ட். 1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட். “ ஆனால், ரெஜிஸ்டர்செய்யப்படாத யாதொரு தஸ்தவேஜானது அசையாப்பொருளைப் பாதிப்பதாயும் இந்த ஆக்டின்படியாவது 1882-ம் வருஷத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின்படியாவது ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியதாயுமிருந்தால், அதை 1877-ம் வருஷத்து ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்ட் 2-ம் அத்தியாயத்தின்படி குறித்த பிரகாரம் நிறைவேற்றும்படிச் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்தில் யாதொரு கான்ட்ராக்டுக்குச் சாட்சியமாகவும், 1882-ம் வருஷத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்ட் 53 A பிரிவின் காரியங்களுக்காக கான்ட்ராக்டைச் சிறிதுமட்டில் நிறைவேற்றுவதற்குச் சாட்சியமாகவும் ஏற்றுக்கொள்ளலாம். ”

1925-ம் வருஷத்து 39-வது ஆக்ட். 1925-ம் வருஷத்து 39-வது ஆக்டில் திருத்தம். **10.** (1) 1925-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 115-வது பிரிவில்,—

(a) “ சுத்தமாய்ச் செல்லாமற்போகும் ” என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக “ அந்த நபர்களின் விஷயத்தில் மாத்திரம் செல்லாமற்போகுமே யொழிய அந்த வகுப்பைச் சேர்ந்த சகலரின்

விஷயத்திலும் செல்லாமற் போகாது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(b) (i) குறிப்பிட்ட திருஷ்டாந்தத்தில், "மகவின் விஷயத்தில் செல்லமாட்டாது ; மேலும், ஒரு வகுப்பாக அவருடைய மக்களெல்லாருக்கும் அது கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த வகுப்பிலே யாதொரு பிரிவாருக்கு மாத்திரம் செல்லாமல் முழுதும் ரத்தாய்ப்போகும்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியில் கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவை யாவன :—

"மகவின் விஷயத்திலும், எ-என்பவர் இறந்துபோன பிறகு 18 வருஷத்துக்குள் 25 வயது அடையாதவர்களின் விஷயத்திலும் செல்லமாட்டாது ; ஆனால், எ-என்பவரின் மற்ற மக்களின் விஷயத்தில் அது செல்லும்" ; மேலும்,

(c) (ii) குறிப்பிட்ட திருஷ்டாந்தத்தில், "பி, ஸி, டி- என்று பேர்களைக் குறித்துக் கண்டிருந்தபோதிலும், ஆஸ்தி ஏற்பாடானது ஒரு வகுப்புக்குச் செய்யபபட்டதாக நினைபபதற்குத் தடையொன்றுமில்லை ; ஆகவே, அந்த ஆஸ்தி ஏற்பாடு முழுவதும் செல்லாது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

"பி, ஸி, டி-என்று பேர்களைக் குறித்துக் கண்டிருப்பதனால் ஆஸ்தி ஏற்பாட்டை ஒரு வகுப்புக்குச் செய்யப்பட்ட ஆஸ்தி ஏற்பாடாக நினைப்பதற்குத் தடை ஒன்றும் இல்லாவிட்டாலும், அது முழுவதும் செல்லாமற்போகாது. பி, ஸி அல்லது டி என்பவருடைய மக்களில் யாதொரு மகவு எ-என்பவர் இறந்து போனபிறகு 18 வருஷத்துக்குள் 25 வயதடைகிறபட்சத்திலே, அந்த மகவின் விஷயத்தில் ஷை ஆஸ்தி ஏற்பாடு செல்லும்."

(2) ஷை ஆக்ட் 116-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியில் கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

முந்திய ஆஸ்தி ஏற்பாடு தவறிப்போவதன் மேல் யாதொரு ஆஸ்தி ஏற்பாடு செலவணியாவது.

"116. யாதொரு நபருக்காவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்காவது அனுகூலமாகச் செய்யப்பட்ட எந்த ஆஸ்தி ஏற்பாடாகிலும், 113-வது, 114-வது பிரிவுகளில் கண்ட விதிகளில் எதன் காரணமாகவாயினும் அந்த நபரின் விஷயத்திலாவது அந்த வகுப்பைச் சேர்ந்த சகல நபர்களின் விஷயத்திலுமாவது செல்லாமற்போய்விட்டால், அதே உயிலில் கண்டிருந்து அப்படிப் பட்ட முந்திய ஆஸ்தி ஏற்பாடு தவறிப்போன பிறகாவது தவறிப் போவதன்மேலாவது செலாவணியாகவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்ட யாதொரு ஆஸ்தி ஏற்பாடும் செல்லாமற்போகும்."

(3) ஷை ஆக்ட் 117-வது பிரிவுக்கும் அதனுடன் சேர்த்திருக்கும் திருஷ்டாந்தங்களுக்கும் பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :

சேர்த்துவைப்பதற்கான உத்தரவால் இன்னதாகுமென்பது.

"117. (1) யாதொரு உயிலில் கண்ட ஷரத்துகளின்படி, யாதொரு சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை உயில் எழுதிவைத்தவர் இறந்துபோனதிலிருந்து பதினெட்டு வருஷகாலத்துக்கு அதிகமான யாதொரு கால அளவில் முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது சேர்த்துவைக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தால், அந்தக் கட்டளையானது - இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, மேலேகண்ட பிரகாரம் எந்தக் கால அளவில் சேர்த்துவைக்கவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறதோ அந்தக் கால அளவானது மேற்சொல்லிய கால அளவுக்கு அதிகமாயிருக்கிற அளவுக்குச் செல்லாததாகும்; மேலும், அந்தப் பதினெட்டு வருஷ கால அளவின் முடிவில், ஷை சொத்தும் அதிலிருந்து கிடைக்கும் வரும்படியும் - எந்தக் கால அளவில் சேர்த்துவைக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவு கழிந்துவிட்டிருந்தால் எப்படியோ அப்படியே ஒருவகைசெய்யப்படும்.

(2) இந்தப் பிரிவினால்—

(i) உயில் எழுதிவைத்தவரின் அல்லது உயிலின்படி யாதொரு உரிமை அடைகிற வேறே யாதொரு நபரின் கடன்களைச் செலுத்தும் காரியத்துக்காகவாவது,

(ii) உயில் எழுதிவைத்தவரின் மக்களுக்காகிலும் தூரமான சந்தானத்துக்காகிலும் உயிலின்படி யாதொரு உரிமை அடைகிற வேறே யாதொரு நபருக்காகிலும் சொத்து ஏற்படுத்தும் காரியத்துக்காகவாவது,

(iii) ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பட்ட யாதொரு சொத்தைப் பாதுகாக்கும் அல்லது பராமரிக்கும் காரியத்துக்காகவாவது சேர்த்துவைக்கும்படி செய்யப்பட்ட யாதொரு கட்டளைக்குப் பாதகம் ஏற்படமாட்டாது; மேலும், அப்பிரகாரமே அப்படிப்பட்ட கட்டளையிடலாம்."

நிவாரணை.

11. இந்த ஆக்டில் கண்டதெதனாலும்—

(a) 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்குமுன் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட யாதொரு சொத்து ட்ரான்ஸ்பர் சம்பந்தமான அல்லது சொத்தை ஒருவகைசெய்வது சம்பந்தமான ஷரத்துகளுக்காகிலும் இடைச்சம்பவங்களுக்காகிலும்,

(b) மேற்சொல்லிய தேதிக்கு முன்னமே செய்யப்பட்ட அல்லது செய்யவிடப்பட்ட யாதொரு காரியம் சட்டப்படி செலாவணியாவதற்காகிலும செலாவணியாகாமற்போவதற்காகிலும் அதன் பலப் பிராப்திக்காகிலும்,

(c) ஷை தேதிக்குமுன்பே அடையப்பட்ட அல்லது உண்டான அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட யாதொரு சுதந்தரத்துக்காகிலும் ஹக்குக்காகிலும் கடமைக்காகிலும் பொறுப்புக்காகிலும்,

(d) அப்படிப்பட்ட சுதந்தரம், ஹக்கு, கடமை அல்லது பொறுப்பு விஷயமாய்க் கிடைக்கும் யாதொரு பரிகாரம் அல்லது நடத்தப்படும் யாதொரு விவகாரத்துக்காகிலும்,

(e) ஷை தேதியில் எந்தக் கோர்ட்டிலாவது பைசலாகாமலி ருக்கும் யாதொரு விவகாரம் நடந்துகொண்டிருக்கையில் செய்யப் பட்ட யாதொரு காரியத்துக்காகிலும்

பாதகம் உண்டாவதாகக் கருதப்படமாட்டாது; மேலும், அப்படிப் பட்ட யாதொரு பரிகாரத்தையாவது விவகாரத்தையாவது, இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டிராவிட்டால் எப்படியோ அப்படியே சந் தர்ப்பத்துக்கேற்றபடி அமுலுககுக் கொண்டுவரலாம், தொடரலாம் அல்லது நடத்திக்கொண்டுபோகலாம்.

ரத்து.

12. 2-வது ஷெட்யூலில் கண்ட சட்டதிட்டங்கள் அதன் நான் காவது க்லத்தில் குறிப்பிட்டிருக்கும் அள வுக்கு இதனால் ரத்துசெய்யப்படுகின்றன.

1-வது ஷெட்யூல்.

(8-வது பிரிவைப் பார்க்கவும்.)

3-ம் ந. நமூனு.

மீட்கும் பாத்தியதை அற்றுப்போகும்படிச் செய்வதற்கான பிரதம டிக்ரி.

(34-ம் அதிகாரம், 2-வது விதி.—கணக்கெடுக்கும்படி கட்டளை யிட்டிருந்தால்.)

(கோர்ட்டின் பெயர் முதலியவை.)

வாதிபட்சத்தில் ஹாஜராயிருந்த (என்று ஆரம்பித்து 'இந்த வியாஜ்ஜியம் முடிவான பைசலுக்கு வரவே' என்பது வரையில் 1-ம் நெ. நமூனுவில் கண்டபடி எழுதவேண்டும்) முதலியவை; அடியில் கண்ட கணக்குகளை எடுப்பதற்காக கம்மிஷனர் ஹோதாவில்
க்கு இந்த வியாஜ்ஜியத்தை அனுப்பவேண்டு மென்று இதனால் உத்தரவு பண்ணி டிக்ரி செய்யப்படுகிறது :—

(i) வாதிக்கு ப்ளெய்ன்டில் கண்டிருக்கும் கொதுவையின்மேல் அசலுக்காகவும் வட்டிக்காகவும் இந்தத் தேதியில் இவ்வளவு சேர வேண்டுமென்பதைக்குறித்துக் கணக்கு (அந்த வட்டியைக் கொது வைப் பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிறபடி கணக்கிடவேண்டும், அல்லது வீதம் எதுவும் அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்டிரா விட்டால், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஆறு வீதப்படியாவது கோர்ட்டாருக்கு நியாயமாய்த் தோற்றுகிற வீதப்படியாவது கணக்கிடவேண்டும்);

(ii) கொதுவைச் சொத்திலிருந்து வாதியாவது வாதியின் உத் தரவுபடிக்காகிலும் அவருடைய உபயோகத்துக்காகவாகிலும் வேறே யாதொரு நபராவது இந்தத் தேதிவரையில் பெற்றிருக்கிற வரும்படி யைக் குறித்த, அல்லது வாதியாவது ஷை நபராவது வேண்டு மென்று தவறிப் போயிராவிட்டால் அந்தப்படி பெற்றிருக்கக்கூடிய வரும்படியைக் குறித்த கணக்கு;

(iii) கொதுவை ஈட்டின் விஷயத்தில் (வியாஜ்ஜியச் செலவல்லாத வேறே) கோர்ட் செலவு முதலிய செலவுகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் இந்தத் தேதிவரையில் வாதி கிரமமாய்ச் செலவு செய்திருக்கும் சகல தொகைகளைக்குறித்தும், அவைகளுக்கு உண்டான வட்டியைக்குறித்தும் கணக்கு (அந்த வட்டியைக் கொதுவைப் பத்திரத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் வீதப்படியாவது, அந்தப்படி வீதம் எதுவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டால் நூற்றுக்கு ஒன்பது வீதப்படியாவது கணக்கிடவேண்டும்) ;

(iv) வாதியானவர் யாதொரு காரியம் செய்திருந்து அல்லது செய்யாமல் விட்டுவிட்டிருந்து, அதன் காரணமாய்ச் சொத்து அழிந்துபோகக்கூடியதாயிருந்தாலும் அதற்கு கிலேயாய்க் கெடுதி நேரிட்டிருந்தாலும் அப்படிப்பட்ட யாதொரு காரியத்தினாலாவது, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டப்படியாகிலும் கொதுவைப் பத்திரத்தில் கண்ட ஷரத்துகளின்படியாகிலும் அவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளில் எதையேனும் அவர் செய்யத் தவறிப்போனதனாலாவது இந்தத் தேதிக்குமுன் கொதுவைச் சொத்துக்கு உண்டாக்கப்பட்ட யாதொரு நஷ்டம் அல்லது சேதத்தைக்குறித்த கணக்கு.

2. இதனால் பின்னும் உத்தரவு பண்ணி டிக்ரி செய்யப்படுகிறதென்னவென்றால்,—மேலேகண்ட (ii) குறிப்பிட்ட பகுதியின்படி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது (iv) குறிப்பிட்ட பகுதியின்படி சேரவேண்டியதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் யாதொரு தொகையையும் அதற்குண்டான வட்டியையும், (iii) குறிப்பிட்ட பகுதியின்படி வாதி கொடுத்திருக்கும் எவையேனும் தொகைகளுக்காகவும் அவைகளுக்குண்டான வட்டிக்காகவும் முதலில் சரிக்கட்டவேண்டும் ; அந்தப்படி செய்த பிறகு மிகுதி ஏதாகிலும் இருந்தால், அதைக் கொதுவைப் பணத்துடன் சேர்க்கவேண்டும், அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி சேரவேண்டியதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கும் அசல் தொகையின்மேல் வட்டியினிமித்தம் வாதிக்குச் சேரவேண்டிய தொகையைக் குறைப்பதற்காகவும், அதன் பிறகு அசலைக் குறைப்பதற்காகவும் அல்லது தீர்ப்பதற்காகவும் செலவெழுதவேண்டும்.

